பிதாஸ்ரீ பிரம்மா பாபாவின் 38 வது
அவ்யக்த நினைவுநாளன்று
(18/01/2007)

# அலௌகீக பரிசாக விலைமதிக்க முடியாத ரத்தினங்கள்


(அன்மோல் ரத்தினோம்கா அலௌகீக் உபகார்)

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | சிக்கனத்திற்குத் திட்டமிடுங்கள் சேமிப்பை அதிகமாக்குங்கள். | 5 |
| 2 | எல்லா பயன்களையும் நினைவில் நிறுத்தி எளிதாக முயற்சி செய்பவர் ஆகுங்கள் | 7 |
| 3 | உணர்வுகளால் வாயுமண்டலத்தை சக்திமிக்கதாக்குங்கள் | 9 |
| 4 | தற்போது மனதின் மூலம் ஆற்றலை (சகாஸ்) வழங்கும் சேவை செய்யுங்கள். | 11 |
| 5 | களங்கமற்றவர் (நிர்மல்) ஆகுங்கள் பணிவுடையவர் ஆகுங்கள். | 13 |
| 6 | காலத்தின் அழைப்பு ஆன்மீகத்தால் முழுமை பெறுங்கள். | 15 |
| 7 | சாதனை (முயற்சி) யின் ஆதாரத்தில் சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்துங்கள். | 17 |
| 8 | சமஸ்காரங்கள் இணையும் ராஸநடனம் ஆடுங்கள் | 19 |
| 9 | ஒரே ரசனை நிலைக்கு எடுத்துக்காட்டாக ஆகுங்கள் | 21 |
| 10 | ஆன்மீக அன்பின் மூர்த்தி ஆகுங்கள் | 23 |
| 11 | சுயமரியாதையில் இருந்து பணிவுடையோர் ஆகுங்கள் | 25 |
| 12 | பரமாத்மாவின் இதய சிம்மாசனதாரி ஆகுங்கள். | 27 |
| 13 | இனிமையை தாரணை செய்து மகான் ஆகுங்கள் | 29 |
| 14 | தற்போது உங்கள் வள்ளல் சொரூபத்தை வெளிப்படுத்துங்கள். | 31 |
| 15 | தற்போது எல்லாம் நிறைந்த, கர்மாதீத் நிலையை அடைய விடாமுயற்சி செய்யுங்கள் | 33 |
| 16 | சமஸ்காரங்களை இணைக்கும் ராஸநடனம் ஆடுங்கள் அப்போது 108 ரத்தினங்களின் வைஜயந்தி மாலை தயாராகிவிடும் | 35 |
| 17 | உயர்ந்த சுயமரியாதையுடைய, மரியாதைதரும் வள்ளலாகுங்கள் | 37 |
| 18 | வெற்றி மூர்த்தி ஆகுங்கள் | 39 |
| 19 | ஆன்மீக ராயல்டி மற்றும் தூய்மையின் பர்சனாலிடியை தாரணை செய்யுங்கள் | 41 |

| | | |
|---|---|---|
| 20 | பாபாவிற்குச் சமமாக உருவற்ற (நிராகாரி), அகந்தையற்ற (நிரங்காரி), விகாரமற்றவர்கள் (நிர்விகாரி) ஆகுங்கள். | 43 |
| 21 | நினைவை ஜீவாலை சொரூபமாக்குங்கள் | 45 |
| 22 | திருப்திமணியாகி சதா திருப்தியாக இருங்கள் மேலும் எல்லோரையும் திருப்திபடுத்துங்கள் | 47 |
| 23 | மனதைக் கட்டுப்படுத்தி ஒருமுக சக்தியை அதிகமாக்குங்கள் | 49 |
| 24 | நேரத்தின் அருகாமைக்குத் தக்கபடி அவ்யக்த பரிஸ்தா ஆகுங்கள் | 51 |
| 25 | இடைவிடா மகாதானி ஆவதற்காக சேமிப்பை அதிகமாக்குங்கள் | 53 |
| 26 | பூர்வீகர் மற்றும் பூஜைக்குரியவர் என்ற நினைவில் இருந்து எல்லோரையும் பராமரியுங்கள் | 55 |
| 27 | உதவி செய்பவர் ஆகுங்கள் மேலும் உதவி செய்பவர் ஆக்குங்கள் | 57 |
| 28 | பரமாத்மாவின் பிரத்யட்சத்திற்காக்வீக ் திவயதர்சனா மூர்த்தியாகுங்கள் | 59 |
| 29 | நடைமுறை நிரூபணம் மற்றும் திடமான வாக்குறுதி மூலம் பரமாத்மாவை பிரத்யட்சம் செய்யுங்கள் | 61 |
| 30 | சிறந்த நிலை மற்றும் வலிமையான வாயுமண்டலத்தின் மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்வதற்கு நிமித்தமாகுங்கள் | 63 |
| 31 | தனது சம்பூரண சொரூபத்தின் மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்ய நிமித்தமாகுங்கள் | 65 |
| 32 | லைட்-மைட் ஹவுஸ் என்ற உயர்ந்த நிலை மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்வதற்கு நிமித்தமாகுங்கள் | 67 |
| 33 | சத்தியத்தின் அத்தாரிட்டி மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்யுங்கள் | 69 |
| 34 | தனது வெற்றி சொரூபம் மற்றும் வாரிசு குவாலிடிகளின் உதவி மூலமாக பரமாத்மாவின் பிரத்தியட்சத்திற்கு நிமித்தமாகுங்கள் | 71 |
| 35 | ஒற்றுமை மற்றும் குழுவின் ஒரே ரசனை நிலை மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்ய நிமித்தமாகுங்கள் | 73 |
| 36 | தனது முகத்தின் மூலமாக தந்தையின் உருவத்தை காட்டுங்கள் அப்போது பரமாத்ம பிரத்தியட்சத்தின் காட்சி தெரியும் | 75 |
| 37 | எண்ணத்தின் உறுதி, மனதின் ஒருமுகம், பேச்சின் இனிமை மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்வதற்கு நிமித்தமாகுங்கள் | 77 |
| 38 | தன் முன்னே பிரத்தியட்சக் காட்சிகளை தோற்றுவியுங்கள் | 79 |

# முன்னுரை



பரம கல்யாணகாரி, பரமபிதா, பரம சத்குரு பரமாத்மா சிவபாபா அவர்கள் ஞானத்தின் விலைமதிக்க முடியாத கஜானாக்களை வழங்கி இருக்கிறார், அதன்மூலமாக மனித வாழ்க்கை அதீந்திரிய சுகத்தால் நிரம்பி விடுகிறது, மேலும் தனது நிறைவான மற்றும் சம்பூர்ண சொரூபத்தின் காட்சியைக் காட்டச் செய்கிறது. ஞானத்தின் கடல்போன்ற பொக்கிஷத்தில் இருந்து சில விசயங்களின் மீது ˙ வெளிச்சம் இந்த சிறிய புத்தகத்தில் இருப்பதைக் கண்டு நான் மிகுந்த மகிழ்சி அடைகிறேன். இதில் அந்த மாதிரி ஆழமான விசயங்கள் பல மிக எளிய நடையில் வழங்கப்பட்டுள்ளது, அதனை சிந்திப்பதன் மூலம் புத்தியில் விசாலமான ஞானக் கடல் பொங்க ஆரம்பிக்கிறது மேலும் அந்த பரம ஆசிரியர் மீது உள்ளத்தில் அளவிடமுடியாத அன்பு உற்பத்தியாகிறது. அவர் குழந்தைகளான நம்மை மிகுந்த அன்போடுகூடவே அறிவுரைகளால் அலங்கரிக்கிறார், அஞ்ஞான இருளை அகற்றுகிறார்.

இந்த புத்தகம் விசேசமாக பிதாஸ்ரீ பிரம்மா பாபாவுடைய 38வது புண்ணிய நினைவு நாளன்று வெளியிடப் படுகிறது, அது எல்லா பிரமாணர்களுக்கும் விலைமதிக்க முடியாத ரத்தினங்களின் பரிசாகும். இதில் விசேசமாக அவ்யக்த பாப்தாதா சொன்ன சிக்கனத் திட்டம், சேமிப்பை அதிகமாக்கும் விதி, எளிதாக செய்யும் முயற்சி, வாயுமண்டலத்தை சக்திசாலி ஆக்க செய்ய வேண்டியது, மன சேவை செய்ய, ஆன்மீகத்தால் நிறைவு பெற மேலும் சமஸ்காரங்கள் ஒத்துழைக்க என அனேகவழிமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன, கூடவே பரமாத்மாவின் பிரத்தியட்சம் எப்போது எப்படி நடக்கும், அந்த நேரக் காட்சிகள் எப்படி இருக்கும், அதன் விவரம் என்ன என சில விசயங்கள் சார ரூபத்தில் இங்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தைப் படித்து அந்த கருத்துக்களை சிந்திப்பதால் அது உங்களை அனேக தாரணைகளின் ஆழத்திற்குச் அழைத்துச் செல்லும் மேலும் புத்தியை ஞானத்தின் விலைமதிக்க முடியாத ரத்தினங்களால் நிறைத்து விடும் என நான் முழுமையாக நம்புகிறேன். தினந்தோறும் ஏதாவது ஒரு விசயத்தைப் பற்றி கவனமாகப் படித்து, நினைவில் கொண்டுவந்து முழு நாளும் அடிக்கடி அதன் ஆழத்தில் இறங்கினால் புத்தியில் அதன் சகஜ தாரணை ஏற்பட்டுக் கொண்டே இருக்கும் மேலும் புத்தியானது தெய்வீகமாகவும் சக்திசாலியாகவும் ஆகிக் கொண்டே இருக்கும்.

இந்த சுப ஆசைகளோடு,

பி.கே. பிரகாஷ்மணி

# 1. சிக்கனத்திற்குத் திட்டமிடுங்கள் சேமிப்பை அதிகமாக்குங்கள்.

1. இப்போதய நேரப்படி, நேரத்தினுடைய சிக்கனம், எண்ணங்களுடைய சிக்கனம், தனது சக்திகளின் சிக்கனம் முதலியவைகளுக்குத் திட்டமிட்டு, அவ்வப்போது அந்த புள்ளி வடிவ நிலையில் இருப்பதை அதிகமாக்குங்கள். எவ்வளவு புள்ளி வடிவ நிலை இருக்குமோ, அவ்வளவு எந்த அசுர குணங்களோ அல்லது கெட்ட சமஸ்காரங்களின் சக்தியோ உங்களோடு சண்டையிடாது. மேலும் உங்களுடைய சக்திரூபமே அவைகளுக்கு முக்தியளித்துவிடும். அதனால் சிக்கனத்திற்குத் திட்டமிட்டு அதனை நடைமுறையில் கொண்டுவாருங்கள், அப்போதே தன்னையும், மற்ற எல்லோரையும் காப்பாற்ற முடியும்.

2. நேரத்தையும் சக்திகளையும் சேமிப்பதற்காக எப்போதும் பாப்தாதாவின் சமஸ்காரங்களோடு இணைந்து செல்லுங்கள். எது பிரம்மாவின் (சாகார்) எண்ணமாக அல்லது சமஸ்காரமாக இருந்ததோ, அதோடு இணைந்து சென்றால் நேரம் வீணாகாது. அப்போது எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதை உடனே நிர்ணயம் செய்து விடுவீர்கள். இப்படிச் செய்வதாலேயே நேரம் மிச்சமாகும், மேலும் புத்தியின் சக்தியில் எது நஷ்டமடைகிறதோ அதுவும் மிச்சமாகும்.

3. எப்போதும் அண்டர்கிரவுண்டில் அதாவது உள்முகமாக இருந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். உள்முகமாக இருந்து காரியங்களைச் செய்வதால் ஒன்று தடைகளில் இருந்து விலகி விடுகிறீர்கள், இரண்டாவது நேரம் மிச்சமாகிறது, மூன்றாவது எண்ணங்களும் மிச்சமாகிறது அல்லது சிக்கனமாகிறது.

4. எப்படி உலக காரியங்களுக்கு புரோகிராம் போடுகிறீர்களோ அதேபோல தனது புத்தியின் காரியங்களுக்கும் புரோகிராம் போடுங்கள். என்னென்ன காரியங்களை புத்தியைக் கொண்டு செய்யவேண்டும் என்பதற்கு திட்டமிடும் பழக்கம் இருந்தால் ஒவ்வொரு காரியமும் தக்க சமயத்தில் வெற்றிபெறும். இந்த புரோகிராமை செட் பண்ணிவிட்டால் நேரம் குறைவதோடு வெற்றியும் அதிகமாகும்.

5. அந்த அரசாங்கமும் தற்போது சேமிப்புத் திட்டங்களை உருவாக்கி இருக்கிறது. அதுபோல சர்வசக்தி அரசாங்கமும் இப்போது சேமிக்க திட்டமிடுங்கள் என எல்லா குழந்தைகளுக்கும் உத்தரவிடுகிறது. செலவுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள். தற்போது தனக்காக தன் சக்திகளைச் செலவிடாதீர்கள். குறையாத கஜானாக்களைக் கொண்ட அதிபதியின் குழந்தைகள் நீங்கள், இந்த போதையிலேயே இருந்தாலும் சக்திகள் உங்களை விட்டு விலகிப் போகாது.

6. தன் புத்திக்கு, சொல்லுக்கு, செயலுக்கு எப்போதும் புரோகிராமை பிக்ஸ் பண்ணுங்கள், அதுவே சேமிக்க எளிய மற்றும் சிறந்த உபாயம் ஆகும். பட்ஜெட் போடும் போது இந்த திட்டத்திற்கு இவ்வளவு செலவு செய்யவேண்டும் என்று திட்டமிடுகிறார்கள். பிறகு அதன்படியே செலவு செய்கிறார்கள். அப்போது திட்டமிட்டபடியே காரியம் வெற்றியடைகிறது. எனவே பட்ஜெட் போடுவது என்றால் அமிர்தவேளை எழுந்து தினந்தோறும், தன்புத்தி மூலமாக, வார்த்தை மூலமாக செயல்மூலமாக என்னென்ன செய்ய வேண்டும் என எல்லாவற்றையும் முடிவு செய்யுங்கள். தினந்தோறும் டயரியில் குறிப்பிடுங்கள் பின்னர் அதன்படி செயலாற்றுங்கள்.

7. தற்போது சிறந்த ஆத்மாக்களாகிய நீங்கள் உலகிற்கு நன்மை செய்பவராக வேண்டும். அதற்காக நேரம் மற்றும் சக்திகளை தனக்காக மட்டுமல்லாமல் மற்ற பிற ஆத்மாக்களுடைய சேவைக்காகவும் சேர்த்து வைக்க வேண்டும். ஒருவேளை வீணாகிக்கொண்டிருந்தால், தன்னையே எல்லாம் நிரம்பியவராக உணரமுடியாது. அதனால், தன்னுடைய நேரத்தையும் சக்திகளையும் அவசியம் சிக்கனப்படுத்த வேண்டும் என்ற இலட்சியத்தோடு சேமியுங்கள். ஏனெனில் உலகில் உள்ள எல்லா ஆத்மாக்களும் சிறந்த ஆத்மாக்களாகிய உங்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. குடும்பம் எவ்வளவு பெரிதாக இருக்கிறதோ அவ்வளவு சிக்கனத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

8. சேமிப்பு அவ்வளவு நிறைவாக இருக்க வேண்டும் அதன்மூலம் 21 தலைமுறை எப்போதும் நிறைந்திருக்க வேண்டும். உங்கள் வம்சாவளிகளும் ஓகோவென வாழ வேண்டும். வெறும் 21 பிறவி மட்டுமல்ல, ஆனால் துவாபர யுகத்திலும் பக்த

ஆத்மாக்களாக இருப்பதால் ஒரு குறையும் இருக்காது. துவாபர யுகத்திலும் அவ்வளவு செல்வம் இருக்கிறது அதனால்தான் நல்லபடியாக தான-புண்ணியம் செய்கிறீர்கள். கலியுகத்தின் கடைசியிலும் பாருங்கள், கடைசி பிறவியிலும்கூட பிச்சைக்காரர்கள் ஆகவில்லையே. கருப்புப்பணம் இல்லை என்றாலும் பருப்பு-ரொட்டி இருக்கிறது அல்லவா! எனவே இந்த நேரத்தில் என்ன வருமானம் சேர்த்திருந்தீர்களோ, அதன்படியே கடைசி பிறவியிலும் பருப்பு - ரொட்டி சாப்பிடுகிறீர்கள்.

9. இன்றைய உலகத்தில் வீணாகும் பொருட்களை பயனுள்ளதாக மாற்றுகிறார்கள். வீணாவதைத் தவிர்க்கிறார்கள். அதுபோல நீங்கள் எல்லோரும் கூட சிக்கனத்தை எப்போதும் உங்கள் நினைவில் வையுங்கள். எண்ண சக்தி, வார்த்தை சக்தி, செயல் சக்தி, நேர சக்தி ஆகியவைகளை எங்கு, எப்படி காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்று பட்ஜெட் போடுங்கள். இந்த எல்லா சக்திகளும் வீணாகிப் போய்விட்டது என்று சொல்லக்கூடாது. எண்ணங்கள்கூட வீணானதாகவோ, சாதரணமாகவோ இருக்கக்கூடாது. அதையும் தவிர்த்து விடுங்கள். எப்போதும் சக்திமிக்க எண்ணங்களையே எண்ணுங்கள்.

10. எல்லா சக்திகளையும் சேமிப்பதற்காக முழு நாளுக்கும் சார்ட் போடுங்கள். ஒவ்வொரு சக்தியையும் எந்த அளவு காரியத்தில் பயன்படுத்துகிறீர்களோ அந்த அளவு சக்தி பெருகும். தினசரி செய்யக்கூடிய சாதாரண சேவை, அல்லது தினசரி நடந்து கொண்டிருக்கும் சாதாரண குடும்ப காரியங்கள், இவைகளை சேமிப்பை அதிகமாக்கும் செயல் என்று சொல்ல முடியாது. தவறான பேச்சை பேசவில்லை, ஆனால் நம்பிக்கையற்றவருக்கு நம்பிக்கை ஏற்படும்படியான, தைரியமற்றவருக்கு தைரியம் உண்டாகும்படியான பேச்சை பேசினீர்களா? குஷியால் ஊக்க உற்சாகம் பெறச் செய்தீர்களா? இதுவே சேமிப்பது அதாவது மிச்சப் படுத்துவது. சும்மா வீணாக இரண்டு மணிநேரம் கடந்து விட்டால் அதில் எதுவும் மிச்சமாக வில்லை. எல்லா சக்திகளையும் மிச்சப்படுத்தி சேர்த்து வைக்க வேண்டும். அப்படி பட்ஜெட் போடுங்கள்.

11. அந்த மாதிரி ஈஸ்வரிய பட்ஜெட் போடுங்கள் அதன்மூலமாக உலகில் உள்ள ஒவ்வொரு ஆத்மாவும் ஏதாவது பலன் பெற்று உங்களின் குணத்தைப் பாடவேண்டும். எல்லோருக்கும் ஏதாவது கொடுத்தே ஆகவேண்டும். முக்தி கொடுத்தாலும் சரி ஜீவன்முக்தி கொடுத்தாலும் சரி. ஈஸ்வரிய பட்ஜெட் என்றால் எல்லா ஆத்மாக்களும், இயற்கையும் சுகத்தையும் அமைதியையும் பெற வேண்டும்.

12. எல்லா கஜானாக்களையும் சிக்கனப்படுத்த சகித்துக்கொள்பவராக வேண்டும். சகித்துக்கொள்ளும் தன்மையுள்ள சிறந்த ஆத்மாக்கள், சதா ஞான, யோகத்தின் சாரத்தில் நிலைத்திருந்து, விரிவை, பிரச்சினைகளை, தடைகளை அதன் சாரத்தில் கொண்டுவந்து விடுவார்கள். எப்படி நீளமான வழியில் சுற்றி வரும்போது அதில் நேரமும் சக்திகளும் தீர்ந்து போய் விடுகிறதோ, அதாவது அதிகம் செலவாகி விடுகிறதோ, அதேபோல விரிவென்பது, அப்படிப்பட்ட நீண்ட பாதையில் செல்வதாகும். சாரமென்பது சுருக்கு வழியில் செல்வதாகும். இருவரும் கடந்து செல்கிறார்கள் என்றாலும், சுருக்கு வழியில் செல்வோரது நேரமும், சக்திகளும் மிச்சமாகக்கூடிய காரணத்தால் அவர்கள் நிராசை கொள்வதோ, மனமுடைந்துபோவதோ இல்லை, சதா ஆனந்தமாக, மகிழ்ச்சியோடு கடந்து செல்கிறார்கள்.

13. முழு நாளில் மனம், சொல், செயலின் செலவு மற்றும் சேமிப்பு எப்படி இருந்தது என்று கணக்கு பாருங்கள். இப்போது முக்கியமாக சொல், செயல் - இந்த இரண்டின் சக்திகளைச் சேமிப்பதற்குத் திட்டம் தீட்டுங்கள்.

# 2. எல்லா பயன்களையும் நினைவில் நிறுத்தி எளிதாக முயற்சி செய்பவர் ஆகுங்கள்

1. பாப்தாதா இந்த நேரத்தில் எல்லா குழந்தைகளையும் சங்கமயுகத்தின் அனைத்து பலன்களையும் அடைந்த ரூபத்தில் காண விரும்புகிறார். நீண்டகாலம் முயற்சி செய்து விட்டீர்கள், இப்போது முயற்சி தானாகவே நடக்க வேண்டும். சிரமப்படும் முயற்சி வேண்டாம். சங்கமயுக பிராப்தியின் பலன்களை இப்போது அனுபவிக்கவில்லை என்றால் பின்னர் எப்போது அனுபவிப்பீர்கள்!

2. தற்போது முயற்சி செய்ததன் பலன் சொரூபமாகிவிட வேண்டும் என்று பாப்தாதா விரும்புகிறார். தற்போது முயற்சி செய்துகொண்டு இருக்கிறேன், முயற்சி செய்துவிடுவேன், செய்து காட்டுவேன் என்ற வார்த்தைகளை எல்லாம் முடித்து விடுங்கள். செய்து காட்டுவீர்களா என்ன! செய்து காட்டுங்கள். அதற்காக மாஸ்டர் வள்ளலாகுங்கள்.

3. யாரிடம் சக்தி இல்லையோ அவர்களுக்கு சக்தியைக் கொடுங்கள். குணங்கள், சக்திகளின் உதவி செய்யுங்கள் அப்போது அவர்களிடமிருந்து உங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும், அந்த ஆசீர்வாதம் லிப்டைவிட வேகமான ராக்கெட்டாகும். பிறகு நீங்கள் முயற்சி செய்வதற்காக நேரம் ஒதுக்க வேண்டியதில்லை, ஆசீர்வாத ராக்கெட்டால் மேலே பறந்து கொண்டே இருப்பீர்கள். முயற்சியின் சிரமத்திற்குப் பதிலாக சங்கமயுகத்தின் பலன்களை அனுபவம் செய்வீர்கள். ஆசீர்வாதங்களைப் பெற கற்றுக்கொள்ளுங்கள், பிறருக்கும் கற்றுக்கொடுங்கள்.

4. தற்போது தனது முயற்சி செய்யும் நேரத்தை பிறருக்கு உதவி செய்வதில் ஈடுபடுத்துங்கள். அப்போது உங்கள் முயற்சியானது சேமிப்பை தானே அதிகமாக்கும். பிறருக்கு உதவி செய்வது என்றால் தனக்கு சேர்த்துக் கொள்வதாகும். இப்போது, கொடுக்க வேண்டும், கொடுக்க வேண்டும், எப்போதும் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற அலைகளைப் பரப்புங்கள். யாரிடமிருந்தும் சகாயம் பெறக்கூடாது, எல்லோருக்கும் சகாயம் செய்ய வேண்டும். தருவதில் பெறுவது அடங்கியிருக்கிறது.

5. சேவையில் ஏதாவது விசேச காரியத்திற்கு பொறுப்பேற்று, எந்த காரியத்தைச் செய்தாலும் அதற்கு விசேச ஆசீர்வாதம் கிடைக்கும். பொறுப்பேற்றதற்கான பாக்கியம் கிடைக்கிறது. பொறுப்பேற்றிருப்பவர் மீது அனைவரது பார்வையும் இருக்கக்கூடிய காரணத்தினால் அவருக்கு தன்மீதும் கவனம் இருக்கும். அவருடைய முயற்சி தனக்காகவும் மிக எளிதாக இருக்கும். இப்படி பொறுப்பேற்ற ஆத்மாக்கள் தங்கள் பாகத்தை சரியாக நடித்தால் பிறரது ஒத்துழைப்பின் உதவி கிடைக்கும்.

6. அனைவரது உள்ளத்தின் ஆசீர்வாதங்கள் விலைமதிக்க முடியாத பொருளாகும். யாருக்கு எந்த அளவு உளப்பூர்வமாக ஆசீர்வாதங்கள் கிடைக்கிறதோ, அந்த ஆசீர்வாதங்கள் சேமிப்பாகும்போது சகஜ முயற்சியாளர் ஆகிவிடுவார்கள். சேவைக்கு மட்டும் எப்போதும் கூப்பிட்டவுடன் வருகிறேன், சொல்வதைச் செய்கிறேன் என்று இருந்து புண்ணியத்தை சதா அதிகரித்துக்கொண்டே இருங்கள்.

7. பாப்தாதா சொல்கிறார் நீங்கள் வேறு எந்த முயற்சியும் செய்ய வேண்டாம், அன்புக்கடலோடு மட்டும் கலந்து விடுங்கள். பாபா, பாபா ஓ இனிய பாபா என்று சொல்லுங்கள், மேலும் அன்பில் கலந்து விடுங்கள், அப்போது இந்த அன்பின் சக்தியானது எல்லா விசயங்களில் இருந்தும் உங்களை எளிதில் விடுவித்துவிடும்.

8. ஒருபோதும் மரியாதையை மீறி யாருக்கும் சுகம் கொடுக்க வேண்டாம். மரியாதைக்கு உட்பட்டு உளமாற சுகங் கொடுங்கள். வெளிப்பார்வைக்கு செய்யாதீர்கள், அப்போது உங்கள் முயற்சி சுலபமாகிவிடும். யார் உண்மையான மனதோடு தன்னலமற்ற சேவையில் முன்னேறிச் செல்கிறார்களோ, அவர்களது கணக்கில் புண்ணியம் சேர்ந்துகொண்டே இருக்கும்.

9. எந்த குழந்தைகள் தானும் திருப்தியாக இருந்து பிறருக்கும் திருப்தி அளிக்கிறார்களோ, சரியாக யோகநிலையில் இருந்து உத்திகளோடு சேவை செய்கிறார்களோ, அவர்கள் எப்போதும் தங்களை சகஜமாக முயற்சி செய்பவர்கள் என்றே உணர்வார்கள், அவர்களிடமிருந்து பிறருக்கும் எளிதாக முயற்சி செய்வதற்கான தூண்டுதல் கிடைக்கும். அவர்கள் சகஜ முயற்சியின் அடையாளமாக விளங்குகிறார்கள். பாபாமீது, சேவைமீது மேலும் இந்த குடும்பத்தின்மீது அன்பிருக்குமானால் அந்த அன்பு சிரமத்திலிருந்து விடுவித்து விடுகிறது.

10. பெற்ற பலன்களை மனதில் பசுமையாக வைதது் இருப்பதிலேயே எளிய முயற்சியாகும். எப்போது பிராமணர்கள் ஆனீர்களோ அப்போதிருந்து தனது பாக்கியத்தை நினைவில் கொள்ளுங்கள். தடுமாற்றத்திற்கு ஆளாகாதீர்கள். உறுதியாக இருங்கள். அச்சல்கர் (அசையாதவரின் கோயில்) உங்களுடைய நினைவுச் சின்னந்தான். எனவே எப்போது இந்த சூட்சும முயற்சி செய்யும் மார்கம் சிரமமாகத் தோன்றுகிறதோ, புத்தி அதிகமாக தடுமாறுகிறதோ, அப்போது உங்கள் நினைவுச் சின்னத்தை நினைவில் கொண்டுவாருங்கள்.

11. ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு விசயத்திலும் புதுமை இருக்க வேண்டும், ஜாலியாக முயற்சி செய்ய வேண்டும், பிடிவாதமாகச் செய்யக்கூடாது. சில குழந்தைகள் அதிகமாக போராடுகிறார்கள். அது தேவையில்லை எனினும் தனது பலவீனத்தின் காரணமாக அப்படிச் செய்கிறார்கள். அவர்கள்மீது பாப்தாதாவிற்கு இரக்கம் வருகிறது, எனவேதான் சிரமப்பட்டு செய்யும் முயற்சி செய்யாதீர்கள் என்று சொல்கிறார். சுகமாக ஆனந்தமாக முயற்சி செய்யுங்கள்.

12. என்னுடையது என்ற அனேகவிதமான எல்லைக்குட்பட்ட பாவனைகளை ஒரேயொரு என்னுடைய பாபா என்பதோடு கலந்து விடுங்கள். ஆனால் என்னுடைய பாபா என்று வாயால் சொல்வது ஒன்று, உண்மையாகவே என்னுடைய பாபா என்று உள்ளத்தில் உணர்வது மற்றொன்று. யார் உளமாற என்னுடைய பாபா என்று ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் ஒருபோதும் மறப்பதில்லை, அவர்களுக்கு முயற்சி செய்வது எளிதாகி விடுகிறது.

13. சில குழந்தைகள் நினைவில் அமரும்போது “நான் ஜோதி பிந்து (புள்ளி), நான் ஜோதி பிந்து” என யோசிக்கிறார்கள். அப்படித்தான் இருக்கிறார்கள் ஆனால் அந்த ஜோதி மனதில் நிற்க மறுக்கிறது, உடல் உணர்வு மறக்க மறுக்கிறது. அதனால் சலிப்பு ஏற்படுகிறது. அதனால் பாப்தாதா சொல்கிறார் குழந்தைகளே ஒவ்வொரு நாளும் தனது புதுப்புது பட்டங்களை நினைவு செய்யுங்கள், அதாவது நான் ஜோதி புள்ளி என்றால் எப்படிப்பட்டவன்? தினந்தோறும் அனைத்து பிராப்திகளில் இருந்தும் ஏதாவது ஒரு பிராப்தியை நினைவில் கொண்டாலே முயற்சி செய்வது எளிதாகிவிடும்.

14. சின்னச் சின்ன விசயங்களின்மீது முயற்சி செய்து களைத்துவிடாதீர்கள். பொறாமை அழியவில்லை, இப்போதுகூட கொஞ்சம் கொஞ்சம் கோபம் வருகிறது. தவறான வார்த்தைகள் வந்து விடுகிறது. இப்படி ஒவ்வொரு விசயமாக எடுத்து அதன்மீது முயற்சி செய்யாதீர்கள். விதையை சரி செய்தால் மரம் தானே சரியாகிவிடும். இவை எல்லாவற்றிற்கும் விதை எண்ணங்கள்தானே. எண்ணங்கள் உயர்வாக இருந்தால் எல்லாமே உயர்வாகவே இருக்கும். எனவே சிரமப்பட அவசியமே இல்லை.

15. மனதை எப்போதும் பிஸியாக வைத்திருக்கவேண்டும், இதுவே எளிதாக முயற்சி செய்வதற்கான விதியாகும். அடிக்கடி மாயா வருகிறது பின்னர் அதை துரத்துகிறீர்கள் என்றால் அதிக முயற்சி செய்ய வேண்டியிருக்கும், யுத்தம் நடக்கும். பிஸியாக இருப்பவர்கள் யுத்தத்திலிருந்து தப்பி விடுகிறார்கள். பிஸியாக இருந்தால், வருவதற்கு மாயாவுக்கு தைரியம் இருக்காது. மேலும் நீங்கள் எந்த அளவு தன்னை பிஸியாக வைத்திருக்கிறீர்களோ அந்த அளவு உங்கள் உணர்வுகள் மூலமாக வாயுமண்டலம் மாற்றமடைந்துகொண்டே இருக்கும்.

16. ஒருவரை மட்டும் நினைவு செய்வது என்பது எளிய முயற்சியாகும், ஏனெனில் பலரை நினைவு செய்வது கடினமானது. ஆனால், ஒருவரை நினைவு செய்வது எளிதானது. சகஜ யோகத்தின் அர்த்தமே ஒருவரை மட்டும் நினைவு செய்வதுதான். ஒரு அப்பாவைத்தவிர வேறு யாருமில்லை என்ற விதிமூலமாக சகஜமாக முயற்சி செய்பவர் ஆகுங்கள் மேலும் பறக்கும் கலையில் பறந்து கொண்டே இருங்கள்.

# 3. உணர்வுகளால் வாயுமண்டலத்தை சக்திமிக்கதாக்குங்கள்

1. உணர்வுகள் மூலமாக அலைகளை (வைப்ரேசன்) பரப்புவதே எல்லாவற்றையும் விட அதிவேகமான சேவையாகும். உணர்வுகள் அதிவேக ராக்கெட்டை விடவும் விரைவானது. உணர்வுகள் மூலமாக வாயுமண்டலத்தை மாற்ற முடியும். எங்கு வேண்டுமோ, எத்தனை ஆத்மாக்களுக்கு வேண்டுமோ, அதற்குத் தகுந்த உணர்வுகளை இங்கு அமர்ந்து கொண்டே அங்கு அனுப்ப முடியும். உணர்வுகள் மூலமாக பார்வை மற்றும் படைப்புகளை (சிருஷ்டி) மாற்ற முடியும். அதற்கு தன்னுடைய உணர்வில் எல்லோர்மீதும் நல்லெண்ணங்களையும், நல்லாசைகளையும் மட்டும் கொண்டிருந்தால் போதும்.

2. உலகிற்கு நன்மை செய்வதற்காக உங்களது உணர்வு, பார்வை, மனோநிலை (ஸ்திதி) எல்லாம் எப்போதும் எல்லையற்றதாக இருக்க வேண்டும். உணர்வில் எந்த ஆத்மாமீதும் கொஞ்சம்கூட நெகட்டிவான எண்ணங்களோ அல்லது வீணான எண்ணங்களோ இருக்கக்கூடாது. நெகட்டிவ் விசயங்களை மாற்றுவது என்பது வேறு. ஆனால், யார், தானே நெகட்டிவ் உணர்வு உடையவராக இருக்கிறாரோ அவர் பிறரது குறைகளை(நெகட்டிவ்) நிறைகளாக (பாஸிட்டிவ்) மாற்ற முடியாது.

3. இப்போது நேரத்திற்குத் தக்கபடி, எல்லையற்ற வைராக்கிய உணர்வை எழுப்புங்கள். எல்லையற்ற வைராக்கிய உணர்வு இல்லாமல் ஆற்றலைப் பரப்பும் சேவையை செய்யமுடியாது. தற்போது எல்லாப் பக்கங்களிலும் மனதில் துக்கமும், நிம்மதி இல்லாமையும், கவலையும் மிக வேகமாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. எனவே எந்த அளவு துன்பத்தின் அலைகள் வேகமாக பரவுகிறதோ, அதே அளவு, சுகமளிக்கும் வள்ளலின் குழந்தைகளான உங்களது மன சக்தி மூலமாக, ஆற்றலை வழங்கும் சேவை மூலமாக, உணர்வுகள் மூலமாக எல்லோருக்கும் சுகத்தின் துளிகளை (அஞ்சலி) அனுபவம் செய்ய வையுங்கள்.

4. குழந்தைகள் நீங்கள் எங்கிருந்தாலும் எந்த கர்மசேத்திரத்தில் இருந்தாலும், உங்கள் ஒவ்வொருவரிடமும் பாபாவுக்கு சமமான குணம், செயல் மற்றும் சிறந்த எண்ணங்களின் வாயுமண்டலம் பிறருக்கு அனுபவமாக வேண்டும். இதுவே பாபாவிற்குச் சமமாவதாகும். எல்லாம் நடந்தபோதும், ஞானம் மற்றும் உலக நன்மை செய்யும் உணர்வின் மூலமாக, பாபாவையும் தன்னையும் வெளிப்படுத்தும் பாவனையோடு தற்போது எல்லையற்ற வைராக்கிய உணர்வை கடைப்பிடியுங்கள்.

5. தேவையான சாதனங்கள் எல்லாவற்றையும் பயன்படுத்துங்கள், ஆனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு உள்ளத்தின் வைராக்கிய உணர்வோடு பயன் படுத்துங்கள், சாதனங்களின் வசமாகி பயன்படுத்தாதீர்கள். தற்போது எங்கும் சாதனையின்(முயற்சியின ) வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். நேரம் நெருங்கி வருவதற்குத் தக்கபடி தற்போது உண்மையான தபஸ்யா அல்லது சாதனையாக இருப்பது எல்லையற்ற வைராக்கியம் மட்டுமே.

6. தற்போது உலகில் ஒருபுறம், பாவங்கள் மற்றும் அநியாயங்களின் தீ பற்றி எரிகிறது. மறுபுறம் குழந்தைகள் உங்களது சக்திமிக்க யோகம் அதாவது அன்பு, ஜுவாலை ரூபத்தில் இருக்க வேண்டியது அவசியமாகும். இந்த ஜுவாலை ரூபம் அந்த பாவங்கள், அநியாயங்களின் தீயை அழித்து எல்லா ஆத்மாக்களுக்கும் உதவிபுரியும். உங்களுடைய அன்பு ஜுவாலை ரூபத்தில் இருக்க வேண்டும் அதாவது பவர்புல் யோகமாக இருக்க வேண்டும், உணர்வில் எல்லோருக்கும் நன்மை உண்டாக வேண்டும் என்ற பாவனை இருக்க வேண்டும், அப்போது இந்த அன்பின் அக்கினி, அந்த அக்கினியை முடித்துவிடும், மேலும் இன்னொரு பக்கம் ஆத்மாக்களுக்கு பரமாத்மாவின் செய்தியையும், குளிர்ந்த நிலையின் அனுபவத்தையும் செய்ய வைப்பீர்கள்.

7. தற்போது பார்வை-உணர்வில் தூய்மை இருக்க வேண்டும் என்பதை இன்னும் நன்றாக அன்டர்லைன் செய்யுங்கள், எனினும் தன் எண்ணங்களை சுத்தமாகவும், ஞானசொரூபமாகவும், சக்தி சொரூபமாகவும் ஆக்குவதே மூல அஸ்திவாரமாகும். அப்போது உங்கள் எண்ண அலைகள் மூலமாக, உணர்வுகள் மூலமாக, சுப பாவனைகள் மூலமாக பிறரது மாயை எளிதில் அகன்று விடும். ஒருவேளை ஏன்? என்ன? என்பதில் சென்றீர்கள் என்றால், உங்கள் மாயையும் போகாது மற்றவர் மாயையும் போகாது.

8. ஒருவர் எவ்வளவுதான் அலைந்து, திரிந்து கவலையோடு, துக்கத்தின் அலைகளுக்கு ஆட்பட்டு சுகமடைவதற்கு வாய்ப்பே இல்லையென நினைத்திருக்கட்டும். ஆனால் உங்கள் முன்னால் வந்தவுடனேயே உங்கள் உருவம், உங்கள் உணர்வு, உங்கள் பார்வை ஆத்மாவை மாற்றிவிட வேண்டும். சேவை செய்தோம், தியான நிலையங்கள் திறந்தோம், ஆத்மாக்களை அதிகமாக்கினோம், IP-கள் வந்துவிட்டார்கள், VIP-களும் வந்து விட்டார்கள் என்றெல்லாம் நினைக்காதீர்கள். இதெல்லாம் நடந்துகொண்டுதான் இருக்கிறது என்றாலும், நீங்கள் கொள்ளும் வைராக்கிய உணர்வே சேவையின் மூலமாக மற்ற ஆத்மாக்களை இன்னும் அருகில் கொண்டுவரும். **வார்த்தையின் சேவை தொடர்பில் கொண்டுவருகிறது, உணர்வின் மூலமாக உருவான வாயுமண்டலத்தால் ஏற்படும் சேவை சம்மந்தத்தை ஏற்படுத்துகிறது.**

9. தற்போது குழந்தைகள் நீங்கள் இருவிதமான சேவைகளைச் செய்ய வேண்டும் - ஒன்று ஆத்மாக்களை தகுதியுடையவராகவும் யோகியாவும் உருவாக்குவது. இரண்டாவது பூமியையும் தயார் செய்வது. அதற்கு விசேசமாக வார்த்தைகளோடு கூடவே உணர்வுகளுக்கும் இன்னும் அதிக வலிமை கொடுக்கவேண்டும். ஏனெனில் **உணர்வின் மூலம் வாயுமண்டலம் உருவாகிறது. வாயுமண்டலத்தின் பிரபாவம் இயற்கை மீது படுகிறது, அப்போது இயற்கை தயாராகிறது.** வார்த்தைகள் உணர்வுகள் இரண்டும் ஒருங்கிணைந்து சேவையில் செயல்பட வேண்டும்.

10. உங்களது பேச்சு, செயல், உணர்வுகள் மூலமாக இலேசான நிலை அனுபவமாக வேண்டும். நான் இலேசாகத்தான் இருக்கிறேன் ஆனால் பிறர் என்னை அறியாமல், புரியாமல் இருக்கிறார்கள் என்று சொல்லக் கூடாது. பிறர் அறியவில்லையென்றால் நீங்கள் உங்கள் வில்பவர் (மனவலிமை) மூலமாக அவர்களை அறியச் செய்யுங்கள். 95 சதவீதம் அனைவருக்கும் பிடித்தமானவர் ஆகுங்கள். உங்கள் செயலும் உணர்வும் பிறரை மாற்ற வேண்டும். இதற்குப் பொறுமையை கடைப்பிடிப்பது மட்டுமே அவசியமாகும்.

11. உங்கள் உணர்வில் உயர்ந்த எண்ணங்கள், உயர்ந்த ஆசைகள் இருக்குமானால், நொடிப்பொழுது எண்ணத்தால், பார்வையால் தனது உள்ளத்தின் மகிழ்ச்சி மூலமாக நொடிப் பொழுதிலேயே யாருக்கு வேண்டுமானாலும் நிறைய கொடுக்கமுடியும். யார் வந்தாலும் அவர்களுக்கு பரிசு கொடுத்து அனுப்புங்கள், வெறுங்கையோடு போகக்கூடாது. எந்த அளவு நம்பிக்கை என்ற அஸ்திவாரம் உறுதியாக இருக்கிறதோ, அந்த அளவே ஆரம்பத்தில் இருந்து இதுவரை சகஜயோகி, தெளிந்த சுபாவம், நல்ல உணர்வுகள் மற்றும் ஆன்மீகப் பார்வை ஆகியவைகள் இயற்கையான ரூபத்தில் அனுபவமாகும்.

12. ஒவ்வொருவரையும், ஒவ்வொரு விசயத்தையும் நல்ல எண்ணத்தோடு பாருங்கள், கேளுங்கள் அல்லது சிந்தனை செய்யுங்கள், அப்போது ஒருபோதும் கோபமோ, ஆவேசமோ வராது. நீங்கள் மாஸ்டர் அன்புக்கடலாக இருப்பதால் உங்கள் கண்களில், உள்ளத்தில், உணர்வில், பார்வையில் கொஞ்சம்கூட வேறு எந்த உணர்வுகளும் தோன்ற முடியாது. அதனால் என்ன ஆனாலும் சரி, முழு உலகமும் உங்கள்மீது கோபப்படட்டுமே, அப்போதுகூட மாஸ்டர் அன்புக் கடலான நீங்கள் அதனை சட்டை செய்யாதீர்கள். கவலையற்ற ராஜாவாகி விடுங்கள், அப்போது உங்கள் சிறந்த உணர்வுகள் மூலமாக சக்திமிக்க வாயுமண்டலம் உருவாகும்.

13. தற்போதய அறிவியல் சாதனங்கள் மூலமாக கரடுமுரடான பொருட்களைக்கூட மிக அழகான வடிவுடையதாக மாற்றிவிடுகிறார்கள், அதேபோல உங்கள் சிறந்த உணர்வுகள் நெகட்டிவ் அல்லது வீண் விசயங்களை பாசிட்டிவாக மாற்றிவிடும். உங்கள் மனம், புத்தி அப்படி ஆகிவிடவேண்டும் அதன்மூலம் நெகட்டிவ் உங்களைத் தொடாமல் நொடியில் மாறிவிட வேண்டும்.

# 4. தற்போது மனதின் மூலம் ஆற்றலை (சகாஸ்) வழங்கும் சேவை செய்யுங்கள்.

1. குழந்தைகள் நீங்கள் அமைதி தூதுவர்கள், எங்கிருந்தாலும் நடக்கும்போதும் சுற்றும்போதும் சதா தன்னை அமைதி தூதுவர் என உணர்ந்து நடந்து கொள்ளுங்கள். யார் தானே அமைதி சொரூபத்தில், சக்திசாலி சொரூபத்தில் நிலைத்து இருக்கிறார்களோ அவர்கள் பிறருக்கு அமைதி மற்றும் சக்திகளின் ஆற்றலை வழங்கிக்கொண்டே இருப்பார்கள்.

2. உயர்ந்த கோபுரத்திலிருந்து ஆற்றலைப் பாய்ச்சுகிறார்கள், வெளிச்சத்தையும் ஆற்றலையும் பரப்புகிறார்கள், அதேபோல குழந்தைகள் நீங்களும் தங்கள் உயர்ந்த மனோநிலை அதாவது உயர்ந்த இடத்தில் அமர்ந்து குறைந்தது எட்டு மணி நேரம் உலகிற்கு வெளிச்சத்தையும் சக்திகளையும் வழங்குங்கள். சூரியன்கூட உயரத்தில் இருக்கும்போதுதான் உலகிற்கு ஒளிதர முடிகிறது. எனவே மனித உலகிற்கு ஆற்றலை வழங்குவதற்கு உயர்ந்த இடத்தில் இருப்பவர் ஆகுங்கள்.

3. இந்த தேக உலகில் எது வேண்டுமானாலும் நடந்துகொண்டிருக்கட்டும், ஆனால் நீங்கள் உங்கள் டபுள்லைட் பரிஸ்தா நிலையில் நிலைத்து இருந்து, சாட்சியாகி எல்லோருடைய பாகத்தையும் பார்த்துக்கொண்டே ஆற்றலை வழங்குங்கள் அதாவது உதவி செய்யுங்கள், ஏனெனில் நீங்கள் எல்லோருக்கும் நன்மை செய்யும் பொறுப்புடையவர்கள். இந்த ஆற்றல் தருவதே அந்த பொறுப்பை நிறைவேற்றுவதாகும், ஆனால் உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து ஆற்றலை வழங்குங்கள்.

4. தற்போது நேரத்திற்குத் தக்கபடி வார்த்தையின் சேவையோடு கூடவே மனதின் நல்லெண்ண உணர்வுகள் மூலமாக ஆற்றலை வழங்கும் சேவையையும் சேர்த்து செய்யுங்கள். இந்த டபுள் சேவை மூலமாகவே எளிதில் ஒன்பது இலட்சம் பேர் ஆகிவிடுவார்கள். எப்படி பாபா அவ்யக்த வதனத்தில், ஒரிடத்தில் அமர்ந்தபடியே உலகத்தின் எல்லா இடங்களிலும் உள்ள குழந்தைகளைப் பராமரிக்கிறாரோ, அதேபோல நீங்களும் ஒரிடத்தில் அமர்ந்தபடியே பாபாவிற்கு சமமாக எல்லையற்ற சேவை செய்யுங்கள். அளவற்ற ஆற்றலை அள்ளி வழங்குங்கள்.

5. இந்த ஆற்றல் வழங்கும் சேவையை நிரந்தரமாகச் செய்யமுடியும், இதில் உடலின் ஆரோக்கியம் மற்றும் நேரத்தின் விசயமே இல்லை. இரவு பகலாக இந்த சேவையை செய்துகொண்டே இருக்கலாம். பிரம்மா பாபாவைப் பார்த்தீர்கள் அல்லவா, இரவில்கூட கண் திறந்தே இருந்து, எல்லையற்ற ஆற்றல் தரும் சேவை நடந்துகொண்டே இருந்தது, அதேபோல அப்பாவைப் பின்பற்றுங்கள். குழந்தைகள் நீங்கள் எப்போது எல்லையற்ற ஆற்றலை வழங்குகிறீர்களோ, அப்போது அருகில் இருப்பவர்கள் தாமாகவே அந்த ஆற்றலைப் பெற்றுக் கொண்டிருப்பார்கள். இந்த எல்லையற்ற ஆற்றலை வழங்குவதன்மூலம் தானாகவே நல்ல வாயுமண்டலம் உருவாகும்.

6. பிராமண குழந்தைகள் நீங்களே அடிமரம். அடிமரத்திலிருந்தே முழு மரத்திற்கும் ஆற்றல் சென்று சேர்கிறது. அதனால் இப்போது உலகிற்கு சக்தியளிப்பவர் ஆகுங்கள். ஒருவேளை 20 சென்டர், 30 சென்டர், அல்லது 250 சென்டர் அல்லது ஜோன், புத்தியில் இருக்குமானால், எல்லையற்ற ஆற்றலை வழங்க முடியாது. அதனால் எல்லைக்குட்பட்டதில் இருந்து விலகி இப்போது எல்லையற்ற சேவையை துவக்குங்கள். எல்லையற்றதில் மனம் ஈடுபடும்போது எல்லைக்குட்பட்டது தானே விலகிவிடும். எல்லையற்ற ஆற்றல்மூலமாக மாற்றம் வரவேண்டும். இதுவே துரித சேவையின் பலனாகும்.

7. தற்போது உங்கள் உள்ளத்தின் சுபபாவனைகளை மற்ற ஆத்மாக்களுக்கு அனுப்புங்கள். அமைதியின் சக்தியை வெளிப்படுத்துங்கள். ஒவ்வொரு பிராமண குழந்தையிடமும் இந்த அமைதியின் சக்தி இருக்கிறது. இந்த சக்திகளை மட்டும் மனதில் இருந்தும், உடலில் இருந்தும் வெளிப்படுத்துங்கள். ஒரு நொடியில் மனதின் எண்ணங்களை ஒருமிக்கச் செய்தால் அது வாயுமண்டலத்தில் அமைதியின் சக்தியை தானகவே பரப்பிக் கொண்டிருக்கும்.

8. தற்போது குழந்தைகள் நீங்கள் உங்கள் சிறந்த சக்திமிக்க எண்ணங்களின் மூலமாக ஆற்றலை வழங்குங்கள். பலவீனமானவர்களுக்கு பலம் கொடுங்கள். உங்களுடைய முயற்சி செய்யும் நேரத்தை பிறருக்கு உதவி செய்வதில் ஈடுபடுத்துங்கள். பிறருக்கு உதவி செய்வது என்றால் தனக்கே சேமித்துக் கொள்வதாகும். சகாயம் பெறக்கூடாது, சகாயம் கொடுக்க வேண்டும் என்ற இந்த அலையை இப்போது பரப்புங்கள். தருவதில் பெறுவதும் அடங்கி இருக்கிறது.

9. எந்த அளவு நேரம் நெருங்கி வந்துகொண்டிருக்கிறதோ அந்த அளவு வீண் எண்ணங்கள் மனதில் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் இவைகள் முடிந்து போவதற்காக வெளிவந்து கொண்டிருக்கிறன. வருவது அதன் வேலை, பறக்கும் கலை மூலமாக, ஆற்றல் மூலமாக அவைகளை மாற்றுவது உங்கள் வேலை. பயப்படாதீர்கள். அதன் போக்கில் போகாதீர்கள்.

10. தற்போது சுயநன்மைக்காக அப்படிப்பட்ட திட்டம் தீட்டுங்கள் அதன் மூலம் உலக சேவைக்குத் தேவையான ஆற்றல் தானாகவே கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும். தற்போது ஊக்க உற்சாகத்துடன் தன் மனதில் நான் பாபாவுக்கு சமமாகிக் காட்டுவேன் என்ற திடமான உறுதிமொழியை எடுங்கள். பிரம்மா பாபாவிற்கும் குழந்தைகள்மீது அதிக அன்பு இருக்கிறது, அதனால் ஒவ்வொரு குழந்தையையும் வதனத்தில் தோன்றச்செய்து சமமாவதற்கான விசேச சக்திகளை வழங்கிக்கொண்டிருக்கிறார்.

11. இயற்கையின் எல்லாத் தத்துவங்களையும் மாற்ற வேண்டும், தமோகுண சமஸ்கார ஆத்மாக்களின் தமோகுண எண்ண அலைகளையும் மாற்றவேண்டும், மேலும் தன்னையும் அப்படிப்பட்ட தேவையற்ற இரத்த ஆறு ஓடும் வாயுமண்டலத்தின் வைப்ரேஷனில் இருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும் அதோடு அந்த ஆத்மாக்களுக்கும் உதவி செய்ய வேண்டும், இந்த பரந்த காரியத்திற்காக சூட்சும சக்தி மிக்க மனம் தேவை.

12. தற்போது சேவையில் ஆற்றலை வழங்க வேண்டும், புத்தியை மாற்ற வேண்டிய சேவையையும் அதில் சேர்த்துக்கொள்ளுங்கள். பிறகு பாருங்கள் வெற்றி உங்கள் முன்னே தானே தலைவணங்கும். சேவையில் என்ன தடை வருகிறதோ, அந்த தடை என்ற திரைக்குள் நன்மையான காட்சிகள் மறைந்திருக்கிறது. வெறும் மனம், சொல்லின் சக்தியால் தடைகளின் திரையை விலக்குங்கள் அப்போது உள்ளே நன்மை தரும் காட்சிகள் இருப்பது தெரியவரும்.

13. ஞானசிந்தனை செய்வதோடு கூடவே, சுபபாவனை, சுபஆசைகளின் எண்ணங்கள், சக்தி வழங்கும் பயிற்சி ஆகியவைகளை, குறிப்பாக மனதில் மௌனம் இருக்கும் போதும், டிராபிக் கண்ட்ரோல் சமயத்திலும் செய்யுங்கள். விசேசமாக ஏகாந்தவாசியாக இருக்கவும், கஜானாக்களை சிக்கனமாக செலவு செய்யவும் திட்டமிடுங்கள். ஒருவரைப் பற்றியே சிந்திப்பவராகவும், சிக்கனத்தை கடைப் பிடிப்பவராகவும் ஆகுங்கள்.

14. நான் அமைதியின் கதிர்களை, சக்திகளின் கதிர்களை உலகத்தின் மீது பரப்புவேன், தபஸ்வி மூர்த்தியாக இருப்பேன் என இப்போது ஒவ்வொரு குழந்தையும் நினைக்க வேண்டும். மனதின் நல்ல எண்ணங்களின் மூலம் ஒருவர் பிறருக்கு உதவி முன்னேற வேண்டும், மேலும் பிறரையும் முன்னேற்ற வேண்டும்.

15. ஏதாவது சுபாவ சமஸ்காரமுடைய ஆத்மா உங்கள் முயற்சியை பரீட்சை செய்து பார்க்க நிமித்தமாகி இருந்தாலும், அந்த ஆத்மா மீதும் எப்போதும் நல்லதையே நினைத்து நல்ல உணர்வுகளையே கொண்டிருங்கள். உங்கள் நெற்றியில் அதாவது புத்தியின் நினைவில் அல்லது பார்வையில் ஆத்ம சொரூபத்தைத் தவிர வேறு எதுவும் தெரியக்கூடாது, அப்போதே மனசேவை செய்யமுடியும்.

# 5. களங்கமற்றவர் (நிர்மல்) ஆகுங்கள் பணிவுடையவர் ஆகுங்கள்.

1. குழந்தைகளே வார்த்தையில் பணிவுடையவர்கள் ஆகுங்கள் என்று பாப்தாதா எல்லாக் குழந்தைகளுக்கும் விசேச ஸ்ரீமத் தருகிறார். பணிவதே பெருமைக்குரிய செயலாகும். இது பணிந்து போவதல்ல, உண்மையில் பரமாத்மாவையே தன்னிடம் பணிய வைப்பதாகும். இதுவே ஆசீர்வாதங்களைப் பெறுவதற்குச் சாதனமாகும்.

2. இந்த வருடத்தை சிறப்பாக பணிவு மற்றும் களங்கமற்ற வருடமாகக் கொண்டாடுங்கள். இன்னும் எங்களுக்குச் சொல்லுங்கள் என எல்லோரும் சொல்ல வேண்டும் அந்தமாதிரி உங்கள் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் இருக்க வேண்டும். வாயிலிருந்து வைரங்களும் முத்துக்களும் வெளிவர வேண்டும். அபிமானத்தோடு பேசி யாருக்கும் துக்கம் கொடுக்காதீர்கள்.

3. தன் சுபாவத்தை நிர்மலமாக்கும்போது (குளிர்ச்சியாகவும் சுத்தமாகவும்) ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி கிடைத்துக்கொண்டே இருக்கும். தற்போது களங்கமற்ற (நிர்மல) சுபாவத்தின்மீது விசேச அன்டர்லைன் செய்யுங்கள். எதுவேண்டுமானாலும் நடக்கட்டும், ஆனால், தனது சுபாவம் எப்போதும் களங்கமின்றி இருக்க வேண்டும். களங்கமில்லா சுபாவம் என்றால் முற்றிலும் குளிர்ச்சியாக, தூய்மையாக இருப்பதாகும். குளிர்ச்சியாக இருப்பதால் குளிர்ந்த தேவி (சீதளாதேவி) என்று புகழ் பாடப்படுகிறது.

4. ஏதாவது விசயம் ஆவேசப்படுத்தக் கூடியதாக இருந்தாலும் நீங்கள் களங்கமில்லாமல் இருங்கள். மாற்றக்கூடிய சக்தியின் ஆதாரத்தில் நொடியில் முற்றுப் புள்ளிவைத்து விடுங்கள், உள்ளே சலசலப்பு இருக்கக்கூடாது அப்போதே, களங்கமில்லாதவர், பணிவானவர் என்று சொல்லமுடியும். அதனால்தான் வளைந்து கொடுப்பவரே உண்மையான தங்கமானவர் என்று பாப்தாதா சொல்கிறார்.

5. எந்த குழந்தைகளது சுபாவம் களங்கமின்றி (நிர்மல்) இருக்கிறதோ அவர்களது கருத்து பரிமாற்றங்கள் சகஜமாக இருக்கும். எந்த சேவைக்கும் தடை ரூபமாக இருக்கமாட்டார்கள். எனது கருத்து, எனது திட்டம், எனது சேவை இவ்வளவு அருமையாக இருந்தும் ஏன் என்னுடையதை ஏற்க மறுக்கிறார்கள்.? என ஒருபோதும் எண்ணத்திலும் நினைக்க மாட்டார்கள். இந்த எனது எனபது வருவதுகூட தனது தரத்தைக் குறைத்துக் கொள்வதாகும்.

6. நம்பிக்கை என்ற அஸ்திவாரம் உறுதியாக இருக்குமானால், சகஜயோகி, களங்கமில்லா சுபாவம், சுபபாவனையின் உணர்வு, ஆன்மீக பார்வை இவைகள் எல்லாம் உடையவராக இருப்பார்கள். நடத்தை மற்றும் முகத்தின் மூலமாக எப்போதும் சரளமாக இருக்கும் ஜொலிப்பு பிறருக்கு அனுபவமாகிக்கொண்டே இருக்கும்.

7. எந்த குழந்தைகள் எப்போதும் களங்கமின்றியும் பணிவுடனும் இருக்கிறார்களோ அவர்களது மனம்-புத்தியில் வீண் எண்ணங்களின் வேகம் விரைவாக இருக்காது. அவர்கள் களங்கமின்றியும் பணிவுடனும் இருக்கக்கூடிய காரணத்தால், எல்லோருக்கும் மகிழ்ச்சி என்ற நிழலால் குளிர்ச்சியைத் தருவார்கள். ஒருவர் தீ போன்று எரிந்துகொண்டிருக்கக் கூடிய சூடேறிய தலையுடையவராகக் கூட இருக்கலாம் ஆனால் உங்களது மகிழ்ச்சியின் மனஅலைகளின் நிழல் அவரை குளிரச் செய்துவிடும்.

8. பூர்வீக மற்றும் பூஜைக்குரிய ஆத்மாக்களாகிய உங்களது நினைவுச் சின்னங்களிலும் கண்கள் எப்போதும் களங்கமின்றி (நிர்மல்) இருப்பதாகக் காண்பித்திருக்கிறார்கள். ஒருபோதும் அபிமானம் அல்லது அவமானத்திற்கு வயப்பட்ட கண்களை காட்டவில்லை. எந்தவொரு தேவி அல்லது தேவனின் கண்களும் களங்கமற்றதாகவோ அல்லது ஆன்மீக பார்வை உடையதாகவோ எப்போதும் இருக்கும். எனவே எப்போதாவது யார்மீதாவது அப்படி கெட்ட எண்ணங்கள் எழுமானால் தான் யார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனது உயிரற்ற சித்திரமே ஆன்மீகக் கண்களைக் கொண்டிருக்கும்போது நான் உயிரோடிருப்பவன் அல்லவா?

9. யார் பணிவுடையவரோ, களங்கமில்லா சுபாவமுடையவரோ, அவருக்கு ஒருபோதும் தனது வெற்றியின் அபிமானம் வராது. அதை அவர்கள் வர்ணிக்க மாட்டார்கள், தன்னைப்பற்றி தம்பட்டம் அடிக்கவும் மாட்டார்கள். பிறர் அவரது புகழ் பாடுவார்கள் ஆனால், அவர் எப்போதும் பாபாவின் குணத்தைப் பாடுவார். அதனால் யார் எப்படி இருந்தாலும் மனதார அன்பு செலுத்துங்கள், சுபபாவனை கொடுங்கள், இரக்கம் காட்டுங்கள்.

10. பணிவுடைய ஆத்மாக்கள் காரணங்களையும் பிரச்சினைகளையும் நல்ல சமாதானங்களாக மாற்றிவிடுவார்கள். அவர்களது முகத்தில் ஒருபோதும் பலவீனமோ அல்லது தொட்டால் சிணுங்கி நிலையின் அடையாளமோ இருக்காது. அதனால் பணிவுடையவர் ஆகுங்கள், தொட்டால் சிணுங்கி ஆகாதீர்கள். யார் தண்ணீர் பழமாக இருக்கிறார்களோ அவர்கள் தொட்டால் சிணுங்கியாக இருப்பார்கள். தண்ணீர் ஊற்றியவுடன் அது ஓடிவிடுகிறது அல்லது வாடிப்போகிறது என்று இருக்கக்கூடாது.

11. பணிந்திருப்பதே சுயமரியாதை மேலும் இதுவே எல்லோரது மரியாதையையும் பெற சகஜ சாதனமாகும். **பணிவது தாழ்ந்து போவதல்ல, ஆனால் எல்லோரையும் தன்னுடைய சிறப்புகள் மற்றும் அன்பின் மீது பணிய வைப்பதாகும்.**

12. மேன்மையின் அடையாளம் பணிவு. எவ்வளவு பணிவோ அவ்வளவு தானாகவே அனைவரது உள்ளத்திலும் உயர்ந்தவராக இருப்பீர்கள். பணிவில்லாமல் அனைவருக்கும் சுகமளிக்கும் மாஸ்டர் வள்ளலாக முடியாது. பணிவு சகஜமாக அகந்தையற்றவர் ஆக்குகிறது. **பணிவு என்ற விதை மேன்மை (மகான்) என்ற கனியை தானாகவே அடையச் செய்கிறது.**

13. எந்த அளவு கனிகள் நிறைந்திருக்கிறதோ அந்த அளவு பணிந்திருக்கிறது என்று மரத்தைச் சொல்கிறார்கள், எனவே பணிந்திருக்கும் மரம் சேவை செய்கிறது. அதேபோல பணிவுடைய ஆத்மாக்கள் எல்லோருக்கும் சுகம் தரும் சேவை செய்வார்கள். அவர்கள் எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் அது சுகம் தருவதாக இருக்கும். எவ்வளவு சுயமரியாதையோ அவ்வளவு பணிவு இருக்கும். நாம் உயர்ந்து விட்டோம் மற்றவர் சிறியவர் என நினைப்பதோ அல்லது பிறர்மீது வெறுப்பு கொள்வது என்பதோ கூடவே கூடாது.

14. பொறுப்புணர்வு மற்றும் பணிவுடைமையே நல்லெண்ணங்கள் மற்றும் நல்லாசைகளை தோற்றுவிக்கும் விதையாக இருக்கிறது. எல்லைக்குட்பட்ட பெருமை அல்ல ஆனால் பணிவு இருக்க வேண்டும். ஒருபோதும் பண்பை விட்டுவிட்டு சத்தியத்தை நிருபிக்க வேண்டாம். பண்பின் அடையாளம் பணிவு. இந்தப் பணிவே உருவாக்கும் காரியத்தை எளிதாகச் செய்ய வைக்கிறது. எதுவரை பணிவுடையவர் ஆகவில்லையோ அதுவரை ஆக்கப்பூர்வமான காரியம் எதையும் செய்ய முடியாது.

15. ஒவ்வொரு ஆத்மாமீதும், நன்மை அல்லது கருணையின் உணர்வு, ஒவ்வொருவரையும் மேன்மை நிலைக்கு உயர்த்தும் குணம், இனிமையான பண்பு, பணிவான நிலை ஆகியவைகளைக் கடைப்பிடியுங்கள். இந்த சுபாவங்கள் உங்களை எப்போதும் இலேசாக வைத்திருக்கும், மேலும் எந்த சுமையும் அனுபவமாகாது.

16. யார் பணிவாக இருக்கிறாரோ அவரிடம் ஆணவம் தோன்றாது, ஆன்மீக நிலையின் ஜொலிப்பு இருக்கும். பாபா எப்படி எவ்வளவு பணிவோடு வருகிறார், தன்னை உலகின் பணியாள் என்று சொல்லி, குழந்தைகளை தன்னைவிட உயர்ந்த இடத்தில் வைக்கிறார், அப்படி தந்தையைப் பின்பற்றுங்கள். ஒருக்கால் சேவையில் சிறிது ஆணவம் தோன்றுமானால் அந்த சேவை அதோடு நின்று விடும்.

# 6. காலத்தின் அழைப்பு
# ஆன்மீகத்தால் முழுமை பெறுங்கள்.

1. இனிமையான குழந்தைகளே, இந்த நேரம் ஆன்மீக நிலையில் இருக்கும் நேரமாகும். ஒருவேளை ஆன்மீக நிலையில் இல்லையென்றால் விதவிதமான மாயாவின் வண்ணங்களில் வந்துவிடுவீர்கள். யோகம் என்றால் நினைவு, நினைவு என்றால் கனெக்சன் என்று சொல்கிறீர்கள் அல்லவா! ஆனால் கனெக்சனின் பிராக்டிகல் ரூபமே ஆன்மீக நிலைதான். ஆன்மீக நிலையில் இருப்பதன் மூலமாகவே உங்கள் பரிஸ்தா ரூபம் பிரத்தியட்சமாகும்.

2. கடைசியில் நேரமும் இருக்காது, இவ்வளவு சக்தியும் இருக்காது. ஆனால் எந்த காரியத்தை வார்த்தை செய்கிறதோ அதைவிட பலமடங்கு அதிகமாக ஆன்மீக சக்தி வேலை செய்யும். எப்படி பேச்சில் வருவதற்கான பழக்கம் ஏற்பட்டு விட்டதோ அதேபோல ஆன்மீக நிலையில் இருப்பதற்கான பயிற்சியை அதிகப்படுத்துங்கள். எப்போதெல்லாம் வாய்ப்புக் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் ஆன்மீகக் கவர்ச்சியின் காட்சி அவசியம் உங்களிடம் தெரிய வேண்டும்.

3. உங்கள் தியான நிலையத்தை அல்லது எந்த தியான நிலையம் உங்கள் அருகில் உள்ளதோ அதன் சூழ்நிலையை ஆன்மீக மயமாக்குங்கள், அதன்மூலம் தனக்கும், வரக்கூடிய ஆத்மாக்களுக்கும் சகஜமாக உன்னதநிலை ஏற்படும். ஏனெனில் யாரெல்லாம் தியான நிலையத்திற்கு வருகிறார்களோ அவர்களுக்கு எக்ஸ்ட்ரா உதவி தேவைப்படுகிறது. எனவே ஆன்மீக வாயுமண்டலத்தின் மூலமாக உதவிகொடுத்து அவர்களை சகஜ முயற்சியாளர் ஆக்குங்கள்.

4. யார் சேவைக்கு பொறுபப்பு ஏற்றிருக்கிறீர்களோ அவர்கள், தன்னை பாப்தாதாவின் அடமானப்பொருள் என்று உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். எந்த அளவு தன்னையும் பிறரையும் அடமானப்பொருள் என்று உணர்ந்து நடந்து கொள்கிறீர்களோ, அந்த அளவு ஆன்மீகநிலை நிலையாக இருக்கும். மனதில் எதை நினைத்தாலும், அதையும் அடமானப்பொருள் என்று உணர்ந்து எண்ணங்களைத் தோற்றுவிக்க வேண்டும். அடமானப் பொருள் என்று உணர்வதன் மூலம் அதில் ஆசையின்றி இருப்பீர்கள். ஆசையின்றி இருப்பதன் மூலமாகவே ஆன்மீக நிலை வரும்.

5. இந்த உடலையும்கூட ஈஸ்வரிய சேவைக்கான அடமானப்பொருள் என்று உணர்ந்து நடந்து கொண்டால், யாருடைய அடமானமோ அவரது நினைவு அந்த அடமானப் பொருளைப் பார்க்கும் போது வரும். ஆன்மீகத் தந்தை இதை அடமானமாகத் தந்திருக்கிறார் எனும்போது அந்த ஆன்மீகத் தந்தையின் நினைவு வரும். அடமானம் என்று உணரும்போது ஆன்மீகம் இருக்கும் மேலும் அன்மீகம் இருப்பதால் புத்தி எப்போதும் அதன் வழியிலேயே போகும், எந்த களைப்பும் தோன்றாது.

6. எப்படி புரஜெக்டர் பவர்புல்லாக இருந்தால் காட்சிகள் தெளிவாக தெரிகிறதோ அதேபோல, குழந்தைகள் உங்களது இந்த தெய்வீகக் கண்கள் எப்போது தெளிவடையுமோ அதாவது ஆன்மீகத்தால் முழுமையடையுமோ அப்போது இந்தக் கண்கள் மூலமாக பாப்தாதாவும், முழு படைப்பினுடைய மனித உலகம், சூட்சும உலகம், ஆத்ம உலகம் ஆகிய இந்த மூன்று உலகங்களின் சித்திரங்களும் தெளிவாகத் தெரியும். எந்த அளவு வெளிச்சம் பிரகாசமாக இருக்கிறதோ, அந்த அளவு சித்திரங்கள் தெளிவாகத் தெரியும்.

7. நிரந்தர யோகியாவதற்கு ஆன்மீக மனோநிலையில் நிலைத்திருங்கள், தனது ஆன்மீக நிலையை வெளிப்படுத்தும்போது, ஒவ்வொரு ஆத்மாவுக்கும் வெளிப்படையான பலன் கிடைத்துக்கொண்டே இருக்கும். ஒருவேளை ஆன்மீக நிலையை வெளிப்படையாகக் காட்டவில்லை என்றால், பலனும் வெளிப்படையாகத் தெரியாது.

8. யாருடன் சினேகமோ அந்த அன்பிற்குரியவரோடு நிரந்தரமாக இருந்தால் ஆன்மீகத்தின் நிறம் எளிதில் ஏறிவிடும். ஒருவேளை ஒவ்வொரு மரியாதையாக வாழ்வில் கொண்டுவர முயற்சி செய்தீர்கள் என்றால், சில எளிதாகவும், சில கடினமாகவும் தோன்றும். பிறகு இதே செயலில் அல்லது இந்த குறைகளை நிரப்புவதிலேயே நேரம் போய்விடும்.

9. விட்டில் பூச்சிகளைப் பாருங்கள், ஜோதியின் கவர்ச்சியானது எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அவைகளை கவர்ந்து இழுத்து விடுகிறது. அல்லது ஏதேனும் பெரிய தீ எரிந்து கொண்டிருந்தால் அதன் வெப்பக் கதிர்களை அவைகள் தொலைவிலேயே உணர்ந்து கொள்கின்றன. அதேபோல குழந்தைகள் நீங்கள் எந்த அளவு ஆன்மீகத்தில் நிறைவடைந்து

கொண்டே வருகிறீர்களோ அந்த அளவு, தொலைவிலேயே கவர்ச்சி ஏற்படும், மேலும் ஆத்மாக்கள் அருகில் வந்து கொண்டே இருப்பார்கள்.

10. வாயுமண்டலத்தில் ஏதாவது ஒரு பொருள் பரவினால் அது வாயுமண்டலம் முழுவதும் குறிப்பிட்ட தூரம் வரைக்கும் அதன் பிரபாவத்தை ஏற்படுத்துகிறது. அதேபோல இவ்வளவு சகஜ யோகிகள், அல்லது சிறந்த ஆத்மாக்கள் நீங்கள் அனைவரும் தங்கள் வாயுமண்டலத்தை அப்படி ஆன்மீகமயமாக்குங்கள் அதன்முலம் சுற்றும் முற்றும் இருக்கும் வாயுமண்டலம் ஆன்மீகமாக இருப்பதால் அது ஆத்மாக்களை தன்பக்கம் கவர்ந்து இழுக்க வேண்டும். வாயுமண்டலத்தின் அஸ்திவாரம் உணர்வுகள். உணர்வுகளை சக்திமிக்கதாக ஆக்குங்கள் அப்போது வாயுமண்டலத்தில் ஆன்மீகம் இருப்பதால் வளர்ச்சி தானே ஏற்படும்.

11. உணர்வுகள் மூலமாக ஆன்மீகச் சூழலை வாயுமண்டலத்தில் ஏற்படுத்துவதன் மூலமாக எந்த ஒரு ஆத்மாவும் அந்த ஆன்மீகக் கவர்ச்சியிலிருந்து வெளியேற முடியாது. இப்போது அப்படிப்பட்ட சேவை செய்யுங்கள், ஏனெனில் மனிதர்கள் தெய்வீகக் காட்சிகளைக் காண்பதில் சிக்கி இருக்கிறார்கள், யாராவது தெய்வீகக் காட்சியைக் காட்ட வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள், ஆனால் இங்கே தெய்வீகக் காட்சிகளுக்குப் பதிலாக ஆன்மீக உணர்வுகள் மூலமாக அதிசயங்களைச் செய்து காட்டுங்கள்.

12. நீங்கள் சேவையின் மேடைக்குப் போகும்போது, இந்த ஆத்மாக்கள் அகநோக்கில் ஆன்மீகக் குகையில் வெகுகாலம் இருந்துவிட்டு இப்போது சேவைக்காக வெளியே வந்திருக்கிறார்கள் என்ற அனுபவம் ஏற்பட வேண்டும். தபஸ்வி ரூபம் தெரிய வேண்டும். எல்லையற்ற வைராக்கியத்தின் ரேகைகள் முகத்தில் தெரிய வேண்டும். கருணை உள்ளத்தோடு கூடவே சக்திரூபத்தின் ஆன்ம வலிமையும் இருக்க வேண்டும். எந்த அளவு அதிகமாக ஆன்மீக போதை இருக்கிறதோ அதேயளவு அதிகமாக இரக்கமும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சேவை செய்வதற்கான நேரமிது.

13. உங்கள் கண்களில் ஆன்மீகம் இருக்கட்டும், போதை இருக்கட்டும், கருணை இருக்கட்டும். கண்கள் ஆன்மீகத்தின் அனுபவத்தைத் தரவேண்டும். நடத்தை பாபாவின் சரித்திரத்தை வெளிப்படுத்த வேண்டும், நெற்றி, மணியின் காட்சி தர வேண்டும் என்று திட்டமிடுங்கள். இந்த அவ்யக்த முகம், தெய்வீக அலௌகீக நிலையின் பிரத்யட்ச ரூபத்தைக் காட்ட வேண்டும். உங்களது ஆன்மீக உணர்வுகள் எந்த தாழ்ந்த (தமோ) உணர்வு கொண்டோருக்கும் அவர்களது புனிதமான(சதோ) நிலையின் உணர்வை நினைவூட்ட வேண்டும். இப்படி இருப்பவரையே சேவை செய்பவர் என்று சொல்லப்படுகிறது.

14. உங்கள் ஆன்மீகம் நிறைந்த தெய்வீகப் பார்வை, இயற்கையான ரூபத்தில் ஆத்மாவையும் ஆத்மாவின் தந்தையையும் காட்சியாகக் காட்ட வேண்டும். ஆத்மாவைக் காணவேண்டும் என்ற முயற்சியோ சிரமமோ இல்லாமல் நான் ஆத்மாவாகவே இருக்கிறேன் என்பதை உணர வேண்டும், உண்மையில் எல்லோரும் ஆத்மாக்களாகவே இருக்கிறார்கள். எப்படி துவாபர யுகத்திலிருந்து ஆன்ம உணர்வு மறைந்து போனதோ அதேபோல் இப்போது தேக உணர்வு மறைந்து போக வேண்டும். ஆத்மாவைத் தவிர வேறு எதுவும் தெரியக்கூடாது. ஆத்மா சென்றுகொண்டிருக்கிறது, ஆத்மா செய்து கொண்டிருக்கிறது என்று உணர வேண்டும். உடலின் பார்வையும், மனதின் பார்வையும், எப்போதும் நெற்றிமணியின் மீதே செல்ல வேண்டும். பாபா மற்றும் ஆத்மாக்கள் இந்த நினைவு நிரந்தரமாக இயற்கையாக இருக்க வேண்டும். அப்போதே ஆன்மீகம் நிரம்பியவர் எனச் சொல்ல முடியும்.

# 7. சாதனை (முயற்சி) யின் ஆதாரத்தில் சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்துங்கள்.

1. இனிமையான குழந்தைகளே, அழியக்கூடிய சாதனங்களின் ஆதாரத்தில் உங்கள் அழியாத சாதனை(முயற்சி) இருக்க முடியாது. சாதனங்கள் பெயருக்காக இருக்கிறது ஆனால் படைப்பை உருவாக்க ஆதாரமாக இருக்கிறது. அதனால் இப்போது முயற்சிக்கு மகத்துவம் கொடுங்கள். முயற்சியே வெற்றியை அடையச் செய்கிறது.

2. எல்லா வசதிகளும், எல்லா சாதனங்களும் இருந்தாலும், சாதனங்களில் மனதை ஈடுபடுத்தாதீர்கள். முயற்சியிலேயே இருங்கள். சாதனங்கள் இருந்தாலும் தியாக உணர்வில் இருங்கள், அப்போது கொஞ்ச நேரத்திலேயே அனேக ஆத்மாக்களுக்கு பாக்கியத்தை உருவாக்க முடியும்.

3. இந்த அழிவானது அனைத்து ஆத்மாக்களுடைய, அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றுவதற்கு ஆதாரமான சாதனமாகும். இந்த சாதனம் உங்கள் முயற்சி மூலமாக நிறைவேறும். இப்போது எல்லா ஆத்மாக்களுக்கும் நன்மை உண்டாகட்டும் என்ற எண்ணம் உங்களிடம் தோன்ற வேண்டும். எல்லா துடித்துக்கொண்டிருக்கும், துக்கம் அமைதியற்று இருக்கும் ஆத்மாக்கள், வரமளிக்கும் தந்தை மற்றும் குழந்தைகள் வாயிலாக வரதானங்களைப் பெற்று சதா அமைதியும் சுகமும் உடையவராகி இப்போது வீடு திரும்ப வேண்டும்.

4. எந்தவொரு இடத்தின் வாயுமண்டலத்தையும் சக்திசாலி ஆக்குவதற்கு தனது அவ்யக்த சொரூபத்தின் முயற்சி தேவை, அதன்மீது அடிக்கடி கவனம் கொடுங்கள். எந்த விசயத்திற்காக முயற்சி செய்கிறோமோ அந்த விசயத்தின்மீது கவனம் இருக்கும். ஒருவேளை ஒற்றைக் காலில் நிற்கும் சாதனை செய்யவேண்டும் எனறால் அடிக்கடி அதே எண்ணம் இருக்கும். எனவே முயற்சி என்றால் அடிக்கடி கவனம் கொடுக்கும் தபஸ்யாவாகும்.

5. நீங்கள் எல்லோரும் மிகவும் பிஸியாக இருப்பதாக உணர்கிறீர்கள், இருந்தபோதும் மிகவும் ப்ரீயாக இருக்கிறீர்கள். இன்னும் போகப்போக இன்னும் பிஸியாகிக்கொண்டே இருப்பீர்கள். அதனால் இப்போது எவ்வளவு நேரம் கிடைத்தாலும் அதனை தன் சுய பயிற்சியிலும் சுய சாதனையிலும் வெற்றியாக்கிக்கொண்டே செல்லுங்கள்.

6. முக்கிய நாட்களில் பக்தர்கள் விரதம் இருக்கிறார்கள், முயற்சி செய்கிறார்கள், மனதை ஒருமுகப்படுத்த விசேச கவனம் செலுத்துகிறார்கள். அதேபோல, சேவாதாரி குழந்தைகளிடமும் இந்த வைப்ரேசன் வரவேண்டும். சகஜயோகத்தின் முயற்சியானது, சாதனங்களின்மீது அதாவது இயற்கையின்மீது வெற்றியடைய வேண்டும். இது இல்லாமல் இருக்கமுடியாது, இந்த சாதனம் கிடைக்காததால் மனநிலை தடுமாறிவிட்டது என்ற நிலை ஏற்படக்கூடாது. அப்படி இருந்தால் அதனை பற்றற்ற வாழ்க்கை என்று சொல்லமுடியாது.

7. அவ்வப்போது வைபவங்களின், சாதனங்களின் பிராப்தி அதிகரித்துக் கொண்டே போகிறது. வசதியாக வாழ்வதற்கான எல்லா சாதனங்களும் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. ஆனால் இந்தப் பலன்கள் எல்லாம் பாபாவுடையவராக ஆனதன் பலனாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. எனவே பலனை அனுபவிக்கும்போது விதையை மறந்துவிட வேண்டாம். வசதி வந்தவுடன் ராமரை மறந்து விடவேண்டாம். உண்மையான சீதையாக இருக்க வேண்டும். மரியாதை என்ற கோட்டை விட்டு எண்ண வடிவ விரல் கூட வெளியே வரக்கூடாது, ஏனெனில் இந்த சாதனை(முயற்சி) இல்லாமல் சாதனங்களைப் பயன் படுத்தினால் அது தங்க மானின் வேலையை செய்துவிடும்.

8. ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை என்பதே உங்களுடைய நிலையான, உறுதியான முயற்சியாகும். இந்த நிலையான,உறுதியான முயற்சியானது அங்கு நிலையான ராஜ்ஜியத்திற்கு அதிகாரியாக்கி விடுகிறது. இங்குள்ள பாப்தாதா, மாதா-பிதா மற்றும் சகோதர-சகோதரிகள் என்ற சிறிய உலகமானது அங்குள்ள சிறிய உலகிற்கு ஆதாரமாகிவிடுகிறது.

9. சாதனங்களை ஆதாரமாக்காதீர்கள், ஆனால் முயற்சியின் ஆதாரத்தில் சாதனங்களை காரியத்தில் பயன்படுத்துங்கள். ஒருவேளை, சாதனையின் நிலையில் இருந்து சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்தவில்லை என்றால், ஏதாவது ஒரு ஆதாரத்தை தனது மேன்மைக்காக ஆதாரமாக்கினீர்கள் எனறால், எப்போது அந்த ஆதாரம் சாய்கிறதோ, அப்போது உங்கள் ஊக்க உற்சாகமும் சாய்ந்து விடும். அப்படி ஆதாரமாகக் கொள்வது ஒன்றும் கெட்டதல்ல, எனினும் அந்த ஆதாரங்களை உங்கள் அஸ்திவாரமாக்கிக் கொள்ளாதீர்கள்.

10. சாதனை என்றால் சக்திசாலி நினைவு. நிரந்தரமாக பாபாவோடு உளப்பூர்வமான சம்பந்தம். வெறும் யோகத்தில் அமர்வது மட்டும் சாதனையாகாது. எப்படி உடலால் அமர்ந்திருக்கிறீர்களோ அதேபோல உள்ளம், மனது மற்றும் புத்தி ஆகிய நான்காலும் ஒரு பாபாவிடம், பாபாகூடவே சமமான நிலையில் அமர வேண்டும், அப்போதே சரியான சாதனை என்று சொல்லமுடியும்.

11. சாதனையாளர்களுக்கு ஆதாரமாக எப்போதும் பாபாவே இருக்கிறார், மேலும் எங்கே பாபா இருக்கிறாரோ, அங்கே எப்போதும் குழந்தைகளுக்கு பறக்கும் கலை இருக்கும். யார் முயற்சியின் மூலமாக பாபாவுடன் இருக்கிறார்களோ, அவர்களுக்காக சங்கமயுகத்தில் எல்லாமே புதுப்புது அனுபவங்களாக இருக்கும். ஒவ்வொரு நொடியிலும், ஒவ்வோரு எண்ணத்திலும் புதுமையே இருக்கும் ஏனெனில் ஒவ்வொரு அடியிலும் பறக்கும் கலை, அதாவது பலனுக்குமேல் பலன் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

12. இது பழைய உடல் என்பது பாப்தாதாவிற்குத் தெரியும், எனவே பழைய உடலுக்கு சாதனங்கள் தேவை. ஆனால் எந்த நேரத்திலும் சாதனங்கள் இல்லையென்றால் அது முயற்சி செய்வதில் தடையாகி விடக்கூடாது என்ற பயிற்சி கட்டாயம் இருக்க வேண்டும். எது கிடைத்திருக்கிறதோ அது நல்லது. நாற்காலி கிடைத்திருந்தாலும் நல்லது, தரை கிடைத்திருந்தாலும் நல்லதே. எப்படி ஆரம்பகால சேவையின் போது சாதனங்கள் இல்லாமல் இருந்தது, ஆனால் முயற்சி எவ்வளவு சிறந்ததாக இருந்தது. எனவே இந்த முயற்சியே விதை, சாதனங்கள் அதன் வளர்ச்சியாகும். முயற்சி என்ற விதையை மறைந்து போக விடாதீர்கள், தற்போது மீண்டும் விதையை வெளிப்படுத்துங்கள்.

13. தற்போதய நேரப்படி இப்போது சேவை அல்லது சேவாக்கேந்திரங்களின் தினசரி அலுவல்கள் எல்லையற்ற வைராக்கிய உணர்வைக் கொண்டிருக்க வேண்டும். இப்போது ஓய்வெடுப்பது தினசரி அலுவல்களோடு கலந்திருக்கிறது. சோம்பேறித்தனமானது உடலின் சிறு சிறு வியாதிகளைக்கூட சாக்குப்போக்கு சொல்ல காரணமாக்கி விடுகிறது. ஒருவேளை ஏதாவது பொருள்மீதோ, சாதனங்களின் மீதோ கவர்ச்சி ஏற்பட்டால் முயற்சி துண்டிக்கப்பட்டு விடுகிறது.

14. தற்சமயம் அனேக சாதனங்களைப் பார்த்தபோதும், முயற்சியை மறந்து விட வேண்டாம், ஏனெனில் கடைசியில் முயற்சியே காரியத்திற்குப் பயன்படும். இன்று மனதின் மகிழ்ச்சிக்காக மகிழ்ச்சிதரும் எத்தனை பதுப்புது சாதனங்களை உருவாக்குகிறார்கள். அவைகள் எல்லாம் அற்பகால சாதனங்கள், ஆனால் உங்களுடையதோ சதாகாலத்திற்கான உண்மையான முயற்சி. அதனால் முயற்சி மூலமாக எல்லா ஆத்மாக்களையும் மாறச் செய்யுங்கள். அய்யோ, அய்யோ என்பதைக் கொண்டு வருபவர்கள், ஆகா ஆகா என்பதைக் கொண்டு செல்ல வேண்டும்.

15. எப்படி பிரம்மா பாபா கடைசிவரையும் சாதனங்களை உபயோகிப்பதிலிருந்து விலகியே இருந்தாரோ, அப்படி குழந்தைகளிடமும் இவர்கள் சாதனங்களின் வசத்தில் இல்லை, ஆனால் சாதனையிலேயே இருப்பவர்கள் என்ற அனுபவம் ஏற்பட வேண்டும். தேவைப்படும்போது சாதனங்களைப் பயன் படுத்துங்கள் ஆனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு உள்ளத்தின் வைராக்கிய உணர்வோடு பயன் படுத்துங்கள், சாதனங்களுக்கு வசமாகி பயன்படுத்தாதீர்கள்.

# 8. சமஸ்காரங்கள் இணையும் ராஸநடனம் ஆடுங்கள்

1. இனிமையான குழந்தைகளே, பாப்தாதா இப்போது சமஸ்காரங்கள் இணையும் மகா ராஸநடனத்தை பார்க்க விரும்புகிறார், அதற்கு முதலில் நான் என்னை அனுசரிக்கச் செய்து மற்றவர்கள் சமஸ்காரத்தோடு ஒத்துப்போவேன் என மனதில் உறுதி கொள்ளுங்கள். அனுசரித்துப் போகும் சக்தி சமஸ்காரங்களை ஒருங்கிணைக்கிறது.

2. பாப்தாதாவோடு சந்திப்பை கொண்டாடுகிறீர்கள், ஆனால் தங்களுக்குள் சமஸ்காரங்கள் ஒத்துப்போவதே அனைத்திலும் மிகப்பெரிய சந்திப்பதாகும். எப்போது இந்த சமஸ்காரங்களின் சந்திப்பு ஏற்படுகிறதோ அப்போது வெற்றி முழக்கம் கேட்கும், இதற்காக இனிமையாகப் பழகும் குணத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஒருதலையாகப் பேசுவது அல்லது கசப்பான வார்த்தைகளைப் பேசுவது கூடாது.

3. சந்திக்கும்போது கை குலுக்குகிறார்கள் - இங்கே சந்திப்பென்பது சமஸ்காரங்களின் சந்திப்பு. ஒருவேளை எல்லோரது சமஸ்காரங்களும் ஒன்று சேர்ந்து பாபாவிற்குச் சமமாகிவிட்டால், எல்லோரது சமஸ்காரங்களும் ஒன்றுபோல் ஆகிவிட்டால் ஒரே ராஜ்யம், ஒரே தர்மமுடைய உலகம் வந்து விடும்.

4. பாபாவின் சமஸ்காரங்கள் எப்படி எப்போதும் தயாளமாக இருப்பது, நன்மை செய்வது, தன்னலமின்றி இருப்பது, கருனை காட்டுவது, பரோபகாரம் செய்வது, முதலிய குணங்களாக இருக்கிறதோ, அதேபோல குழந்தைகள் உங்கள் சமஸ்காரங்களும் இருக்கவேண்டும். சதா தங்களுக்குள் ஒற்றுமை, அன்பு, உதவி முதலியவைகளைக் கைக்கொண்டு சமஸ்காரங்களை ஒருங்கிணைக்கச் செய்யுங்கள்-இதுவே மகத்தான செயலாகும். சமஸ்காரங்கள் ஒன்றோடொன்று மோதக் கூடாது ஆனால் ஒன்று சேரும் ராஸநடனம் ஆடவேண்டும். சமஸ்காரங்களை ஒன்று சேர்ப்பது என்றால் சம்பூரண நிலையையும் , நேரத்தையும் அருகில் கொண்டு வருவதாகும்.

5. எப்படி ஹோலிப் பண்டிகையின் போது ஒருவரையொருவர் கட்டித் தழுவுகிறார்களோ, அதேபோல இது சமஸ்காரங்கள் ஒன்று சேர்வதற்கான மங்கள சங்கமமாகும். ஒருவர் பிறரது சமஸ்காரங்களை அறிந்து, ஒருவர் பிறரது அன்பில், ஒருவர் பிறரோடு கலந்து உறவாடி மகிழ்ந்திருக்க வேண்டும். எப்படி யார் மீதாவது ஸ்பெஷல் அன்பு இருக்குமானால் அவரோடு எளிதில் சேர்ந்து கொள்கிறீர்கள். அதேபோல ஒருவர் பிறரோடு ஒன்று சேருவதற்கு, எவ்வளவு ஞானம் நிறைந்து இருக்கிறதோ, அதே அளவு சரள சுபாவம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

6. எப்போது ஒருவர் பிறரது எண்ணத்தோடும் சமஸ்காரத்தோடும் ஒத்துப்போகிறீர்களோ அப்போதே ஒருவர் பிறருக்கு சினேகியாக முடியும். ஆனால் உங்கள் நிலையானது பிறர் உங்களை புகழ்வதின் ஆதாரத்தில் இருக்கக்கூடாது என்பதில் கவனமாக இருங்கள். இல்லையென்றால் உங்கள் நிலை தடுமாறிக்கொண்டே இருக்கும். சில குழந்தைகள் ஏதாவது காரியம் செய்தால் அதன் பலன்மீது ஆசை கொள்கிறார்கள். பாராட்டு கிடைத்தால் நன்றாக இருக்கிறார்கள், ஒருவேளை யாராவது இகழ்ந்தால் அனாதையாகி விடுகிறார்கள். தன்நிலையை விட்டு விலகி ஒருவர் பிறரிடமிருந்து ஒதுங்கி விடுகிறாார்கள். ஆனால் புகழிலும் இகழிலும் ஒரே நிலை இருந்தால் சமஸ்கார மோதல் ஏற்படாது.

7. சமஸ்காரங்கள் சந்திக்கும் ராஸநடனம் ஆடுவதற்காக “குழந்தை மற்றும் எஜமான்” என்ற குணம் சமமான ரூபத்தில் இருக்க வேண்டும். குழந்தை ஆவதென்றால் எதைப்பற்றியும் சிந்திக்காமல் கிடைக்கும் கட்டளையை ஏற்று அதன்படி நடப்பது. எஜமான் என்றால் தன் கருத்தைச் சொல்வது. எங்கே குழந்தையாக வேண்டுமோ அங்கு ஒருக்கால் எஜமானனானால், சமஸ்காரங்களின் மோதல் ஏற்படும். எனவே **எஜமான் ஆகி கருத்தைச் சொல்லுங்கள், பின்னர் கடைசியில் முடிவேற்படும்போது குழந்தையாகி விடுங்கள்.**

8. மனதில் எப்போது எந்த எண்ணங்கள் தோன்றினாலும் அது உண்மையாகவும் தூய்மையாகவும் இருக்க வேண்டும். உள்ளே எந்த குணமாறுபாடோ, பழைய சமஸ்காரங்ளோ அல்லது கெட்ட செயல்களின் குப்பைகளோ இருக்கக்கூடாது. யார் அப்படி தூய்மையாக இருக்கிறாரோ அவரே உண்மையானவராக இருப்பார். யார் உண்மையாக இருக்கிறாரோ அவர் அனைவருக்கும் பிடித்தவராக இருப்பார். அதிலும் எல்லாவற்றிற்கும் முதலாவதாக அவர் பிரபுவிற்குப் பிடித்தவராக இருப்பார். பின்னர் தெய்வீகக் குடும்பத்திற்குப் பிடித்தவராக இருப்பார். அப்படிப்பட்டவர்கள் சமஸ்கார மோதலில் இருந்து பாதுகாப்பாக இருப்பார்கள்.

9. இப்போது இந்த தேகவடிவ ஆடை எந்த சமஸ்காரத்திலும் மாட்டிக் கொண்டிருக்கக்கூடாது. எப்போது எல்லா பழைய சமஸ்காரங்களில் இருந்தும் விடுபட்டு விடுகிறீர்களோ அப்போது உங்கள் நிலை தனித்துவம் பெற்றுவிடும். அதனால் எல்லா விசயங்களிலும் ஈஸியாக இருங்கள். எப்போது தானே எல்லாவற்றிலும் ஈஸியாக இருக்கிறீர்களோ, அப்போது எல்லா காரியமும் ஈஸியாக நடக்கும், பிறகு முயற்சியும் ஈஸியாக இருக்கும்.

10. சமஸ்காரங்கள் சந்திக்கும் ராஸநடனமாடுவதற்காக கொஞ்சம் விலக்க வேண்டியது இருக்கும், கொஞ்சம் ஏற்க வேண்டியது இருக்கும். இது எனது சமஸ்காரம் என்ற வார்த்தையே போய்விட வேண்டும். பழைய குணங்கள் எல்லாம் மாறி ஈஸ்வரிய குணங்களாகிவிட வேண்டும், அந்த அளவு எல்லாம் போய் விட வேண்டும்.

11. என்னுடைய நடத்தை, எண்ணம், பேச்சு, செயல் எல்லாம் சுகமளிப்பதாக இருக்க வேண்டும் என்று எப்போதும் முயற்சி செய்யுங்கள். இதுவே பிராமண குல வழக்கம். சமஸ்காரங்களை இணைப்பதற்காக உள்ளங்களை இணைக்க வேண்டும், அதற்காக கொஞ்சம் மறக்க வேண்டும், சிறிது விலக்க வேண்டும் சிறிது ஏற்க வேண்டும்.

12. சமஸ்காரங்கள் சந்திக்கும் ராஸநடனமாட ஒருவர் பிறரது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுங்கள் மேலும் மரியாதை கொடுங்கள். ஒருவேளை ஏற்றுக் கொள்வது, மரியாதை தருவது இந்த இரண்டு விசயங்களும் வந்துவிட்டால், முழுமை, வெற்றி இரண்டும் அருகில் வந்து விடும். எப்போது ஒருவர் பலரை சம்பூர்ண சமஸ்காரம் உடையவராக மாற்றுகிறாரோ அப்போது முடிவு வரும்.

13. எந்த அளவு தங்களுக்குள் சமஸ்காரங்களில் சமநிலையை கொண்டு வருகிறீர்களோ, அந்த அளவு அருகில் வருவீர்கள். பிரம்மா பாபாவின் சமஸ்காரம் அனைத்திலிருந்தும் விலகியும், சாட்சியின் பார்வை உடையதாயும் இருந்தது, இது அவரது சம்பூர்ண நிலையின் சிறந்த இலட்சணங்களாக இருந்தது. நீங்களும் இந்த சமஸ்காரங்களில் சம நிலையை கொண்டுவர வேண்டும். இதன்மூலமாகவே அனைவரது உள்ளத்தையும் வெற்றி பெறுவீர்கள், மேலும் யார் சங்கமயுகத்தில் அனைவரது உள்ளத்தையும் ஜெயிக்கிறார்களோ அவர்களே எதிர்காலத்தில் உலக மகாராஜா ஆகிறார்கள்.

14. எவ்வளவு ஒருவர் பிறரிடம் நெருங்கி வருகிறீர்களோ அவ்வளவு ஒருவர் பிறருக்கு மரியாதை கொடுத்துக்கொண்டே செல்லுங்கள். நீங்கள் பிறருக்கு எவ்வளவு மரியாதை கொடுக்கிறீர்களோ அவ்வளவு முழு உலகமும் உங்களுக்கு மரியாதை கொடுக்கும். மரியாதை கொடுப்பதால் மரியாதை கிடைக்கிறது, மேலும் மரியாதை கொடுப்பதால் சமஸ்காரங்கள் இணைவதும் எளிதாகி விடுகிறது.

15. உங்களுக்கு எப்போதாவது ஒருவருடைய கருத்து தெளிவற்றதாக இருக்கிறது எனத் தோன்றினாலும் ஒருபோதும் உடனே மறுத்துவிடாதீர்கள். எப்போதும் சரி, ஓகே என்றே சொல்ல வேண்டும். நேரம் பார்த்து சமிஞ்ஞை காட்டலாம், ஒருவேளை அந்தநேரமே முடியாது என மறுத்தால் சமஸ்கார மோதல் ஏற்படும், அதனால் சரி சரி (ஹான் ஜி) என்று சொல்லி பூமியை தயார் செய்யுங்கள். பிறகு தக்க தருணம் பார்த்து சமிஞ்ஞை கொடுங்கள். இதுவே சமஸ்கார இணைவுக்கு உகந்த வழி.

# 9. ஒரே ரசனை நிலைக்கு எடுத்துக்காட்டாகுங்கள்

1. இனிமையான குழந்தைகளே, நேரத்திற்குத்தக்கபடி தனது நிலையை "ஒரே ரசனை" உடையதாக்குங்கள். எப்படி பிரம்மா பாபா களைப்பற்று, ஒரே ரசனை நிலையில் இருப்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கினாரோ, அதேபோல குழந்தைகள் நீங்களும் பிறருக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும், இதுவே சேவை. வெறும் வார்த்தையால் மட்டும் சேவை நடப்பதில்லை, மனோநிலை மூலமாகவும் நடக்கிறது.

2. யார் ஆல்ரவுண்ட் சேவை செய்கிறார்களோ அவர்கள், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தன்நிலை எப்போதும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற விசயத்தின்மீது ஸ்பெஷல் கவனம் கொடுக்க வேண்டும், அப்போது வெற்றி கிடைக்கும். ஸ்ரீமத்தில் எப்போது தன்வழி, தேக அபிமானியாக்கும் வழி, சூத்திரனாக்கும் வழி ஆகியவைகளை கலக்கிறீர்களோ, அப்போது நிலை ஒரே ரசனையாக இருக்காது. மனம் வெவ்வேறு ரசனைகளில் இருந்தால் நிலையும் விதவிதமாகவே இருக்கும். ஒரேயொரு ரசனையில் இருந்தால் நிலையும் ஒரே மாதிரியாக இருக்கும்.

3. ஒரே ரசனை நிலையை உருவாக்குவதற்கு ஒருவரைத்தவிர வேறு எதைப் பார்த்தாலும் பார்க்காதீர்கள். நீங்கள் எதையெல்லாம் பார்க்கிறீர்களோ அதில் எந்தப் பொருளும் இருக்கப் போவதில்லை. எப்போது எந்த காட்சியைப் பார்த்தாலும் ஏன், என்ன? என்ற கேள்விகள் எழக்கூடாது, அப்போதே ஒரேரசனை நிலையில் உறுதியாக இருக்க முடியும். இந்த வீண் எண்ணங்களே தடுமாற்றத்திற்கு காரணமாக இருக்கிறது. இந்த கியூ முடிந்த பிறகு சம்பூர்ண நிலை வரும்.

4. எப்போதும் ஊக்க உற்சாகத்தோடு ஒரேரசனையில் இருப்பதற்காக யாரெல்லாம் சம்மந்தத்தில் வருகிறார்களோ- அது ஸ்டு:டண்ட் ஆக இருக்கலாம், கூட இருப்பவராக இருக்கலாம் எல்லோரையும் திருப்தி படுத்த வேண்டும் என்ற உற்சாகம் கொள்ளுங்கள். யாரைப் பார்த்தாலும் அவரிடமிருந்து ஒவ்வொரு நேரத்திலும் குணத்தையே கிரகியுங்கள். அனைவருடைய குணங்களின் பலம் கிடைப்பதால் சதா காலத்திற்கும் உற்சாகம் ஒரேமாதிரியாக இருக்கும்.

5. புத்தியை ஓரிடத்தில் நிற்க வைப்பதற்கு என்ன உத்தி கிடைத்திருக்கிறதோ அதை நினைவில் வையுங்கள். சாய விடாதீர்கள். சாய்வது என்றால் பிரச்சினைகளை உருவாக்குவதாகும். பிறகு யுத்தத்தில் நேரம் அதிகமாக வீணாகும். எப்படி தபஸ்வி எப்போதும் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறாரோ, அதேபோல தனது ஒரேரசனை நிலை என்ற ஆசனத்தில் அமர்ந்திருங்கள், அப்போது எதிர்கால சிம்மாசனம் கிடைக்கும்.

6. அனைத்திலும் சிறந்த சிம்மாசனமான பாப்தாதாவின் இதய சிம்மாசனத்தில் இடம்பிடிக்க வேண்டும். ஆனால் அந்த சிம்மாசனத்தில் அமர்வதற்கு முதலில் ஆடாத, அசையாத, ஒரேரசனையில் இருக்கக்கூடிய சிம்மாசனம் தேவை. எப்போது அழியாத சிம்மாசனதாரி ஆவதற்கான பயற்சி இருக்கிறதோ அப்போதே ஒரேரசனைநிலை என்ற சிம்மாசனத்தில் நிலையாக அமர முடியும்.

7. எந்தவிதமான தடை அல்லது பிரச்சினை அதாவது மாயாவுடனான சண்டை, சண்டையல்ல ஆனால் விளையாட்டு என்று தோன்ற வேண்டும். விளையாட்டு என்று புரிந்து கொள்வதன் மூலம் சந்தோசமாக அதைக் கடந்து செல்வீர்கள் அதோடு மனநிலையும் ஒரேரசனையில் இருக்கும். ஆனால் அதை யுத்தம் என்று உணர்ந்தால் பயப்படுவதோடல்லாமல் குழப்பத்திற்கும் ஆளாவீர்கள்.

8. ஆன்மீக நிலையின் பயிற்சி மூலமாக வாயுமண்டலத்தை ஆன்மீகமாக்குங்கள் அப்போது மற்ற எல்லா விசயங்களும் தானே சரியாகிவிடும், எல்லோரும் ஒரே சிந்தை உடையவராகவும், ஒரேரசனையில் இருப்பவராகவும் ஆகி விடுவார்கள். பிறகு மாயாவும் வராது ஏனெனில் வாயுமண்டலம் சக்திசாலியாக இருக்கும்.

9. சதா ஒருவரது நினைவில் இருந்து ஒரேரசனை நிலையை உருவாக்குங்கள் அப்போது ஒன்று ஒன்று ஒன்று என்ற நாளில் வந்து விடுவீர்கள். வெளியில் வாழ்ந்தாலும் "தந்தையைப் பார் தந்தையைப் பின்பற்று" என்ற பாடத்தை உறுதி செய்யுங்கள். அப்போது ஒருபோதும் எந்த பிரச்சினையினாலும் நிலை தடுமாற மாட்டீர்கள், ஏனெனில் தந்தை ஒருபோதும் நிலை தடுமாறுவதில்லை.

10. ஒரேரசனை நிலையில் நிலையாக இருப்பதற்கு கர்மேந்திரியங்களை வென்றவர் ஆகுங்கள். ஏந்த ஒரு கர்மேந்திரியத்தின் கவர்ச்சியும் ஒரு பாபாவுடையவராக ஆகவிடாது, ஒரேரசனை நிலையில் நிலையாக இருக்க விடாது, நம்பர்ஒன் நிலையை எட்ட விடாது.

**11. ஒரே ரசனை நிலையை உருவாக்குவதற்காக கர்மயோகி ஆகுங்கள். கர்மயோகியின் முன்னால் யார் எப்படி வந்தாலும், அவர் சுயம் சதா அன்போடும் பற்றற்றும் இருப்பார்கள். இவர்களது இந்த பாகம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்பதை ஞானத்தின் மூலமாக அறிவார்கள். அவர்கள் நல்லதை நல்லதாக உணர்ந்து சாட்சியாக இருந்து பார்ப்பார்கள், மேலும் கெட்டதை கருணை உள்ளம் கொண்டு கருணையின் பார்வையோடு மாற்றுவதற்கான சுப பாவனையோடு சாட்சியாக இருந்து பார்ப்பார்கள். இதுவே ஒரேரசனை நிலையை உருவாக்குவதற்கான சாதனமாகும்.**

12. ஒரே உறுதியில் வியாபாரம் செய்பவர்கள், ஒருவருடையவர் ஆகிவிட்ட காரணத்தினால் சதா ஒரேரசனையில் இருப்பார்கள். மற்றபடி யார் சிறுது சிறுதாக வியாபாரம் செய்கிறார்களோ அவர்கள் ஒன்றுக்குப் பதிலாக இரண்டு படகுகளில் காலை வைப்பவர்கள், அவர்கள் சதா ஏதாவது பிரச்சினைகளின் சங்கடங்களுக்கு ஆளாகி ஒரேரசனையில் இருக்க மாட்டார்கள். அதனால் வியாபாரம் செய்ய வேண்டும் என்றால் நொடியில் செய்துவிடுங்கள். உள்ளத்தை துண்டு துண்டாக்காதீர்கள்.

13. என்ன எண்ணம் வந்தாலும் அதை மேலே கொடுத்துவிட்டு தான் எந்த எண்ணமும் இல்லாதவராக நடந்து கொள்ளுங்கள். கருத்தை தெரிவிப்பது, சமிஞ்ஞை செய்வது என்பது வேறு. பிரச்சினைக்கு ஆளாவது என்பது வேறு. எனவே சதா ஒரேரசனையில் இருங்கள். எண்ணங்களை கொடுத்தவுடனே எண்ணமற்றவர் ஆகிவிடுங்கள்.

14. எப்போதும் சுயமேன்மை மற்றும் சேவையின் மேன்மையிலேயே பிஸியாக இருங்கள், அதோடு அனைவர்மீதும் சுபபாவனை கொள்ளுங்கள். எப்போதும் நடித்துக்கொண்டிருந்த போதும் அந்த பாகத்தில் இருந்து விலகி இருங்கள். சம்மந்தத்தின் ஆதாரத்தில் பாகத்தை நடிக்காமல், சேவையின் சம்மந்தத்தோடு தனது பாகத்தைச் செய்யுங்கள். ஒருக்கால் இரண்டு பக்கமும் அன்பிருக்குமானால், ஒரேரசனை நிலையின் அனுபவம் ஏற்பட முடியாது.

15. சதா ஒரே ரசனை, ஆடாத அசையாதவராக இருக்க மேலும் இருக்க வைக்கச் செய்யும் விசேச சக்தி இந்த நாடகம் என்ற பாய்ண்டாகும். இதை சக்தி ரூபத்தில் தாரணை செய்பவர்கள் ஒருபோதும் தோல்வியடைய முடியாது. ஆனால் யார் அதை வெறும் பாய்ண்டாக மட்டும் தாரணை செய்கிறார்களோ அவர்கள், நாடகமென்ற கருத்தை வர்ணிக்கவும் செய்வார்கள் அதேசமயம் தடுமாறவும் செய்வார்கள்.

16. அழியக்கூடிய சாதனங்களை துணையாகவோ அல்லது ஆதாரமாகவோ ஆக்க வேண்டாம். இவைகள் எல்லாம் பெயருக்காக, சேவைக்காக இருக்கிறது. சேவைக்காக காரியத்தில் பயன்படுத்திய பிறகு அதிலிருந்து விலகிவிட வேண்டும். சாதனங்களின் கவர்ச்சியில் மனம் கவரப்படக்கூடாது. எப்போதும் ஒரே வேகத்திலேயே போவது என்பது ஒரேரசனையின் அர்த்தமல்ல, ஒரேரசனை என்றால் பறக்கும் கலையின் உணர்வு ஏற்பட வேண்டும்.

17. சர்வ சம்பந்தங்களின் அழியாத கயிறு ஒருவருடன் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். ஒரு அப்பாவைத்தவிர வேறு யாருமில்லை என்ற எண்ணம் மிக உறுதியாக இருக்க வேண்டும், ஒரு சம்மந்தம்கூட குறையக்கூடாது. சர்வ சம்மந்தங்களின் கயிறு ஒருவருடன் எப்போதும் இணைக்கப் பட்டிருக்க வேண்டும், அப்போது ஒரேரசனை நிலை தானாகவே இருக்கும்.

# 10. ஆன்மீக அன்பின் மூர்த்தி ஆகுங்கள்

1. பிராமண குழுவின் ஒற்றுமைக்கு ஆதாரம் ஆன்மீக அன்பு. நடக்கும்போதும், சுற்றும்போதும் ஆன்மீக அன்பினுடைய உணர்வு, பேச்சு, சம்பந்தம் தொடர்பு அதாவது செயல் இருக்கட்டும். பிராமண வாழ்வின் இயற்கையான குணமே மாஸ்டர் அன்புக் கடலாக இருப்பதாகும். இந்த குணத்தைத் தாரணை செய்யுங்கள்.

2. நேரத்திற்குத் தக்கபடி அன்பும் ஆணையும் சமமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள், ஆனால் ஆணையிலும் அன்பு உணரும்படி இருக்க வேண்டும். இதற்காக ஆன்மீக அன்பின் மூர்த்தி ஆகுங்கள், அப்போது ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வுகான உதவி செய்பவர் ஆக முடியும். அறிவுரையோடு கூட உதவியும் செய்வதே ஆன்மீக அன்பின் மூர்த்தி ஆவதாகும்.

3. ஆன்மீக சொரூபத்தில் இருப்பதன் மூலம் நீங்கள் உலக வாழ்வில் இருந்தாலும் அலௌகீக நிலையை அனுபவம் செய்வீர்கள். தன்னை ஆன்ம ரூபத்தில் தனித்தவராக உணர வேண்டும். செயலில் இருந்து விலகுவது எளிது, அது உலகில் உள்ளோருக்குப் பிடிப்பதில்லை, எப்போது உடல் உணர்வில் இருந்து விலகி ஆத்ம ரூபத்தில் இருந்து காரியம் செய்கிறீர்களோ அப்போது உலகம் உங்களை விரும்பும். இதன் மூலமாகவே மனதிற்குப் பிடித்த, பிரபுவிற்குப் பிடித்த, உலகிற்குப் பிடித்த உத்தமர் ஆகமுடியும்.

4. எப்போது எங்கு சென்றாலும் அங்கு தன் செயலின் நினைவு சின்னம் நிலையாக இருக்க வேண்டும் என்ற இலட்சியம் கொள்ளுங்கள். எப்போது ஆன்மீக அன்பின் பரிசை கூடவே எடுத்துச் செல்கிறீர்களோ, அப்போதே அது சாத்தியமாகும். இந்த ஆன்மீக அன்பு, கல்லையும் கரைத்துவிடும். இதன்மூலம் யார்மீதும் வெற்றியடைய முடியும்.

5. ஆன்மீக அன்பின்மூலம் எந்த அளவு ஒருவர் பிறரிடம் அன்பாகவும், உதவிகரமாகவும் இருக்கிறீர்களோ, அந்த அளவே மாயாவின் தடைகளை அகற்றுவதற்கும் உதவி கிடைக்கும். உதவி செய்வது என்றால் உதவி பெறுவது. எனவே குடும்பத்தில் உள்ளோருக்கு ஆன்மீக அன்பு காட்டவேண்டும், மேலும் மாயாமீது வெற்றியடைவதற்கான உதவி பெற வேண்டும். இதுவே கொடுக்கல் வாங்கல் கணக்காகும்.

6. எப்படி துணியை தைப்பதற்கு சாதனமாக நூல் திகழ்கிறதோ அதேபோல வருங்கால உலகின் சம்பந்தங்களைச் இணைப்பதற்குச் சாதனமாக இருப்பது ஆன்மீக அன்பு என்ற நூல். இணைப்பதற்கான காலமும் இடமும் இதுதான். ஆனால் எப்போது அனேக தேகதாரிகள் மீதுள்ள சுயநல அன்பு முற்றுப் பெறுகிறதோ அப்போதே இந்த ஈஸ்வரிய அன்பை அல்லது ஆன்மீக அன்பை இணைக்க முடியும்.

7. எங்கு பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் நடக்கும்போதும் சுற்றும்போதும் அவரது ஆன்மீக சொரூபமே தெரிய வேண்டும். எப்படி யாருடைய கண்ணாவது கெட்டுவிட்டால் அதில் ஒரே நேரத்தில் பொருட்கள் இரண்டாகத் தெரிகிறதோ, அதேமாதிரி இங்கும் உங்கள் பார்வை முழுமையாக மாறவில்லையென்றால் உடல், ஆத்மா இரண்டுமே தெரியும்.

8. எப்படி இந்தக் காலத்தில் ட்ராஸ்பரண்ட் பொருட்கள் பிடித்தமானதாக இருக்கிறதோ, அதேபோல தன்னையும் அந்தமாதிரி ட்ராஸ்பரண்ட் நிலைக்கு மாற்ற வேண்டும். இப்போது நீங்கள் அப்படி ட்ராஸ்பரண்ட் ஆக வேண்டும், அதன்மூலம் உங்கள் உடலுக்கு உள்ளே ஆத்மா அமர்ந்திருப்பது அனைவருக்கும் தெளிவாகத் தெரியவேண்டும். உங்களுடைய ஆன்மீக சொரூபம் அவர்களுக்குத் தங்களுடைய ஆத்மீக சொரூபத்தைக் காட்சியாகக் காட்ட வேண்டும். இதனையே அவ்யக்த அல்லது ஆன்மீக நிலையின் அனுபவம் என்று சொல்லப்படுகிறது.

9. தனது ஆன்மீக முன்னேற்றத்திற்காக எப்போதும் தன்னை அழியாத மூர்த்தி என உணர்ந்து நடந்து கொள்ளுங்கள். இந்த அழியாத மூர்த்தி என்ற நினைவு உங்களை அகால மரணத்திலிருந்தும், அகாலத்தில் இருந்தும், அனைத்து பிரச்சினைகளில் இருந்தும் காப்பாற்றி விடும். மானசீகக் கவலைகள், மானசீகப் பிரச்சினைகளை எல்லாம் நீக்குவதற்கு இது ஒரு சாதனமாகும். தேக அபிமானத்தை நீக்குவதன் மூலமாக எல்லாப்பிரச்சினைகளும் நீங்கிவிடும்.

10. தற்போது, ஆத்மீகநிலையின் நினைவு அவ்வப்போது தேகம் என்ற திரைக்குள் மறைந்து விடுகிறது, அதனால் இந்த நினைவும் திரை மறைவிலேயே தெரிகிறது. ஆத்மீக நினைவு தெளிவாகவும், நீண்டகாலமும் இருப்பதன் மூலம், தனது எதிர்கால ஆஸ்தி அதாவது தனது எதிர்கால சமஸ்காரத்தின் சொரூபம் முன்னால் வரும். எதிர்கால சமஸ்காரங்களை தெளிவாக நினைவில் கொண்டுவருவதற்கு ஆத்மீக சொரூபத்தின் நினைவு சதா காலமும் தெளிவாகவும் இருக்க வேண்டும்.

11. ஒருவர் எவ்வளவுதான் அறிவாளியாக இருக்கட்டும், ஆனால் உங்களது அனுபவம் மற்றும் ஆன்மீக சொரூபத்திற்கு முன்னால் தன்னை முற்றிலும் அறிவற்றவராகவே உணர்வார்கள். எப்படி சக்திகளின் காலடியில் எருமையை காண்பித்திருக்கிறார்கள், எருமை என்றால் அறிவில்லாதவர்கள், அதேபோல ஒருவர் தன்னை எவ்வளவுதான் அறிவுகூர்மை உள்ளவராக, புத்திசாலியாக நினைத்தாலும் நீங்கள் உங்கள் ஆன்மீக திருஷ்டியின் கண்களையும், மன்மனாபவ என்ற மந்திரத்தையும் பிரயோகிக்கும்போது அவர்கள் சிங்கத்திலிருந்து எருமையாகிவிடுவார்கள்.

12. எப்படி பல ஜென்மங்களாக உங்களுக்கு தேக சொரூபத்தின் நினைவு இயற்கையாக இருக்கிறதோ, அதேபோல தனது உண்மையான சொரூபத்தினுடைய நினைவின் அனுபவமும் இருக்க வேண்டும். இந்த ஆத்ம அபிமானி நிலை மூலமாக எல்லா ஆத்மாக்களுக்கும் காட்சியளிக்க காரணமாகி விடுவீர்கள். இந்த நிலையே வெற்றி மாலையின் மணியாக்குகிறது.

13. ஆத்மா பேசிக்கொண்டிருக்கிறது. இது ஆத்மாவின் சமஸ்காரம் . . . என்ற முதல் பாடத்தை நன்கு உறுதி செய்யுங்கள். ஆத்மா என்ற வார்த்தை நினைவில் வரும்போதே ஆன்மீக நிலையும் சுபபாவனையும் வந்து விடும். பார்வை புனிதமாகிவிடும். அனைவருக்கும் நண்பராகவும், உதவி செய்பவராகவும் ஆகிவிடுவீர்கள்.

14. எப்படி ஒருவர் கண்ணாடி முன் நின்ற உடனேயே நொடியில் தன் காட்சியைக் கண்டு விடுகிறார், அதேபோல உங்கள் ஆன்மீக நிலை என்ற சக்தி ரூப கண்ணாடியின் முன்னால் எந்த ஆத்மா வந்தாலும் ஒரு நொடியில் தன் சுயரூபத்தின் காட்சியை அல்லது தெய்வீகக் காட்சியை கண்டு விட வேண்டும். இந்த நிலையே பாபாவிற்குச் சமமான லைட் ஹவுஸ் மைட் ஹவுஸ் நிலையாகும்.

15. உடலில் இருந்தாலும் உடலற்ற ஆத்மீக ரூபத்தில் நிலைத்திருந்தால், இந்த தேகரூபம் மறைந்து போய் விடும். எப்படி பிரம்மா பாபாவைப் பார்த்தீர்கள் அல்லவா! தேகம் மறைந்து அவ்யக்த ரூபம் தெரிந்தது. எனவே அப்படிப்பட்ட நிலையை உருவாக்குவதற்காக மனதில் உடலற்ற நிலை, வார்த்தையில் அகந்தையற்ற நிலை, மேலும் செயலில் விகாரமற்ற நிலை இருக்க வேண்டும். எண்ணத்தில்கூட எந்த விகாரத்தின் அம்சமும் இருக்கக்கூடாது.

16. ஆத்மா இந்த கர்மேந்திரியங்கள் மூலமாக காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்ற முதல் பாடமான ஆத்மீக உணர்வை நன்கு உறுதி செய்யுங்கள். அப்போது மற்ற ஆத்மாக்களுக்கும், காரியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, இவரும் ஆத்மா காரியம் செய்து கொண்டிருக்கிறார் என்ற நினைவு இருக்கும். அதேபோல ஆத்மீகப் பார்வை, யாரைப் பார்த்தாலும் ஆத்மா ரூபத்தில் பாருங்கள். இதன் மூலம் ஒவ்வொரு கர்மேந்திரியமும் சதோபிரதான தூய்மையாகிவிடும், இந்தப் பயிற்சி மூலமாக தேகத்தின் பழைய சமஸ்காரங்கள் மற்றும் சம்பந்தங்களில் இருந்து முழுமையாக உயிரோடு இறந்து விடுவீர்கள்.

# 11. சுயமரியாதையில் இருந்து பணிவுடையோர் ஆகுங்கள்

1. எந்த ஒரு திட்டம் தீட்டும்போதும் மேலும் அதை செயல் படுத்தும்போதும் முதலில் தனது சுயமரியாதை நிலையில் நிலைத்து இருங்கள். உங்கள் நிலையை விட்டு விலகி திட்டமிடாதீர்கள். ஒருவேளை நிலையை விட்டு அகன்று திட்டம் தீட்டினால் அதில் எந்த சக்தியும் இருக்காது. அதனால் மனதில் சுயமரியாதையின் நினைவு இருக்க வேண்டும் மேலும் வார்த்தை, செயலில் பணிவு இருக்க வேண்டும், அப்போது வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும்.

2. எப்படி பாப்தாதா முதலில் மரியாதை தந்து பின்னர் அறிவுரை தருகிறரோ, அதேபோல தந்தையைப் பின்பற்றுங்கள். ஏனெனில் இப்போதெல்லாம் யார் வந்தாலும் அவர்கள் காயப்பட்டு இருக்கிறார்கள், மரியாதைக்காக பிச்சைக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மரியாதை தேவைப்படுகிறது. அதனால் ஒருபோதும் யாரையும் மரியாதை குறைவாக நடத்தாதீர்கள், முதலில் மரியாதை கொடுத்த பின்னர் எந்த விசயத்தையும் சொல்லுங்கள். எப்படி ஆபரேசன் செய்வதற்கு முன்னால் ஊசி எல்லாம் போட்டு தன் உணர்வை மறக்கச் செய்கிறார்களோ, அது மாதிரி முதலில் மரியாதை கொடுத்து அதே போதையில் இருக்கச் செய்யுங்கள், பின்னர் நீங்கள் எவ்வளவு ஆபரேசன் செய்தாலும், ஆபரேசன் சக்ஸஸ் ஆகிவிடும். இதுகூட ஒரு வழியாகும்.

3. உலகின் அதிபதி ஆவதற்கு முன்பாக நீங்கள் உலகைப் படைப்பவரின் மீது அதிகாரம் உடையவர் ஆகிறீர்கள், அதுவே தற்போதய மிகப்பெரிய சுயமரியாதை. சிவபாபாமீதே அதிகாரியாக இருக்கிறீர்கள். அதனால்தான் சிவபாபா மாலேகம் சலாம் சொல்கிறார்.

4. எப்படி பாபா எப்போதும் குழந்தைகளுக்கு மரியாதை கொடுத்துக் கொண்டே தனக்குச் சமமாக ஆக்குகிறாரோ, அதேபோல நீங்கள் எல்லோரும்கூட ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சதா மரியாதை தந்து பாபாவிற்குச் சமமாக்குங்கள். உலகைப் படைப்பவருக்கும் நான் அதிபதியாக இருக்கிறேன் என்ற இந்த தனது சுயமரியாதையின் போதையிலேயே எப்போதும் இருங்கள். இந்த போதையில் இருப்பதால் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் மேலும் ஒரு பாபாவிடம் இருந்து பெற வேண்டும்.

5. பணிவென்ற குணம் இல்லாமல் உலகிற்கு நன்மை ஏற்படமுடியாது. எப்போது பாபா பணிவோடு குழந்தைகளுக்கு சேவாதாரி ஆனாரோ அப்போதே நீங்கள் பாபாவை தன்னுடையவர் ஆக்கினீர்கள். அதேமாதிரி தந்தையைப் பின் பற்றுங்கள். தடைகளை அழிப்பவர், எல்லாப் பிரச்சினைகளையும் நீக்குபவர் என சுய நிலை மற்றும் பொறுப்பான உயர்நிலை மேலும் சுயமரியாதையின் இருக்கைகள் எதையெல்லாம் பாப்தாதா சங்கம யுகத்தில் தந்திருக்கிறாரோ அந்த நிலைகளின்மீது செட்டாகி விடுங்கள். இருக்கையை விட்டு அடிக்கடி கீழே இறங்கி வராதீர்கள்.

6. சீட்டில் இருப்பதால் சுயமரியாதை தானே நினைவில் இருக்கும். எப்படி உலக வழக்கில யாராவது சாதாரண ஆத்மாவிற்கு சீட் கிடைத்துவிட்டால் அவரது மரியாதை அதிகமாகிவிடுகிறது. அந்த போதையில் தானே நிலையாக இருந்து விடுகிறார். அதேபோல நீங்களும் சதா தனது சீட்டில் இருந்தால், சுயமரியாதை நிரந்தரமாக நினைவில் இருக்கும்.

7. "சுயமரியாதை" இந்த ஒரு வார்த்தையை நடைமுறை வாழ்வில் தாரணை செய்தால், எளிதில் சம்பூர்ன நிலையை அடைந்துவிட முடியும். சுய மரியாதையில் நிலைத்து இருப்பதன் மூலம் தானாகவே எல்லோர் மீதும் நல்லாசைகள் ஏற்பட்டு விடும். இந்த சுயமரியாதையில் நிலைத்து இருக்க வேண்டியதே முதல் பாடமாகும். சுயமரியாதையில் நிலைத்து இருப்பதே வாழ்க்கை புதிருக்கு விடை காண்பதற்கான சாதனமாகும். ஆரம்பத்தில் இருந்து இதுவரை "நான் யார்" என்ற புதிருக்கு விடை காண்பதிலேயே மூழ்கி இருந்தீர்கள்.

8. எவ்வளவு பணிவோ அவ்வளவு சுயமரியாதை, மேலும் எந்த அளவிற்கு பாப்தாதாவிற்கு சமமாக இருக்கிறீர்களோ அந்த அளவிற்கு சுயமரியாதை. பணிவுடையவராகவும் ஆகவேண்டும், சமமானவராகவும் ஆக வேண்டும். பணிவில் குறைவில்லை என்றால், சமநிலையிலும் குறைவிருக்காது பிறகு சுயமரியாதையிலும் குறைவிருக்காது. எவ்வளவு சமமாக இருக்கிறேன் என்பதைக் கொண்டு தன் சுயமரியாதையைக் கண்டறியலாம்.

9. கருணை மற்றும் ஆன்மீகம் இந்த இரண்டையும் சமமாக்குவதன்மூலம் ஒன்று, தானே தன் சுயமரியாதையில் இருக்க முடியும், இரண்டாவது எல்லா ஆத்மாக்கள் மூலமாகவும் மரியாதை கிடைக்கும். சுய மரியாதையை விட்டுவிட்டு மரியாதைபெற ஆசை கொண்டால் வெற்றி கிட்டாது. மரியாதை பெற வேண்டும் என்ற ஆசையை விலக்கி சுயமரியாதையில் நிலைத்து இருந்தால், மரியாதை நிழல்போல உங்கள் பின்னால் வரும்.

10. எப்படி பக்தர்கள் தனது தேவன் அல்லது தேவியின் பின்னால் மூட நம்பிக்கையிலும்கூட எவ்வளவு தூரம் ஓடுகிறார்கள். அதேபோல சைத்தன்ய சொரூபத்தில், சுயமரியாதையில் நிலைத்திருக்கும் ஆத்மாக்களாகிய உங்களின் பின்னே எல்லா ஆத்மாக்களும் மரியாதை கொடுப்பதற்காக வருவார்கள், ஓடி வருவார்கள்.

11. சுயமரியாதையில் சுயத்தின் உணர்வும் அதாவது ஆத்மாவின் உணர்வும் இருக்கிறது. நான் யார் என்பதே சுயமரியாதை. தனது இந்த சங்கமயுகத்தின் மற்றும் எதிர்காலத்தின் அனேகவித சுயமரியாதைகள் எதெல்லாம் அவ்வப்போது அனுபவம் செய்ய வைக்கப்படுகிறதோ, அதிலிருந்து ஏதாவது ஒரு சுயமரியாதையில் நிலைத்திருந்தாலும் தேக அபிமானம் விலகிக்கொண்டே இருக்கும்.

12. நான் மிக உயர்ந்த பிராமணன், இந்த முழு உலகில் உள்ள அனைவரிலும் பிரம்மாண்டம் மற்றும் உலகிற்கு அதிபதியாகக்கூடிய ஆத்மா நான் என்பதும் சுயமரியாதை தான். தனது புத்திக்குள் தற்போதய அல்லது எதிர்காலத்தய சுயமரியாதையின் நினைவு இருந்தாலும் தேக அபிமானம் இருக்காது. பணிவு உடையவர் ஆகிவிடுவீர்கள்.

13. சுயமரியாதையில் நிலைத்து இருப்பதன் மூலம் சுபாவமும் நல்லதாகி விடுகிறது. எப்போது ஒருவர் பிறர்மீது மரியாதையான உணர்வு கொள்ளவில்லையோ அப்போதே சுபாவ மோதல் ஏற்படுகிறது. எனவே சுயமரியாதை என்றால் சுயத்தின் மரியாதை, அதில் இருப்பதன் மூலம் ஒருபோதும் சுபாவ மோதலுக்கு ஆளாக மாட்டீர்கள். அதோடுகூடவே யார் சுயமரியாதையில் நிலைத்து இருக்கிறார்களோ அவர்களுக்கு தானாகவே அனைவருடைய மரியாதையும் கிடைக்கிறது.

14. எப்படி ஒருவர் ஜனாதிபதி என்றால் அவரது நிலை மிக உயர்வாக இருப்பதால், மரியாதையும் அந்த நிலைக்குத்தக்கபடியே கிடைக்கிறது. அதேபோல நீங்களும் சுயமரியாதையின் மூலமாகவே உலக மகாராஜா ஆவீர்கள், மேலும் முழு உலகமே உங்களுக்கு மரியாதை செலுத்தும். அதனால் தனது சுயமரியாதையில் மட்டுமே நிலைத்திருப்பதன் மூலம் எல்லாப் பிராப்திகளும் கிடைத்து விடும்.

15. யாருக்கு பிராப்திகளின் அனுபவம் இருக்கிறதோ, அவர்களே சுயமரியாதையில் நிலைத்து இருக்க முடியும். ஒன்று கேட்பது, இரண்டாவது அந்த சொரூபம் அல்லது சுயமரியாதையை அனுபவம் செய்வது. அனுபவத்தின் ஆதாரத்தில் ஒரு நொடியில் சுயமரியாதையில் நிலைத்து நின்றுவிடுவீர்கள். யார் அனுபவ மூர்த்தியோ அவர்கள் கடுமையான சோதனை வரும்போதும் தனது சுயமரியாதையில் நிலைத்து இருப்பதால், எளிதாக அதனைக் கடந்து செல்ல முடியும்.

16. பலமுறை சேவை செய்துகொண்டே இருக்கும்போது அல்லது தனது முயற்சியில் சென்று கொண்டே இருக்கும்போது, மிகச்சிறிய ஒரு சொல்லின் தவறு செய்துவிடுகிறீர்கள் அதிலிருந்து மற்ற எல்லா தவறுகளும் ஏற்பட்டு விடுகிறது. எல்லா தவறுகளுக்கும் விதையாக இருப்பது ஒரு வார்த்தையின் பலவீனமே. சுயமரியாதை என்ற சொல்லில் சுயம் என்பதை எடுத்து விடுகிறீர்கள், பிறகு மானத்தில் வந்தவுடன் கட்டளை மறந்து போய்விடுகிறது பின்னர் தவறுகள் ஏற்படத் தலைப்படுகிறது. எனவே எப்போதும் தனது சிறந்த சுயமரியாதையிலேயே நிலைத்து இருங்கள்.

# 12. பரமாத்மாவின் இதய சிம்மாசனதாரி ஆகுங்கள்.

1. செல்லக் குழந்தைகளே, இந்த ஆன்மீக வாழ்வில் இதய சிம்மாசனத்திற்கு அதிக மகத்துவம் இருக்கிறது, யார் சங்கமயுகத்தில் பரமாத்மாவின் இதய சிம்மாசனத்தில் இடம் பிடித்திருக்கிறார்களோ, அவர்களே உலகிலும் விசேசமாக பாடப்படுகிறர்கள். அவர்களை பக்தர்கள் மாலையின் மணியாக பூஜித்து மகிழ்கிறார்கள், அதனால் எப்போதும் இதய சிம்மாசனதாரியாக இருங்கள் மேலும் அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் சுகமாக ஆடுங்கள்.

2. இந்த பரமாத்மாவின் இதய சிம்மாசனம் முழு கல்பத்திலும் கிடைக்க முடியாதது. உலக ராஜ்ஜியத்தின் அல்லது மாநில ராஜ்ஜியத்தின் சிம்மாசனம் கிடைத்துக்கொண்டே இருக்கும், ஆனால் இந்த சிம்மாசனம் சங்கமயுகத்தில் மட்டுமே கிடைக்கிறது. இது அவ்வளவு பெரிய சிம்மாசனம் அதில் நடந்து செல்லுங்கள், சுற்றுங்கள், சாப்பிடுங்கள், குடியுங்கள், ஆனாலும் எப்போதும் சிம்மாசனத்திலேயே இருக்கிறீர்கள். யார் அந்தமாதிரி சிம்மாசனதாரிகளோ, அவர்கள் பழைய தேகம் அல்லது தேகத்தின் உலகை மறந்திருப்பார்கள், அதைப் பார்த்தாலும் பார்க்க மாட்டார்கள்.

3. மிகப் பெரிய மகான் ஆத்மாக்கள் ஒருபோதும் தன் காலை தரையில் வைக்கமாட்டார்கள். அவர்களுக்காக வழி நெடுகிலும், படிக்கட்டுகளிலும் கம்பளம் விரிக்கிறார்கள். அவரது பாதங்கள் கம்பளத்தின் மீதே படுகிறது. ஆனால் பாபாவுக்கு சமமான இதய சிம்மாசன அதிகாரி குழந்தைகளோ, அவர்களது புத்தி வடிவ பாதம் ஒருபோதும் சிம்மாசனத்திற்குக் கீழே வராது.

4. இதய சிம்மாசனதாரி குழந்தைகள் எல்லோருக்கும் நண்பராகவே இருக்கிறார்கள், ஆனாலும் அவர்கள் என்ன செயல் செய்தாலும், பேச்சு பேசினாலும் அது அனைவரது உள்ளத்திலும் பதிந்து விடுகிறது, அதாவது அவரது விசயங்களை ஒவ்வொருவரும் மனதார ஏற்றுக் கொள்கிறார்கள். யார் இதய சிம்மாசனதாரிகளோ அவர்களது இரண்டு வார்த்தைகளே உள்ளத்தில் வழி ஏற்படுத்துவதாக இருக்கும். அவர்களை ஒவ்வொருவரும் தனது மூத்தவர் என்றே நினைப்பார்கள். தன்னுடையவராக உணர்வார்கள்.

5. யார் இதய சிம்மாசனதாரி குழந்தைகளோ, அவர்களது நெற்றியில் எப்போதும் அழியாத ஆத்ம நிலையின் திலகம் ஜொலிப்பது தொலைவிலிருந்தே பார்ப்பதற்குத் தெரியும். அவரது கண்களில் அல்லது முகத்தில் இருந்து எல்லா ஆத்மாக்களுக்கும் நன்மை விளைய வேண்டும் என்ற நல்விருப்பங்கள் தென்படும். அவர்களது எண்ணங்கள், வார்த்தைகள் மேலும் செயல்கள் எல்லாம் பாபாவிற்கு சமமாக இருக்கும்.

6. எப்போது குழந்தைகள் நீங்கள் உங்களுடைய இந்த நெற்றியின் சிம்மாசனத்தின் மீது அழிவற்ற மூர்த்தியாகி நிலைத்திருக்கிறீர்களோ அப்போது ஒரே ரசனை என்ற சிம்மாசனத்திலும் பாப்தாதாவின் இதய சிம்மாசனத்திலும் அமர முடியும். அதன் நினைவுச் சின்னமே இந்த தில்வாடா கோயிலாகும். இது இதயத்தை கொடுத்து பெறுவதற்கான நினைவுச் சின்னமாகும்.

7. யார் இதயத்திற்கு இதமளிப்பவரிடம் இதயத்தைக் கொடுத்து பாபாவின் இதயத்தைப் பெறுகிறார்களோ, அவர்களே பரமாத்மாவின் இதய சிம்மாசனதாரியாக முடியும். பாபாவின் இதயத்தைப் பெறுவது என்றால் அவரது உள்ளத்தின் சிறந்த எண்ணங்கள் எதுவோ, அந்த எண்ணங்களை நிறைவேற்றுவதாகும். உலகிற்கு நன்மை செய்பவராக வேண்டும் மேலும் உலகிற்காக சர்வ சக்திகளையும் வழங்கும் வள்ளலாக வேண்டும். நல்ல குழந்தையாகி மனம், சொல், செயல் மற்றும் உடல், மனம், செல்வம் என்ற அனைத்தாலும் பாபாவைப் பின்பற்றக்கூடிய நிருபணம் தரவேண்டும்.

8. பாபாவைக் குறித்துச் சொல்லும்போது “உண்மையே கடவுள்” என்று சொல்கிறார்கள், சத்தியமே பாபாவிற்குப் பிடித்தமானது. உண்மையான உள்ளத்தை இறைவன் விரும்புகிறார். அதனால் இதய சிம்மாசனத்தில் இருக்கும் சேவாதாரி குழந்தைகளது உறவு-தொடர்பில், ஒவ்வொரு எண்ணம் மற்றும் பேச்சில், உண்மையும் தூய்மையும் தெரியும். அவர்களது ஒவ்வொரு எண்ணமும், பேச்சும் சத்தியமாக இருக்கும்.

9. பரமாத்மாவின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகளின் எண்ணம் அல்லது பேச்சு ஒருபோதும் வீணானதாகவோ அல்லது சாதாரணமாகவோ இருக்க முடியாது. அவர்களது ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு நேரத்திலும், அவர்களது பார்வையில் அதாவது திருஷ்டியில் எல்லா ஆத்மாக்களுக்காகவும் தன்னலமற்ற சேவை மட்டுமே தெரியும். அவர்கள் தூங்கினாலும் சேவை, விழித்தாலும் சேவை, நடந்தாலும் சேவைதான். அவர்களுக்கு சேவையைத் தவிர வேறு எந்த விசயமும் கனவில்கூட இருக்காது. அப்படிப்பட்ட சேவாதாரிகள் ஆடாதவராகவும் களைப்பற்றவராகவும் இருப்பார்கள்.

10. எப்போதும் மாயையை வெல்லும் குழந்தைகளே பாபாவின் இதய சிம்மாசனத்தில் இடம் பிடிக்கிறார்கள். தோல்வி அடைவது என்றால் சிம்மாசனத்தில் இருந்து கீழே வருவதாகும். ஒருவேளை யாராவது தோல்வி அடைந்து விட்டால் சிம்மாசனம் கிடைக்காது. சங்கம யுகத்தில் பாப்தாதாவின் இதய சிம்மாசனம் பிராமண குழந்தைகள் உங்களுக்கு மட்டுமே கிடைக்கிறது, இந்த சிம்மாசனம் இந்த உலகில் உள்ள அனைத்து சிம்மாசனங்களை விடவும் சிறந்ததாகும். இந்த சிம்மாசனத்தில் இருப்பவரை மாயா ஒன்றும் செய்ய முடியாது. இதில் அமர்ந்திருப்பதன் மூலம் மாயாவின் அனைத்து பந்தனங்களில் இருந்தும் விலகி இருப்பீர்கள்.

11. யார் எப்போதும் பாபாவின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார்களோ, அவர்கள் நிரந்தரமாக இயற்கையான யோகிகளாக இருப்பார்கள். அவர்களுக்கு ஒருபோதும் சிரமத்தின் அனுபவம் ஏற்படாது. ஆனால் இந்த இதய சிம்மாசனம் அவ்வளவு தூய்மையாக இருக்கிறது, அதனால் யார் எப்போதும் தூய்மையாக இருக்கிறார்களோ, அவர்களே அந்த சிம்மாசனத்தில் அமர முடியும்.

12. பாபா யாரையும் சிம்மாசனத்தை விட்டு இறக்குவதில்லை, ஆனால் கர்மத்தின் விதிப்படி யார் எப்போதும் பாபாவைப் பின்பற்றுகிறார்களோ, அவர்களே எப்போதும் அங்கேயே அமர முடியும். ஒருவேளை எண்ணத்தில்கூட தூய்மையின்மை அல்லது மரியாதையின்மை வந்துவிட்டால் இதயத்தில் அமர்வதற்குப் பதிலாக இறங்கும் கலையில் அதாவது கீழே வந்து விடுவார்கள்.

13. பரமாத்மாவின் இதய சிம்மாசனத்தில் அமர்வதற்கு, உள்ளம் எப்போதும் இதயத்திற்கு இதமளிக்கும் ஒரே பாபாவுடன் இருக்க வேண்டும். ஒரு அப்பாவைத்தவிர வேறு யாருமில்லை என்ற நிலையில் இருக்கக்கூடியவர்களுக்கே இதய சிம்மாசனத்தில் இடம் இருக்கிறது. ஒருவேளை சிம்மாசனத்தை விட்டுவிட்டால் தூக்கு மேடைக்கு சென்று விடுவீர்கள். இருப்பதோ பாபாவின் இதய சிம்மாசனம் அல்லது மாயாவின் தூக்கு மேடை. அதனால் எப்போதும் சிம்மாசனத்தில் அமர்ந்திருங்கள் ஒருபோதும் கீழே இறங்கி வராதீர்கள்.

14. யார் சதா டபுள் லைட் ரூபத்தில் இருக்கிறார்களோ அவர்களே பரமாத்மாவின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். ஒருவேளை கொஞ்சங்கூட சுமை தோன்றினால் சிம்மாசனத்தில் இருந்து கீழே வந்து விடுவீர்கள். சிம்மாசனத்தை விட்டு கீழே வந்தால் மாயாவை சமாளிக்க வேண்டி இருக்கும். சிம்மாசனத்தில் இருந்தால் மாயா நமஸ்கரிக்கும். யார் நிரந்தரமாக அழியாத சிம்மாசனத்தில் இருக்கிறாரோ அவரே எப்போதும் இதய சிம்மாசனத்திலும் இருப்பார்.

15. எப்போது பரமாத்மாவின் இதயத்தில் அமர்ந்திருக்கிறீர்களோ அப்போது கவலையற்ற ராஜாவாக இருப்பீர்கள். மனதில்கூட எந்த சுமையும் இருக்காது. முகம் மற்றும் நடத்தையில் களைப்பின் அடையாளம் இருக்காது, எப்போதும் டபுள் லைட்டாக இருப்பீர்கள். அதனால், நல்ல பிள்ளைகளாக, சொன்ன பேச்சு கேட்டு நடந்து, பரமாத்மாவின் இதய சிம்மாசனத்திற்கு அதிகாரி ஆகுங்கள்.

# 13. இனிமையை தாரணை செய்து மகான் ஆகுங்கள்

1. இனிமையே பெருமை, இதன்மூலம் மனம் மற்றும் வார்த்தையின் கசப்பு முடிந்து விடும். கோப அக்கினி குளிர்ந்து விடும். இந்த ஆண்டு பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் குளிர்ந்த தேவதையாக உருவாக்க விரும்புகிறார், அதனால் இனிமை என்ற குணத்தைத் தாரணை செய்யுங்கள். உங்கள் முகமும் இனிமையாக வேண்டும். இனிமை என்ற குணத்தின் மூலம் முழுமையடைந்து விடுங்கள், யார் உங்கள் முன்னால் வந்தாலும் அவர்களை உங்களது இனிமையான பேச்சு மற்றும் சக்திசாலி பார்வையால் நிறைத்து விடுங்கள்.

2. இனிமை அப்படிப்பட்ட பொருளாக இருக்கிறது அது யாரை வேண்டுமானாலும் சிரிக்க வைக்கக் கூடியது. இனிமையை தாரணை செய்பவர்கள் இங்கேயும் மகான் ஆகிறார்கள், அங்கும் உயர்ந்த பதவி பெறுகிறார்கள். இனிய குணம் உடையவரை எல்லோரும் மகான் வடிவில் பார்க்கிறார்கள். எனவே இந்த இனிமை என்ற விசேச குணத்தை தாரணை செய்யுங்கள். இனிமையாக பழகுவதன்மூலமே மதுசூதனனுடைய பேரை பிரசித்தம் செய்யமுடியும்

3. இனிமையாகப் பழகும் குணத்தைத் தாரணை செய்வதற்காக சரளமாக இருக்க வேண்டும். எப்போது தன்னுடைய அல்லது மற்றவருடைய முடிந்துபோன விசயங்களை பார்ப்பதில்லையோ அப்போதே சரளமாக இருக்க முடியும். யார் சரளமாக இருக்கிறார்களோ அவர்களது கண்களில், வார்த்தையில், நடத்தையில் இனிமையாகப் பழகும் குணம் வெளிப்படையாகத் தெரியும்.

4. இனிமையாகப் பழகும் குணத்தை தாரணை செய்தீர்கள் என்றால் சமஸ்காரங்கள் தாமாகவே ஒன்று சேர்ந்து விடும். சமஸ்காரங்கள் ஒன்று சேருவதே உண்மையான மங்கள சேர்க்கையாகும், ஏனெனில் பலவிதமான சமஸ்காரங்களின் காரணத்தாலேயே ஒருவர் பிறரிடமிருந்து விலகி இருக்கிறார்கள். எப்போது இனிமையாகப் பழகும் குணத்தின் மூலமாக சமஸ்காரங்கள் சந்திக்கும் சம்மேளனம் நடக்கிறதோ அப்போது பாப்தாதா வந்திருப்பது உலகறியத் தெரிய வரும்.

5. குழந்தைகள் உங்கள் நடத்தையில் இனிமையும், மனதில் எல்லையற்ற வைராக்கிய உணர்வும் இருக்க வேண்டும். இரண்டும் நினைவில் இருந்தால் பாஸ் வித் ஹானர் ஆகிவிடுவீர்கள். இனிமை மற்றும் பணிவு இந்த இரண்டு விசேச தாரணை மூலமாக, எப்போதும் உலக நன்மை செய்பவராக, மகாதானியாக, வரதானியாக ஆகிவிடுவீர்கள், மேலும் எளிதில் அன்பின் நிரூபணம் தரமுடியும்.

6. குழந்தைகள் உங்கள் ஒவ்வொரு சொல்லும் முத்துக்களாக இருக்கிறது. இவர்கள் பேசவில்லை ஆனால் முத்து மழை பொழிகிறது எனத் தோன்ற வேண்டும், இதைத்தான் இனிமை என்று சொல்லப்படுகிறது. அந்தமாதிரி பேசுங்கள், அதைக் கேட்பவர்கள் தானும் அதேபோல பேச வேண்டும் என்று நினைக்க வேண்டும். நீங்கள் பேசுவதைக் கேட்டு எல்லோருக்கும் கற்கவும், பின்பற்றவும் பிரேரணை கிடைக்க வேண்டும். எந்த பேச்சு பேசினாலும் அது அப்படி இருக்க வேண்டும் அதை யாராவது டேப்பில் பதிந்து மீண்டும் மீண்டும கேட்க வேண்டும். அப்படிப்பட்ட இனிய பேச்சின் வைப்ரேசன் தானகவே பிறரைத் தன் வயம் இழுக்கும்.

7. உங்களது ஒவ்வொரு பேச்சும் மகத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஒவ்வொரு ஆத்மாவுக்காகவும் நீங்கள் எழுப்பும் ஒவ்வொரு எண்ணமும் இனிமையானதாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரையும் மேலே உயர்த்த வேண்டும் என்ற எண்ணம், இனிமையாகப் பழகும் சுபாவம், பணிவான சுபாவம் எல்லாம் இருக்க வேண்டும். எனது சுபாவம் இப்படிப்பட்டது என ஒருபோதும் சொல்ல வேண்டாம். என்னுடையது என்பது எங்கிருந்து வந்தது. சத்தமாகப் பேசுவது எனது சுபாவம், ஆவேசப் படுவது எனது சுபாவம். சுபாவத்தின் வயப்படுவதே மாயையாகும். இப்போது மாயையை வென்றவர் ஆகுங்கள். அபிமானம் அல்லது மனமுடைந்து போகக்கூடிய சுபாவம் அல்லது ஆவேசப்படக்கூடிய சுபாவத்தை எல்லாம் இப்போது மாற்றி விடுங்கள்.

8. நீங்கள் ஒருவர் பிறருக்கு இனிப்பு வழங்கும்போது கொஞ்ச நேரத்திற்கு வாய் இனிக்கிறது ஆனால் தானே இனிய குணம் உடையவராக ஆகிவிடுங்கள், வாயில் எப்போதும் இனிய வார்த்தைகள் இருக்கட்டும். எப்படி இனிப்பை தின்பதிலும் வழங்குவதிலும் மகிழ்ச்சி அடைகிறீர்களோ, அதேபோல இனிய வார்த்தைகள் தனக்கும் மகிழ்ச்சி தருகிறது, பிறரையும் மகிழ்ச்சி அடையச் செய்கிறது. இதன்மூலம் எல்லோரது வாயையும் இனிப்பாக்கிக் கொண்டே இருங்கள், எப்போதும் இனிமையான பார்வை, இனிமையான பேச்சு, இனிமையான செயல் இருக்கட்டும்.

9. இனிமை என்ற குணத்தை தாரணை செய்து யாருக்கு வேண்டுமானாலும் இரண்டு நிமிடம் இனிமையான திருஷ்டி கொடுங்கள். இனிமையான வார்த்தைகளை கூறுவதன் மூலம் அந்த ஆத்மாவை சதாகாலத்திற்கு நிறைத்து விடுகிறீர்கள். அந்த இரண்டு நிமிட இனிய திருஷ்டியும், பேச்சும் அந்த ஆத்மாவுடைய உலகையே மாற்றி விடுகிறது. இந்த இரண்டு இனிய வார்த்தை சதாகால மாற்றத்திற்கு காரணமாகி விடுகிறது.

10. இனிமையாகப் பழகும் குணம் அவ்வளவு விசேசமானது, அது கசப்பான பூமியையும் இனிப்பாக்கி விடுகிறது. நீங்கள் எல்லாம் மாறுவதற்கு ஆதாரம் பாபாவுடைய இரண்டு இனிய வார்த்தைகளே. இனிமையான குழந்தைகளே நீங்கள் இனிமையான, சுத்தமான ஆத்மாக்கள்,

இந்த இரண்டு இனிய வார்த்தைகள் மாற்றத்தை கொண்டுவந்தது. இனிய திருஷ்டி மாற்றத்தைக் கொண்டு வந்தது. இந்தமாதிரி இனிமையின் மூலமாக மற்றவரையும் இனியவராக மாற்றுங்கள். இந்த வாயை இனிப்பாக்குங்கள். இந்த வரதானத்தின் மூலம் தானும் முன்னேற்றம் அடைந்து கொண்டே இருங்கள் மேலும் சேவையிலும் வளர்ச்சியைக் கொண்டுவாருங்கள்.

11. பாப்தாதா இப்போது ஒவ்வொரு குழந்தையின் நெற்றியிலும் சம்பூரண தூய்மையுடன் ஜொலித்துக்கொண்டிருக்கும் மணியைப் பார்க்க விரும்புகிறார். ஆன்மீகத்தால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் கண்களைப் பார்க்க விரும்புகிறார், வாத்தையில் இனிமையையும், சிறப் பையும், விலைமதிப்பற்ற பேச்சையும் கேட்க விரும்புகிறார் மேலும் செயலில் திருப்தியையும் பணிவையும் எப்போதும் பார்க்க விரும்புகிறார்.

12. சமஸ்காரம் அல்லது சுபாவம் என்பது ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக இருக்கிறது. ஆனால் எப்போது உங்கள் சுபாவம் ஈஸியாக இருக்குமோ அப்போதே எல்லோரிடமும் அன்பு உடையவராக, எல்லா விசயங்களிலும், சம்மந்தங்களிலும் வெற்றி உள்ளவராக, மனதின்மீது வெற்றியும், வார்த்தையில் இனிமையும் உடையவராக இருப்பீர்கள். ஈஸி நேச்சர் என்றால், நேரம் எப்படியோ, மனிதர்கள் எப்படியோ, சூழ்நிலை எப்படியோ அதையெல்லாம் பகுத்துணர்ந்து தன்னை ஈஸியாக்கிக் கொள்வதாகும். ஈஸி என்றால் கலந்து உறவாடுவது, வளைந்து கொடுப்பது. ஈஸி என்றால் சோம்பல் அல்ல.

13. பிரம்மா பாபா தனது ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும், ஒன்று எப்போதும் ஆன்மீகத்தின் புன்முறுவலைப் பார்க்க விரும்புகிறார், இரண்டாவது வாயிலிருந்து எப்போதும் இனிமையான வார்த்தைகளையே கேட்க விரும்புகிறார். ஒரு வார்த்தைகூட இனிமையற்றதாக இருக்கக் கூடாது. முகத்தில் ஆன்மீகம் இருக்க வேண்டும், வாயில் இனிமை இருக்க வேண்டும் மேலும் மனம் புத்தியில் எப்போதும் நல்ல எண்ணங்களும், கருணை உணர்வும், வாரி வழங்கும் பாவனையும் இருக்க வேண்டும். ஒவ்வொரு அடியிலும் தந்தையைப் பின்பற்ற வேண்டும், இப்படியாக வளர்ப்பிற்கு ஈடு செய்யுங்கள்.

14. சதா இனிமையாக இருப்பதன்மூலம் பாபாவிற்கு அருகில் இருப்பதை வெளிப்படுத்துங்கள். எண்ணத்திலும் இனிமை, பேச்சிலும் இனிமை, செயலிலும் இனிமை - இதுவே பாபாவிற்கு அருகில் இருப்பதாகும். அதனால் இனிமையிலும் இனிமையான குழந்தைகளே என பாபா தினந்தோறும் சொல்கிறார் அதற்கு பதிலாக இனிமையிலும் இனிமையான பாபா என நீங்களும் சொல்கிறீர்கள். எனவே இந்த தினசரி இனிய வார்த்தைகள் உங்களை இனியவராக்கி விடுகிறது.

15. எங்கே இனிமை இருக்கிறதோ அங்கே தூய்மை இருக்கும். தூய்மை இல்லா மல் இனிமை வரமுடியாது. எனவே ஒவ்வொரு சொல்லிலும் இனிமை, திருப்தி, சரளம் முதலிய புதுமை இருக்க வேண்டும். இதுவே மகத்தானது, இதுவே புதுமையானது. இனிய பேச்சு, இனிய சமஸ்காரம், இனிய சுபாவங்கள் மூலமாக மற்றவரையும் இனிய வாய் உடையவராக செய்துகொண்டே இருங்கள். “சதா களைப்பற்றவர் பவ மற்றும் இனிமையானவர் பவ” என்ற வரதானங்களின்மூலம் மேன்மை அடையுங்கள், பறந்து செல்லுங்கள்.

# 14. தற்போது உங்கள் வள்ளல் சொரூபத்தை வெளிப்படுத்துங்கள்.

1. தற்போதய நேரத்தில் குழந்தைகள் நீங்கள் உங்களது கருணை உள்ளத்தையும், வள்ளல் ரூபத்தையும் வெளிப்படுத்துங்கள். உங்களது பொக்கிஷங்கள் எல்லாம் எப்போதும் திறந்தே இருக்க வேண்டும். அனாதியிலும் ஆதியிலும் உள்ள உங்கள் வள்ளல் சமஸ்காரத்தை தனது வாழ்க்கையில் எப்போதும் வெளிப் படையாக வைத்து, பரமாத்மாவின் செய்தி சொல்லும் தூதுவராகி, உலகில் பாபாவை வெளிப்படுத்தும் செய்தியைப் பரப்புங்கள்.

2. வள்ளலின் சமஸ்காரத்தை வெளிப்படுத்தி மனதின் மூலமாக புண்ணியத்தின் கணக்கை சேமியுங்கள், வார்த்தை மூலமாக பலவீனமான ஆத்மாக்களுக்கு குஷியையும், கவலையில் இருப்பவருக்கு அவரது சுயமரியாதையின் நினைவையும் மேலும் மனமுடைந்து போன ஆத்மாக்களுக்கு ஊக்க உற்சாகத்தையும் பெறச்செய்யுங்கள். உறவு-தொடர்பில் ஆத்மாக்களுக்கு உங்களது சிறந்த சகவாசத்தின் நிறத்தை அனுபவம் செய்ய வைத்தீர்கள் என்றால் புண்ணியத்தின் கணக்கில் சேமிப்பு அதிகமாகிக் கொண்டே இருக்கும்.

3. வள்ளலின் குழந்தைகள் நீங்கள் எல்லோருக்கும் கொடுக்கும் பாவனைமூலம் நிறைத்து விடுங்கள். இது இருந்தால் நானும் இப்படிச் செய்வேன், இப்படி சூழ்நிலை இருந்தால், வாயுமண்டலம் இருந்தால் அப்போது நான் இதைச் செய்வேன் என ஒருபோதும் எண்ணத்தில் கூட நினைக்காதீர்கள். வள்ளலின் சமஸ்காரம் உடையவருக்கு எல்லாப் பக்கங்களில் இருந்தும் உதவிகள் தானே கிடைத்துக்கொண்டிருக்கும், எனவே மாஸ்டர் வள்ளல்கள் மற்றவரிடம் இருந்து பெற வேண்டும் என்ற எண்ணம் உடையவராக இருக்க முடியாது.

4. எப்போது ஜொலித்துக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களாகிய நீங்கள், சூரிய, சந்திரனைப் போன்று தன்னுடைய சம்பூர்ண நிலையில் அதாவது மாஸ்டர் வள்ளலின் நிலையில் நிலைத்து இருக்கிறீர்களோ, அப்போது அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்கள், தேடிக்கொண்டிருக்கும் ஆத்மாக்கள் எல்லோரும் விட்டில் பூச்சிகளைப் போல பெறுவதற்கும், சந்திப்பதற்கும் மிக விரைவாக தாமாகவே உங்களிடம் வருவார்கள். அப்போது நீங்கள் எல்லோருக்கும் நொடியில் பாபா மூலமாக முக்தி, ஜீவன்முக்தியின் அதிகாரம் கொடுப்பதற்கு தீவிர வேகத்தில் சேவை செய்ய வேண்டியிருக்கும்.

5. நீங்கள் பாக்கியத்தின் ரேகைகளை வரையக்கூடிய பிரம்மாவின் குழந்தைகளான பிரம்மாகுமாரர்கள் மற்றும் பிரம்மாகுமாரிகள், எனவே உங்கள் பொக்கிஷங்கள் எப்போதும் நிறைவாக இருக்கும். யாரையும் வெறுங்கையோடு போகவிட வேண்டாம். வள்ளலின் குழந்தைகள் எப்போதும் கொடுத்துக்கொண்டே இருங்கள் மேலும் எல்லோரது பாவனைகளையும், ஆசைகளையும் நிறைவேற்றிக் கொண்டே இருங்கள். மகாதானியாக வரதானியாக செயல்படுங்கள் இதுவே உங்கள் சொரூபம்.

6. நீங்கள் வள்ளலின் குழந்தையாகி எல்லோருக்கும் உதவி செய்வதுதான் இருப்பதிலேயே மிகப் பெரிய தானமாகும். கெட்டுவிட்ட காரியத்தை, கெட்டுவிட்ட சமஸ்காரத்தை, கெட்டுவிட்ட மனதை எல்லாம் சுபபாவனை மூலமாக சரிசெய்வதில் எப்போதும் எல்லாருக்கும் உதவி செய்பவர் ஆகவேண்டும். இவர் இதைச் சொன்னார், இவர் இதைச் செய்தார், என்பதைப் பார்த்த போதும், கேட்டபோதும், புரிந்துகொண்ட போதும் தனது உதவியின் ஸ்டாக் மூலமாக மாற்றம் செய்து அவர்களை நிரப்ப வேண்டும் - இதுவே அனைத்திலும் பெரிய தானமாகும்.

7. ஏதாவது காலி இடம் ஏற்படுமானால் எப்படி ஆல்ரவுண்டு சேவாதாரி தக்க நேரத்தில் அந்த இடத்தை நிரப்புவாரோ, அதேபோல ஒருவேளை யாரிடமாவது ஏதாவது சக்தியின் குறைவு அனுபவமானாலும் தனது உதவியின் மூலமாக அந்த சக்தியை நிரப்ப வேண்டும், அதனால் பிறரது குறையைக்கூட அந்நிய ஆத்மாக்கள் யாரும் உணரக்கூடாது, இப்படிச் செய்வதையே, வள்ளலின் குழந்தையாகி தக்க சமயத்தில் உதவியின் தானம் செய்வது என்று சொல்லப்படுகிறது.

8. பாக்கியத்தை வழங்கும் பாபா, பிரம்மா மூலமாக பாக்கியத்தை வழங்கினார் என்பது வழக்கில் உள்ள பாடல். எனவே எது பிரம்மாவின் காரியமோ அது பிராமணர்களின் காரியமாகும். உலகில் உள்ளோர் துணி வழங்குகிறார்கள், தானியங்களை வழங்குகிறார்கள், தண்ணீரை வழங்குகிறார்கள். ஆனால் சிறந்த பாக்கியத்தையோ, பாக்கியத்தை வழங்கும் வள்ளலின் குழந்தைகளான நீங்களே வழங்க முடியும். யாருக்கு பாக்கியம் கிடைத்து விடுகிறதோ அவர்களுக்கு எல்லாம் கிடைத்துவிடுகிறது, அதனால் பாக்கியத்தை வழங்குவதில் பேரிதயம் உடையவராக இருங்கள்.

9. உலகில் கூட தானத்தை புண்ணியம் என்று நினைக்கிறார்கள், நீங்கள் வள்ளலின் குழந்தைகள், எப்போதும் தானம் செய்யக்கூடிய புண்ணிய ஆத்மாக்கள். நீங்கள் எந்த ஆத்மாவிடம் இருந்தும் அற்பகால பலன்பெற ஆசை கொள்ள முடியாது. இந்த ஆத்மா கொஞ்சம் கொடுத்தால் நானும் தருவேன், அல்லது இந்த ஆத்மா கொஞ்சம் செய்தால் நானும் செய்வேன், இப்படி எல்லைக்குட்பட்ட ஆசைகள் எதுவும் இருக்கக்கூடாது. வள்ளலின் குழந்தையாகி எல்லோருக்கும் அன்பு, உதவி, சக்திகளைக் கொடுக்கக்கூடிய புண்ணிய ஆத்மா ஆகுங்கள்.

10. தனது புண்ணிய காரியத்திற்குப் பதிலாக புகழ் பெற வேண்டும் என்ற ஆசை ஒருபோதும் வைக்கக் கூடாது, இந்த எல்லைக்குட்பட்ட புகழை ஏற்றுக் கொள்வது என்பது சதாகால பலனை பெறுவதில் இருந்து வஞ்சிக்கப் படுவதாகும். அதனால் எப்போதும் கொடுப்பதில் கடலுக்குச் சமமாக நிறைந்தவர் ஆகுங்கள். உங்களுடைய ஒவ்வொரு சொல்லும் மற்றவர்களை குஷியில், பாபாவுடைய அன்பில், அதீந்திரிய சுகத்தில் இருக்கச் செய்யும் ஆன்மீக ஆனந்தமய வாழ்வின் அனுபவத்தை தர வேண்டும். மேலும் ஒவ்வொரு கர்மமும் எல்லா ஆத்மாக்களுக்கும் எப்போதும் உதவி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

11. தற்சமயத்தில் எல்லா ஆத்மாக்களும் பிச்சைக்காரர்கள் ரூபத்தில் பகவானிடமிருந்து ஏதாவது கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். எல்லோரது வாயில் இருந்தும் அல்லது மனதில் இருந்தும் இதைக் கொடு, இதைக்கொடு என்ற சப்தமே வருகிறது. சிலர் செல்வம் வேண்டியும், சிலர் உதவியை, சிலர் உறவை, சிலர் கொஞ்ச நேரத்திற்காக சுகம்-நிம்மதியை, சிலர் ஓய்வை அல்லது தூக்கத்தை, சிலர் பின்பற்றும் ஆட்களை கேட்கும் பிச்சைக் காரர்களாக இருக்கிறார்கள். வள்ளலின் குழந்தைகளான நீங்கள் மாஸ்டர் வள்ளலாகி தனது சுபபாவனையின் உணர்வுகளால் பிச்சைக்கார ஆத்மாக்களின் பசியை போக்குங்கள்.

12. பாப்தாதா எப்போதும் பேரிதயம் உடையவராக, எல்லையற்ற இதயம் உடையவராக இருக்கிறார், அதனால் எல்லோருடைய இதயத்தையும் ஏற்றுக்கொள்ளும் இதயத்திற்கு இதமளிப்பவராக இருக்கிறார். அதேபோல குழந்தைகளும் எல்லையற்ற இதயம், பரந்த இதயம், வள்ளலின் இதயம் கொண்டு, எப்போதும் மன மகிழ்ச்சியோடு உலகை குஷிப்படுத்தக்கூடிய மகிழ்ச்சி நிறைந்த ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். புனித ஆத்மாக்களாகிய நீங்களே இந்த உலகிற்கு ஆதாரமாக இருக்கிறீர்கள். நீங்கள் எல்லோரும் விழித்திருக்கும் ஜோதியாகும் போது, உலகில் உள்ளோரும் விழிப்படைவார்கள். உங்கள் எல்லோருக்கும் உயரும் கலை வரும்போது, அனைத்து ஆத்மாக்களும் பலனடைவார்கள்.

13. மாஸ்டர் வள்ளல் பிராப்தி சொரூப குழந்தைகளாகிய உங்களுக்கு உலகில் உள்ள ஆத்மாக்கள்மீது இரக்கம் வரவேண்டும் எனெனில் தனது சகோதரர்கள் அற்பகால ஆசைகளுக்காக எவ்வளவு அலைந்து திரிந்து கொண்டு இருக்கிறார்கள். வள்ளலின் குழந்தைகள் தனது சகோதரர்கள் மீது தயை அல்லது இரக்கத்தின் பார்வை கொள்ளுங்கள். மகாதானி, வரதானி ஆகுங்கள். ஜொலித்துக்கொண்டிருக்கும் திருப்தியின் மணியாகி எல்லோருக்கும் மகிழ்ச்சி தாருங்கள்.

14. பூர்வீக, பூஜைக்குரிய ஆத்மாக்களாகிய உங்களை அமைதி தெய்வமே, சக்தி தெய்வமே என்று சொல்லி ஆத்மாக்கள் நினைவு செய்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் ஏ அமைதி தேவ ஆத்மாக்களே, மாஸ்டர் அமைதிக் கடலானவர்களே, மாஸ்டர் அமைதி சூரியன்களே உங்கள் அமைதியின் கதிர்களை, அமைதியின் அலைகளை வள்ளலின் குழந்தைகளான நீங்கள் தேவர்களாகி எல்லோருக்கும் வழங்கிக்கொண்டே இருங்கள். இப்படிப்பட்ட சேவை செய்வதற்காக விசேச பயிற்சி செய்யுங்கள்.

# 15. தற்போது எல்லாம் நிறைந்த, கர்மாதீத் நிலையை அடைய விடாமுயற்சி செய்யுங்கள்

1. எப்படி அதிதீவிரமாக சேவை செய்வதன்மூலம், எல்லாமே முடிவடையும் கடைசி கட்ட நேரத்தை அருகில் கொண்டு வருகிறீர்களோ, அதேபோல இப்போது தன்னை நிரப்புவதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். எது நடந்தாலும் சரி கர்மாதீத் நிலையை அடைந்தே தீருவேன் என்ற விடா முயற்சி செய்யுங்கள். அதற்கான நாளை இப்போது முடிவு செய்யுங்கள்.

2. கர்மாதீத் என்றால் கர்மத்தில் இருந்து விலகிவிட வேண்டும் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. கர்மத்தில் இருந்து விலக வேண்டாம், **கர்மத்தின் பந்தனத்தில் சிக்குவதில் இருந்து விலகவேண்டும், அதனையே கர்மாதீத் நிலை என்று சொல்லப்படுகிறது.** கர்மயோக நிலையானது கர்மாதீத் நிலையை அனுபவம் செய்ய வைக்கிறது. இந்த கர்மயோக நிலையானது மிகவும் இனிமையானது மேலும் அதிக தனித்துவம் வாய்ந்தது, இதன் மூலம் எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும், கடின முயற்சி செய்ய வேண்டியதாக இருந்தாலும், அது அப்படித் தோன்றும், அதாவது காரியத்தைச் செய்ய வில்லை ஆனால் விளையாடிக் கொண்டிருக்கிறேன் எனத் தோன்றும்.

3. **ஆசையென்றால் என்னவென்றே தெரியாது - எனப் புகழ் பாடப்படுகிறது, இது பரிஸ்தா வாழ்வின் விசேசமாகும். எப்போது பிராமண வாழ்வு பரிஸ்தா வாழ்வாகி விடுகிறதோ, அப்போது கர்மாதீத் நிலையை அடைந்து விடுவீர்கள்.** அப்போது எந்தவிதமான தூய்மையான செயல், வீணான செயல், கெட்ட செயல் அல்லது முன்வினையின் பந்தனத்திலும் சிக்க மாட்டீர்கள்.

4. கர்மாதீத் என்பதன் அர்த்தமே எல்லாவிதமான எல்லைக்குட்பட்ட சுபாவ சமஸ்காரங்களில் இருந்து தனித்திருப்பது அதாவது விலகி இருப்பது. எல்லைக்குட்பட்டது என்றால் பந்தனம், எல்லையற்றது என்றால் பந்தனமின்மை. பிரம்மா பாபாவிற்குச் சமமாக இப்போது எல்லைக்குட்பட்ட எனது எனது என்பதில் இருந்து விடுபட, அதாவது கர்மாதீத் நிலையை அடைவதற்கான அவ்யக்த நாளை கொண்டாடுங்கள். இதுவே அன்பின் அத்தாட்சி என்று சொல்லப்படுகிறது.

5. கர்மாதீத் நிலையை அடைவதற்காக எப்போதும் சாட்சியாக இருந்து காரியங்கள் செய்யுங்கள். **சாட்சி என்றால் எப்போதும் விலகியும் அதேசமயம் அன்புடனும் இருந்து செயல் செய்யும் அலௌகீக ஆத்மா நான், அலௌகீக அனுபவம் பெறும், அலௌகீக வாழ்க்கை,** சிறந்த வாழ்க்கை வாழும் ஆத்மா நான் என்ற போதையில் இருப்பதாகும். செயல்கள் செய்தபோதும் இந்த பயிற்சியை அதிகப்படுத்திக்கொண்டே இருந்தால் கர்மாதீத் நிலையை அடைந்து விடுவீர்கள்.

6. கர்மாதீத் நிலையை அடைவதற்காக அசரீரியாகக்கூடிய பயிற்சியை அதிகப் படுத்துங்கள். உடலின் பந்தனம், செயலின் பந்தனம், மனிதர்களின் பந்தனம், வைபவங்களின் பந்தனம், சுபாவ சமஸ்காரங்களின் பந்தனம் முதலிய எந்த பந்தனங்களும் தன் பக்கம் கவரக்கூடாது. இந்த பந்தனங்களே ஆத்மாவைக் டைட் பண்ணிவிடுகிறது. எனவே எதனாலும் பாதிக்கப்படாத அதாவது எப்போதும் விலகியும் அதேசமயம் மிகுந்த அன்புடனும் இருக்கும் வழக்கத்தை பயிற்சி செய்யுங்கள்.

7. கர்மாதீத் நிலையை அடைவதற்காக கர்மத்தின் கணக்கு வழக்குகளில் இருந்து விலகி விடுங்கள். சேவையில்கூட, சேவையின் பந்தனத்தில் சிக்கியிருக்கும் சேவாதாரியாக இருக்கக்கூடாது. பந்தனதத்திலிருந்து விலகி இருந்து சேவை செய்யுங்கள், அதாவது எல்லைக்குட்பட்ட ராயல் ஆசைகளில் இருந்து அகன்று விடுங்கள். எப்படி தேகத்தின் பந்தனம், தேக சம்பந்தத்தின் பந்தனம் இருக்கிறதோ அதேபோல சேவையில் உள்ள தன்னலம் கூட பந்தனமே, அது கர்மாதீத் நிலையை அடைவதில் தடையை ஏற்படுத்துகிறது. கர்மாதீத் நிலையை அடைவது என்றால், இந்த ராயல் கணக்கு வழக்குகளில் இருந்தும் விலகி இருப்பதாகும்.

8. **நெடுங்காலம் ஆடாத அசையாத, தடையற்ற, பந்தனமற்ற, தீய சிந்தனைகள் அற்ற, கெட்ட செயல்கள் அற்ற அதாவது உடலற்ற, விகாரமற்ற, அகந்தையற்ற நிலைகளில் இருந்தீர்கள் என்றால் அப்போது கர்மாதீத் நிலையை அடைந்து விடுவீர்கள்.**

9. கர்மாதீத் நிலையை அனுபவம் செய்வதற்காக, ஞானம் கேட்பது மற்றும் சொல்வது கூடவே இப்போது பிரம்மா பாபாவுக்கு சமமாக விலகி இருந்து அசரீரி ஆகக்கூடிய பயிற்சியின் மீது விசேச கவனம் கொடுங்கள். எப்படி பிரம்மா பாபா தனது வாழ்வில் கர்மாதீத் நிலையை

அடைவதற்கு முன்பாக, **விலகியும் அன்பாகவும் இருக்கும் பயிற்சி**யின் வெளிப்படையான அனுபவத்தைப் பெறச் செய்தார். சேவையையோ அல்லது வேறெந்த காரியத்தையோ தவிர்க்கவில்லை எனினும் விலகியிருந்தபடியே கடைசி நாளிலும் குழந்தைகளுக்கான சேவையை செய்து முடித்தார், அதே மாதிரி தந்தையைப் பின்பற்றுங்கள்.

10. சேவையின் வளர்ச்சி எவ்வளவு வேண்டுமானலும் அதிகமாகட்டும் ஆனால் வளர்ச்சி அதிகமாகும்போது, சார நிலையின் பயிற்சி குறைந்துவிடக் கூடாது. வளர்ச்சியில் சாரத்தை மறந்துவிடக்கூடாது. சாப்பிடுங்கள், குடியுங்கள், சேவை செய்யுங்கள் ஆனாலும் விலகியிருக்க வேண்டியதை மறந்து விடாதீர்கள்.

11. வார்த்தையோடு கூடவே இப்போது ஆன்மீக அலைகளை (வைப்ரேசன்), அசரீரிநிலையின் அலைகளை, விலகியும் அன்பாகவும் இருக்கும் சக்திசாலி அலைகளை வாயுமண்டலத்தில் பரப்புங்கள். இதுவே சேவையை வேகமாகச் செய்ய சாதனமாகும். பிறருக்குச் சேவை செய்யும் முன்பாக தான் இந்த விதியில் முழுமையடையுங்கள் அப்போது சேவையில் வெற்றி காண்பீர்கள்.

12. கர்மாதீத் என்றால் கர்மத்தின் எந்த பந்தனமும் தன்னை தொடுவதில் இருந்தும் விலகி இருப்பதாகும். இப்படிப்பட்ட அனுபவம் அதிகரித்துக் கொண்டே போக வேண்டும். எந்த ஒரு செயலின் பந்தனமும். தொடக்கூடாது மேலும் செயல் செய்தபிறகு என்ன ரிசல்ட் வருகிறதோ அதுவும் உங்களைத் தொடக்கூடாது, முற்றிலும் விலகிய நிலை அனுபவமாகிக் கொண்டே இருக்க வேண்டும். யாரோ செய்ய வைத்தார்கள் நான் செய்தேன் என்பதாக உணர வேண்டும். பொருப்பாக இருப்பதிலும் விலகிய நிலை அனுபவமாக வேண்டும். எது முடிந்தாலும் அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அதிலிருந்து விலகி விடவேண்டும்.

13. கர்மம் செய்துகொண்டே இருந்தபோதும், உடலும் லேசாக இருக்க வேண்டும், மனமும் இலேசாக இருக்க வேண்டும். கர்மத்தின் ரிசல்ட் மனதை இழுக்கக் கூடாது. எந்த அளவு காரியங்கள் அதிகமாகிக்கொண்டே இருக்கிறதோ அந்த அளவு இலேசான நிலையும் அதிகரித்துக்கொண்டே போக வேண்டும். செயல்கள் தன்பக்கம் இழுக்கக் கூடாது, ஆனால் எஜமானனாக இருந்து கர்மத்தை செய்ய வைப்பவர் செய்ய வைக்கிறார் மற்றும் செய்பவர் நிமித்தமாகி செய்கிறேன் என்ற பயிற்சியை அதிகரித்தால் முழுமையான கர்மாதீத் நிலையை எளிதாக அடைந்து விடுவீர்கள்.

14. கர்மாதீத் நிலை அடைய ஐந்து விசயங்களை செக் பண்ணுங்கள்:-

1. எந்த அளவு கர்மத்தின் பந்தனத்தில் இருந்து விலகி இருக்கிறேன்?
2. லௌகீக, அலௌகீகத்தில், செயல் மற்றும் சம்பந்தம் இந்த இரண்டிலும் சுயநல உணர்வில் இருந்து எவ்வளவு விலகி இருக்கிறேன்?
3. முந்தைய ஜென்மங்களின் கர்ம கணக்கு வழக்குகளில் இருந்து அல்லது தற்போதய முயற்சியில் உள்ள பலவீனத்தின் காரணமாக ஏதாவது வீண் சுபாவ சமஸ்காரங்களின் வசமாவதிலிருந்தும் எவ்வளவு விலகி இருக்கிறேன்?
4. ஏதேனும் சேவை, கூட்டம், இயற்கையின் பிரச்சினைகள் தனது சுயநிலையையோ அல்லது சிறந்த நிலையையோ தடுமாறச் செய்ய வில்லையே? இந்த பந்தனத்தில் இருந்தும் விலகி இருக்கிறேனா?
5. பழைய உலகத்தில், பழைய கடைசி சரீரத்தில், எந்த விதமான வியாதியும் தனது சிறந்த நிலையில் தடுமாற்றத்தைக் கொண்டு வரவில்லையே? சுயசிந்தனை, ஞான சிந்தனை, சுபசிந்தனை இருப்பதற்குப் பதிலாக வியாதியின் சிந்தனை ஓடவில்லையே?

# 16. சமஸ்காரங்களை இணைக்கும் ராஸநடனம் ஆடுங்கள் அப்போது 108 ரத்தினங்களின் வைஜயந்தி மாலை தயாராகிவிடும்

1. எப்போது எந்த மாலையை உருவாக்கினாலும் ஒரு மணி மற்ற மணியோடு சேர்ந்து இருக்கும். வைஜயந்தி மாலையிலும் 108வது மணியாக இருந்தாலும் மணி மணியோடு சேர்ந்தே இருக்கும். நாமெல்லாம் மாலையில் கோர்க்கப்பட்ட மணிகள் போல இருக்கிறோம் என்ற உணர்வு எல்லோருக்கும் இப்போது வர வேண்டும். சமஸ்காரங்கள் பலவிதமாக இருந்தபோதும் நெருங்கி இருப்பது தெரிய வேண்டும்.

2. ஒருவர் பிறரது சமஸ்காரங்களை அறிந்துகொண்டு, ஒருவர் பிறரது அன்பில், ஒருவர் பிறரோடு கலந்து உறவாடி வாழ வேண்டும்- இது மாலையிலுள்ள மணிகளின் சிறப்பாகும். ஆனால் எப்போது சமஸ்காரங்கள் மற்றும் எண்ணங்களில் ஒருவர் பிறரோடு ஒன்றாகிறீர்களோ அப்போதே ஒருவர் பிறருக்கு சினேகி ஆகமுடியும். இதற்கு சரளமாக பழகும் குணத்தை தாரணை செய்யுங்கள்.

3. இதுவரை புகழின் ஆதாரத்திலேயே நிலை இருந்து வருகிறது, என்ன காரியம் செய்கிறீர்களோ, அதன் பலன்மீது ஆசை கொள்கிறீர்கள், புகழ் கிடைக்க வில்லை என்றால் அந்த நிலை இருப்பதில்லை. நிந்தனை ஏற்பட்டாலோ பிரபுவை மறந்து அனாதைகள் ஆகிவிடுகிறீர்கள். பிறகு சமஸ்கார மோதல் ஆரம்பமாகி விடுகிறது. இந்த இரண்டு விசயங்கள் மாலையிலிருந்து வெளியேற்றி விடுகிறது. அதனால் புகழ், இகழ் இரண்டிலும் சமமாக இருக்கும் நிலையை உருவாக்குங்கள்.

4. சமஸ்காரங்கள் இணைவதற்கு எங்கு எஜமானனாக நடந்து கொள்ள வேண்டுமோ அங்கு குழந்தை ஆகக்கூடாது மேலும் எங்கு குழந்தையாக வேண்டுமோ அங்கு எஜமானன் ஆகக்கூடாது. **குழந்தையாவது என்றால் சிந்தையற்று இருப்பது. எந்த கட்டளை கிடைத்தாலும், எந்த வழிமுறை கிடைத்தாலும் அதன்படி நடக்க வேண்டும். எஜமானனாகி தனது கருத்தை தெரிவியுங்கள், பின்னர் பாலகனாகி விடுங்கள்** அப்போது மோதிக் கொள்வதில் இருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள்.

5. சேவையில் வெற்றி பெறுவதற்கான ஆதாரம் பணிவு. எவ்வளவு பணிவோ அவ்வளவு வெற்றி கிடைக்கும். தன்னை ஒரு கருவியாக நினைப்பதன் மூலம் பணிவு வரும். பணிவு என்ற குணம் இருக்கும்போது எல்லோரும் மரியாதை தருவார்கள். யார் தானே தலைவணங்குகிறாரோ, அவருக்கு எல்லோரும் தலை வணங்குவார்கள். அதனால் இந்த உடலை ஒரு கருவி என உணர்ந்து நடந்துகொள்ளுங்கள் மேலும் சேவையில் தான் ஒரு கருவியாக இருக்கிறோம் என உணர்ந்து நடந்து கொள்ளும்போது பணிவு வரும். எங்கே பணிவு இருக்கிறதோ அங்கு மோதல் இருக்க முடியாது. சமஸ்கார இணைப்பு தானே ஏற்படும்.

6. மனதில் எந்த எண்ணம் தோன்றினாலும் அதில் உண்மையும் தூய்மையும் இருக்க வேண்டும். உள்ளே எந்தவித தீவினைகளின் குப்பைகளும் இருக்கக்கூடாது. எந்த விதமான சுபாவ வேற்றுமை அல்லது பழைய சமஸ்காரங்களின் குப்பைகளும் இருக்கக்கூடாது. யார் இந்த அளவு தூய்மையாக இருக்கிறாரோ, அவர் நல்லவராக இருப்பார், மேலும் யார் நல்லவராக இருக்கிறாரோ, அவர் எல்லோருக்கும் பிடித்தவராக இருப்பார். எல்லோருக்கும் பிரியமானவர் ஆகிவிட்டால் சமஸ்காரங்கள் இணையும் ராஸநடனம் ஆடப்படும். உண்மையாக இருப்பவர் மீது பிரபு மகிழ்சி அடைவார்.

7. சமஸ்காரங்கள் இணையும் ராஸநடனம் ஆடுவதற்கு தனது நேச்சரை ஈஸியாகவும் சுருசுருப்பாகவும் வைத்திருங்கள். ஈஸி என்றால் தனது முயற்சியில், சமஸ்காரத்தில் சுமை இருக்கக்கூடாது. ஈஸியாக இருந்தால் சுருசுருப்பாக இருப்பீர்கள். ஈஸியாக இருப்பதன்மூலம் எல்லா காரியங்களும் ஈஸியாக நடக்கும், முயற்சியும் ஈஸியாகிவிடும். தானே ஈஸியாகவில்லை என்றால் கஷ்டங்களை சமாளிக்க வேண்டியது வரும். பின்னர் தனது சமஸ்காரங்கள், தனது பலவீனங்கள் எல்லாம் பார்ப்பதற்கு கடினமாகத் தெரியும்.

8. எப்போது நீங்கள் ஒவ்வொருவருடைய விசேசத்தையும் பார்க்கிறீர்களோ அப்போதே சமஸ்காரங்கள் இணையும் ராஸநடனம் அரங்கேறும். அத்துடன் தன்னை விசேச ஆத்மா என உணர்ந்து விசேசங்களால் நிறைக்க வேண்டும். இது என்னுடைய சமஸ்காரம் இது என்னுடைய சமஸ்காரம் என்ற வார்த்தையே இல்லாமல் போய்விடவேண்டும். தனது குணமே மாறிவிடும்படி பழையது எல்லாம் விட்டுப் போய்விட வேண்டும். எப்போது ஒவ்வொருவருடைய குணமும் மாறிவிடுகிறதோ அப்போது உங்களுடைய அவ்யக்த சித்திரத்தை உருவாக்குவீர்கள்.

9. பாப்தாதா குழந்தைகளை உலக மகாராஜாக்களாக உருவாக்கும் கல்வி கற்பிக்கிறார். உலக மகாராஜாவாக ஆகக்கூடியவர்கள் எல்லோரிடமும் அன்பாக இருப்பார்கள். எப்படி பாபா எல்லோருக்கும். சினேகியோ மேலும் எல்லோரும் பாபாவுக்கு். சினேகியோ, அதைப்போல ஒவ்வொருவரும் தங்கள் உள்ளத்திலிருந்து அவர்களுக்கு அன்பின் மலர் தூவுவார்கள். எப்போது இங்கே அன்பின் மலர் தூவுகிறார்களோ அப்போது அங்கே உங்கள் ஜடமூர்த்திகள் மீதும் மலர் தூவுவார்கள். எனவே அனைவரது அன்பின் மலர்களுக்கு பாத்திரமாக வேண்டும் என்ற இலட்சியம் கொள்ளுங்கள். உதவி செய்வதன் மூலமாக அன்பு கிடைக்கும்.

10. தனது நடத்தை மூலமாக யாருக்கும் ஒருபோதும் துன்பம் நேரிடக்கூடாது என்ற இலட்சியம் எப்போதும் இருக்கட்டும். எனது நடத்தை, எண்ணம், பேச்சு மற்றும் செயல் எல்லாம் சுகம் தருவதாக இருக்க வேண்டும். இதுவே பிராமண குலவழக்கம், இந்த வழக்கத்தை தனது வாழ்வில் கடைப்பிடித்தால் சமஸ்காரங்கள் இணையும் ராஸநடனம் அரங்கேறிவிடும்.

11. குணத்தில் இனிமை வந்த பிறகே சமஸ்காரங்கள் ஒன்றோடொன்று சேருகிறது. பலவிதமான சமஸ்காரங்களின் காரணத்தாலேயே ஒருவர் பிறரிடமிருந்து விலகிச் செல்கிறீர்கள். ஆனால் வார்த்தையில் எப்போது இனிமை வருகிறதோ அப்போது சமஸ்காரங்கள் ஒன்று சேர ஆரம்பிக்கிறது. எப்போது சமஸ்காரங்கள் சந்திக்கும் சம்மேளனம் நடைபெறுகிறதோ அப்போது வெற்றி முழக்கம் ஏற்படும்.

12. சமஸ்காரங்களை ஒருங்கிணைப்பதற்காக உள்ளங்களை ஒன்று சேர்க்க வேண்டும். உள்ளங்கள் ஒன்று சேர்வதால் சமஸ்காரங்களும் ஒன்று சேரும். **சமஸ்காரங்களை ஒருங்கிணைக்க கொஞ்சம் விடவேண்டி இருக்கும், சில விசயங்களை மறக்க வேண்டி இருக்கும், சில விசயங்களை தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும்.**

13. சமஸ்காரங்கள் சந்திக்கும் ராஸநடனத்தை அரங்கேற்ற ஒருவர் மற்றவருடைய கருத்துகளை ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்பளிக்க வேண்டும். இதன் மூலமாகவே முழுமை, வெற்றி இரண்டுமே நெருங்கி வரும். ஒருவர் பிறருக்கு மரியாதை கொடுப்பதே வருங்கால அதிகாரத்தைப் பெறுவதாகும்.

14. யாருடைய சுபாவம் அல்லது சமஸ்காரத்தைக் கண்டும் ஒதுங்கிக் கொள்வது என்பது, கோபம் அல்லது வெறுப்பின் அடையாளமாகும். இதனுடைய ராயல் வார்த்தை யாதெனில் “தன் நிலையை கெடுத்துக்கொள்வதைவிட இவரிடம் இருந்து ஒதுங்கி இருப்பதே நல்லது” என்று சொல்வது. ஆனால் பற்றின்றி இருப்பது வேறு, ஒதுங்கி இருப்பது என்பது வேறு. அன்புடனும், பற்றற்றும் இருப்பது சரி. ஆனால் சூட்சும வெறுப்புணர்வில் - “இவர் இப்படித்தான், இவர் மாறவே மாட்டார்” என சதாகாலத்திற்கு அவரை சபிக்கிறீர்கள். தன்னைக் காத்துக் கொள்ளுங்கள் ஆனால் பிறருக்கு முடிவாக சர்டிபிக்கேட் தராதீர்கள்.

15. “நான் என்னை மாற்றிக்கொள்ள வேண்டும்” என்பதை எப்போதும் நினைவில் இருத்துங்கள். இடத்தை அல்லது நபரை மாற்ற வேண்டும் என்று நினைக்காதீர்கள். இதற்காக சகிப்புத்தன்மையின் அவதாரமாகிவிடுங்கள். அனுசரித்துச் செல்லுங்கள் ஆனால் ஒதுங்கி விடாதீர்கள். யாரேனும் உங்களுக்கு முற்றிலும் விரோதமாக இருந்தாலும், அவர் மீதும் தனது சுபபாவனையில் முழு ஆற்றலோடு முயற்சி செய்யுங்கள். நேரம் பிடிக்கும் எனினும் வெற்றி கிடைத்தே தீரும் மேலும் அது உங்களை வெற்றி மாலையின் மணியாக்கிவிடும்.

# 17. சிறந்த சுயமரியாதையுடைய, மரியாதை தரும் வள்ளலாகுங்கள்

1. தன்னை சிறந்த சுயமரியாதை உடைய ஆத்மா என உணர்ந்து, சுயமரியாதையில் நிலைத்திருந்தால்:, சுயமரியாதையானது தேக உணர்வை மறக்கச் செய்துவிடும். அரை கல்பம் தேக உணர்விலேயே இருந்தீர்கள் மேலும் இந்த தேகஉணர்வின் காரணத்தால் அற்பகால மரியாதைக்கு பிச்சைக் காரர்களாக இருந்தீர்கள். இப்போது பாபாவந்து உங்களை சுயமரியாதை உடையவராக மாற்றியிருக்கிறார். எனவே அந்த சுயமரியாதையில் எப்போதும் நிலைத்திருங்கள், இந்த சுயமரியாதையானது எல்லா ஆசைகளையும் எளிதில் நிறைவேற்றிவிடும்.

2. **சுயமரியாதை உடையவர்கள் எப்போதும் கவலையற்ற ராஜாக்களாக இருப்பார்கள், எல்லா பிராப்திகளின் சொரூபமாக இருப்பார்கள். அவர்களுக்கு இல்லாதது என்றால் என்னவென்றே தெரியாது.** சுயமரியாதை உடையவர்கள் எப்போதும் பாபாவின் இதய சிம்மாசனத்திலேயே இருக்கிறார்கள், ஏனென்றால் கவலையற்ற ராஜாக்களாக இருக்கிறார்கள். எந்தவிதமான கவலைகளும் அவர்களுக்கு ஏற்படவே முடியாது.

3. பாபா எப்படி சதா சுயமரியாதையில் நிலையாக இருக்கிறாரோ, அதேபோல சமமான ஆத்மாக்களும் சுயமரியாதையிலேயே இருப்பார்கள், கீழே வரமாட்டார்கள். ஒவ்வொரு அடியும் சுயமரியாதையின்படியே இருக்கும். அப்படிப்பட்ட சுயமரியாதை உடையவர்கள் பாபாவிற்கு சமமானவர்கள். சுயமரியாதையே அவர்களுடைய சிம்மாசனமாக இருக்கும். எதிர்கால சிம்மாசனத்திற்கு முன்னதாக சுயமரியாதை என்ற சிம்மாசனத்தில் எப்போதும் உறுதியாக அமருங்கள். சிம்மாசனத்தை விட்டு ஒருபோதும் கீழே வராதீர்கள்.

4. யாராவது முயற்சியாளர் தனது பலவீனத்தால், அல்லது சோம்பலின் காரணத்தால் கீழே விழுந்து விட்டால், அதாவது தனது சுயநிலையில் இருந்து கீழே வந்துவிட்டால், அப்போதும் சுயமரியாதையுடைய புண்ணிய ஆத்மாக்களாகிய உங்களது வேலை யாதெனில், விழுந்து விட்டவர்களை தூக்கி விடுவதாகும், உதவி செய்வதாகும். தான் செய்த காரியத்திற்குப் பலனை அனுபவிக்கிறார்கள், செய்தால் அதன் பலனை அனுபவிக்கத் தானே வேண்டும் என்று சுயமரியாதையில் உள்ளவரின் எண்ணத்தில்கூட தோன்ற முடியாது. இதுகூட ஆணவம் அல்லது அகந்தையின் அம்சமாகும், அது சுயமரியாதை உடையவரிடம் இருக்க முடியாது.

5. இந்தக் காலத்தில் உலகில்கூட பதவியின் மூலம் மரியாதை கிடைக்கிறது. ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால், அவரது பதவி பெரியதாக இருப்பதால் மரியாதையும் அதுபோலவே கிடைக்கிறது. அதுபோல குழந்தைகள் நீங்களும் சுயமரியதையின் மூலமாகவே உலக மகாராஜன் ஆகப் போகிறீர்கள், மேலும் நீங்கள் இந்த சுயமரியதையின் காரணத்தால் உலகம் உங்களுக்கு மாயாதை செலுத்தும். அதனால் உங்கள் சுயமரியாதையில் மட்டும் நிலையாக இருங்கள். அப்போது எல்லாப் பிராப்திகளும் கிடைத்துவிடும்.

6. ஒருவர் சிறியவரோ பெரியவரோ, மகாரதியோ, காலாட் படையோ ...... எல்லோரையும் மரியாதைக்குரியவர் என்று பாருங்கள். மரியாதை தராதவருக்கும் மரியாதை கொடுங்கள், ஒதுக்குபவருக்கும் எட்ட வேண்டிய இலக்கை காட்டுங்கள், இகழ்பவருக்கும் புகழ் பாடுங்கள், அப்போதே அனைவருக்கும் மரியாதை அளிப்பவர் என உங்களைச் சொல்ல முடியும். இப்படி மரியாதை அளிப்பவர் அனைவருடைய மரியாதையையும் பெறுவார்கள்.

7. மனம், சொல், செயல் மூன்றிலும் எதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றால் முதலாவது, எப்போதும் சுயமரியாதையில் இருக்க வேண்டும். இரண்டாவது, ஒவ்வொரு அடியும் பாபாவின் கட்டளைப்படி நடக்க வேண்டும். மூன்றாவது, அனைவரது தொடர்பில் வரும்போது பிறருக்கு மரியாதை கொடுக்க வேண்டும். ஆனால் யார் எப்போதும் பணிவாக இருக்கிறாரோ அவரே அப்படிப்பட்ட மரியாதை அளிக்கும் வள்ளலாக முடியும். **மரியாதை பெற வேண்டும் எனற ஆசையை கடந்த நிலையில் இருப்பதால், அவர்கள் அனைவரிடமிருந்தும் சிறந்த மரியாதையைப் பெற பாத்திரமாகிவிடுகிறார்கள் - இதுவே அனாதி நியமம் ஆகும்.**

8. சதா தனது சிறந்த சுயமரியாதையில் நிலைத்து இருந்து, பணிவோடு அனைவருக்கும் மரியாதை கொடுத்தால், இந்த கொடுப்பதே பெறுவதாகிவிடும். மரியாதை அளிப்பது எனறால் அந்த ஆத்மாவிற்கு ஊக்க உற்சாகம் கொடுத்து முன்னேற்றுவது ஆகும். எனவே எப்போதும் சுயமரியாதையிலேயே இருங்கள் மேலும் அனைவருக்கும் மரியாதை கொடுத்துக்கொண்டே இருங்கள்.

9. எப்படி யாராவது பெரிய ஆபீசர் அல்லது ராஜா தனது சுயமரியாதையின் இருக்கையில் நிலைத்து இருந்தால் மற்றவரும் அவருக்கு மரியாதை அளிக்கிறார்கள். ஒருவேளை தான் அந்த இருக்கையில் இல்லை என்றால் அவரது கட்டளையை யாரும் ஏற்க மாட்டார்கள். அதேபோல எதுவரைக்கும் நீங்கள் உங்கள் சுயமரியாதையின் இருக்கையில் இல்லையோ அதுவரை மாயாவும் உங்கள் முன் அடிபணிய முடியாது. ஏனெனில் இவர் தனது இருக்கையில் இல்லை என்பதை அது அறிந்திருக்கிறது. இருக்கையில் செட்டாவது என்றால் தன்னை மாஸ்டர் சர்வசக்திவான் என்று உணர்வதாகும்.

10. தனது ரெக்கார்டை சரியாக வைத்திருப்பதற்காக அனைவருக்கும் மரியாதை கொடுக்க வேண்டும். எந்த அளவு அனைவருக்கும் மரியாதை அளிக்கிறீர்களோ அந்த அளவு தனது ரெக்கார்டை சரியாக வைத்திருக்க முடியும். பிறர் மீது மரியாதை கொள்வது என்றால் தனது ரெக்கார்டை உருவாக்குவதாகும். எப்படி யஞ்யத்திற்கு உதவி செய்வதே உதவி பெறுவதாக இருக்கிறதோ, அதேபோல மரியாதை அளிப்பதே மரியாதை பெறுவதாகும்.

11. எந்த குழந்தைகள் இந்த ஒரு பிறவியில் சுயமரியாதை உடையவராக இருக்கிறார்களோ, அவர்களுக்கு கல்பம் முழுவதும் மரியாதை கிடைகிறது. அவர்கள் தனது ராஜ்யத்திலும் ராஜ்ய-அதிகாரம் பெற்றிருக்கும் காரணத்தால் பிரஜைகள் மூலமாக மரியாதை பெறுகிறார்கள் மேலும் அரை கல்பம் பக்தர்கள் மூலமாக மரியாதை பெறுகிறார்கள். தற்சமயம் பாபா தானே குழந்தைகள் உங்களுக்கு சுயமரியாதை கொடுத்திருக்கிறார். அதனால் அழிவற்ற மரியாதைக்கு அதிகாரியாகிவிட்டீர்கள். சுயமரியாதையில் இருப்பது மற்றும் மரியாதை கொடுப்பது இவ்விரண்டிற்கும் இடையே சம்பந்தம் உள்ளது.

12. **சுயமரியாதை உடைய குழந்தைகள் தான் பெற்ற சுயமரியாதையின் உணர்விலேயே இருக்கிறார்கள், மேலும் பிறரையும் மரியாதையோடு பார்க்கிறார்கள்**, பேசுகிறார்கள் அல்லது தொடர்பில் வருகிறார்கள். பாபா எப்படி உலகில் உள்ள அனைத்து ஆத்மாக்களிடம் இருந்தும் மரியாதை பெறுகிறார். அனைத்து குழந்தைகளுக்கும் அவ்வளவு மரியாதை கொடுத்திருக்கிறார் அதனால் அனைவரிடம் இருந்தும் மரியாதை கிடைக்கிறது. யார் தருவதில்லையோ அவர்கள் தேவதைகளாகவும் ஆவதில்லை.

13. மரியாதை அளிப்பவர் தன்னை இகழ்பவரையும் தனது நண்பராக உணர்கிறார். மரியாதை தருபவரை மட்டும் தன்னுடையவராக நினைப்பதில்லை ஆனால் இகழ்பவரையும் தன்னுடையவராக நினைக்கிறார். ஏனெனில் முழு உலகமே தன்னுடைய குடும்பமாகும். எல்லா ஆத்மாக்களுக்கும் அடிமரமாக இருப்பவர்கள் பிராமணர்கள் நீங்களே. இந்த கிளைகள் அதாவது பல்வேறு தர்மத்தின் ஆத்மாக்களும் அடிமரத்திலிருந்தே தோன்றி இருக்கிறார்கள். எனவே எல்லோரும் உங்களுடையவர்களே என்பதை உணர்ந்து மதிப்பளியுங்கள்.

14. எப்போதும் தான் மாஸ்டர் படைப்பவர் என்ற சுயமரியாதையோடு எல்லோருக்கும் மரியாதை வழங்கும் வள்ளல் ஆகுங்கள். எப்போதும் தன்னை ஆதிதேவன் பிரம்மாவின் ஆதிரத்தினம், ஆதிபாகமுடைய ஆத்மா என்று உணருங்கள். பிரம்மா பாபா சிறியவர், பெரியவர், இளைஞர், தனக்கு சமமானவர் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக மதிப்பளித்தார். அதே போல தந்தையைப் பின்பற்றுங்கள்.

# 18. வெற்றி மூர்த்தி ஆகுங்கள்

1. தற்போதய நேரத்தில் **சேவையில் வெற்றி பெறுவதற்கான சகஜ சாதனம் - உணர்வுகள் மூலமாக வாயுமண்டலத்தை உருவாக்குவதாகும்.** இன்றைய ஆத்மாக்களுக்கு தனது சுய முயற்சியின் மூலமாக முன்னேறுவது கடினமாக இருக்கிறது, அதனால் தனது எண்ண அலைகள் மூலமாக வாயுமண்டலத்தை அவ்வளவு சக்தி நிறைந்ததாக உருவாக்குங்கள் அதன்மூலம் ஆத்மாக்கள் தாமே கவரப்பட்டு வந்து விடுவார்கள்.

2. புத்தி எதைத் தீர்மானித்தாலும் அது ஸ்ரீமத்திற்கு அனுகூலமாக இருக்க வேண்டும், ஸ்ரீமத்தைத் தவிர வேறு எதுவும் புத்தியில் வரக்கூடாது. புத்தியில் எப்போதும் பாபாவின் நினைவு இருக்குமானால், தனது நிர்ணயம் தானாகவே சத்தியமாகவும், வெற்றிதரக்கூடியதாகவும் இருக்கும். பணிவே சேவையின் வெற்றிக்கு சாதனமாகும். பணிவோடு வணங்குவது ஒன்றும் சிறுமையல்ல, ஆனால் வெற்றியின் பலனை முழுமை அடையச் செய்வதாகும்.

3. சேவையில் இருக்கும்போது சிலநேரம் பற்றின்றி இருக்கவேண்டும், சில நேரம் அன்பாக இருக்க வேண்டும் - இதன்மீது விசேச கவனம் செலுத்துங்கள். அன்பாக சேவை செய்யவில்லை என்றாலும் நல்லதல்ல, அதேசமயம் அன்பில் சிக்குண்டு சேவை செய்தாலும் அதுவும் சரியல்ல. எனவே அன்பாக சேவை செய்யுங்கள், ஆனால் பற்றற்ற நிலையில் நிலைத்து இருந்து சேவை செய்யுங்கள், அப்போது வெற்றி கிடைக்கும். ஒருவேளை முயற்சியின் கணக்குப்படி வெற்றி குறைவாகக் கிடைத்திருந்தால் அது அன்பாகவும், பற்றற்றும் இருக்க வேண்டிய சமநிலையில் சரியாக இல்லை என்பது நிச்சயம்.

4. சேவாதாரிகள் எப்போதும் வெற்றியின் சொரூபமாக இருப்பதற்காக பாபாவிற்குச் சமமாக வேண்டும். தந்தையைப் பின்பற்றுங்கள் என்ற ஒரு வாக்கியம் மட்டும் நினைவில் இருக்க வேண்டும். நீங்கள் எந்த செயல் செய்தாலும் அது பாபாவின் காரியமா என் செக் பண்ணுங்கள். அது பாபாவினுடையது என்றால் என்னுடையதாகவும் இருக்கிறது, பாபாவுடையது இல்லையென்றால் என்னுடையதும் இல்லை. இந்த சோதித்துப் பார்க்கும் உரைகல் எப்போதும் கூடவே இருந்தால், பாபா எப்படி எப்போதும் வெற்றி சொரூபமாக இருந்தாரோ அதேபோல நாமும் எப்போதும் வெற்றி சொரூபமாகிவிடுவோம்.

5. தியாகமும் தபஸ்யாவுமே சேவையின் வெற்றிக்கு ஆதாரமாக இருக்கிறது. ஒரு தந்தையைத்தவிர வேறு யாருமில்லை என்பதே ஒவ்வொரு நேரத்திலும் தபஸ்யாவாக இருக்கிறது, மேலும் நேரம் எப்படியோ, சூழ்நிலை எப்படியோ, மனிதர்கள் எப்படியோ அதற்குத்தக்கபடி தான் வளைந்து கொடுத்து தனக்கும் நன்மை செய்துகொண்டு பிறருக்கும் நன்மை செய்வதற்காக எப்போதும் ஈஸியாக இருக்க வேண்டும், சிலநேரம் தனது பெயரை தியாகம் செயய வேணடி வரும், சிலநேரம் சமஸ்காரங்ளை, சில நேரம் வீண் எண்ணங்களை, சிலவேளை ஸ்தூல அற்பகால சாதனங்களை ...... அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், நேரத்திற்குத் தக்கபடி தனது சிறந்த நிலையை உருவாக்க வேண்டும். அதாவது தான் வளைந்து கொடுக்க வேண்டும், இதையே தியாகம் என்று சொல்லப்படுகிறது. இந்த தியாகமும் தபஸ்யாவுமே சேவையின் வெற்றிக்கு ஆதாரமாகும்.

6. எந்த காரியம் செய்யும்போதும் டபுள்லைட் பரிஸ்தாவாகவோ அல்லது டிரஸ்டியாகவோ இருந்தால் வெற்றி கிடைத்துக்கொண்டே இருக்கும். உள்ளம் தூய்மையாக இருக்கும்போது வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும். உயர்ந்த எண்ணங்கள் நிச்சயமாக நிறைவேறியே தீரும். குழந்தைகளுடைய ஒரு உயர்ந்த எண்ணத்திற்கு ஆயிரம் சிறந்த எண்ணங்களின் பலன் பாபா மூலமாக கிடைத்து விடும். ஒன்றுக்கு ஆயிரம் மடங்கு கிடைத்துவிடும்.

7. அனைத்து பிராமணர்களுக்கும் ஒரே எண்ணம், இதுவே காரியத்தின் வெற்றிக்கு ஆதரமாகும். எந்தவொரு காரியத்திற்கும் எல்லோரது உதவியும் தேவைப்படுகிறது. கோட்டையின் ஒரு செங்கல் பலவீனமாக இருந்தாலும், கோட்டையே சாய்ந்துவிடக் கூடும். அதனால் சிறியவர், பெரியவர் எல்லோரும் இந்த பிராமண குடும்ப கோட்டையின் செங்கல்களாக இருக்கிறார்கள், எனவே எல்லோருடைய ஒருமித்த எண்ணத்தின் மூலமாக காரியத்தை வெற்றிகரமாக்க வேண்டும். இது என்னுடைய பொறுப்பு என்ற உணர்வு ஒவ்வொருவர் மனதிலும் எழ வேண்டும், அப்போது வெற்றி கிடைக்கும்.

8. தடைகள் எத்தனை வேண்டுமானாலும் வரட்டும், ஆனால் ஒரே பலம் ஒரே நம்பிக்கையின் ஆதாரத்தில் வெற்றி கிடைத்துக்கொண்டிருக்கிறது மேலும் கிடைத்துக் கொண்டே இருக்கும். எங்கே சர்வசக்திவான் பாபா துணையாக இருக்கிறாரோ, அங்கே இந்த சின்னச்சின்ன பிரச்சினைகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். நடக்க முடியாததும் நடந்துவிடும். ஏனெனில் சர்வசக்திவான் பாபாவின் குழந்தைகள் ஆகிவிட்டீர்கள். வெண்ணெயிலிருந்து முடியை எடுப்பது போல எல்லா விசயங்களும் நிறை வேறிவிடும்.

9. மனதில் சுப பாவனையால், வார்த்தையில் பாபாவோடு உறவை ஏற்படுத்தும் நல்லாசை நிறைந்த சிறந்த பேச்சால், மேலும் உறவு-தொடர்பில் வரும்போது அன்பு மற்றும் அமைதியின் சொரூபத்தால் பிறரை கவர்ந்து இழுங்கள். அப்போது அனைத்துவித சேவையின் மூலமாக வெற்றி பெறுவீர்கள். இப்போது அப்படிப்பட்ட திட்டம் தீட்டுங்கள்.

10. எங்கே ஒற்றுமை இருக்கிறதோ அங்கே வெற்றி எளிதில் கிடைக்கும். ஆனால் விழுவதில் ஒற்றுமையாக இருக்க வேண்டாம். சதா பறக்கும் கலைக்கு போக வேண்டும் மேலும் பிறரையும் கொண்டு செல்ல வேண்டும் - இதே இலட்சியம் இருக்க வேண்டும். எப்போதும் கீழ்படிந்து, உண்மையான உள்ளத்தோடு, ஒவ்வொரு அடியிலும் தந்தையைப் பின் பற்றுங்கள். அப்போது பாபாவின் குணங்களே குழந்தைகளின் குணங்களாக, பாபாவின் செயல்களே குழந்தைகளின் செயல்களாக, பாபாவின் சமஸ்காரங்களே குழந்தைகளின் சமஸ்காரங்களாக ...... இருக்கும். இதுவே வெற்றி மூர்த்தி ஆவதற்கான ஆதாரமாகும்.

11. தன்னை நிமித்தம் என்று உணர்ந்து நடந்துகொண்டால் எப்போதும் இலேசாகவும், வெற்றி மூர்த்தியாகவும் இருப்பீர்கள். சிலநேரம் சேவை குறைவாக இருக்கிறது, சிலநேரம் சேவை அதிகமாகி விடுகிறது என்றாலும் அது சுமையாகத் தோன்றக்கூடாது. என்னவாகுமோ! எப்படி நடக்குமோ! எனக் கவலைப்பட வேண்டாம். செய்ய வைப்பவர் செய்ய வைக்கிறார், நான் வெறும் கருவியாகி காரியங்களைச் செய்துகொண்டு இருக்கிறேன் - இந்த நினைவே வெற்றி மூர்த்தி ஆக்கிவிடும்.

12. இன்றைய உலகில் மனிதர்கள் காலில் சக்கரம் கட்டிக்கொண்டு ஓடுகிறார்கள், அது எவ்வளவு இலேசாக இருக்கிறது. அவர்களுடைய வேகம் கூடிவிடுகிறது. அதேபோல எப்போது பாபா நடத்துகிறாரோ, அப்போது **ஸ்ரீமத் என்ற சக்கரத்தை காலில் கட்டிக் கொள்வதால் தானாகவே முயற்சியின் வேகம் கூடிவிடும் அதோடு வெற்றியும் கிடைத்துக்கொண்டே இருக்கும்.**

13. வெற்றி பெறுவதற்காக தன்னிடத்தில் ஒரு ஆன்மீக தாயத்தை வைத்திருங்கள் -**மரியாதை தருவதே மரியாதை பெறுவதாகும்**. இந்த மரியாதை கொடுக்கும் ரெக்கார்டு, வெற்றிக்கான அழியாத ரெக்கார்டு ஆகிவிடும். **"முதலில் நீங்கள்"** என்ற இந்த ஒரே வெற்றி மந்திரம் எப்போதும் உங்கள் வாயில் இருக்க வேண்டும். யதார்த்த ரூபத்தில் "தான் முதலில்" என்பதை அகற்றிவிட்டு பிறரை முன்னேற்றுவதே தனது உண்மையான முன்னேற்றம் என்பதை உணர்ந்து நடந்து கொள்வதால் வெற்றி பெற்றுக் கொண்டே இருப்பீர்கள்.

14. எப்போதும் நாம் எல்லோரும் ஓர் குலம் என முழங்குவதே நமது வெற்றிக்கான சாதனமாகும். சமஸ்காரங்களை ஒருங்கிணைக்கும் ராஸ நடனம் ஆடுபவர்கள் எப்போதும், ஒவ்வொரு பிறவியிலும் சிறந்த ஆத்மாக்களின் கூட்டத்தில் ராஸ நடனம் ஆடிக்கொண்டே இருப்பார்கள். இங்கே சமஸ்காரங்கள் ஒன்று சேருகிறது என்றால், எதிர்காலத்தில் உயர்ந்த ஆத்மாக்களின் நண்பர்களாக அல்லது உறவினர்களாக ஆவீர்கள்.

15. ஒற்றுமையும் மன உறுதியுமே எளிதில் வெற்றி பெறுவதற்கான சாவியாகும். எங்கே அனேக சிறந்த ஆத்மாக்களுடைய ஒற்றுமையின் சக்தி ஒருங்கிணைந்த வடிவில் உள்ளதோ, அங்கு உயர்வோடும், தெளிவோடும் கூடவே வெற்றியும் அடங்கி இருக்கிறது. மனவுறுதியின் அடையாளம் வெற்றி. மனவுறுதி இருக்கும் இடத்தில் வெற்றி கிடைக்காமல் போவது என்பது சாத்தியமல்லாத ஒன்று.

# 19. ஆன்மீக ராயல்டி மற்றும் தூய்மையின் பர்சனாலிடியை தாரணை செய்யுங்கள்

1. சங்கமயுக பிராமண வாழ்வின் சிறப்பே தூய்மைதான். இல்லறத்தில் இருந்தபோதும் தூய்மையற்ற நிலையில் இருந்து விலகி இருக்க வேண்டும், கனவில்கூட தூய்மையற்ற எண்ணங்களில் இருந்து விடுபட்டு இருக்க வேண்டும் - இதுவே உலகிற்கு சவால் விடும் சாதனம், இதுவே பிராமணர்களாகிய உங்களது ஆன்மீக ராயல்டி மற்றும் பர்சனாலிடி.

2. தூய்மையின் ராயல்டி என்றால் ஒருவரின் விரதம் செய்தல் (ஒரு அப்பாவைத்தவிர வேறு யாரும் இல்லை). இந்த பிராமண வாழ்வில் சம்பூர்ண தூய்மை ஆவதற்காக ஒருவிரதையின் (விரதம) பாடத்தை நன்கு உறுதி செய்ய வேண்டும். உணர்வில் நல்லெண்ணங்களும், நல்லாசைகளும் இருக்க வேண்டும், பார்வை மூலமாக ஒவ்வொருவரையும் ஆத்மீக ரூபத்திலோ அல்லது பரிஸ்தா ரூபத்திலோ பார்க்க வேண்டும். செயல் மூலமாக ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சுகம் கொடுக்க வேண்டும் சுகம் பெற வேண்டும், யாராவது துன்பம் தந்தாலும், நிந்தித்தாலும், அவமதித்தாலும் நீங்கள் சகித்துக்கொள்ளும் தேவி, சகித்துக் கொள்ளும் தேவனாகிவிடுங்கள்.

3. வெறும் பிரம்மச்சரியம் மட்டும் தூய்மையல்ல, அது அஸ்திவாரமாக இருக்கிறது ஆனால் அதனோடு இன்னும் நான்கு இருக்கிறது. கோபம் மற்றும் அதன் கூட்டாளிகள் எதெல்லாம் இருக்கிறதோ, அந்த மகா பூதங்களின் தியாகம், கூடவே அதன் பாலகர்கள், சின்னச்சின்ன அம்சங்கள், வம்சங்கள் இருக்கிறதோ அவைகளையும் தியாகம் செய்யுங்கள், அப்போதே தூய்மையின் ஆன்மீக ராயல்டியை தாரணை செய்பவர்கள் என்று சொல்ல முடியும்.

4. தூய்மை பிராமணர்களாகிய உங்களுடைய மிகப் பெரிய அலங்காரமாக இருக்கிறது. சம்பூர்ண தூய்மை உங்கள் வாழ்வின் மிகப்பெரிய சொத்தாக இருக்கிறது, ராயல்டி மற்றும் பர்சனாலிடியாக இருக்கிறது. இதை கடைப்பிடித்து எவரெடியாகுங்கள் அப்போது இயற்கை தனது வேலையை துவக்கும்.

5. **பிரம்மாகுமார் என்றாலே எப்போதும் தூய்மையின் பர்சனாலிடி மற்றும் ராயல்டியில் இருப்பவர் என்று அர்த்தம்.** இந்த தூய்மையின் பர்சனாலிடி உலகில் உள்ள ஆத்மாக்களை தன்வசம் கவர்ந்து இழுக்கிறது, மேலும் இந்த தூய்மையின் ராயல்டி தர்மராஜபுரியில் ராயல்டி கொடுப்பதிலிருந்து விடுவிக்கிறது. இந்த ராயல்டிக்குத் தக்கபடி எதிர் காலத்தில் ராயல் குடும்பத்தில் வரமுடியும். எப்படி தேகத்தின் பர்சனாலிடி தேகஉணர்வை கொண்டு வருகிறதோ, அதே மாதிரி தூய்மையின் பாசனாலிடி ஆத்ம அபிமானியாக்கி பாபாவின் அருகில் கொண்டுவருகிறது.

6. மூச்சு விடுவது உடலில் முக்கிய செயலாக இருக்கிறது. மூச்சு இல்லையென்றால் வாழ்வு இல்லை, அதுமாதிரி பிராமண வாழ்வின் மூச்சாக இருப்பது தூய்மை. 21 ஜன்மங்களுக்கு பலன்பெற ஆதாரமாக இருப்பது தூய்மை. ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பிற்கு ஆதாரமாக இருப்பது தூய புத்தி. சங்கமயுக பலன்களை அடைவதற்கு ஆதாரமும், எதிர்காலத்தில் பூஜைக்குரிய பதவியை பெறுவதற்கு ஆதாரமும் தூய்மைதான். அதனால் தூய்மையின் பர்சனாலிடியை வரதான ரூபத்தில் தாரணை செய்யுங்கள்.

7. வரமளிக்கும் வள்ளல் மற்றும் வரம்பெறுபவர் இருவரின் சம்பந்தம், நெருக்கமாகவும் அன்பின் ஆதாரத்தில் நிரந்தரமாகவும் இருக்க வேண்டும், அதோடு **இணைந்த ரூபத்திலும் இருந்தால் தூய்மையின் குடைநிழல் தானாகவே இருக்கும்.** எங்கே சர்வசக்திவான் பாபா இருக்கிறாரோ அங்கே தூய்மையின்மை கனவில்கூட வரமுடியாது. எப்போது தனியாகிவிடுகீறீர்களோ அப்போது தூய்மையின் சுமங்கலி நிலை போய் விடுகிறது.

8. பிராமணர்களின் வாழ்க்கை, வாழ்வின் உயிர்தானம் தூய்மை. ஆதி-அனாதி சொரூபமே தூய்மைதான். நான் ஆதி-அனாதி தூய்மையான ஆத்மா என்ற நினைவு வந்து விட்டது. நினைவு வருவது என்றால், தூய்மையின் பலம் வருவது. நினைவு சொரூப, சக்திசொரூப ஆத்மாக்கள் உண்மையான தூய்மையின் சமஸ்காரமுள்ள ஆத்மாக்கள். எனவே உண்மையான சமஸ்காரத்தை வெளிப்படுத்தி இந்த தூய்மையின் பர்சனாலிடியை தாரணை செய்யுங்கள்.

9. தூய்மை என்பது பிராமண வாழ்வின் விசேச பிறவிக்கான விசேசமாகும். **தூய எண்ணங்கள் பிராமணர்களின் புத்திக்கு உணவு, தூய பார்வை பிராமணர்களின் கண்களுக்கு பார்வை, தூய செயல்கள் பிராமண வாழ்வின் விசேச தொழில். தூய சம்பந்தமும் தொடர்பும் பிராமண வாழ்வின் மரியாதை. அப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த பொருளை தன்னுடையதாக்க கஷ்டப்படாதீர்கள்,** வலுக்கட்டாயமாக கடைப் பிடிக்காதீர்கள், இந்தத் தூய்மையே உங்கள் வாழ்க்கைக்கு வரதானம்.

10. **உங்கள் சுய சொரூபம் தூய்மை, சுயதர்மம் அதாவது ஆத்மாவின் முதலாவது தாரணை தூய்மை. சுயதேசம் தூயதேசம், சுயராஜ்யம் தூய ராஜ்யம், சுயத்தின் நினைவுச் சின்னம் பரமபவித்ர பூஜைக்குரியவர். கர்மேந்திரியங்களின் அனாதி சுபாவம் நற்செயல், இவைகளை எப்போதும் நினைவில் கொண்டாலே சிரமம் மற்றும் வலுகட்டாயத்தில் இருந்து அகன்று விடுவீர்கள்**, அவ்வளவுதான்.

11. தூய்மையின் சக்தி பரமபூஜைக்கு உரியவர் ஆக்குகிறது. தூய்மையின் சக்தியால் இந்த பாவம் நிறைந்த உலகை மாற்றி அமைக்கிறீர்கள். தூய்மையின் சக்தி விகாரங்களின் தீயில் வெந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களை குளிர்ச்சி அடையச் செய்கிறது. ஆத்மாக்களை அனேக ஜென்ம கெட்ட செயல்களின் பந்தனத்தில் இருந்து விடுவிக்கிறது. தூய்மையின் ஆதாரத்தில் துவாபர யுகத்தில் இருந்து இந்த உலகமானது கொஞ்சம் கொஞ்சம் தாங்கப்படுகிறது. இதன் மகத்துவத்தை அறிந்து தூய்மையின் ஒளிகிரீடத்தை தாரணை செய்யுங்கள்.

12. தற்போதய நேரத்திற்குத் தக்கபடி பரிஸ்தாவாகும் நிறைந்த நிலைக்கு அல்லது பாபாவிற்கு சமமாகும் நிலைக்கு அருகில் வந்து கொண்டிருக்கிறீர்கள். அதற்குத் தக்கபடி தூய்மையின் விளக்கமும் மிக சூட்சுமாகிக்கொண்டே போகிறது. வெறும் பிரம்மச்சாரியாவது மட்டுமே தூய்மையாகாது, ஆனால் பிரம்மச்சாரியாக இருப்பதோடு கூடவே பிரம்மா பாபாவின் ஒவ்வொரு செயல்வடிவ அடி மீது அடி வைக்கக்கூடிய பிரம்மாச்சாரி ஆகவேண்டும்.

13. தூய்மை, சுகம் மற்றும் அமைதியின் தாயாக இருக்கிறது. எங்கே தூய்மை இருக்கிறதோ அங்கே துக்கம் அமைதியின்மை வரமுடியாது. எனவே எப்போதும் சுகத்தின் படுக்கையில் சௌகரியாமாக, அதாவது அமைதி சொரூபத்தில் நிலைத்து இருக்கிறீர்களா? உள்ளே ஏன், என்ன, எப்படி என்ற குழப்பங்கள் ஏற்படுகிறதா, அல்லது குழப்பத்தில் இருந்து விலகிய சுகசொரூப நிலை இருக்கிறதா? எனச் செக் பண்ணுங்கள்.

14. யார் தூய்மையின் பர்சனாலிடியால் நிறைந்த ராயல் ஆத்மாக்களாக இருக்கிறார்களோ அவர்களை பண்பின் தேவி என்று சொல்கிறார்கள். அவர்களுடைய பேச்சு, பார்வை, நடத்தை, உணவு, அமர்வது-எழுவது என ஒவ்வொரு செயலிலும் பண்பும் சத்தியமும் தெரியும்.

15. ஆன்மீக ராயல்டியின் அஸ்திவாரம் சம்பூர்ண தூய்மையாகும். அதனால் ஆன்மீக ராயல்டியின் ஜொலிப்பு மற்றும் போதை உங்கள் தோற்றத்தில் அல்லது வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் அனுபவமாகிறதா? எனத் தன்னைத்தானே கேளுங்கள். எனது முகத்தில், நடத்தையில் அந்த ஆன்மீக ராயல்டி தெரிகிறதா அல்லது சாதாரண நடத்தை மற்றும் முகம் தெரிகிறதா? என்று ஞானத்தின் கண்ணாடியில் தன்னைப் பாருங்கள்.

# 20. பாபாவிற்குச் சமமாக உருவற்ற (நிராகாரி), அகந்தையற்ற (நிர்அகங்காரி), விகாரமற்றவர்கள் (நிர்விகாரி) ஆகுங்கள்.

1. பிரம்மா பாபாவின் இந்த கடைசி மூன்று வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள் - உருவற்ற, அகந்தையற்ற, விகாரமற்றவர். எண்ணத்தில் எப்போதும் உறுவமற்று, எல்லோரிடமிருந்தும் விலகி பாபாவிடம் அன்பாக, வார்த்தையில் எப்போதும் அகந்தையின்றி, அதாவது சதா ஆன்மீக இனிமையும் பணிவும் நிறைந்தவராக மேலும் செயலில் ஒவ்வொரு கர்மேந்திரியத்தின் மூலமாக விகாரமற்ற அதாவது தூய்மையின் பர்சனாலிடி உடையவராக ஆகுங்கள்.

2. நான் உருவற்ற ஆத்மா, இந்த உருவின் ஆதாரத்தில் பேசுகிறேன் என்று பயிற்சி செய்யுங்கள். உருவிலும் உருவற்ற நிலை நினைவில் இருக்க வேண்டும் - இதையே உருவற்ற நிலையில் இருந்து உருவின் மூலமாக பேச்சு அல்லது செயலில் ஈடுபடுவது என்று சொல்லப்படுகிறது. உண்மையான சொரூபம் உருவற்றது, உருவம் ஆதாரமாக இருக்கிறது. இந்த டபுள் நினைவான "உருவற்றதில் இருந்து உருவம்" என்பது சக்திசாலி நிலையாகும்.

3. தனது உண்மையான உருவற்ற சொரூபத்தை நினைவில் கொண்டால், அந்த சொரூபத்தின் உண்மையான குணங்கள், சக்திகள் எல்லாம் தானே வெளிவரும். சங்கமயுகத்தில் உருவற்ற பாபாவிற்குச் சமமாக கர்மாதீத், உருவற்ற நிலையை அனுபவம் செய்யுங்கள் பின்னர் எதிர்கால 21 பிறவிகள் பிரம்மா பாபாவிற்குச் சமமாக சர்வ குணங்களும் நிறைந்த, சம்பூர்ண விகாரமற்ற சிறந்த வாழ்விற்கு ஈடான வாழ்வை அனுபவம் செய்துகொண்டே இருப்பீர்கள்.

4. நான் குழந்தையாகவும் எஜமானனாகவும் இருக்கிறேன் என்ற நினைவு எப்போதும் அகந்தையற்ற, உருவற்ற நிலையை அனுபவம் செய்ய வைக்கிறது. குழந்தையாவது என்றால் எல்லைக்குட்பட்ட வாழ்வில் மாற்றம் கொண்டு வருவதாகும். எப்போது பிராமணன் ஆனீர்களோ, அப்போது பிராமண வாழ்வில் முதலாவதாக படித்த மிக எளிய பாடம் - குழந்தைகள் சொன்னீர்கள் "அப்பா", பிறகு பாபா சொன்னார் "குழந்தாய்". இந்த ஒரு வார்த்தையின் பாடம் உங்களை ஞானம் நிறைந்தவர் ஆக்கிவிட்டது.

5. சேவையில் நிமித்த உணர்வே, சேவையின் வெற்றிக்கு ஆதாரமாகும். உருவற்ற, விகாரமற்ற, அகந்தையற்ற நிலை - இந்த மூன்று விசேச நிலைகளும் நிமித்த உணர்வின் மூலமாக தானே வருகிறது. நிமித்த உணர்வு இல்லையென்றால், அனேகவிதமான நான், எனது என்பவைகள் வந்து சேவையில் தொய்வை ஏற்படுத்திவிடுகிறது. அதனால் நான் என்பதும், எனது என்பதும் கூடாது. நான் நிமித்தமானவன் என்பது மட்டும் நினைவில் இருக்க வேண்டும். நிமித்தமாவதன் மூலமாகவே, உருவற்ற, அகந்தையற்ற மேலும் பணிவான, எண்ணமற்ற நிலையில் இருக்க முடியும்.

6. எப்படி நிமித்தமாவதன் மூலமாக உருவற்ற, அகந்தையற்ற, எண்ணமற்ற நிலை ஏற்படுகிறதோ அதேபோல நான், நான் என்பது வரும்போது ஆணவம், வாட்டம், கவலை எல்லாம் வந்துவிடுகிறது. முடிவைப் பார்த்தால் அப்படிப்பட்டவர்கள் போகப்போக உயிரோடு இருக்கும்போதே இறந்து விடுகிறார்கள். அதனால் நான் நிமித்தமானவன் என்ற முக்கிய அறிவுரையை எப்போதும் கூடவே வைத்திருங்கள். நிமித்தமாவதன் மூலமாக எந்தவொரு அகங்காரமும் உற்பத்தியாகாது. கருத்து வேற்றுமையின் சக்கரத்திலும் சிக்கிக்கொள்ள மாட்டீர்கள்.

7. எவ்வளவு உருவற்ற நிலையில் இருக்கிறீர்களோ அவ்வளவு பயமின்றி இருப்பீர்கள், ஏனெனில் பயமானது உடல் உணர்வினால் வருகிறது. எனவே பயமின்மை என்ற குணத்தை தாரணை செய்வதற்காக உருவற்றவர் ஆகுங்கள். எந்த அளவு உருவற்ற மற்றும் விலகிய நிலையில் இருக்கிறீர்களோ அந்த அளவு யோகத்தில் புள்ளிவடிவ நிலையை அனுபவம் செய்வீர்கள் மேலும் நடந்தாலும் சுற்றினாலும் அவ்யக்த நிலையில் இருப்பீர்கள்.

8. எப்படி உடலின் கை கால்களை உங்கள் விருப்பப்படி செயல்படச் செய்கிறீர்களோ, அதேபோல ஒரு நொடியில் உடல் உணர்வில் இருந்து உருவற்ற நிலைக்கு அதாவது தனது உண்மையான உருவற்ற சொரூபத்தில் நிலையாக இருப்பதற்கான பயிற்சி செய்தீர்கள் என்றால் அகங்காரம் வராது. அகங்காரம் உங்களை அலங்கோலமாக்கி விடுகிறது.

9. யார் அகந்தையற்று, உருவற்று பின்னர் அலங்கரிக்கப்பட்ட நிலையில் நிலைத்து இருக்கிறார்களோ, அவர்கள் அனைத்து ஆத்மாக்களுக்கும் நன்மை செய்பவர் ஆக முடியும். மேலும் யார் எல்லோருக்கும் நன்மை செய்பவர் ஆகிறார்களோ அவர்களே உலக ராஜ்யத்திற்கு அதிகாரியாகிறார்கள்.

10. எப்போது, உடலில் இருந்தபோதும் உருவற்ற நிலையில் இருப்பீர்களோ அப்போதே காட்சிதரும் மூர்த்தி ஆவீர்கள். எப்படி அனேக ஜென்மங்கள் தனது தேக சொரூபத்தின் நினைவு இயற்கையாக இருக்கிறதோ, அதேபோல தனது உண்மையான சொரூப நினைவின் அனுபவமும் நீண்டகாலம் இருக்க வேண்டும். எப்போது இந்த முதல்பாடம் முடிவடைகிறதோ, ஆத்ம அபிமானி நிலையில் இருக்கிறீர்களோ, அப்போது அனைத்து ஆத்மாக்களுக்கும் காட்சியளிக்க நிமித்தமாவீர்கள்.

11. ஒன்று உருவற்ற ஆத்ம அபிமானி அல்லது ஆத்ம அபிமானி ஆவதற்கான குறிக்கோள், இரண்டாவது விகாரமற்ற நிலை அதில் மனதையும் விகாரமற்ற நிலை உடையதாக ஆக்க வேண்டும். எப்படி நாள் முழுவதும் யோகியாகவும், தூய்மையாகவும் இருக்க முயற்சி செய்கிறீர்களோ, அதேபோல விகாரமற்றும், உடலற்றும் இருப்பதற்கான குறிக்கோள் உங்கள் முன் இருக்க வேண்டும் அப்போது பரிஸ்தா அல்லது கர்மாதீத்நிலை உருவாகும். பிறகு எவ்வித அசுத்தங்களும் அதாவது ஐந்து தத்துவங்களின் கவர்ச்சியும் கவர்ந்து இழுக்காது.

12. சம்பூர்ண உருவற்ற, அகந்தையற்ற, விகாரமற்ற நிலையில் நிலைத்துவிடு என்று அவ்வப்போது தன் மனதிற்கு கட்டளையிடுங்கள். எனது, உனது, மானம் மரியாதை முதலியவைகளின் அம்சம்கூட இருக்கக் கூடாது. அம்சம் இருந்தாலும் அது வம்சமாகிவிடும். அதனால் எண்ணத்தில்கூட எந்த விகாரத்தின் அம்சமும் இருக்கக்கூடாது, அப்போது இந்த மூன்று நிலைகளும் வரும் பின்னர் அந்த பிரபாவத்தின் மூலமாக யார் வாரிசாக அல்லது பிரஜையாக வரவேண்டுமோ அவர்கள் சீக்கிரமாக வந்துவிடுவார்கள், விரைவான சேவை தெரியவரும்.

13. தற்போது தனது உருவற்ற வீட்டிற்குச் செல்ல வேண்டும் அதற்கு தேசம் எப்படியோ அதற்குத்தக்க தனது வேசத்தைப் போடவேண்டும். எனவே திரும்பிப்போக வேண்டும், அனைவரையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே இப்போது விசேச முயற்சியாக இருக்க வேண்டும். இந்த நினைவின் மூலமாக தானாகவே சர்வ சம்பந்தங்கள், சர்வ இயற்கையின் கவர்ச்சிகளில் இருந்து மேலே அதாவது சாட்சியாகி விடுவீர்கள். சாட்சியாவதன் மூலம் எளிதாக பாபாவிற்கு துணையாகவும், பாபாவிற்கு சமமாகவும் ஆகிவிடுவீர்கள்.

14. இடையிடையே நேரம் ஒதுக்கி, இந்த தேக உணர்வில் இருந்து விலகி உருவற்ற ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி செய்யுங்கள். எந்த காரியம் வேண்டுமானாலும் செய்யுங்கள், காரியம் செய்யும்போதும் நான் உருவற்ற ஆத்மா இந்த உடலின் கர்மேந்திரியங்களின் ஆதாரத்தில் காரியங்களைச் செய்ய வைக்கிறேன் என்று பயிற்சி செய்யுங்கள். உருவற்ற நிலை செய்ய வைக்கும் நிலை, கர்மேந்திரியங்கள் செய்பவை, ஆத்மா செய்ய வைப்பவர். எனவே உருவற்ற ஆத்மநிலை மூலமாக உருவற்ற பாபாவின் நினைவு தானாகவே வரும்.

# 21. நினைவை ஜுவாலை சொரூபமாக்குங்கள்

1. எப்போது உங்கள் நினைவு ஜுவாலை சொரூபமாக இருக்கிறதோ அப்போதே பாபாவிற்குச் சமமாக பாவகடேஷ்வரர் அல்லது பாவத்தைப் போக்குபவர் ஆக முடியும். அப்படிப்பட்ட நினைவே உங்களுடைய தெய்வீகக் காட்சிதரும் மூர்த்தியை பிரத்தியட்சம் செய்யும். அதற்காக **எந்த நேரத்திலும் சாதாரண நினைவு இருக்கக்கூடாது. எப்போதும் ஜுவாலை சொரூப, சக்தி சொரூப நினைவில் இருக்க வேண்டும். அன்போடு கூடவே சக்தி ரூபமும் இணைந்து இருக்க வேண்டும்.**

2. வாயுமண்டலம் உருவாக்கப்படும் மேலும் பலமற்ற ஆத்மாக்கள் சக்தி நிறைந்தவர் ஆகிவிடுவார்கள். எல்லா தடைகளும் எளிதில் அழிந்து விடும் பின்னர் பழைய உலக அழிவின் ஜுவாலை பரவத் தொடங்கிவிடும்.

3. சூரியன் உலகிற்கு வெளிச்சம் தருவதோடு அனேக அழியக்கூடிய பலன்களையும் அனுபவம் செய்ய வைக்கிறது. அதேபோல, குழந்தைகள் நீங்கள் உங்கள் மகாதபஸ்வி ரூபத்தின் மூலமாக பலன்களின் கிரணங்களை அனுபவம் செய்ய வையுங்கள். அதற்காக முதலில் உங்கள் சேமிப்பை அதிகப்படுத்துங்கள். சூரியனின் கதிர்கள் நாலாபுறமும் பரவுவதைப்போல, நீங்கள் மாஸ்டர் சர்வசக்திவான் நிலையில் இருந்தால் உங்கள் சக்திகள் மற்றும் விசேசங்கள் வடிவிலான கிரணங்கள் நாலாபுறமும் பரவி அனுபவத்தை ஏற்படுத்தும்.

4. இப்போது வீடுதிரும்ப வேண்டும் மேலும் எல்லோரையும் கூடவே அழைத்துச் செல்லவும் வேண்டும் என்ற தீவிர ஆர்வம் எப்போதும் இருக்க வேண்டும். இதுவே ஜுவாலாரூபம் உடையவர் ஆவதற்கான முக்கிய மற்றும் எளிய முயற்சியாகும். இந்த நினைவின் மூலமாக தானாகவே சர்வ சம்பந்தங்கள், அனைத்துவித இயற்கையின் கவர்ச்சியிலிருந்து விலகி விடுவீர்கள் அதாவது சாட்சியாகிவிடுவீர்கள். சாட்சியாவதன் மூலம் சகஜமாக பாபாவிற்கு துணையாக அல்லது பாபாவிற்குச் சமமாக ஆகிவிடுவீர்கள்.

5. ஜுவாலா சொரூப நினைவு என்றால், லைட் ஹவுஸ் (ஒளி விளக்கம்) மைட் ஹவுஸ் (சக்தி விளக்கம்) நிலையை உணர்ந்து, அந்த நிலையில் இருப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். விசேசமாக ஞான சொரூபத்தின் அனுபவியாகி சக்திசாலி ஆகுங்கள். அதன்மூலம் **சிறந்த ஆத்மாக்களாகிய உங்களது சுப உணர்வுகள், நன்மை செய்யும் உணர்வுகள் மற்றும் சக்திசாலி சூழ்நிலை மூலமாக அனேக துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள், அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்கள், புகார் செய்து கொண்டிருக்கும் ஆத்மாக்கள் எல்லோருக்கும் ஆனந்தம், அமைதி மற்றும் சக்தியின் அனுபூதி ஏற்படும்.**

6. தீயில் எந்தப் பொருளை இட்டாலும் அதன் பெயர், உருவம், குணம் எல்லாம் மாறிவிடுகிறது, அதைப்போல பாபா நினைவு என்ற அன்பின் அக்கினியில் விழுவதால் நீங்கள் மாற்றமடைந்து விடுகிறீர்கள்! மனிதனிலிருந்து பிராமணனாகி பின்னர் பிராமணனில் இருந்து பரிஸ்தாவாகி அதிலிருந்து தேவதையாகிறீர்கள். எப்படி பச்சை மண்ணை அச்சில் வார்த்து தீயில் சுடும்போது அது செங்கல் ஆகிறதோ, அதேபோல இதுவும் மாறிவிடுகிறது. அதனால் இப்படிப்பட்ட நினைவையே ஜுவாலா ரூபம் என்று சொல்லப் படுகிறது.

7. சேவாதாரிகளாக இருக்கிறீர்கள், அன்பானவராக இருக்கிறீர்கள், ஒரே நம்பிக்கை, ஒரே பலத்தோடு இருக்கிறீர்கள், இதெல்லாம் சரிதான், ஆனால் மாஸ்டர் சர்வசக்திவானின் நிலை அதாவது லைட்ஹவுஸ் மைட்ஹவுஸின் நிலை மேடை மீது வரவேண்டும், நினைவு ஜுவாலை ரூபமாகிவிட்டால், எல்லோரும் உங்கள் முன்னே விட்டில் பூச்சிகளைப்போல சுற்றிவரத் தொடங்கி விடுவார்கள்.

8. ஜுவாலா சொரூப நினைவிற்காக மனம் புத்தி இரண்டிற்கும் ஒன்று பவர்புல் பிரேக் தேவை அதோடு வளைந்து கொடுக்கும் சக்தியும் தேவை. இதன்மூலம் புத்தியின் சக்தியோ அல்லது வேறு எந்த சக்தியுமோ வீணாகாமல் சேர்ந்துகொண்டே இருக்கும். எவ்வளவு சேருகிறதோ அவ்வளவே பகுத்தறியும் சக்தியும் நிர்ணயம் செய்யும் சக்தியும் அதிகமாகும். அதற்காக இப்போது எண்ணங்களின் விரிவை தடுத்து நிறுத்திக்கொண்டே செல்லுங்கள் அதாவது உள்ளடக்கும் சக்தியை தாரணை செய்யுங்கள்.

9. எந்தக் காரியம் செய்தாலும் அல்லது பேசிக்கொண்டிருந்தாலும் இடையிடையே எண்ணங்களின் ஓட்டத்தை நிறுத்துங்கள். ஒரு நிமிடத்திற்காவது மனதின் எண்ணங்களை, உடல மூலமாக நடந்துகொண்டிருக்கும் செயலை இடையில் நிறுத்தியாவது இந்தப் பயிற்சியை செய்க, அப்போது புள்ளி ரூபத்தின் பவர்புல் நிலையில் நிலைத்து இருக்க முடியும். எப்படி அவ்யக்த

நிலையில் இருந்து காரியங்கள் செய்வது எளிதாகிக் கொண்டிருக்கிறதோ அதைப்போல இந்த புள்ளிரூப நிலையும் எளிதாகிவிடும்.

10. எந்த கிருமிகளையும் அழிப்பதற்கு டாக்டர்கள் எப்படி மின்சாரக் கதிர்களை பயன்படுத்துகிறார்களோ, அதேபோல நினைவின் சக்திசாலி கதிர்கள் ஒரு நொடியில் அனேக பாவவடிவ கிருமிகளை பஸ்பமாக்கி விடுகிறது. பாவங்கள் பஸ்பமாகிவிட்டால் பின்னர் தன்னை இலேசாகவும், சக்திமிக்கவர்களாகவும் உணர்வீர்கள்.

11. நிரந்தரமாக சகஜயோகிகளாகத்தான் இருக்கிறீர்கள், இந்த நினைவின் நிலையை இடையிடையே சக்திசாலி ஆக்குவதற்கு அதிக கவனம் கொடுத்துக்கொண்டே இருங்கள். தூய்மையின் தாரணை எப்போது முழுமையாக இருக்குமோ, அப்போது உங்களுடைய சிறந்த எண்ணங்களின் சக்தியை அன்பின் அக்கினியை கொழுந்துவிட்டு எரியச் செய்வீர்கள், அந்தத் தீயில் எல்லா குப்பைகளும் எரிந்து சாம்பலாகிவிடும். பிறகு எதை நினைக்கிறீர்களோ அது நடக்கும், தீவிர வேகத்தில் சேவை தானாகவே நடக்கும்.

12. தீயால் அசுரர்களை எரித்து சாம்பலாக்கியதாக தேவியரின் நினைவுச் சின்னங்களில் காண்பித்திருக்கிறார்கள். அசுரர்களை அல்ல ஆனால் அசுர சக்திகளை அழித்தார்கள். அது தற்சமயத்தின் நினைவார்த்தமாகும். தற்போது ஜுவாலை சொரூபமாகி அசுர சமஸ்காரங்கள், அசுர சுபாவங்கள், எல்லாவற்றையும் சாம்பல் ஆக்கிவிடுங்கள். இயற்கை மற்றும் ஆத்மாக்களுக்குள் என்ன தமோ குணங்கள் உள்ளதோ அவைகளை அழிப்பவர் ஆகுங்கள். இது மிகப்பெரிய வேலை, மிக வேகமாகச் செய்யுங்கள் அப்போதே முடிக்க முடியும்.

13. எந்தக் கணக்கும் - இந்த ஜென்ம கணக்காக இருக்கலாம் அல்லது முந்தய ஜென்மத்தின் கணக்காக இருக்கலாம், அன்பினுடைய அக்கினி சொரூப நிலையில்லாமல் எரிந்து சாம்பலாகாது. எப்போதும் அக்கினி சொரூபநிலை அதாவது ஜுவாலை ரூபத்தின் சக்திசாலி நினைவு, விதைரூபம், லைட்ஹவுஸ், மைட்ஹவுஸ் நிலையில் இருக்கும்போது பழைய கணக்கு வழக்குகள் எல்லாம் எரிந்து சாம்பலாகிவிடும், பின்னர் தன்னை டபுள் லைட்டாக அனுபவம் செய்வீர்கள்.

14. எப்போது நினைவின் தொடர்பு சதா இணைக்கப்பட்டிருக்கிறதோ, அப்போதே சக்திசாலி ஜுவாலா சொரூப நினைவு இருக்கும். ஒருவேளை அடிக்கடி நினைவு துண்டிக்கப்பட்டால், பின்னர் அதை இணைப்பதற்கு நேரமும் பிடிக்கும், முயற்சியும் செய்ய வேண்டியது இருக்கும், அதுமட்டுமில்லாமல் சக்திசாலி ஆவதற்குப்பதில் பலவீனமாகிவிடுவீர்கள்.

15. நினைவை சக்திசாலி ஆக்குவதற்காக விசயங்களுக்குள் விரிவாக செல்லும் போதும் சாரமான நிலையின் பயிற்சி குறைந்துவிடக்கூடாது, விரிவில் சாரத்தை மறந்துவிடக்கூடாது. சாப்பிடுங்கள், குடியுங்கள், சேவை செய்யுங்கள் ஆனால் தனித்து இருக்க வேண்டியதை மறந்துவிடாதீர்கள். சாதனை (கடும்முயற்சி) என்றால் சக்திசாலி நினைவு. நிரந்தரமாக பாபாவுடன் உள்ளத்தின் உறவு. சும்மா யோகத்தில் அமர்வதை மட்டும் சாதனை என்று சொல்லமுடியாது, ஆனால் எப்படி உடலால் அமர்கிறீர்களோ, அதேபோல உள்ளம், மனம், புத்தி எல்லாம் பாபாவின் பக்கமாக, பாபாகூடவே அமரவேண்டும். அப்படிப்பட்ட ஒருமுக நிலையே ஜுவாலையைப் பிரகாசிக்கச் செய்யும்.

# 22. திருப்திமணியாகி சதா திருப்தியாக இருங்கள் மேலும் எல்லோரையும் திருப்திபடுத்துங்கள்

1. பாப்தாதா விரும்புவது என்னவென்றால் ஒவ்வொரு குழந்தையும் இந்த வருடம் முழுவதும் யாரை எப்போது சந்தித்தாலும், அவர்களுக்கு திருப்தியின் உதவி செய்ய வேண்டும். தானும் திருப்தியாக இருக்கவேண்டும் மேலும் பிறரையும் திருப்திபடுத்த வேண்டும். இந்த சீசனுடைய சுயமரியாதை - **திருப்திமணி**. அதனால் எப்போதும் திருப்தியாக இருக்க வேண்டும் மேலும் திருப்திபடுத்த வேண்டும் - இந்த சுயமரியாதையின் இருக்கையில் எப்போதும் ஒரே நிலையில் இருக்க வேண்டும்.

2. இன்றைய காலத்தில் டென்சன் மற்றும் பிரச்சினைகள் அதிகமாக இருக்கிறது, அதன் காரணத்தால் அதிருப்தி அதிகரித்துக்கொண்டே போகிறது. அப்படிப் பட்ட நேரத்தில் திருப்தி மணிகளாகிய நீங்கள் எல்லோரும் உங்களுடைய திருப்தியின் வெளிச்சத்தால் பிறரையும் திருப்தி அடையச் செய்யுங்கள். முதலில் தனக்குத்தானே திருப்தியாக இருங்கள் பிறகு சேவையில் திருப்தியாக இருங்கள் பின்னர் சம்மந்தத்தில் திருப்தியாக இருங்கள் அப்போதே உங்களை திருப்திமணி என்று சொல்லமுடியும்.

3. பாப்தாதா குழந்தைகளை நிரந்தர உண்மையான சேவாதாரி ஆவதற்காகச் சொல்கிறார், ஆனால் சேவை என்ற பெயரில் தானும் பாதிக்கப்பட்டு பிறரையும் பாதிக்கச் செய்வது, அப்படிப்பட்ட சேவை செய்யாமல் இருப்பது நல்லது ஏனெனில் சேவைக்கான விசேச குணம் திருப்தி. எங்கே திருப்தி இல்லையோ, அது தன் மீதோ, அல்லது கூட இருப்பவர்மீதோ அதிருப்தி இருக்கலாம், அந்த சேவை தனக்கும் பலன் தராது பிறருக்கும் தராது. எனவே இப்படிப்பட்ட சேவை செய்வதற்குப் பதிலாக முதலில் தன்னைத்தான் திருப்தி மணியாக்கி பின்னர் சேவைக்கு வந்தால் நல்லது. இல்லையென்றால் சூட்சுமமாக சுமை ஏறும் பின்னர் அந்த சுமையானது பறக்கும் கலையில் தடைருபமாகிவிடும்.

4. எப்போதும் தடையற்று, சதா தடைகளை அழித்து, சதா திருப்தியாக இருக்கவேண்டும், மேலும் அனைவரையும் திருப்திபடுத்த வேண்டும்- சேவாதாரிகள் இந்த சர்டிபிக்கேட்டை எப்போதும் பெற்றுக்கொண்டே இருக்க வேண்டும். இந்த சர்டிபிக்கேட்டை பெறுவது என்றால் சிம்மாசனதாரி ஆவதாகும். சதா திருப்தியாக இருந்து எல்லோரையும் திருப்தி படுத்துவதற்கான இலட்சியம் கொள்ளுங்கள்.

5. எந்த ஆத்மாவிற்கு எல்லா பிராப்திகளும் அனுபவமாகிறதோ, அவர் சதா திருப்தியாக இருப்பார். அவரது முகத்தில் சதா மகிழ்ச்சியின் அடையாளம் தெரியும். சேவாதாரி எப்போது தன்மீதும் மற்ற எல்லோர்மீதும் திருப்தியாக இருக்கிறாரோ அப்போது சேவை செய்வதற்கும், ஒத்துழைப்பு தருவதற்கும் ஊக்க உற்சாகம் தானே ஏற்படும். சொல்லவோ அல்லது செய்யவைக்கவோ வேண்டியதிருக்காது, திருப்தி தானாகவே ஊக்க உற்சாகத்தைக் கொண்டுவருகிறது. சேவாதாரிகளிடம் விசேசமாக திருப்தியாக இருக்க வேண்டும் மேலும் திருப்திப்படுத்தவேண்டும் என்ற இலட்சியம் இருக்க வேண்டும்.

6. எந்த அளவு தன்னை எல்லா பிராப்திகளாலும் நிறைந்தவராக அனுபவம் செய்கிறீர்களோ அந்த அளவு திருப்தியாக இருப்பீர்கள். ஒருவேளை கொஞ்சமாவது குறையிருப்பதாகத் தோன்றினால், எங்கே குறையோ அங்கே அதிருப்தி இருக்கும். தனது ராஜ்ஜியமாக இல்லை அதனால் கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது ஆனால் இங்கு பிரச்சினையோ விளையாட்டாகி விட்டது, தைரியம் கொள்வதன்மூலம் தக்க சமயத்தில் உதவி கிடைத்துவிடும். அதனால் தனது திருப்தியோடுகூடவே தனது சிறந்த நிலை மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் திருப்தியினுடைய ஒத்துழைப்பு கொடுங்கள்.

7. செய்யவைப்பவர் செய்யவைத்துக் கொண்டிருக்கிறார், நான் வெறும் நிமித்தமாகி காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறேன். - இந்த நினைவில் இருக்க வேண்டும் இதுவே சேவாதாரியின் விசேசமாகும். இதன்மூலம் சேவையில் அல்லது சுயமுயற்சியில் எப்போதும் திருப்தியாக இருப்பீர்கள் அதோடு யார் நிமித்தமாகி இருக்கிறாரோ அவர்மீதும் திருப்தி இருக்கும். சதா திருப்தியாக இருக்க வேண்டும் மேலும் மற்றவரையும் திருப்தியாக வைத்திருக்க வேண்டும் - இதுவே விசேசமாகும்.

8. பிராமணன் என்றால் புத்திசாலி, அவர்கள் சதா தானும் திருப்தியாக இருப்பார்கள் மேலும் பிறரையும் திருப்தியாக வைத்திருப்பார்கள். ஒருவேளை மற்றவர் அதிருப்தியாக்குவதால் அதிருப்தி ஏற்பட்டால் சங்கமயுக பிராமண வாழ்வின் சுகத்தைப் பெற முடியாது. சக்தி சொரூபமாகி பிறரது வாயுமண்டலத்தில் இருந்து தன்னை விலக்கிக் கொள்ள வேண்டும் அதாவது

தன்னை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இந்த இலட்சியத்தை அடைவதற்கு இதுவே சாதனமாகும்.

9. யார் உளமாற சேவை செய்கிறார்களோ அல்லது நினைவு செய்கிறார்களோ, அவர்களுக்கு குறைந்த முயற்சியில் அதிக திருப்தி ஏற்படும். மற்றபடி யார் உள்ளத்தில் அன்பில்லாமல் நினைவு செய்கிறார்களோ, வெறும் ஞானத்தின் ஆதாரத்தில் அறிவு மூலமாக நினைவு செய்கிறார்களோ அல்லது சேவை செய்கிறார்களோ, அவர்கள் முயற்சி அதிகம் செய்ய வேண்டியதாக இருக்கிறது, குறைந்த அளவே திருப்தி ஏற்படுகிறது. வெற்றிகூட கிடைத்துவிடலாம், இருந்தாலும் உள்ளத்தின் திருப்தி குறைவாகவே இருக்கும். இதையே யோசித்துக்கொண்டிருப்பார்கள் - அப்படி நடந்தால் நல்லது, இருந்தாலும், இருந்தாலும் . . . எனச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள், ஆனால் நல்ல உள்ளமுடையோர் சதா திருப்தியின் பாடலைப் பாடிக்கொண்டே இருப்பார்கள்.

10. எந்த சேவை அதிருப்தியாக்குகிறதோ அந்த சேவை, சேவை அல்ல. தெம்பைத்தருவது சேவை. ஒருவேளை சேவையில் திருப்தி இல்லை என்றால் சேவையை விட்டுவிடுங்கள் ஆனால் திருப்தியை விட்டுவிடாதீர்கள். எப்போதும் எல்லைக்குட்பட்ட விருப்பங்களில் இருந்து விலகி, நிறைவாக இருந்தீர்கள் என்றால் சமமாகி விடுவீர்கள்.

11. சங்கமயுகத்தின் விசேச வரதானம் திருப்தியாகும். அனைத்து பிராப்திகளே இந்த திருப்தியின் விதையாக இருக்கிறது. அதிருப்தியின் விதை ஸ்தூல அல்லது சூட்சுமத்தில் ஏதாவது கிடைக்காமையாகும். பிராமணர்கள் உங்கள் புகழ் யாதெனில் "பிராமணர்களின் பொக்கிஷத்தில் அதாவது பிராமணர்களின் வாழ்வில் கிடைக்காத பொருள் என்று ஒன்றில்லை", பின்னர் அதிருப்தி ஏன்? இப்போது வரங்கொடுப்பவரின், வள்ளலின் கஜானா நிறைந்திருக்கிறது, இவ்வளவு பெரிய பிராப்தி கிடைக்கிறது, இருந்தும் அதிருப்தி ஏன்?

12. யார் திருப்தி மணிகளோ - அவர்கள் மனதின்மீது, உள்ளத்தின்மீது, அனைவர் மீது, பாபாமீது, நாடகத்தின்மீது எப்போதும் திருப்தியாக இருப்பார்கள், அவரது மனதிலும் உடலிலும் சதா மகிழ்ச்சியின் அலைகள் தென்படும். எந்தப் பிரச்சினை வந்தபோதும், ஏதேனும் கணக்கு வழக்கு தீர்க்க வேண்டிய ஆத்மா போராட வந்தபோதும், உடலின் ஊழ்வினை போராட வந்துகொண்டே இருந்தபோதும் எல்லைக்குட்பட்ட ஆசைகளில் இருந்து விலகிய ஆத்மா திருப்தியாக இருப்பதன் காரணத்தால் எப்போதும் மகிழ்ச்சியின் ஜொலிப்பில் பிரகாசிக்கும் நட்சத்திரமாக தெரிவார்கள்.

13. திருப்தியான ஆத்மாக்கள் எப்போதும் தன்னலமில்லாமல் இருப்பதோடு எல்லோரையும் குற்றமற்றவராக உணர்வார்கள். வேறு யார்மீதும் பழி போட மாட்டார்கள் - பாக்கியவிதாதாமீதோ, நாடகத்தின்மீதோ, எந்த மனிதரின் மீதோ, எனது உடலே அப்படிதான் என தன் உடலின் கணக்கு வழக்குமீதோ குறைகூற மாட்டார்கள். அவர்கள் எப்போதும் தன்னலமற்ற, குற்றமற்ற உணர்வும் பார்வையும் உடையவராக இருப்பார்கள்.

14. சங்கமயுகத்தின் விசேசம் திருப்தியாகும், இதுவே பிராமண வாழ்வின் விசேச பிராப்தியாகும். திருப்தியும் மகிழ்சியும் இல்லையென்றால் பிராமணன் ஆனதற்கான லாபமே இல்லை. அதனால் திருப்தியாக இருங்கள் மேலும் எல்லோரையும் திருப்தியாக்குங்கள், இதில்தான் உண்மையான சுகம் இருக்கிறது, இதுவே உண்மையான சேவையாகும்.

# 23. மனதைக் கட்டுப்படுத்தி ஒருமுக சக்தியை அதிகமாக்குங்கள்

1. மனதின் ஒருமுகமே ஒரேரசனை நிலையை அனுபவம் செய்ய வைக்கிறது. ஒருமுக சக்தி மூலமாக அவ்யக்த பரிஸ்தா நிலையை எளிதில் அனுபவம் செய்யமுடியும். ஒருமுகப்படுத்தும் சக்தி, அதிகாரத்தின் சக்தி எளிதில் தடையற்றவராக்கிவிடுகிறது. ஒருமுகம் என்றால் மனதை எங்கு வேண்டுமோ, எப்படி வேண்டுமோ எவ்வளவு நேரம் வேண்டுமோ, அவ்வளவு நேரம் ஒருமுகப்படுத்துவது. மனம் வசத்தில் இருக்க வேண்டும்.

2. மனித (சாகார்) வடிவில் பரிஸ்தா நிலையை அனுபவம் செய்வதற்காக மனதை ஒருமுகப்படுத்துவதன்மீது கவனம் செலுத்துங்கள். கட்டளைப்படி மனதை நடத்துங்கள். அதிகாரத்தின் இருக்கையில் விதவிதமான சிறந்த நிலைகளின் இருக்கையில் செட்டாகிவிடுங்கள். மனதில் ஏதாவது பலவீன எண்ணங்கள் உருவானால் அதை அங்கேயே அழித்து சக்திசாலியாக்குங்கள். எண்ண வடிவ அஸ்திவாரத்தை உறுதியாக்குங்கள் அப்போது அவ்யக்த கவர்ச்சி வரும்.

3. மனதின் ஒருமுகத்திற்காக ஒவ்வொரு நொடியும் நாடகத்தின் தண்டவாளம் மீது சென்றுகொண்டே இருங்கள். எந்த வகையில் எப்படி நாடகம் போகிறதோ அதன்கூடவே மனதின் நிலையும் சென்றுகொண்டிருக்கட்டும். சிறிது கூட ஆடக்கூடாது. மனம் அதாவது எண்ணத்தின் சக்தியை தடுத்து நிறுத்தும் அல்லது இணங்கச் செய்யும் சக்தி இருக்க வேண்டும். இதன்மூலம் புத்தியின் சக்தி வீணாகாது, சக்தி சேரும். எந்த அளவு மனம்-புத்தியின் சக்தி சேமிப்பாகிறதோ அந்த அளவு பகுத்தறியும் அல்லது நிர்ணயம் செய்யும் சக்தி அதிகமாகும்.

4. மனதை கட்டுப்படுத்துவதற்காக மனதை அர்ப்பணித்து முழுமையாக சரண்டர் ஆகிவிடுங்கள். பின்னர் மனதில் தனக்குத் தக்கபடி எண்ணங்களை எழுப்ப முடியாது. யார் மனதையும் பாபாவிடம் கொடுத்துவிட்டார்களோ அவர்கள் சகஜமாக மன்மனாபவ நிலையில் இருப்பார்கள். மன்மனாபவ நியைில் இருப்பதால் எளிதில் மோகத்தை வென்றவர்கள் ஆகிவிடுவார்கள். மனதை சமர்ப்பணம் செய்வது எனறால் வீண் எண்ணங்கள், கெட்ட எண்ணங்களை சமர்ப்பணம் செய்வதாகும்.

5. மனதில் ஏதாவது எண்ணங்கள் எழுந்தால் அதில் உண்மையும் தூய்மையும் இருக்க வேண்டும். உள்ளே எந்த பாவ எண்ணங்களோ, சுபாவ மோதல்களோ, பழைய சமஸ்காரங்களின் குப்பைகள்கூட இருக்கக்கூடாது. யார் இப்படி உண்மையாக இருப்பார்களோ அவர்கள் அனைவருக்கும் பிரியமானவர்களாக இருப்பார்கள். அப்படி உண்மையாக இருப்பவர்கள்மீது பிரபுவும் மகிழ்சியடைவார்.

6. எந்தமாதிரி நிலையை உருவாக்க விரும்புகிறீர்களோ, அந்த நிலையை உருவாக்குவதற்காக மனதை டிரில் செய்ய வைக்க வேண்டும். ஒரு நொடியில் சப்தத்திற்குள் வரவேண்டும், ஒரு நொடியில் சப்தத்தை கடந்து செல்ல வேண்டும். செயல் செய்வதற்காக ஒரு நொடியில் தேகவுணர்வு பெற வேண்டும், பின்னர் ஒரு நொடியில் அசரீரியாக வேண்டும். எப்போது இந்த டிரில் வலிமை பெறுகிறதோ அப்போது ஒவ்வொரு பிரச்சினையையும் எதிர்கொள்ள முடியும்.

7. நேரத்திற்குத் தக்கபடி இப்போது எண்ணங்களை உள்ளடக்கும் சக்தியை தாரணை செய்யுங்கள். எண்ணங்கள் விரிவடைவதை தடுத்துக்கொண்டே செல்லுங்கள் அப்போது பிறரது எண்ணங்களை படிக்க முடியும். கண்களின் ஜாடை மூலமாகவே ஒருவரது மனபாவனையை அறிந்து கொள்வீர்கள். எப்படி பாப்தாதாவிற்கு முன்னால் வரும்போது சொல்லாமலேயே உங்கள் அனைவரது மனதின் எண்ணங்களை, மனதின் பாவனைகளை அறிந்து கொள்கிறார்கள். அதேபோல குழந்தைகள் நீங்களும் இந்த கடைசி கோர்ஸ் படிக்க வேண்டும்.

8. மனதை எங்கு ஈடுபடுத்த விரும்புகிறீர்களோ அங்கேயே செயல்பட வேண்டும் வேறு எங்கும் செயல்படக்கூடாது. மனதின் எண்ணத்தில்கூட மாயாவிடம் தோற்றுப்போகக்கூடாது,

அப்படிப்பட்ட நிலையை உருவாக்குவதற்காக முதலில் இருந்தே சுத்த எண்ணங்களால் மனதை பிஸியாக வைத்திருங்கள். மனம் சுத்த எண்ணங்களால் நிறைந்து இருக்குமானால் வீண் எண்ணங்கள் வரமுடியாது, தோல்வி ஏற்படமுடியாது. சுத்தமான அல்லது ஒருமித்த எண்ணங்களின் சக்தியால் எப்படிப்பட்ட வாயுமண்டலத்தையும் மாற்ற முடியும்.

9. குறிப்பிட்ட முக்கிய நாளில் எப்படி போக்குவரத்தின் டிராபிக்கைகூட நிறுத்தி மூன்று நிமிட அமைதியை கடைப்பிடிக்கச் செய்கிறார்கள். நடந்துகொண்டிருக்கும் எல்லா வேலைகளையும் நிறுத்தி விடுகிறார்கள். அதேபோல நீங்களும் ஏதாவது காரியம் செய்து கொண்டிருந்தாலோ அல்லது பேசிக்கொண்டிருந்தாலோ இடையிடையே இந்த எண்ணங்களின் டிராபிக்கை நிறுத்தக்கூடிய பயிற்சி செய்க. ஒரு நிமிடமாவது மனதின் எண்ணங்களை, தேவைப்படின் உடல் மூலமாக நடைபெறும் காரியத்தைக்கூட இடையே நிறுத்தி இந்த பயிற்சி செய்யுங்கள் அப்போது எண்ணங்கள் வலிமை பெறும்.

10. வீண் எண்ணங்களின் புயலானது முழுமையடைவதில் தடையை ஏற்படுத்துகிறது என்பதே பெரும்பாலோருடைய கம்ப்ளெய்ண்டாக இருக்கிறது. எப்போது தினந்தோறும் அமிர்தவேளையில் முழு நாளுக்கான அப்பாயிண்ட்மென்ட்டின் டயரி தயார் செய்கிறீர்களோ அப்போதே இந்த கம்ப்ளெய்ண்ட் முடிவு பெறும். எப்போது தன் மனதை ஒவ்வொரு நேரத்திலும் அப்பாயிண்ட்மென்ட்டில் பிஸியாக வைத்திருக்கிறீர்களோ அப்போது வீண் எண்ணங்களுக்கு இடையில் நேரம் கிடைக்காது. எனவே நேரத்தை புக்கிங் செய்வதற்கான வழியை கற்றுக் கொள்ளுங்கள்.

11. தற்போதய நேரப்படி இப்போது மனதால் மகாதானி ஆகுங்கள் அப்போது மனதின் எண்ணங்களின்மீது நொடியில் வெற்றிபெற முடியும். ஒருவர் எவ்வளவுதான் சஞ்சல எண்ணமுடையவராக இருக்கட்டும், அதாவது ஒரு நொடிகூட அவரது மனதை ஒரு எண்ணத்தில் நிறுத்த முடியாதவராக இருக்கட்டும், அப்படிப்பட்ட சஞ்சல எண்ணமுடையவரையும்கூட உங்களது வெற்றியின் சக்திமூலம் கொஞ்ச நேரத்திற்காவது அமைதியை அல்லது சஞ்சலத்தினால் அசையாதவராக ஆக்குங்கள்.

12. எப்போது உங்கள் எண்ணங்களில் ஒருமுகம் ஏற்படுகிறதோ அப்போது எண்ணத்தின் மூலமாக யாரையும் அழைக்க முடியும். யாருக்கு வேண்டுமானாலும் எண்ணத்தின் மூலமாக காரியம் செய்வதற்கான பிரேரணை தர முடியும். எப்படி பட்டனை தட்டியவுடனே டெலிவிசனில் எல்லா காட்சிகளும் முன்னால் வந்து விடுகிறதோ அதேபோல நீங்கள் யாருக்காக எந்த எண்ணங்களை எழுப்புகிறீர்களோ, அந்த தெளிவான காட்சி அவர்களது புத்தியை இழுக்கும். அதற்காக ஸ்ரீமத்தின் கட்டளை எது உங்களுக்கு கிடைத்திருக்கிறதோ அதுவே உங்கள் எண்ணத்தில் ஓடிக்கொண்டிருக்க வேண்டும் வேறு எதுவும் அதில் கலந்துவிடக் கூடாது.

13. நீங்கள் சர்வசக்திவான் அரசாங்கத்தின் செய்தியாளராக இருக்கிறீர்கள், யாரோடு உரையாடினாலும் மனம் பாதிப்படையக்கூடாது. எந்த விசயத்தாலும் தன் முகத்தில் அல்லது மனநிலையில் வித்தியாசத்தைக் கொண்டுவராதீர்கள். மந்திரத்தை எப்போதும் நினைவில் வைத்திருங்கள். எப்போது அப்படிப்பட்ட விசயம் ஏதாவது முன்னால் வருகிறதோ, அப்போது தனது ஆன்மீக திருஷ்டியின் கண்ணையும் மன்மனாபவ என்ற மந்திரத்தையும் பிரயோகித்தால் அந்த விசயம் முடிவடைந்து விடும்.

# 24. நேரம் நெருங்கி வருவதற்குத் தக்கபடி அவ்யக்த பரிஸ்தா ஆகுங்கள்

1. எப்படி முழுமை அடையும் நேரம் நெருங்கி வந்துகொண்டிருக்கிறதோ, அதற்குத் தக்கபடி தேகவுணர்வற்ற பரிஸ்தா ரூபத்தை ஒவ்வொருவரையும் அனுபவிக்கச் செய்யுங்கள். எப்படி பிரம்மா பாபா காரியம் செய்துகொண்டு, பேசிக்கொண்டு, அறிவுரைகள் வழங்கி, ஊக்கஉற்சாகத்தை அதிகரித்துக் கொண்டே தேகத்தில் இருந்து விலகி சூட்சுமமான பிரகாச ரூபத்தை அனுபவம் செய்ய வைத்தார். அதுபோல உரையாடிக்கொண்டிருந்தாலும் உங்கள் பார்வையில் அலௌகீகத் தன்மை தெரியவேண்டும். அப்படி தேகவுணர்வில் இருந்து விலகி இருங்கள் அப்போது அடுத்தவருக்கும் தேகத்தின் உணர்வு வராது.

2. ஒவ்வொரு விசயத்திலும், உணர்வு, பார்வை, செயல் . . . அனைத்திலும் **விலகிய நிலை** அனுபவமாகட்டும். இவர் பேசிக்கொண்டிருக்கிறார் ஆனால் விலகி இருக்கிறார், ஆன்மீக அன்போடு இருக்கிறார் என அந்தமாதிரி பரிஸ்தா நிலையின் அனுபவத்தை **தானும் உணருங்கள், பிறருக்கும் ஏற்படுத்துங்கள்.** பிரம்மா பாபா பரிஸ்தா ரூபத்தில் உங்கள் எல்லோருக்கும் துணையாக இருக்கிறார், இப்போது அவருக்குச் சமமாக நீங்கள் எல்லோரும் பரிஸ்தாவாகி பரந்தாமம் செல்ல வேண்டும், அதற்காக மனதின் ஒருமுகத்தின்மீது கவனம் கொடுங்கள். கட்டளைப்படி மனதை நடத்துங்கள்.

3. எப்போதும் உங்கள் ஒளி உடல், ஒளியாலான பரிஸ்தா சொரூபம் உங்கள் முன்னே தெரியட்டும் அதாவது அப்படி ஆகவேண்டும், அத்துடன் எதிர்கால ரூபமும் தெரியட்டும். இப்போது இதை விடுத்து அதை பெற வேண்டும். எப்போது இப்படிப்பட்ட அனுபவம் ஏற்படுகிறதோ அப்போது சம்பூர்ண நிலையின் அருகில் வந்துவிட்டீர்கள் என்பதை புரிந்துகொள்ளலாம். இந்த முயற்சி செய்யும் உடல் முற்றிலும் மறைந்து விட வேண்டும்.

4. பரிஸ்தாவாவது என்றால் மனித உடல் உடையவராக இருந்தபோதும் ஒளி வடிவில் இருக்க வேண்டும், அதாவது புத்தி மூலமாக எப்போதும் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும். பரிஸ்தாவின் பாதம் தரையில் இருக்காது, புத்திவடிவ பாதம் எப்போதும் உயர்ந்த நிலையில் இருக்கும். பரிஸ்தாக்களுக்கு ஜோதியான உடலைக் காட்டுகிறார்கள். எனவே அந்த அளவு தன்னை பிரகாச சொரூப ஆத்மா என உணர்கிறீர்களோ, அவ்வளவு பிரகாசமான உடல் உடையவர்கள் பரிஸ்தாவாகி சென்று கொண்டிருப்பதாக போகும்போதும் சுற்றும் போதும் உணர்வார்கள்.

5. பரிஸ்தா என்றால் தனது தேகத்தின் உணர்வு மீதும் தொடர்பில்லாதவர், தேக உணர்வின் தொடர்பு அறுவது என்றால் பரிஸ்தாவாவதாகும். தேகத்தில் இருந்து அல்ல தேக உணர்வில் இருந்து. தேகத்தின் மீதுள்ள தொடர்பு அறும்போது சென்றுவிடுவீர்கள், ஆனால் தேகவுணர்வின் தொடர்பு நீங்க வேண்டும். எப்படி பாப்தாதா பழைய உடலின் ஆதாரம் பெறுகிறார்கள் ஆனால் உடலில் சிக்கிக் கொள்வதில்லை, அதேபோல செயலுக்காக ஆதாரம் பெறுங்கள் பின்னர் தனது பரிஸ்தா ரூபத்தில், உருவற்ற ரூபத்தில் (புள்ளி) நிலைத்து விடுங்கள்.

6. எப்போது பாபாவுடையவர் ஆகிவிட்டீர்களோ மேலும் தன்னுடைய அனைத்தையும் உங்களுடையது என்றாக்கிவிட்டீர்களோ அப்போதே சுமையற்ற பரிஸ்தாவாகி விட்டீர்கள். இதற்காக இவையெல்லாம் பாபாவுடையது, என்னுடையது எதுவுமே இல்லை என்ற ஒரு வாக்கியத்தை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். எங்கே எனது என்பது வருகிறதோ அதை உனது என சொல்லிவிடுங்கள் பின்னர் எந்த சுமையும் மனதில் தோன்றாது.

7. பரிஸ்தா என்றால் டபுள்லைட். பரிஸ்தா எப்போதும் ஜொலிப்பாக இருப்பதால் அனைவரையும் தன்பக்கம் தானாகவே கவர்ந்து இழுக்கிறார்கள். பரிஸ்தாக்கள் எப்போதும் உயர்வாக இருக்கிறார்கள். பரிஸ்தாக்களுக்கு இறக்கைகள் காண்பித்திருக்கிறார்கள் ஏனெனில் அவர்கள் பறக்கும் பறவைகளாக இருக்கிறார்கள். எனவே எப்போது பாபா கிடைத்துவிட்டாரோ, உயர்ந்த இடம் கிடைத்து விட்டதோ, உயர்ந்த நிலை கிடைத்து விட்டதோ அப்போது சதா பறந்துகொண்டே இருங்கள் மேலும் எல்லையற்ற சேவை செய்துகொண்டே இருங்கள்.

8. யாருக்கு தேகம் மற்றும் தேக உலகத்தோடு எந்த தொடர்பும் இல்லையோ அவர்களே பரிஸ்தாவாகிறார்கள். சேவைக்காகவே உடலில் இருக்கிறார்கள் மற்றபடி சம்மந்தத்தின் ஆதாரத்தில் இல்லை. சம்மந்தம் என்று உணர்ந்து குடும்பத்தில் இருக்கக்கூடாது, சேவை என உணர்ந்து இருக்க வேண்டும். கர்மபந்தனத்திற்கு வசமாகி இருக்கக்கூடாது. எங்கே சேவையின் உணர்வு இருக்கிறதோ அங்கு சுப பாவனை இருக்கும், வேறு எந்த பாவனையும் இருக்காது,

அப்படிப்பட்ட நிலையையே அதிக அன்பான, முற்றிலும் விலகிய, தாமரை மலருக்குச் சமமான நிலை என்று சொல்லப்படுகிறது.

9. பரிஸ்தா சொரூபம் என்றால் ஒளியாலான உடல், அதில் எந்த வியாதியும் கிடையாது, எந்த பழைய சுபாவ சமஸ்காரத்தின் அம்சமும் கிடையாது, எந்த தேகத்தின் சம்பந்தமும் கிடையாது, எந்தவித மனதின் சஞ்சலமும் கிடையாது, எந்தவித புத்தியின் அலையும் பழக்கமும் கிடையாது - அப்படிப் பட்ட பரிஸ்தா சொரூபம், பிரகாசமய உடலை அனுபவம் செய்தால் தேகத்தின் சுயநல சம்மந்தங்கள், சுகம் - அமைதியின் நிம்மதியை பறிக்கும் அழியக்கூடிய உறவுகள், மோகக் கயிற்றில் கட்டி வைப்பவர்கள், இப்படிப்பட்ட அனேக சம்மந்தங்கள் தானாகவே விலகி விடும். ஓரேயொரு சுகந்தரும் சம்மந்தத்திலேயே எப்போதும் இருப்பீர்கள்.

10. நாம் பிராமணனில் இருந்து பரிஸ்தா ஆகிறோம், இந்த இணைந்த ரூபத்தின் அனுபவம் உலகின் முன்னால் காட்சியளிக்கும் மூர்த்தியாக்கி விடும். பிராமணனில் இருந்து பரிஸ்தா இந்த நினைவு மூலமாக போகும்போதும் சுற்றும்போதும் தான் மனித உடல், மனித தேசத்தில் பாகத்தை நடித்தபோதும் பிரம்மா பாபாவுக்கு துணையாக அவ்யக்த வதனத்தின் பரிஸ்தாவாக, அவ்யக்த வடிவாக அனுபவம் செய்வார்கள். இந்த அவ்யக்த பாவனை உலகீய பேச்சு வார்த்தை, உடல் உணர்வின் சுபாவம், உடல் உணர்வின் சமஸ்காரங்களை எளிதில் மாற்றிவிடுகிறது.

11. பரிஸ்தா என்றால் தெய்வீக சொரூபம். தெய்வீகசக்தி சாதாரணத் தன்மையை முடித்து விடுகிறது. எந்த அளவு தெய்வீக சக்தியை ஒவ்வொரு காரியத்திலும் கொண்டு வருகிறீர்களோ அந்த அளவே ஒவ்வொருவரின் மனதில் இருந்தும், வாயிலிருந்தும் இவர்கள் தெய்வீகம் நிறைந்த காட்சியளிக்கும் மூர்த்திகள் என்ற வார்த்தை தானாகவே வெளிவரும். அனேக பக்தர்கள் யார் காட்சி காணும் ஆசையுடையவர்களோ, அவர்கள் முன்னால் நீங்கள் தானாகவே தெய்வீக காட்சியளிக்கும் மூர்த்தியாக பிரத்தியட்சம் ஆவீர்கள் அப்போதே எல்லா ஆத்மாக்களும் காட்சி கண்டு மகிழ்சசி அடைவார்கள்.

12. பரிஸ்தா என்றால் அவர்கள் உலகமே ஒரு பாபாதான். பெயருக்கு தேகத்தில் இருக்கிறார்கள் மேலும் தேக சம்மந்திகளோடு காரியத்தில் ஈடுபடுகிறார்கள் என்றாலும் பற்றில்லை. காரியம் செய்வதற்காக உடனடியாக தேகத்தில் வருகிறார்கள் பின்னர் உடனடியாக தேகத்தில் இருந்து விலகி விடுகிறார்கள். செயல் செய்வதற்காக தேகத்தின் ஆதாரம் பெறுக பின்னர் மேலே சென்றுவிடுங்கள் - இப்போது இந்த பயிற்சியை அதிகமாக்குங்கள்.

13. பரிஸ்தா வாழ்வின் விசேசம் - ஆசையென்றால் என்னவென்று அறியா நிலை. தேவர்களின் வாழ்விலோ ஆசையின் விசயமே கிடையாது. எப்போது பிரமாண ஜீவனில் இருந்து பரிஸ்தா ஜீவன் உருவாகிவிடுகிறதோ அதாவது கர்மாதீத் நிலையை அடைந்து விடுகிறீர்களோ அப்போது எந்தவிதமான அசுத்த செயல், வீண்செயல், கெட்ட செயல் அல்லது முந்தய கர்மவினை என்ற எதன் பந்தனத்திலும் கட்டமுடியாது.

14. பரிஸ்தா நிலையை அனுபவம் செய்வதற்காக பரந்த இதயமுடைய, எல்லையற்ற நினைவு சொரூபமாகுங்கள். எங்கே எல்லையற்ற நிலை இருக்கிறதோ அங்கே எந்தவித எல்லைக்குட்பட்டவைகளும் தன்பக்கம் இழுக்க முடியாது. கர்மாதீத் என்பதன் அர்த்தமே – எல்லாவிதமான எல்லைக்குட்பட்ட சுபாவ சமஸ்காரங்களை கடந்து இருப்பதாகும் அதாவது விலகி இருப்பதாகும்.

# 25. இடைவிடா மகாதானி ஆவதற்காக சேமிப்பை அதிகமாக்குங்கள்

1. இந்த வருடம் எல்லா குழந்தைகளும் நிரந்தரமாக இடைவிடாத மகாதானி ஆகவேண்டும். மனதின் மூலமாக, எண்ண அலைகள் (வைப்ரேசன்) மூலமாக நிரந்தரமாக சக்திகளை அனுபவம் செய்ய வையுங்கள், வார்த்தை மூலமாக ஞான தானம் கொடுங்கள், செயல் மூலமாக குணங்களை தானமாகக் கொடுங்கள். முழு நாளிலும் மனதாலோ, வார்த்தையாலோ, செயலாலோ அல்லது மூன்றின் மூலமாகவோ இடைவிடா மகாதானி ஆகுங்கள்.

2. இடைவிடா மகாதானி ஆவதற்காக முதலில் தனது சேமிப்பு கணக்கை செக் பண்ணுங்கள். நான்கு பாடங்களிலும் சேமிப்பின் கணக்கில் எவ்வளவு சதவீதம் இருக்கிறது? சேமிப்பதின் அடையாளம் - சேவை செய்யும்போது முதலில் தான் திருப்தி. கூடவே யாருக்கு சேவை செய்கிறீர்களோ, அந்த ஆத்மாக்களுக்கும் குஷியின் திருப்தி. எப்போது இரண்டு பக்கமும் திருப்தி ஏற்படுகிறதோ அப்போதே சேவையின் கணக்கில் சேமிப்பாகி இருக்கிறது என்று சொல்ல முடியும்.

3. சேமிப்பை வெகு எளிதில் அதிகரிப்பதற்கான தங்கச் சாவி யாதெனில் சேவை செய்யும் நேரத்தில் தனக்குள் நிமித்த பாவனையின் நினைவு, மற்றும் பணிவான பாவனை, சுப பாவனை, ஆன்மீக அன்பின் பாவனை இருக்க வேண்டும். ஒருக்கால் நீங்கள் இந்த பாவனைகளின் நிலையில் நிலைத்து இருந்து சேவை செய்தீர்கள் என்றால் எளிதில் இதன்மூலம் ஆத்மாக்களின் பாவனைகள் பூர்த்தியாகிவிடும்.

4. இந்த சங்கமயுகம் சேமிப்பதற்கான யுகமாகும், எனவே தனது சேமிப்புக் கணக்கை சோதித்துப் பாருங்கள். செக்கராகவும் ஆகுங்கள், மேக்கராகவும் ஆகுங்கள். ஏனெனில் நேரம் நெருங்கி வருவதற்கான காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் அதேநேரம் பாபாவிற்குச் சமமாவோம் என்று எல்லோரும் உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்கள். எனவே பிரம்மா பாபாவிற்குச் சமமாவதற்காக சேமிப்பு நிறைந்திருக்க வேண்டும்.

5. என்னுடையது என்னுடையது என்று சொல்லி எல்லாவற்றையும் இழந்து வந்தீர்கள், இப்போது உங்களுடையது உங்களுடையது என்று சொன்னால் எல்லாம் சேர்ந்து கொண்டே இருக்கும். சொல்லப்போனால் இங்கு செலவு செய்வதும் சேமிப்பதாகும், எவ்வளவு செலவு செய்கிறீர்களோ அதாவது பிறருக்கு கொடுக்கிறீர்களோ அவ்வளவு பலமடங்காக பெருக்கமடைகிறது. ஒன்று கொடுத்து கோடி பெற வேண்டும். ஒரு நொடிநேர சக்திசாலி நினைவுகூட கோடி மடங்கு வருமானத்தை சேமிக்கச் செய்துவிடும்.

6. தாகமுடைய ஒருவரின் தாகத்தை தணிப்பது புண்ணியம் என்று சொல்கிறார்கள். அதேபோல தற்சமயத்தில் எல்லா ஆத்மாக்களும் துக்க-அசாந்தியில் துடித்துக்கொண்டிருக்கிறார்கள், சுகம்-அமைதியின் தாகத்தோடு இருக்கிறார்கள், அவர்களுக்கு ஞானாமிர்தம் கொடுத்து தாகத்தைத் தணிக்கும் சேவை செய்தால் அனேக ஜென்மங்களுக்கு புண்ணியம் சேர்ந்து விடும். சேர்த்து வைப்பவரையே புத்திசாலி என்று சொல்லப்படுகிறது, மற்றபடி யார் சம்பாதிப்பதை எல்லாம் சாப்பிட்டு விடுகிறார்களோ அவர்களை புத்திசாலி என்று சொல்வதில்லை.

7. சாப்பிடுவதற்காக நேரம் ஒதுக்குகிறீர்கள் ஏனெனில் அது அவசியம், அதேபோல இந்த புண்ணிய காரியம் செய்வதும் அவசியமாகும். வாய்ப்பு கிடைத்தால் செய்வோம் என்பது கூடாது. வாய்ப்பைப் பெற வேண்டும். நேரம் கிடைக்காது, நேரத்தை ஒதுக்க வேண்டும் அப்போதே சேமிக்க முடியும்.

8. சில குழந்தைகள் உடலின் காரணத்தால் அல்லது நேரம் கிடைக்காததால் தம்மால் சேவை செய்ய முடியாது என நினைக்கிறார்கள். ஆனால் நான்குவித சேவைகளில் ஏதாவது ஒரு சேவையில் விதிபூர்வமாக பிஸியாக இருந்தாலும் சேவையின் பாடத்தில் மார்க்குகள் சேர்ந்துகொண்டே இருக்கும், மேலும் இந்த கிடைத்திருக்கும் நம்பர் கடைசி ரிசல்டில் சேர்ந்துவிடும்.

9. எப்படி வார்த்தை மூலமாக சேவை செய்பவருக்கு மார்க்குகள் சேர்கிறதோ, அதேபோல யஞ்ஞ சேவை அல்லது சுயசேவை அல்லது மனசேவை ஆகியவைகளுக்கும் அதே அளவு மகத்துவம் இருக்கிறது. இவைகளுக்கும் அதே அளவு மதிப்பெண்கள் சேரும். அதனால் ஏதாவது ஒரு சேவையில் சதா பிஸியாக இருங்கள்.

10. எந்தவொரு சிறந்த காரியம் செய்ய வேண்டும் என்றாலும் அதை இப்போதே செய்ய வேண்டும். இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை என்பதை ஒவ்வொரு காரியத்திலும் ஒவ்வொரு நேரத்திலும் நினைவில் கொள்ளுங்கள். யாருக்கு இது நினைவில் இருக்கிறதோ அவர்கள் ஒருபோதும் நேரம், எண்ணம் அல்லது செயலை வீணாக விடமாட்டார்கள், எப்போதும் சேமித்துக் கொண்டே இருப்பார்கள். எனவே ஒவ்வொரு நொடியின் ஒவ்வொரு எண்ணத்தின் மகத்துவத்தை அறிந்து சேமிப்பை நிறைவாக்குங்கள் அப்போது 21 ஜென்மங்களுக்காக தனது சேமிப்பை சிறந்த தாக்க முடியும்.

11. யாருக்கு சேவை நிலையமும் சேவையும் தடையற்றதாக இருக்கிறதோ, யார் சுபாவ சமஸ்கார மோதல்களில் இருந்து விலகி இருக்கிறார்களோ, அவர்களது சேவையின் கணக்கில் சேமிப்பாகும். ஒருகால் ஏதாவது சென்டர் வளர வளர அதோடு மாயாவும் வளர்ந்து வந்தால் அப்படிப்பட்ட சேவை பாபாவின் ரிஜிஸ்டரில் ஏறாது. நானோ மிக அதிகமாக சேவை செய்துகொண்டிருக்கிறேன், தூங்குவதுகூட கிடையாது, சாப்பாடுகூட ஒரே முறை சமைத்து மற்ற வேளைகளிலும் சாப்பிடுகிறேன்-அவ்வளவு பிஸியாக இருக்கிறேன்! என்று சிலர் நினைக்கிறார்கள், ஆனால் சேவையோடு கூடவே ஒருவேளை மாயாவிடமும் பிஸியாக இருந்தால், இது ஏன் நடந்தது, இது எப்படி நடந்தது, இவர் ஏன் செய்தார், நான் ஏன் செய்யவில்லை, எனது உரிமை, உனது உரிமை . . . . இப்படிப்பட்ட சேவையின் வருமானம் கணக்கில் சேராது.

12. எப்போது வார்த்தைகளை வீணாகப் போவதில் இருந்து காப்பாற்றுகிறீர்களோ அப்போது வார்த்தையால் பாபாவை பிரத்யட்சம் செய்யக்கூடிய திறமை அல்லது சக்தி வரும். இதுவரை சாதாரண வார்த்தைகள் அதிகமாக இருக்கிறது, அதனால் சப்தத்தை அதிகமாக்குவது தாமதமாகிறது. எப்படி பிரம்மா பாபாவின் பேச்சு - பரிஸ்தாவின் பேச்சாக இருந்தது, பேச்சு குறைவாகவும் இனிமையாகவும் இருந்தது. அதுபோல யதார்த்தமான வார்த்தைகளைப் பேசுங்கள். காரியங்களுக்காக பேச வேண்டியது இருக்கிறது ஆனால் அதையும் நீட்டி பேசாதீர்கள். தற்போது சக்திகளை சேமியுங்கள் அப்போது வார்த்தையில் ஆற்றல் வெளிப்படும்.

13. எப்படி நினைவின் மூலமாக மனதின் சக்திகளை சேமிக்கிறீர்கள். அமைதியாக அமரும்போது எண்ணத்தின் சக்தியை சேமிக்கிறீர்கள். அதேபோல வார்த்தை மற்றும் செயல் - இந்த இரண்டின் சக்திகளையும் சேமிப்பதற்கான திட்டம் தீட்டுங்கள். வார்த்தையின் மூலமாக சேமிப்பதற்கான சாதனம்-குறைவாக பேசுங்கள், இனிமையாகப் பேசுங்கள் மேலும் சுயமரியாதையில் இருந்து பேசுங்கள். அதேபோல் எந்தவொரு சேவையையும் யோகத்தோடும் சரியான திட்டத்தோடும் செய்யும்போது கர்ம சேவையின் கணக்கில் சேமிப்பு பெருகும்.

14. சில குழந்தைகள் ஏமாளியாகி செக்கிங் செய்கிறார்கள் - முழு நாளில் குறிப்பிடத்தக்க தீமை எதையும் செய்யவில்லை, கெட்டதை நினைக்கவில்லை கெட்டதைப் பேசவில்லை என்று யோசிக்கிறார்கள். ஆனால் தெய்வீக அல்லது அலௌகீக காரியங்கள் செய்தேனா என்று செக்பண்ணுவதில்லை. தற்போதய தெய்வீக எண்ணங்கள் அல்லது தெய்வீக பேச்சு மற்றும் செயல்கள் எதிர்காலத்திற்காக சேமிப்பாகிறது. எனவே, தான் ஒன்றையும் வீணாக்க வில்லை என்பதில் மகிழ்சியடைய வேண்டாம் ஆனால் எவ்வளவு பெஸ்ட் ஆக்கினீர்கள்? துக்கம் தரவில்லை அது சரிதான் ஆனால் சுகம் தருவதாலேயே சேமிப்பு ஏற்படுகிறது எனவே எவ்வளவு பேருக்கு சுகம் கொடுத்தீர்கள்? இப்படி நுணுக்கமாக சோதிக்க வேண்டும்.

# 26. பூர்வீகர் மற்றும் பூஜைக்குரியவர் என்ற நினைவில் இருந்து எல்லோரையும் பராமரியுங்கள்

1. நீங்கள் 'பிராமணனில் இருந்து தேவதை' அதாவது ஆதி சனாதன தர்மத்தின் ஆத்மாக்கள் விதையிலிருந்து வெளிவந்திருக்கும் நேரடியான அடிமர வடிவில் இருக்கிறீர்கள். இந்த அடிமரத்திலிருந்து எல்லா தர்ம வடிவ கிளைகளும் உற்பத்தியாகிறது அதனால் நீங்கள் எல்லா ஆத்மாக்களுக்கும் ஆதாரம் மற்றும் கரைசேர்க்கும் மூர்த்தியாக இருக்கிறீர்கள். பூர்வீகர்களாகிய உங்களையே வெளிப்படையாகவும் சூட்சும வடிவிலும் எல்லோரும் பின்பற்றுகிறார்கள்.

2. பூர்வீக ஆத்மாக்களாகிய உங்களது ஆதாரமே உலகின் நேரத்திற்கும் நிலைக்கும் ஆதாரமாக இருக்கிறது. எப்போது நீங்கள் சதோபிரதானமாக இருக்கிறீர்களோ அப்போது முழு உலகத்தின் வாயுமண்டலமும் இயற்கையும் தங்கயுக சதோபிரதானமாக இருக்கிறது. பூர்வீக ஆத்மாக்களாகிய உங்களுடைய கர்மத்தின் விதி தன்னோடு கூடவே சர்வ ஆத்மாக்களுடனும் மேலும் சிருஷ்டி சக்கரத்துடனும் சம்மந்தமுடையது. அப்படிப்பட்ட மகான் ஆத்மாக்கள் நீங்கள்.

3. உலகின் ஆரம்பத்தில் ஆத்மாக்கள் உங்களுக்கு மட்டுமே பாகம் இருக்கிறது, அதனால் மிகப் பெரிய, அனைத்து ஆத்மாக்களுக்கும் பூர்வீகமானவர்கள் நீங்கள்தான். அதோடுகூடவே மிக உயர்ந்த தந்தையின் முதலாவது படைப்பாக இருப்பவர்கள் பிராமணர்கள் நீங்களே. எனவே பகவான் எப்படி உயர்ந்தவரோ அதேபோல மிக உயர்ந்த முன்னோர்களும் நீங்களே.

4. இந்த சிருஷ்டி சக்கரத்திற்குள் யாரையெல்லாம் விசேசமாக தர்மத்தின் தந்தை என்று சொல்லி வருகிறார்களோ அந்த தர்மத் தந்தைகளுக்கும் பூர்வீக ஆத்மாக்களாகிய உங்கள் மூலமாகவே பாபாவின் அறிமுகம் கிடைக்கிறது, அதன் ஆதாரத்திலேயே தக்க சமயத்தில் அந்த தர்ம பிதாக்கள் தனது தர்மத்தின் ஆத்மாக்களுக்கு செய்தியளிப்பதற்கு நிமித்தமாகிறார்கள். பிரம்மா பாபா கிரேட் கிரேட் கிராண்ட் பாதராக இருக்கிறார், பிரம்மாவின் கூடவே பிராமணர்கள் நீங்களும் துணையாக இருக்கிறீர்கள். அதனால் நீங்களும் எல்லோருக்கும் பூர்வீகமானவர்களே.

5. பூர்வீக ஆத்மாக்களாகிய உங்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எல்லா ஆத்மாக்களுடனும் கனெக்ஷன் இருக்கிறது. மரத்தின் அனைத்து கிளைகளுக்கும் வேரோடு அல்லது அடிமரத்தோடு கட்டாயம் சம்மந்தம் இருக்கும். எனவே எந்தவொரு தர்மத்தின் கிளையும் அது சிறியதோ பெரியதோ, அவை அனைத்திற்கும் சம்மந்தம் தானாகவே உங்களுடன் இருக்கிறது. எப்படி வேர் அல்லது அடிமரத்தில் இருந்து முழு மரத்தின் இலைகளுக்கும் தண்ணீர் கிடைக்கிறதோ, அதேபோல ஒவ்வொரு ஆத்மா வடிவ இலைக்கும் உங்களிடமிருந்து தண்ணீர் கிடைக்கிறது. நீங்கள் அந்த அனைவரையும் வளர்ப்பதற்கான பொறுப்புடைய ஆத்மாக்கள்.

6. எப்போது எந்த தர்ம ஆத்மாக்களைப் சந்தித்தாலும் அல்லது பார்த்தாலும் ஏ! பூர்வீக ஆத்மாக்களே! இந்த ஆத்மாக்கள் எல்லோரும் நமது கிரேட் கிரேட் கிராண்ட்பாதரின் வம்சாவளிகள் என அனுபவம் செய்கிறீர்கள் அல்லவா! பிராமண ஆத்மாக்கள் நாமும் மாஸ்டர் கிரேட் கிரேட் கிராண்ட் பாதராக இருக்கிறோம் அதாவது பூர்வீகர்களாக இருக்கிறோம், இவர்கள் எல்லோரும் நம்மவர்களே. பூர்வீக ஆத்மாக்களாகிய நீங்கள் அண்ணன்மார்கள் அதாவது பாபவிற்குச் சமமானவர்கள்.

7. தற்சமயத்தில் எல்லா ஆத்மாக்களும் இரண்டு நிமிடமாவது சுகம் மற்றும் நிம்மதியோடு வாழ நினைக்கிறார்கள், நிம்மதியில்லை. செல்வமும் சாதனங்களும் இருந்தபோதும் சுகம் மற்றும் நிம்மதியான தூக்கம் கண்களில் இல்லை. அனேக விதமான அற்பகால பாதையை அனுபவம் செய்கிறார்கள், திருப்தி கிடைக்காத காரணத்தால் இப்போது அந்த அனேக பாதைகளில் இருந்து மெல்ல மெல்ல திரும்பி வருகிறார்கள். "உண்மையான பாதை வேறு ஏதோ இருக்கிறது" என உணர ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் பூர்வீக ஆத்மாக்களாகிய உங்களுடைய வேலை யாதெனில் விளக்காகி வழிகாட்டுங்கள். அமரஜோதியாகி இருளில் இருந்து மீட்டு இலக்கை நோக்கி அழைத்து வாருங்கள்.

8. பூர்வீகர்களாகிய உங்களது உணர்வுகள் உலகின் சூழ்நிலையை மாற்றக் கூடியது. உங்களுடைய பார்வை எல்லா வம்சாவளியினருக்கும் சகோதரத்துவ நினைவைக் கொடுக்கக்கூடியது. பூர்வீகர்களாகிய உங்களுடைய நினைவு நமது பாபா வந்து விட்டார் என்ற நினைவை அனைத்து வம்சாவளியினருக்கும் ஏற்படுத்தக்கூடியது. பூர்வீகர்களாகிய உங்களுடைய சிறந்த செயல்கள் வம்சாவளியினருக்கு சிறந்த சரித்திரம் அதாவது சிறந்த வாழ்வை ஏற்படுத்துவதற்கான நல்லாசையை உற்பத்தி செய்கிறது.

9. நீங்கள் எல்லையற்ற நினைவு சொரூபமாகுங்கள், எப்போதும் தான் முன்னோர் என்ற உயர்ந்த நிலையில் நிலைத்து இருங்கள் அப்போது சாதாரண வீண் விசயங்கள், குழந்தைத் தனமான கவனக்குறைவான விசயங்கள் எல்லாம் தானே முடிவடைந்து விடும். தனது எல்லையற்ற பெரியமனித தன்மைக்கு வாருங்கள் அப்போது அனுபவி மூர்த்தி ஆகிவிடுவீர்கள். இப்போது உங்கள் வம்சாவளியினர் பூர்வீகர்களாகிய உங்கள் மூலமாக ஏதாவது புதுமையை விரும்புகிறார்கள். எனவே உங்கள் சிறந்த எண்ணங்களின் சக்தியையும், சுப உணர்வுகளின் சக்தியையும், அன்பு மற்றும் ஒத்துழைக்கும் திருஷ்டியின் அனுபவத்தையும் ஏற்படுத்துங்கள்.

10. ஏ! பூர்வீக ஆத்மாக்களே! உங்களுடைய வம்சாவளியினரின் ஆசை தீபத்தை ஏற்றி, அவர்களை சரியான இலக்கை அடையச் செய்யுங்கள். வார்த்தையின் குண்டுகள் குழந்தை குண்டுகளாக இருக்கிறது. இப்போது பிராப்திகளின் அனுபவ குண்டுகளை வீசுங்கள், அவைகள் நேரடியாக வாழ்வை மாற்றிவிட வேண்டும். மூளை வரை அம்பு பாய்ந்திருக்கிறது இப்போது அது இதயத்தை துளைக்கட்டும்.

11. அந்தமாதிரி சக்திசாலி சேவையின் சக்கரம் சுழற்றுங்கள் அதன்மூலம் எல்லா ஆத்மாக்களும் பூர்வீகர்களாகிய உங்களை அறிந்து பிராப்தியின் அதிகாரத்தை பெற்றுவிட வேண்டும். கொஞ்சம் கேட்டோம், நல்லது கேட்டோம் என்பதற்குப் பதிலாக கொஞ்சம் கிடைத்தது என்று அனுபவம் பெறட்டும். நன்றாக சொல்கிறார்கள் அப்படியல்ல, நல்லவர்களாக ஆக்குகிறார்கள். குறைந்த செலவு, குறைந்த சக்தி, குறைந்த நேரம் இந்த விதிமூலமாக வெற்றி சொரூபமாகுங்கள்.

12. எந்த ஆத்மாக்கள் உங்கள் உறவு-தொடர்பில் வருகிறார்களோ அவர்கள் தாய் தந்தைக்குச் சமமான பராமரிப்பின் விசேசத்தை அனுபவம் செய்ய வேண்டும் அப்போதே இவர்கள் எங்கள் முன்னோர்கள் என்று சொல்வார்கள். இவர்கள் மூலமாக வாழ்க்கையின் உண்மையான அன்பும் வாழ்வை உன்னதமாக்குவதற்கான சாதனங்களும் கிடைக்கும் என்பார்கள், ஏனெனில் பராமரிப்பின் மூலமாகவே அன்பும் வாழ்வில் உன்னதமும் ஏற்படுகிறது. தனக்கு பாபா மூலமாக கிடைத்த அனைத்து சக்திகளையும் மற்ற ஆத்மாக்களுக்குள் நிரப்புவதே அலௌகீக பராமரிப்பின் சொரூபமாகும்.

13. அனேக ஆத்மாக்கள் பூர்வீக, பூஜைக்குரிய ஆத்மாக்களாகிய உங்களை நோக்கி சாந்தி தேவா! சாந்தி தேவா! என்று சொல்லி நினைவு செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் அமைதியளிக்கும் ஆத்மாக்கள், மாஸ்டர் அமைதிக் கடலானவர்கள், மாஸ்டர் அமைதி சூரியன்கள், தமது அமைதியின் கிரணங்களால், அமைதியின் அலைகளால் வள்ளலின் குழந்தைகளே வள்ளலாகி அனைவருக்கும் கொடுங்கள். இப்போது உங்கள் பூஜைக்குரிய சொரூபம் பிரத்யட்சம் ஆக வேண்டும். பூஜைக்குரியவர்கள், பூஜை செய்பவர் அல்ல. இங்கிருந்தே எல்லா மன ஆசைகளும் நிறைவேற வேண்டும், இப்போது இந்த அனுபவத்தை ஏற்படுத்துங்கள்.

14. தனது பூர்வீக சொரூபத்தை நினைவில் வைத்து உலகின் அனைத்து ஆத்மாக்களையும் கருணையின் பாவனையோடு பாருங்கள். வரதானியாகி சுபபாவனை மற்றும் சுப ஆசைகளின் வரதானம் கொடுங்கள். நீங்கள் சாதாரணமானவர்கள் அல்ல பூர்வீக ஆத்மாக்கள். பூர்வீகர் என்றால் கருணை உள்ளமுடைய ஆத்மா. கருணை பாவனை, சுபபாவனை இவையே உலகிற்கு அவசியமாக தேவைப்படுகிறது.

# 27. உதவி செய்பவர் ஆகுங்கள் மேலும் உதவி செய்பவர் ஆக்குங்கள்

1. எப்படி பிரஜைகள் ராஜாவுக்கு உதவிகரமாகவும், அன்புடனும் இருக்கிறாகளோ, அதேபோல முதலில் உங்கள் அனைத்து கர்மேந்திரியங்களும், விசேச சக்திகளும் எப்போதும் அன்புடனும் உதவிகரமாகவும் இருக்க வேண்டும், அப்போது உங்களோடு சேவைக்கு துணையாக இருப்பவர்கள், அல்லது லௌகீக உறவினர்கள் மற்றும் கூட இருப்பவர்கள் மீது இதன் பிரபாவம் ஏற்படும். எப்போது தானே தனது கர்மேந்திரியங்கள் அனைத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறீர்களோ அப்போது உங்கள் மற்ற எல்லா துணைவர்களும் உங்களுடைய காரியத்தில் உதவி செய்வார்கள்.

2. யார்மீது அன்பு இருக்கிறதோ அவருடைய ஒவ்வொரு காரியத்திலும் கட்டாயம் உதவி செய்கிறீர்கள். அதிக அன்புடைய ஆத்மாக்களின் அடையாளம் என்னவென்றால் அவர்கள் எப்போதும் பாபாவின் உயர்ந்த காரியத்தில் உதவியாளர்களாக இருப்பார்கள். எந்த அளவு உதவியாக இருக்கிறார்களோ, அந்த அளவு சகஜ யோகிகளாகவும் இருப்பார்கள். எனவே இரவு பகலாக இதே ஈடுபாடு இருக்க வேண்டும் - பாபா மற்றும் சேவை, இதைத்தவிர வேறு எதுவுமே கிடையாது. அவர்கள் மாயாவிற்கு உதவியாளர்களாக முடியாது, மாயாவிடம் இருந்து ஒதுங்கி இருப்பார்கள்.

3. ஒருவர் தன்னை எவ்வளவுதான் தனி வழியில் செல்பவராக நினைக்கட்டும் ஆனால் ஈஸ்வரிய அன்பு அவரை உதவி செய்பவராக ஆக்கி நாமெல்லாம் ஒன்று என்ற உணர்வை ஏற்படுத்தி முன்னேறுவதற்கான சூத்திரத்தில் கட்டிவைத்து விடுகிறது. அன்பு முதலில் உதவியாளர் ஆக்குகிறது, உதவியாளர் ஆக்கி தக்க சமயத்தில் தானாகவே சகஜயோகி ஆக்கி விடுகிறது.

4. ஈஸ்வரிய அன்பு மாற்றத்திற்கான அஸ்திவாரமாகும் அதாவது வாழ்க்கையை மாற்றுவதற்கான விதை சொரூபமாகும். எந்த ஆத்மா மீது ஈஸ்வரிய அன்பினுடைய அனுபவத்தின் விதை போடப்படுகிறதோ, அந்த விதை உதவியாளராகச்செய்யும் மரத்தை தானே வளர்த்துக் கொண்டிருக்கும், மேலும் தக்க சமயத்தில் சகஜயோகி ஆக்கக்கூடிய கனியை வெளிப்படுத்தும், ஏனெனில் மாற்றத்திற்கான விதை கட்டாயம் அதன் கனியைக் கொடுக்கும்.

5. அனைவருடைய மனதின் சுப பாவனை மற்றும் சுப ஆசைகள் என்ற உதவி எந்தவிதமான காரியத்திலும் வெற்றியை கொண்டு வருகிறது. ஏனெனில் இந்த சுபபாவனை, சுப ஆசைகளின் கோட்டை, ஆத்மாக்களை மாறச் செய்து விடுகிறது. வாயுமண்டலத்தின் கோட்டை அனைவரது உதவியின் மூலமாகவே உண்டாகிறது. ஈஸ்வரிய சினேகத்தின் சூத்திரம் ஒன்றாக இருக்குமானால் வேறுபட்ட சிந்தனைகள் இருந்தபோதும் உதவியாளர் ஆவதற்கான சிந்தனையை உருவாக்கிவிடும்.

6. இப்போது எல்லா துறையினரையும் உதவியாளர்கள் ஆக்குங்கள். ஆகிக்கொண்டிருக்கிறார்கள் ஆனால் இன்னும் நெருக்கமாக, உதவி செய்பவராக ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். ஏனெனில் இப்போது பிரத்யட்சத்தின் நேரம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. முன்பு நீங்கள் அவர்களை உதவியாளர்கள் ஆக்குவதற்கு முயற்சி செய்தீர்கள் ஆனால் இப்போது அவர்கள் தானே உதவி செய்வதற்கு முன்வருகிறார்கள் இனிமேலும் செய்துகொண்டே இருப்பார்கள்.

7. நேரத்திற்குத் தக்கபடி அவ்வப்போது சேவையின் ரூபரேகைகள் மாறிக்கொண்டிருக்கிறது மேலும் மாறிக்கொண்டே இருக்கும். இப்போது நீங்கள் அதிகம் சொல்ல வேண்டியதில்லை ஆனால் அவர்கள் தானே இது சிறந்த செயல், அதனால் நாமும் உதவியாளராக ஆகியே தீர வேண்டும் என்று சொல்வார்கள். யார் உண்மையான மனதோடு, அன்போடு உதவி செய்கிறார்களோ, அவர்கள் பாபாவிடம் இருந்து கோடி மடங்கு உதவிபெற அதிகாரியாகிறார்கள். உதவி செய்ததற்கான கணக்கை பாபா முழுமையாக தீர்த்து விடுகிறார்.

8. பெரிய காரியத்தையும் எளிதாக்குவதற்கான சித்திரமாக, மலையை தூக்குவதற்கு விரல் கொடுத்ததாகக் காட்டப்பட்டுள்ளது, இது உதவியின் அடையாளமாகும் எனவே ஒவ்வொருவரும் உதவிசெய்பவராக முன்னால் வரவேண்டும், தக்க சமயத்தில் உதவி செய்ய வேண்டும் - இப்போது அதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்காக சக்திமிக்க அம்பு எய்ய வேண்டியதாக உள்ளது. யாரிடத்தில் எல்லா ஆத்மாக்களுக்கும் உதவ வேண்டும் என்ற பாவனை உள்ளதோ, மகிழ்ச்சியின் பாவனை உள்ளதோ, நல்ல பாவனை உள்ளதோ அவர்களே சக்திமிக்க அம்பை எய்ய முடியும்.

9. எல்லோருடைய உதவியையும் பெறுவதற்கு ஆதாரமாக இருப்பது சுபசிந்தனை நிலை. யார் எல்லோர்மீதும் சுபசிந்தனை உடையவராக இருக்கிறாரோ, அவருக்கு எல்லோரிடமிருந்தும் உதவி தானாகவே கிடைக்கிறது. சுப சிந்தனையின் பாவனை மற்றவர் மனதில் உதவி செய்யும் எண்ணத்தை சகஜமாகவும் தானாகவும் உற்பத்தி செய்கிறது. அன்பே உதவியாளர் ஆக்கி விடுகிறது. எனவே எப்போதும் நல்ல எண்ணங்களால் நிறைந்து இருங்கள், சுப சிந்தனையாளராகி அனைவரையும் அன்பு உடையவராகவும் ஒத்துழைப்பு தருபவராகவும் ஆக்குங்கள்.

10. யார் எந்த அளவு தேவைப்படும் சமயத்தில் உதவி செய்கிறார்களோ – அது வாழ்க்கையால் இருக்கலாம் அல்லது சேவையால் இருக்கலாம் . . . அப்படிப்பட்டவருக்கு நாடகப்படி விசேச பலம் கிடைக்கிறது. தனது முயற்சி இருக்கவே இருக்கிறது, இருந்தும் எக்ஸ்ட்ரா பலம் கிடைக்கிறது. சேவையின் திட்டத்தை உங்களுக்குள் எவ்வளவு அருகில் கொண்டு வருகிறீர்களோ அவ்வளவு சேவைக்கான பிரத்யட்ச ரிசல்ட் தெரிய வரும்.

11. எந்த சேவை செய்தாலும் அதில் இந்த இலட்சியம் கொள்ளுங்கள், அதாவது பிறரை நீங்கள் அந்தமாதிரி உதவி செய்பவராக்கவேண்டும், அதன் மூலம் நீங்கள் சக்தி சொரூபம் (மைட்) ஆகவேண்டும் அவர்கள் மைக் ஆக வேண்டும். எனவே சேவையின் இலட்சியம் மைக்கை தயார் செய்வது, அவர்கள் தங்கள் அனுபவத்தின் ஆதாரத்தில் உங்களுடைய, அல்லது பாபாவுடைய ஞானத்தை பிரத்தியட்சம் செய்யவேண்டும். யாருடைய பிரபாவம் தானாகவே பிறர்மீது எளிதில் ஏற்படுமோ, அப்படிப்பட்ட மைக்கை தயார் செய்யுங்கள். தன்னுடைய சக்தியை ஈடுபடுத்துவதற்குப் பதிலாக மற்றவர்களுடைய சக்தியை இந்த ஈஸ்வரிய காரியத்தில் ஈடுபடுத்தச் செய்ய வேண்டும் என்ற இலட்சியம் கொள்ளுங்கள். தேசம் சிறியதோ பெரியதோ, ஒவ்வொரு தேசத்திலும் எந்தவொரு துறையின் உதவியையும் பெற முடியும்.

12. தற்சமயத்தில் அப்படிப்பட்ட சில இயக்கங்கள் இருக்கிறது, அவர்களிடம் சக்தி இருக்கிறது, ஆனால் அதனை பயண்படுத்துவதற்கான முறையை அறியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட நோக்கம் எதுவும் தோன்றுவதில்லை. அவர்கள் மிகவும் அன்பாக உங்களுக்கு உதவி செய்வார்கள், அருகில் வருவார்கள். மேலும் உங்கள் ஒன்பது இலட்சம் பிரஜைகளாகக் கூட பெருக்க மடைவார்கள். சில வாரிசுகள் வருவார்கள், சில பிரஜைகளும் வருவார்கள்.

13. இதுவரை யார் உதவி வருகிறார்களோ அவர்களை வாரிசாக்குங்கள். ஒரு பக்கம் வாரிசை உருவாக்குங்கள், இன்னொரு பக்கம் மைக்கை உருவாக்குங்கள். உலகிற்கு நன்மை செய்பவர் ஆகுங்கள். எப்படி ஒத்துழைப்பின் அடையாளமாக கையோடு கை கோர்த்து காட்டுகிறார்கள் அல்லவா. அதேபோல எப்போதும் பாபாவிற்கு உதவிகரமாக இருக்க வேண்டும் - இதுவே கையோடு கை கோர்ப்பதும் புத்தியால் எப்போதும் கூடவே இருப்பதுமாகும்.

14. எந்த காரியம் வேண்டுமானாலும் செய்யுங்கள் அதை தான் செய்தாலும் பரந்த உள்ளத்தோடு செய்யுங்கள் மேலும் மற்றவரை உதவியாளர் ஆக்குவதிலும் பரந்த இதயம் உடையவர் ஆகுங்கள். ஒருபோதும் தன்மீதோ, ஒத்துழைக்கும் ஆத்மாக்கள் மீதோ, துணையாக இருப்பவர்கள்மீதோ குறுகிய மனப்பான்மை உடையவராக இருக்காதீர்கள். பரந்த இதயம் உடையவராக இருப்பதன் மூலம் - பாடப்படுவது போல மண்ணெல்லாம் பொன்னாகும், பலவீனமான துணையும் சக்திசாலி துணையாகிவிடுவர், நடக்க முடியாததும் வெற்றி சம்பவமாகிவிடும்.

# 28. பரமாத்மாவின் பிரத்யட்சத்திற்காக தெய்வீக தரிசிக்கத்தகுந்த மூர்த்தியாகுங்கள்

1. எப்படி பிரம்மா பாபாவின் முன்னால் வந்தவுடனேயே ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய பாவனைக்கேற்ப ஏதேனும் காட்சியோ அல்லது அனுபவமோ கிடைத்தது. அதேபோல குழந்தைகள் உங்கள் மூலமாகவும் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஏதாவது தெய்வீக அனுபவம் அல்லது காட்சி கிடைக்க வேண்டும், இதற்காக தெய்வீகம் நிரம்பியவர் ஆகுக. உங்களது பேச்சு வார்த்தைகளை அலௌகீகமாக மாற்றுங்கள், உங்களுடைய ஒவ்வொரு சொல்லும், நடத்தையும், முகமும் இவர் தரிசிக்கத்தக்க மூர்த்தி என்பதை சொல்லவேண்டும்.

2. எப்போது நீங்கள் உங்கள் அவ்யக்த ஒளிவடிவை காட்டுகிறீர்களோ அப்போது தரிசிக்கத்தகுந்த மூர்த்தியாக அல்லது காட்சி தரும் மூர்த்தியாக ஆகமுடியும். யார் உங்கள் முன்னால் வந்தாலும் அவர்களுக்கு உங்கள் உடல் தெரியக் கூடாது, ஆனால் உங்களுடைய சூட்சும பிரகாசமய வடிவம் தெரிய வேண்டும். வெறும் நெற்றியின் ஒளிமட்டுமல்ல, ஆனால் முழு உடலின் மூலமாக ஒளியின் காட்சி ஏற்பட வேண்டும். எப்போது அந்த ஒளியோ ஒளியாக இருப்பதைக் காண்கிறார்களோ அப்போது தானும் ஒளிரூபமாகிவிடுவார்கள்.

3. பக்தியில் உள்ள நியமம் என்னவென்றால், கொஞ்சம் சிதைந்திருந்தாலும் அந்த மூர்த்தி பூஜைக்கோ அல்லது கோவிலில் வைப்பதற்கோ தகுதிபெற முடியாது, அதோடு தரிசிக்கதகுந்த மூர்த்தியாகவும் ஆகமுடியாது. நாடகத்தின் திரை விலகிய பிறகு மூர்த்தி முழுமையாக இல்லையென்றால் அது என்ன அழகாக இருக்குமா? எப்படி அலங்காரத்தில் பதினாறு அலங்கார ங்கள் பிரசித்தமாக இருக்கிறதோ, அதேபோல எப்போது முழுமையாக பதினாறு கலைகள் நிறைந்தவர் ஆகிறீர்களோ, அப்போது தரிசிக்கத் தகுந்த மூர்த்தியாவீர்கள். இதற்காக தன்னை நிரம்பியவராக்க பிராக்டிகல் திட்டம் தீட்டுங்கள்.

4. நீங்கள் அப்படிப்பட்ட சிறந்த ஆத்மாக்களாக இருக்கிறீர்கள் அதனால் உங்களுடைய ஒவ்வொரு செயலும் லீலை வடிவில் பாடப்படுகிறது. அந்த லீலைகளுக்கு இன்றுவரை பூஜை நடந்து வருகிறது. இன்று வரை பக்தர்கள் தரிசிக்கதக்க மூர்த்திகளான உங்களது ஒரு நொடி தரிசனத்திற்காக தவித்துக்கொண்டிருகிறார்கள். அப்படிப்பட்ட பக்தர்களை சந்தோஷப் படுத்துவதற்காக மனதில் இரக்கத்தையும், நன்மை செய்யவேண்டும் என்ற சுபபாவனையையும் தோற்றுவியுங்கள்.

5. எப்படி ஜட சித்திரங்களை தரிசிப்பதற்காக பக்தர்களின் கியூ உருவாகிறதோ, அதேபோல சைத்தன்யத்திலும் உங்களுடைய பக்தர்களின் கியூவை அனுபவம் செய்ய வேண்டும். பாப்தாதா எப்போது உலகை வலம் வருகிறார்களோ அப்போது பக்தர்களின் அலைச்சல், புகார்கள் ஆகியவைகளைப் பார்க்கும்போது, கேட்கும்போது, பாவமாக இருக்கிறது. பாப்தாதா தான் காட்சி தரவேண்டும் பக்தர்களின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் நாடகத்தில் பெயர் குழந்தைகளுக்கு, காரியம் பாபாவுடையதாக இருக்கிறது. எனவே குழந்தைகள் நிமித்தமாகியே தீரவேண்டும்.

6. முழு உலகமே உலகின் கண்களான உங்களிடமிருந்து ஒருநொடி திருஷ்டி பெறுவதற்காக, எப்போது எங்களுடைய இஷ்ட தேவன் அல்லது தேவியின் பார்வை எங்கள்மீது படும் அதன்மூலம் நாங்கள் பார்வையால் பரவசமடைவோம் என காத்துக் கிடக்கிறார்கள். அப்படி பார்வையால் பரவசமடையச் செய்யும் உங்கள் கண்களில் ஒருவேளை களங்கம் இருக்குமானால் பிறரை எப்படி பார்வையால் பரவசமடையச் செய்வீர்கள். அதனால் சம்பூரணம் என்ற கண் திறந்தே இருக்கட்டும். இப்போது கண்களை களங்கமாக்குவது மேலும் அசட்டையாக இருப்பதை முடித்து விடுங்கள் அப்போதே தரிசனம் தரும் மூர்த்தியாக முடியும்.

7. இப்போது துடித்துக்கொண்டிருக்கும் அனேக ஆத்மாக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதற்காக எல்லாம் நிறைந்த தரிசனம் தரும் மூர்த்தியாகி அனைவருக்கும் தரிசனம் தாருங்கள், அப்போது பிரத்யட்சம் ஏற்படும் பின்னர் முக்தியின் கதவு திறக்கும்.

8. இப்போது துக்கம் அசாந்தியின் அனுபவம் தீவிரமாகிக்கொண்டிருக்கிறது – அதை உங்கள் கடைசிநிலை மூலமாக முடிப்பதற்கான காரியத்தை இப்போது வெகு தீவிரமாக செய்யுங்கள். மாஸ்டர் படைப்பவர் என்ற நிலையில் நிலைத்திருந்து நீங்கள் உங்கள் படைப்பின் எல்லையற்ற துக்கம்-அசாந்தியின் பிரச்சினைகளை முடித்து வையுங்கள் - துன்பத்தை நீக்கி சுகம் தரும் தனது பாகத்தை செயல் படுத்துங்கள்.

9. சுயதரிசனதாரிதான் உலக தெய்வீக தரிசிக்கததகுந்த நிலையை அடைகிறார். ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு எண்ணத்திலும், சுயதரிசனத்தின் மூலமாகவே தெய்வீக தரிசனத்தைக் காணச் செய்யமுடியும். சுயதரிசன நிலையில் நிலைத்திருப்பவர்கள் போகும்போதும் சுற்றும்போதும் இயற்கையான ரூபத்தில் தனது தெய்வீக எண்ணங்கள், தெய்வீக பார்வை, தெய்வீக பேச்சு, தெய்வீக செயல் மூலமாக பிற ஆத்மாக்களுக்கும் தெய்வீக மூர்த்தியின் அனுபவம் பெறச் செய்வார்கள். சாதாரணத் தன்மை தெரியாது, தெய்வீகம் தெரியும்.

10. தற்சமயம் ஒவ்வொரு பிராமண ஆத்மாவும், தெய்வீகத்தை அனுபவம் செய்ய வேண்டும், பிறரையும் அனுபவிக்கச் செய்ய வேண்டும். எதிர்காலத்தில் தேவதைகள் ஆவீர்கள் எனினும் இப்போது தெய்வீக சொரூபமாக வேண்டும். தெய்வீக சொரூபத்திலிருந்து தேவதை சொரூபம் பெறவேண்டும். பரிஸ்தா என்றால் தெய்வீக சொரூபம். தெய்வீகத்தின் சக்தி சாதாரணத் தன்மையை அழித்து விடுகிறது. எந்த அளவிற்கு தெய்வீக சக்தியை ஒவ்வொரு காரியத்திலும் கொண்டு வருகிறீர்களோ அந்த அளவே அனைவரது மனதில் இருந்தும் வாயில் இருந்தும் இவர்கள் தெய்வீக தரிசிக்கத்தக்க மூர்த்திகள் என்ற வார்த்தை தானே வெளிவரும்.

11. அனேக பக்தர்கள் காட்சி காணும் விருப்பத்துடன் இருக்கிறார்கள், அப்படிப்பட்ட காட்சிகாணும் விருப்பமுடைய ஆத்மாக்களின் முன்னிலையில் சுயம் தெய்வீக தரிசன மூர்த்திகளான நீங்கள் பிரத்யட்சமானால் எல்லா ஆத்மாக்களும் தரிசனம் கண்டு மகிழ்ச்சியடைவார்கள் மேலும் மகிழ்ச்சி அடைந்ததன் காரணத்தால் தெய்வீக தரிசன மூர்த்தி ஆத்மாக்களாகிய உங்கள் மீது மகிழ்ச்சியின் மலர் தூவுவார்கள்.

12. கோவிலில் கூட பாருங்கள் சில மூர்த்திகளின் ஒவ்வொரு செயலுக்கும் தரிசனம் காட்டப்படுகிறது. இப்போது பகவான் பள்ளி கொண்டுள்ளார், இப்போது குளிக்கிறார், இப்போது சாப்பிடுகிறார், இப்போது அலங்காரம் செய்து கொண்டு இருக்கிறார் . . . . என எல்லா செயலுக்கும் தரிசனம் காட்டப்படுகிறது. ஒவ்வொரு செயல் செய்யும்போதும் நீங்கள் தரிசன மூர்த்திகளாக இருக்கிறீர்கள் என்பது இதிலிருந்து நிரூபணமாகிறது. அதனால் ஒவ்வொரு செயலும் தரிசனமாகக் காட்டப்படுகிறது.

13. தரிசனத்திற்காக திரையை விலக்குகிறார்கள். திரை அகன்ற உடனேயே தரிசனம் கிடைக்கிறது. எனவே அப்படிப்பட்ட முழுமையாக தரிசன சொரூபமாகுங்கள், அதன்மூலம் நேரத்தின் திரை விலகியவுடனே உங்கள் தெய்வீக தரிசனம் தரும் மூர்த்தி உலகில் பிரத்தியட்சம் ஆகட்டும். அப்படி தயாராக இருக்கிறீர்களா? அல்லது நேரம் வரும்போது தயாராவீர்களா! யார் நேரம் வரும்போது தயாராவார்களோ அவர்கள் தன்னை தயாராக்குவதிலேயே இருந்து விடுவார்கள், அவர்களால் தரிசனம் தரும் மூர்த்தியாக முடியாது.

14. இப்போது ஒவ்வொருவரும் தன்னைத்தானே பாருங்கள் - நாம் அந்தமாதிரி தெயவீக தரிசன மூர்த்தியாக தரிசனம் தர தகுதி உடையவராக, எல்லா அலங்காரங்களும் நிறைந்தவர்களாக இருக்கிறோமா? பாபாவிற்குச் சமமாக பாவகடேஷ்வரர் சொரூபத்தில் நிலையாக இருக்கிறோமா? பாவகடேஷ்வரர் அல்லது பாவத்தை அழிப்பவராவதற்கு நினைவை ஜுவாலை சொரூபமாக் குங்கள்.

# 29. நடைமுறை நிரூபணம் மற்றும் திடமான வாக்குறுதி மூலம் பரமாத்மாவை பிரத்யட்சம் செய்யுங்கள்

1. பரமாத்மாவை வெளிப்படுத்துவதற்காக இப்போது நேரத்திற்குத் தக்கபடி அல்லது பாபாவின் படிப்பிற்குத் தக்கபடி, உலகின் முன்னால் தன்னை நடைமுறை நிரூபணமாக்குங்கள். யார் உங்களைப் பார்த்தாலும் இவர்களுக்கு பாடம் கற்பிப்பவர், அல்லது இவர்களை உருவாக்குபவர் சுயம் சர்வசக்திவான் பாபா என்பதை உணர வேண்டும். அப்படி நடைமுறை நிரூபணமே பாபாவை பிரத்தியட்சம் செய்வதற்கான எளிய மற்றும் சிறந்த சாதனமாகும்.

2. நடைமுறை நிரூபணம் என்றால் யாராக இருக்கிறீர்களோ, யாருடையவராக இருக்கிறீர்களோ அந்த நினைவிலேயே இருக்க வேண்டும். யாராவது உங்களை பார்த்தால், பார்க்கப் பார்க்க அவர்களுக்கு பாபாவின் நினைவு தானாகவே வரவேண்டும், ஒவ்வொருவரின் உள்ளத்தில் இருந்தும் இவர்களை இப்படி ஆக்குபவரின் அதிசயம் இது, என்பது வரவேண்டும் அப்போது பாபா பிரத்தியட்சமாகிவிடுவார். பாபா உங்கள் மூலமாக தெளிவாகத் தெரிய வேண்டும், நீங்கள் மறைந்து விடவேண்டும். இப்போது நீங்கள் வெளிப்படையாக இருக்கிறீர்கள், பாபா மறைந்திருக்கிறார், பின்னர் ஒவ்வொருவரும் தங்கள் உள்ளத்தில் பாபாவின் பிரத்யட்சப் பாடலைப் பாடிக்கொண்டே நீங்கள் சொல்வதை கேட்பார்கள்.

3. உலக நன்மை செய்யும் சேவை களத்தில் எளிதில் வெற்றி பெறுவதற்கான சகஜ சாதனம் - நடைமுறையில் வாழ்ந்து காட்டி பாபாவை வெளிப்படுத்துவதாகும். எதைச் சொல்கிறீர்களோ அதைப் பார்க்கவேண்டும். பிராமணர்கள் நாங்கள் சர்வ சக்தியுடையவர்கள். மாயையை வென்றவர்கள், கருணை உடையவர்கள், ஆன்மீக சேவாதாரிகள் என்றெல்லாம் சொல்கிறீர்கள், எனவே எதைச் சொல்கிறீர்களோ அதன் சொரூபமாக நடைமுறையில் வாழ்ந்து காட்டுங்கள்.

4. எப்படி வார்த்தை மூலமாக எடுத்துச் சொல்லும்போது வார்த்தையின் பிரபாவம் ஏற்படுகிறதோ, அதைவிட அதிக பிரபாவம் குணம் மற்றும் செயல் மூலமாக ஏற்படும். எனவே இவர்கள் கண்களில் ஏதோ சிறப்பு இருக்கிறது என ஒவ்வொரு குழந்தையின் கண்கள் மூலமாக அனுபவம் ஏற்படவேண்டும். சாதாரண நிலையை அனுபவம் செய்யக்கூடாது. அலௌகீகத்தை காண வேண்டும். இவர்கள் எப்படி இப்படி ஆனார்கள், எங்கிருந்து ஆனார்கள் என்ற கேள்விகள் அவர்கள் மனதில் எழவேண்டும். உங்களை இப்படி ஆக்கியது யார்? என அவர்கள் யோசிக்க வேண்டும், கேட்கவும் வேண்டும். எனவே உங்கள் நிலை மூலமாக பாபாவை பிரத்தியட்சம் செய்யுங்கள்.

5. இந்த மனித உலகில், இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்துகொண்டே அப்படிப்பட்ட புனித ஆத்மாக்களாக யாரேனும் ஆகமுடியுமா! என இன்றைய காலத்தில் அனேக ஆத்மாக்கள் யோசிக்கிறார்கள். எனவே அப்படி ஆகமுடியும் நாங்கள் ஆகி இருக்கிறோம் என அவர்களை அறியச் செய்யுங்கள். இந்தகாலத்தில் நேரடியாகக் காண்பதையே அதிகமாக ஏற்கிறார்கள். கேட்பதைவிட அதிகமாக பார்க்க விரும்புகிறார்கள். எனவே நாலா புறமும் ஒவ்வொரு குழந்தையும் பாபாவுக்குச் சமமாக நேரடிச் சான்றாக வேண்டும் அப்போது ஏற்கவும் அறியவும் சிரமம் இருக்காது மேலும் பாபா பிரத்தியட்சமாகி விடுவார்.

6. எவைகள் குழந்தைகள் உங்களது சிறந்த சுயமரியாதைகளோ, வாழ்வின் சிறப்புகளோ, அவைகளை முதலில் தனக்குள் பிரத்தியட்சம் செய்யுங்கள். எப்போது தன்னிடத்தில் இந்த பிரத்தியட்சம் வருகிறதோ அப்போது உலகத்தில் பரமாத்மாவின் பிரத்தியட்சம் ஏற்படும்.

7. எப்படி மேகத்தைப் பார்த்தால் மழை வரப்போகிறது என்பது தெரிகிறதோ, அதேபோல குழந்தைகள் உங்களிடம் தன்னை மாற்ற வேண்டும் என்ற எந்த உற்சாகம் இருக்கிறதோ, தத்தமது பிரத்தியட்சத்தை வெளியில் கொண்டு வருகிறீர்களோ – அதுவே இது பிரத்தியட்சத்திற்கான நேரம் நெருங்கி விட்டது என்பதற்கான அடையாளமாகும். முதலில் பிரத்தியட்சம் ஏற்படும் பின்னர் இந்த உலகின்மீது சொர்க்கம் தோன்றும்.

8. பாப்தாதாவின் முன்னால் நிறைய உறுதிமொழிகள் கொடுத்திருக்கிறீர்கள் ஆனால் இப்போதிலிருந்து மணியைத் தவிர வேறு எதையும் பார்க்க மாட்டேன் என்ற உறுதிமொழி கொடுங்கள். அப்போது தானே மாலையின் மணியாகி முழு உலகின் நடுவே ஜொலிப்பீர்கள். எப்போது இப்படிப்பட்ட உறுதிமொழி செய்கிறீர்களோ அப்போதே பிரத்தியட்சம் ஏற்படும். முயற்சி செய்வதற்கான நேரம் இப்போது கடந்து விட்டது. இப்போது அந்த உறுதிமொழியையும் தனது சம்பூர்ண ரூபத்தையும் வெளிப்படுத்த வேண்டும். அப்படியே பாபாவுக்குச் சமமாக காட்சிதரும் மூர்த்தி ஆகவேண்டும். இப்படி தன்னைத்தானே காட்சிதரும் மூர்த்தி ஆக்குங்கள் அப்போது பிரத்தியட்சத்தின் கொடி பறக்கும்.

9. பிரத்தியட்சம் செய்வதற்காக இப்போது கடைசியில் வந்திருந்தாலும் விரைவாக செல்வதற்கான முயற்சி – உறுதிமொழி. எந்த விசயமாக இருந்தாலும் இதைச் செய்ய வேண்டும் அல்லது செய்யக்கூடாது என உறுதிமொழி எடுக்க வேண்டும். நினைத்தவுடனே சொரூபமாகிவிட வேண்டும், அப்படிப்பட்ட உறுதிமொழியே பிரத்தியட்சம் செய்வதற்கு நிமித்தமாகும். எனவே உறுதிமொழியின் மூலமாக தன்னையும் பாபாவையும் பெரும்புகழ் பெறச் செய்யுங்கள்.

10. சம்பூரண பிரத்தியட்சத்திற்கான முரசொலிக்க இந்த விசயத்தை மட்டும் விசேசமாக அன்டர்லைன் செய்யுங்கள் - பிரத்தியட்சம் மற்றும் வாக்குறுதி. இந்த இரண்டின் சமநிலை எல்லா ஆத்மாக்களும் பாப்தாதாவிடமிருந்து ஆசீர்வாதங்களை பெறுவதற்கு ஆதாரமாக இருக்கிறது. எனவே ஒருபோதும் எந்த சூழ்நிலையிலும் தோல்வி அடைய மாட்டேன், பரமாத்மா கழுத்தின் மாலையாக, அலங்காரமாக, வெற்றி வைரமாவேன் என வாக்குறுதி கொடுங்கள். இப்படிப்பட்ட வாக்குறுதி கொடுப்பது என்றால் வெளிப்படையான நிருபணம் தருவதே பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்வதற்கான ஆதாரமாகும்.

11. பிரத்தியட்சத்தின் திரையை விலக்குவதற்கு முன்பாக மூர்த்திகள் நீங்கள் முழுமையாகத் தயாராக வேண்டும். இதுவரை சிலர் மனதை சரி செய்து கொண்டிருக்கிறார்கள், சிலர் உடலை . . . . சிலர் சுபாவத்தை, சிலர் சமஸ்காரத்தை . . . இப்படிப்பட்ட நேரத்தில் திரையை விலக்கினால் நன்றாக இருக்குமா! எனவே வெகு சீக்கிரமாக தயாராகுங்கள்.

12. எப்படி அறிவியலின் பவர் பிரசித்தமாக இருக்கிறது, ஒவ்வொரு குழந்தைக்கும் அறிவியல் என்றால் என்னவென்று தெரியும். அதேபோல அமைதி சக்தியானது அறிவியல் சக்தியைவிட மேலானது. அந்த நாளும் வர வேண்டும். அமைதி சக்தியின் பிரத்தியட்சம் என்றால் அது பாபாவின் பிரத்தியட்சம். எப்படி அறிவியல் வெளிப்படையாக நிரூபணம் தருகிறதோ, அதேபோல அமைதி சக்தியின் பிராக்டிகல் நிரூபணம் - உங்கள் அனைவருடைய வாழ்க்கை. எப்போது இத்தனை பேரும் பிராக்டிகல் நிரூபணத்தைக் காட்டுகிறீர்களோ அப்போது பிறர் விரும்பாமலே எல்லோருடைய பார்வையும் உங்கள் மீது திரும்பும் பிறகு வெற்றி முழக்கத்தின் முரசு ஒலிக்கும்.

13. பிரத்தியட்சத்திற்கு முன்பாக உலகின் இந்த பரந்த மேடையில் ஒவ்வொரு வர்கத்தின் நடிகரும் பிரத்தியட்சமாக வேண்டும். ஒவ்வொரு வர்கம் என்றால் - உலகில் உள்ள அனைத்து பிரிவு ஆத்மாக்களின் ஒருங்கிணைந்த ரூபம். எங்களுக்கு செய்தி கிடைக்கவில்லை என யாரும் குறை சொல்லும்படி எந்தவொரு பிரிவும் விடுபட்டுவிடக் கூடாது, அதனால் பெரிய தலைவர்கள் முதல் குடிசை வாசிகள் வரை எந்த பிரிவினராக இருந்தாலும் சரி. கற்றறிந்த மிகப்பெரிய விஞ்ஞானிகள் முதல் படிக்காத பாமரர் வரை எல்லோருக்கும் பகவானின் வருகையை அறிவித்து தன்னுடைய வாழ்வின் எடுத்துக்காட்டு மூலமாக அருகில் சம்மந்தத்தில் கொண்டுவரும் சேவை செய்யுங்கள், அப்போது பிரத்தியட்சம் ஏற்படும்

# 30. சிறந்த நிலை மற்றும் வலிமையான வாயுமண்டலத்தின் மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்வதற்கு நிமித்தமாகுங்கள்

1. தத்தமது சேவை நிலையங்களின் வாயுமண்டலத்தை அந்தமாதிரி சக்திமிக்க யோகம் நிறைந்த இடமாக்குங்கள், அதன்மூலம் ஒவ்வொரு சேவை நிலையமும் மந்திரகூடமாகிவிட வேண்டும். அதற்குள் எப்படிப்பட்ட ஆத்மா யார் வந்தாலும், வந்தவுடனேயே அவருடைய அசுர சமஸ்காரங்கள் மற்றும் வீண் எண்ணங்கள் எல்லாம் அகன்றுவிட வேண்டும், எப்போது உங்களுடைய ஒவ்வொரு சேவை நிலையமும் அப்படி வீண் எண்ணங்களை அகற்றக்கூடிய மந்திரகூடமாகிறதோ அப்போது பாபாவின் பிரத்தியட்சம் ஏற்படும்.

2. காலம் போகப்போக துக்க அசாந்தி அதிகமாகிக் கொண்டே போகிற காரணத்தால், ஒவ்வொரு ஆத்மாவும் சுகம், நிம்மதியின் தாகத்தோடு இருப்பார்கள், மேலும் அந்த தாகத்தில் தவித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் உங்களிடத்தில் வருவார்கள், அவர்கள் உள்ளே நுழைந்தவுடனே ஒருநொடியில் சுகம், நிம்மதியின் அனுபவம் ஏற்பட வேண்டும், அப்போது பிரபாவம் வெளிப்படும். அதற்காக தன்னுடைய வலிமையான வைப்ரேசன் மூலமாக வாயுமண்டலத்தை வலிமையாக்கும் சேவையை செய்துகொண்டே இருங்கள்.

3. அனைத்திலும் மிகப்பெரிய சங்கமம் உங்களது சமஸ்காரங்கள் சந்திக்கும் சங்கமமாகும். எப்போது இந்த சமஸ்காரங்களின் சங்கமம் ஏற்படுகிறதோ அப்போது வெற்றி முழுக்கம் ஒலிக்கும். ஆனால் சமஸ்காரங்களை இணைப்பதற்காக உள்ளங்களை இணைக்க வேண்டியதாக இருக்கிறது. உள்ளங்கள் ஒன்று சேருவதன் மூலம் சமஸ்காரங்களும் ஒன்று சேர்ந்துவிடும். சமஸ்காரங்களை இணையச் செய்வதற்காக மறப்பது, விடுவது, உள்ளடக்குவது, ஆகிய இந்த மூன்று விசயங்களையும் செய்ய வேண்டும். இப்படி சமஸ்காரங்கள் சங்கமிக்கும்போது வாயுமண்டலம் வலிமைபெறும் மேலும் சேவைகளில் வெற்றி கிடைக்கும்.

4. வாயுமண்டலத்தை வலிமையாக்குவதற்காக கூட்டத்தில் ஒருவர் மற்றவரது கருத்தை ஏற்பதோடு அதற்கு மதிப்பும் தர வேண்டும். இந்த இரண்டும் வந்துவிடுமானால் சம்பூரணமும், வெற்றியும் அருகில் வந்துவிடும். இப்போது சம்பூர்ண நிலையின் பிரத்தியட்சத்தை மேடைக்கு கொண்டுவர வேண்டும். கடைசிவரை மறைவாகவே இருப்போம் என நினைக்காதீர்கள். பாப்தாதா விற்குத்தான் மறைவான பாகம் இருக்கிறதே தவிர குழந்தைகளுக்கு அல்ல, எனவே இப்போது அதை வெளியில் கொண்டு வாருங்கள்.

5. எப்போது மேடைக்கு வருகிறீர்களோ, அந்த நேரத்தில் முதலில் தனது நிலையை (ஸ்திதியை) நல்லபடியாக சரிசெய்துகொண்டு பின்னர் அந்த மேடைக்கு வாருங்கள், அதன்மூலம் உலகினருக்கு உங்கள் ஆன்மீக நிலையின் காட்சி ஏற்படும். எப்படி மற்றவைகளை தயார் செய்கிறீர்களோ, அதேபோல அலங்கரித்துக்கொண்டு மேடைக்குப்போக வேண்டும் என்ற இதையும் தயார் செய்யுங்கள். லைட் ஹவுஸ் மைட் ஹவுஸ் இரண்டு சொரூபமும் தெளிவாக வெளியில் தெரிய வேண்டும், அப்போதே பாபாவை பிரத்தியட்சம் செய்வதற்கு நிமித்தமாக முடியும்.

6. எப்படி மேடையில் நடிக்கும் நடிகருக்கு முக்கியமாக இரண்டு விசயங்கள் சிந்தனையில் இருக்கிறது – **கவனம் மற்றும் நேர்த்தி.** அதேபோல நீங்களும் எப்போது பாப்தாதாவை பிரத்தியட்சம் செய்வதற்காக மேடைமீது நடிக்கிறீர்களோ அப்போது இந்த இரண்டு விசயங்களையும் நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நொடியிலும், ஒவ்வொரு எண்ணத்திலும் கவனமும் நேர்த்தியும் இருக்க வேண்டும், அப்போதே பாப்தாதாவை பிரத்தியட்சம் செய்வதற்கான சிறந்த பாகத்தை நடிக்க முடியும்.

7. உங்கள் வாயிலிருந்து எந்த வார்த்தை வந்தாலும் அது இவர்கள் ஒவ்வொருவரும் அப்படியே பாபாவுக்கு சமமாக இருக்கிறார்கள் என்ற அனுபவத்தை ஏற்படுத்த வேண்டும். உங்களுடைய ஒவ்வொரு செயலும் கண்ணாடி ஆகிவிடவேண்டும், அந்த கண்ணாடி மூலமாக பாப் தாதாவின் குணம் மற்றம் செயல்களின் தெய்வீக ரூபம் மற்றும் ஆன்மீகத்தின் காட்சி தென்பட வேண்டும். ஆனால் யார் தனது எண்ணத்தை மட்டுமல்லாது தனது தேக அபிமானத்தையும் அர்ப்பணிக்கிறார்களோ அவர்களே அப்படிப்பட்ட கண்ணாடியாக முடியும்.

8. பாப்தாதாவை பிரத்தியட்சம் செய்வதற்காக உங்கள் நடத்தை மற்றும் முகத்தில் ஈஸ்வரிய போதை, நாராயணி போதை தெரிய வேண்டும். முகமே உங்கள் அறிமுகத்தை கொடுக்க வேண்டும். எப்படி யாரையாவது சந்திக்கச் செல்லும்போது தனது அறிமுகத்திற்காக தனது கார்டை தருகிறார்களோ அதேமாதிரி உங்கள் முகம் அறிமுக கார்டின் வேலை செய்ய வேண்டும் அப்போது பிரத்தியட்சம் ஏற்படும்.

9. பரமாத்மாவின் பிரத்தியட்சத்திற்காக தூய்மையின் தீபம் நாலாபுறமும் எரிய வேண்டும் அப்போது எல்லோரும் பாபாவைப் பார்த்து அறிந்துகொள்ள முடியும். அதனால் தூய்மையின் தீபம் எப்போதும் மிகச்சிறப்பாக எரிந்துகொண்டே இருக்க வேண்டும், கொஞ்சம்கூட தடுமாற்றம் ஏற்படக்கூடாது, நிலையாக இருக்க வேண்டும். தூய்மையின் தீபம் எந்த அளவு நிலையாக இருக்கிறதோ அவ்வளவு எளிதில் எல்லோரும் பாபாவை அறிந்துகொள்வார்கள் மேலும் வெற்றி முழக்கமும் ஏற்படும்.

10. தனது முன்னேற்றத்திற்காக அந்தமாதிரி விசேச திட்டம் தீட்டுங்கள், அதன்மூலமாக சிறந்த ஆத்மாக்காளகிய உங்களது சுப எண்ணங்கள், நன்மை செய்யும் எண்ணங்கள் மேலும் சிறந்த நிலை அல்லது சக்திசாலி சூழ்நிலை மூலமாக துடித்துக்கொண்டிருக்கும், அலைந்து கொண்டிருக்கும், புகார் செய்துகொண்டிருக்கும் அனேக ஆத்மாக்களுக்கு ஆனந்தம், அமைதி மற்றும் சக்தியின் அனுபவம் ஏற்படட்டும்.

11. இதுவே உண்மையான பாதைகாட்டக்கூடியது, பாபாவை சந்திக்க வைக்கக்கூடியது, காப்பாற்றக்கூடியது, ஏமாற்றக்கூடியதல்ல என மிக சப்தமாக இப்போது பேரொலி எழுப்புங்கள். இப்போது அதற்கான விதி யாதெனில் சூழ்நிலை அப்படி இருக்க வேண்டும், நிலையின் தன்மையும் அப்படி இருக்க வேண்டும் மேலும் எல்லோருடைய எண்ணமும் ஒன்றாக இருக்க வேண்டும். சூழ்நிலையின் பிரபாவம் அப்படி சக்திமிக்கதாக இருக்க வேண்டும். அன்பான சூழ்நிலை இருக்கிறது ஆனால் அதில் அமைதியையும் சக்தியையும் இன்னும் கொஞ்சம் சேர்க்க வேண்டும். அமைதியின் அம்பு அந்தமாதிரி பாய வேண்டும் அதன்மூலம் அமைதிக் கடல் இல்லாமல் அவர்களால் இருக்க முடியாத நிலை உருவாக வேண்டும்.

12. ஞானம் மறைமுகமாக இருக்கிறது, பாபா மறைமுகமாக இருக்கிறார் ஆனால் அவர்மூலமாக எந்த தாரணைகளின் பிராப்தி ஏற்பட்டுள்ளதோ அது மறைமுகமாக இருக்க முடியாது. எனவே எப்போது தாரணைகளை அல்லது பிராப்திகளை பிரத்தியட்ச ரூபத்தில் காட்டுகிறீர்களோ அப்போது பிரத்தியட்சம் ஏற்படும்.

13. ஈஸ்வரிய காரியம் நடந்துகொண்டிருக்கிறது, இது ஒன்றும் சாதாரண விசயமல்ல என்பதை இப்போது அனுபவம் செய்ய வையுங்கள். எப்போது நீங்கள் உங்கள் அலௌகீக போதையில் இருந்து இலக்கை தாக்குகிறீர்களோ அப்போதே இது நடக்கும். தனது வாழ்வின் மூலமாக, நடத்தை மூலமாக, வார்த்தை மூலமாக, எண்ணத்தின் மூலமாக, வாயுமண்டலத்தின் மூலமாக எல்லாவிதமான சாதனங்களின் மூலமாக பாபாவின் பிராக்டிகல் பாகத்தை பிரத்தியட்சம் செய்யுங்கள்.

14. எப்படி ஒருவரை தன்பக்கம் கவர்ந்து இழுப்பதற்காக அவரை நாலாபுறமும் சூழ்ந்து கொள்கிறார்களோ, அதேபோல பாபாவுடைய அன்பிலும் அருகில் கொண்டு வருவதற்காக நல்ல கருத்துகளால் சுற்றி வளையுங்கள். இதற்காக விசேசமாக தொடர்பில் வருபவரை சம்மந்தத்தில் வரவையுங்கள், யார் தொடர்பில் வரக்கூடியவர்களோ அவர்களே சம்மந்தத்தில் அருகில் வரமுடியும்.

# 31. தனது சம்பூரண சொரூபத்தின் மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்ய நிமித்தமாகுங்கள்

1. சக்திகள் மற்றும் பாண்டவர்கள் உங்களுடைய சங்கமயுகத்தின் சம்பூரண சொரூபம் எதுவோ அதை இப்போது வெளிப்படுத்துங்கள், எப்போது உங்களுக்கு உங்கள் சம்பூரண சொரூபத்தின் உணர்வு மேலோங்குகிறதோ அப்போது தனது பக்தர்கள் யார், பிரஜைகள் யார் என்பது தெரியவரும். பிரஜைகள் அருகில் வருவார்கள், பக்தர்கள் காலில் விழுவார்கள் அப்போது பிரத்தியட்சம் ஏற்படும். பின்னர் ஓ பிரபு என்ற ஒலி முழக்கம் எழும்பும் . . . இப்போது அந்த நேரம் நெருங்கி வந்துகொண்டு இருக்கிறது.

2. தனது சம்பூரண சொரூபத்தை பிரத்தியட்சம் செய்வதற்காக எதையெல்லாம் கேட்டீர்களோ, அதனை ஆழமாக சிந்தித்து அதை தனது அங்கமெல்லாம் கலந்து தனது நடத்தையால் பிறர் அறியும்படி செய்யுங்கள். எது நடந்து கொண்டிருக்கிறதோ, எதைச் செய்து கொண்டிருக்கிறீர்களோ அது நாடகப்படி மிக நன்றாக இருக்கிறது. ஆனால் இப்போது நேரத்திற்குத் தக்கபடி முடிவு நெருங்கி வருவதற்குத் தக்கபடி தனது சம்பூரண சக்தி ரூபத்தின் பிரபாவத்தை பிறர் மீது ஏற்படுத்துங்கள். அப்போதே கடைசி பிரத்தியட்சத்தை அருகில் கொண்டுவர முடியும்.

3. எப்படி ஞான மூர்த்தி, குண மூர்த்தியாக ஆகியிருக்கிறீர்களோ, அதேபோல தாரணா மூர்த்தியாகி இப்போது தனது சம்பூரண நிலையை பிரத்தியட்சம் செய்யுங்கள். எப்போது சம்பூரண நிலையின் அருகில் வந்துவிடுகிறீர்களோ, அந்த நேரத்தில் வேறெந்த நினைவும் வராது. மற்றவர்களுக்காகவே ஒவ்வொரு நொடியும், ஒவ்வொரு எண்ணமும் இருக்கும். தனது முயற்சிக்காகவோ, அல்லது தனது உடலுக்காகவோ நேரத்தை, சக்தியை செலவிட முடியாது. ஒவ்வொரு நொடியும், எண்ணமும் உலக நன்மைக்காகவே என்ற அனுபவம் ஏற்படும். அப்படிப்பட்ட நிலையையே சம்பூரண நிலை அதாவது எல்லாம் நிறைந்த நிலை என்று சொல்லப்படுகிறது. அப்படி நிறைந்தவர் ஆகுங்கள் அப்போது பிரத்தியட்சம் உண்டாகும்.

4. எங்கு பார்த்தாலும் அங்கு உன்னையே காண்கிறேன் என்று சொல்வது பக்தி மார்க்கதில் வழக்கம். ஆனால் இங்கே நடைமுறையில் எங்கு பார்த்தாலும், யாரைப்பார்த்தாலும் அங்கு பாப்தாதாவின் சமஸ்காரமே செயல்வடிவில் தெரிய வெண்டும். யார் உங்களைப் பார்த்தாலும் இவர்கள் ஆன்மீக வண்ணத்தால் வண்ணம் பெற்ற ஆத்மாக்கள் என்பது அவர்களுக்குத் தெரிய வேண்டும். இப்போது இந்த வண்ணத்தை பிரத்தியட்சம் செய்யுங்கள்.

5. முடிவின் நாள் உங்கள் அனைவரது பிரத்தியட்சத்தின் ஆதாரத்தில் இருக்கிறது. நாடகத்தின் திட்டப்படி சிறந்த ஆத்மாக்களாகிய உங்கள் கூடவே மற்ற ஆத்மாக்களின் பச் சாதாபத்திற்கும் சம்பந்தம் உள்ளது. எதுவரை பச்சாதாபப் படவில்லையோ அதுவரை முக்திதாமம் செல்வதற்கான ஆஸ்தியையும் பெறமுடியாது. ஆனால் முதலில் உங்கள் முன்னால் உங்கள் சம்பூரண நிலை பிரத்தியட்சமாக வேண்டும், அப்போது பிறர் முன்பும் பிரத்தியட்சமாவீர்கள்.

6. நாம் வள்ளலின் குழந்தைகளாக இருக்கிறோம் என புத்தியில் யோசிக்கிறீர்கள், உணரவும் செய்கிறீர்கள், ஆனால் இதுவரை உங்கள் சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசம் இருந்து வருகிறது. நாம் அனைத்து ஆத்மாக்களையும்விட உயர்ந்த பிராமணர்கள், உலகிற்கு நன்மை செய்பவர்கள் . . . என்றெல்லாம் உங்கள் எண்ணத்தில் நினைக்கிறீர்கள், ஆனால் வார்த்தைக்கும் செயலுக்கும் வேறுபாடு இருக்கிறது. எப்போது இந்த மூன்றும் சமமாகிறதோ அப்போது பாபாவிற்குச் சமமாக சம்பூரணமாவீர்கள், மேலும் பிரத்தியட்சமும் ஏற்படும். தைரியம், உல்லாசம், போதை மற்றும் குறிக்கோள் எல்லாவற்றையும் கூடவே எப்போதும் வைத்திருந்தால், அனேக கல்பங்களைப் போலவே முழுமையாக பாஸாவது முடிந்த முடிவாக இருக்கும்.

7. சக்திகள் அல்லது தேவதைகளின் ஜட சித்திரங்களில் இந்த விசேசம் இருக்கிறது, அதாவது எந்தவொரு பாவ ஆத்மாவும் தனது பாவத்தை அவர்கள் முன்னால் சென்று மறைக்க முடியாது. சைத்தன்ய ரூபத்தில் சக்திகளின் இந்த ரூபம் பிரசித்தமாக இருந்திருக்கிறது, அதனால்தான் நினைவுச் சின்னத்திலும் அப்படி உள்ளது. இதுதான் அனைத்தும் அறிந்த மாஸ்டர் நிலை. இந்த நிலையும் நடைமுறையில் அனுபவமாகும். எப்போது இப்படிப்பட்ட ஜோதி சொரூபங்கள் ஒன்று சேருகிறதோ அப்போது உங்கள் ஒவ்வொரு அடியிலும் பாபாவின் பிரத்தியட்சம் ஏற்படும்.

8. தான் மிக உயர்வாகவும், மிகப் புனிதமாகவும் இருக்கிறேன் என்பதை எப்போதும் உங்கள் நினைவில் வையுங்கள். எப்போது இது வெளிப்படையான ரூபத்தில் அதாவது நினைவிலும் செயலிலும் ஞாபகத்தில் இருக்கிறதோ அப்போதே பிரத்தியட்ச வருடத்தை கொண்டாட முடியும்.

மிகவுயர்ந்த தந்தையை பிரத்தியட்சம் செய்வதற்காக எதுவரை தனது சொரூபத்தில் புனிதத்தையும், மிகவுயர்ந்த நிலையையும் கொண்டுவரவில்லையோ அதுவரை பாபாவை எப்படி பிரத்தியட்சம் செய்வீர்கள்? தனக்குள் பாபாவிற்குச் சமமான குணத்தையும் செயலையும் மிளிரச் செய்வதே பாபாவை பிரத்தியட்சம் செய்வதாகும். உயர்ந்த செயலால் உயர்ந்த தந்தையின் பெயர் விளங்கும்.

9. தற்போது உள்முகமாகி ஆழமான அனுபவங்களின் ரத்தினங்களால் புத்தியை நிரப்புங்கள், எல்லாம் நிறைந்து சம்பூரணமாகும்போது எல்லா ஆத்மாக்களின் அஞ்ஞானத் திரையை முன்னமேயே அகற்ற முடியும். உங்களுடைய சம்பூரண நிலையினுடைய வெளிச்சம் மூலமாக இந்தத் திரை தானே விலகிவிடும். அதனால் ஆராய்ச்சி செய்யுங்கள், ஸர்ச் லைட் ஆகுங்கள் அப்போது பிரத்தியட்சம் ஏற்படும்.

10. ஆரம்பத்தில் எப்படி பிரம்மா பாபாவின் சாதாரண ரூபத்தைக் காணாமல் கிருஷ்ணரின் ரூபத்தை அனுபவம் செய்தார்கள். காட்சி காண்பது வேறு ஆனால் அப்படியே சொரூபத்தில் கிருஷ்ணராகவே தெரிந்தார், உண்டார், குடித்தார், நடந்தார். ஆரம்பத்தில் ஒரு பாபா செய்தார், கடைசியில் குழந்தைகள் நீங்களும் ஆத்மாக்கள் முன்னிலையில் அப்படியே தேவி தேவராக தெரிவீர்கள். இவர்கள் ஏதோ சாதாரணமானவர்கள் என அவர்களுக்கு தோன்றவே தோன்றாது. அதே பூஜைக்குரியவர்கள் என்ற பிரபாவத்தை அனுபவம் செய்வார்கள், அப்போது பாபா உட்பட உங்கள் அனைவரது பிரத்தியட்சத்தின் திரை விலகும். பாபா தனியாக பிரத்தியட்சமாகக்கூடாது, குழந்தைகளோடு பிரத்தியட்சமாக வேண்டும்.

11. பிரத்தியட்சம் என்பது நொடியின் விசயம் ஆனால் படைப்பாளிகள் எவரெடியாக இருக்கிறீர்களா? என பிரத்தியட்சத்திற்கு முன்னதாக பாப்தாதா கேட்கிறார். திரையை விலக்கவா? சிலர் காதை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள், சிலர் நெற்றியை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள் என இருக்கிறதா? குறைந்தது பதினாறாயிரம் எவரெடியாக இருந்தீர்கள் என்றால் பாப்தாதா டச் பண்ணுவார், கைக்கொட்டுவார், இயற்கை தனது வேலையை ஆரம்பித்துவிடும். விஞ்ஞானிகள் தங்கள் வேலையை ஆரம்பித்து விடுவார்கள், பின்னர் பிரத்தியட்சம் ஏற்படும்.

12. எப்படி ஸ்தாபனையின் ஆரம்பத்தில் கனவு மற்றும் காட்சிகளின் லீலைகள் விசேசமாக இருந்ததோ, அதேபோல கடைசியிலும் இந்த விசித்திர லீலைகள் பிரத்தியட்சம் செய்வதற்குக் காரணமாகிவிடும். எங்கு பார்த்தாலும் இதுதான் இதுதான் என்ற சப்தம் எதிரொலிக்கும் மேலும் இந்த சப்தம் அனேகருடைய பாக்கியத்தை சிறப்பாக்க காரணமாகிவிடும்.

13. தந்தை ஒருவர், ஞானமும் ஒன்றே, இலட்சியமும் ஒன்றே, வீடும் ஒன்றே என்ற சப்தம் இப்போது வெளிவர வேண்டும். இப்படிப்பட்ட காட்சிகள் எப்போது எல்லையற்ற மேடைமீது ஏற்படுகிறதோ அப்போது பிரத்தியட்சத்தின் கொடி பறக்கும் மேலும் இந்த கொடியில் கீழ் எல்லோரும் “பாபா எங்களுடையவர்” என்ற பாடலைப் பாடுவார்கள். எல்லோருடைய வாயிலிருந்தும் அந்த ஒருவார்த்தை மட்டுமே வரும். அப்போது இருள் விலகி தங்கமயமான விடியல் கண்ணுக்கு புலப்படும்.

# 32. லைட்-மைட் ஹவுஸ் என்ற உயர்ந்த நிலை மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்வதற்கு நிமித்தமாகுங்கள்

1. பாபாவை பிரத்தியட்சம் செய்வதற்கு முன்பாக தனக்குள், எவை தன்னுடைய மகிமைகளோ அந்த விசயங்களை எல்லாம் பிரத்தியட்சம் செய்யுங்கள், அப்போது பாபாவை பிரத்தியட்சம் செய்ய முடியும். அதற்காக விசேசமாக ஜுவாலை சொரூபம் அதாவது லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் நிலையை புரிந்து கொண்டு அதே நிலையில் இருக்க முயற்சி செய்யுங்கள், விசேசமாக நினைவு யாத்திரையை பவர்புல் ஆக்குங்கள், ஞானசொரூபத்தின் அனுபவி ஆகுங்கள்.

2. ஒரு நொடிப்பொழுதாவது ஒளியைக் காணவேண்டும் என்பதே பெரும்பாலான பக்தர்களின் ஆசை, இந்த ஆசையை நிறைவேற்றுவதற்கான சாதனமாக இருப்பது குழந்தைகள் உங்களுடைய கண்கள். இந்த கண்கள் மூலமாக பாபாவின் ஜோதிசொரூபம் காட்சியாகக் கிடைக்க வேண்டும். இந்தக் கண்கள் கண்களாக தெரியக்கூடாது ஒளிப் பந்தாக தெரிய வேண்டும்.

3. எப்படி ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் தெரிகிறதோ, அதேபோல இந்தக் கண்ணின் மணி நட்சத்திரம் போல பிரகாசித்துக்கொண்டிருப்பது தெரியவேண்டும். ஆனால் எப்போது தான் ஒளி சொரூபத்தில் நிலைத்து இருக்கிறீர்களோ அப்போதே அது தெரியும். செயலும் லைட்டாக அதாவது இலேசாக மேலும் சொரூமும் லைட்டாக மேலும் நிலையும் லைட்டாக இருக்க வேண்டும். எப்போது இப்படிப்பட்ட முயற்சி அல்லது நிலை விசேச ஆத்மாக்களாகிய உங்களிடத்தில் இருக்கிறதோ அப்போது பிரத்தியட்சம் ஏற்படும்.

4. செயலில் வரும்போது, விரிவில் வரும்போது, ரமணீகத்தில் வரும்போது, உறவு-தொடர்பில் வரும்போது தனித்திருக்க பயிற்சி செய்யுங்கள். எப்படி சம்மந்தம் அல்லது செயலில் வருவது எளிதாக இருக்கிறதோ, அதேபோல தனித்துவிடுவதும் எளிதாக இருக்க வேண்டும், அப்படிப்பட்ட பயிற்சி தேவை. உச்சகட்ட நேரத்தில் ஒரு நொடியில் முடிவு வந்துவிடும் - இதுவே கடைசி கட்ட முயற்சி. உடனடியாக தீவிர சம்மந்தத்தில் வர வேண்டும், உடனே எவ்வளவு நெருக்கமோ அவ்வளவு விலகி இருக்க வேண்டும். அப்படியே லைட்ஹவுசோடு கலந்துவிடவேண்டும். இந்த பயிற்சியின் மூலமாக லைட்ஹவுஸ் மைட் ஹவுஸ் நிலை உருவாகும் பிறகு அனேக ஆத்மாக்களுக்கு காட்சி கிடைக்கும், இதுவே பிரத்தியட்சத்திற்கான சாதனமாகும்.

5. செய்தித்தாள்கள் மற்றும் கார்டுகள் மூலமாக விசேச ரூபத்தில் பாப்தாதாவை பிரத்தியட்சம் செய்வதற்கு முயற்சி செய்கிறீர்கள். இதுவும் சேவைக்கான அவசிய சாதனமாகும். ஆனால் இந்த செய்தித்தாள், கார்டுகள் முதலியவைகளை அந்தநாளில் பார்ப்பார்கள், படிப்பார்கள் அல்லது கேட்பார்கள் பின்னர் அவர்கள் நினைவில் அது கலந்து விடுகிறது. இதன் மூலமாக பூமியில் கொஞ்சம் அன்பினுடைய மற்றும் அறிமுகத்தினுடைய நீர் பாய்கிறது. ஆனால் இந்த விதையில் இருந்து பிரத்தியட்சம் என்ற கனிகள் வெளிவருவதற்காக லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் நிலையை உருவாக்குங்கள், அதன்மூலம் பார்வையால் பரவசமடையச் செய்யும் சேவையைச் செய்ய முடியும்.

6. இப்போது கடைசியில் பிரத்தியட்சத்தின் முரசு ஒலிக்க வேண்டிய இந்த சீசன் மட்டும் பாக்கி இருக்கிறது அதில் பிரத்தியட்சத்தின் முரசு கொட்டப்படும். சப்தம் அதிகமாக இருக்கும் பிறகு அமைதி உண்டாகும். ஆனால் அமைதியின் மூலமாகவே முரசு கொட்டப்படும். எதுவரைக்கும் வாய்முரசு அதிகமாக இருக்கிறதோ அதுவரை பிரத்தியட்சம் ஏற்படாது. எப்போது பிரத்தியட்சத்தின் முரசு கொட்டப்படுகிறதோ அப்போது வாய் முரசு முழங்குவது நின்று விடும். “அறிவியலின் மீது அமைதியின் வெற்றி” என பாடப்பட்டிருகிறதே அல்லாமல் வார்த்தையின் வெற்றி என்றில்லை.

7. இப்போது பிரத்தியட்சத்தின் விசேசம் மேகங்களிடம் இருக்கிறது. மேகங்கள் பரவிக்கொண்டிருக்கிறது ஆனால் அகலவில்லை. எந்த அளவு சக்திசாலி மாஸ்டர் ஞான சூரியன் அல்லது லைட்-மைட் ஹவுசின் நிலையை எட்டிவிடுகிறீர்களோ அதற்குத்தக்கபடி இந்த மேகங்கள் பரவிக்கொண்டே இருக்கும். மேகங்கள் விலகி விட்டால் நொடியில் முரசு கொட்டப்படும்.

8. எங்கும் தீப்பிடித்து எரியும்போது ஏதாவது ஒரு மூலையாவது குளிர்ச்சியாக இருக்குமானால் எல்லோரும் அந்த இடத்தை நோக்கி ஒடி வருவார்கள், அதேபோல அமைதி சொரூபமாகி அமைதி குண்டத்தின் அனுபவத்தை ஏற்படுத்துங்கள். மன சேவை மூலமாக அமைதி

குண்டத்தை பிரத்தியட்சம் செய்ய முடியும். எங்கெல்லாம் அமைதிக்கடலின் குழந்தைகள் இருக்கிறார்களோ அந்த இடம் அமைதிக் குண்டமாக இருக்கிறது.

9. பிரம்மா பாபாவிற்குச் சமமாக எல்லையற்ற கிரீடதாரியாகி எல்லாப் பக்கமும் பிரத்தியட்சத்தின் ஒளி மற்றும் சக்திகளைப் பரப்புங்கள். அதன் மூலம் எல்லா ஆத்மாக்களிடமும் நிராசையில் இருந்து ஆசையின் கிரணங்கள் தோன்றும். எல்லோருடைய விரல்களும் அந்த விசேச இடத்தை குறிக்கும். யார் ஆகாயத்திற்கு மேல் விரலைக் காட்டி தேடிக்கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு இந்த பூமியின்மீது, வரதான பூமியின்மீது பூமியின் நட்சத்திரங்கள் பிரத்தியட்சமாகிவிட்டார்கள் என்ற அனுபவம் ஏற்பட வேண்டும். இந்த சூரியன், சந்திரன், நட்சத்திர மண்டலங்கள் எல்லாம் இங்கே அனுபவம் ஆக வேண்டும்.

10. கூட்டமாக ஒன்று சேர்ந்து பவர்புல்-சக்திசாலி லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் வைப்ரேசனை பரப்பும் சேவை செய்யுங்கள். எப்போது எம்மைப் படைப்பவர் அல்லது மாஸ்டர் படைப்பவர் முழுமையடைந்து அல்லது எல்லாம் நிறைந்து எங்களுக்கு பரிசளிப்பார்கள் என எல்லோரும் காத்துக் கிடக்கிறார்கள். இயற்கையும்கூட உங்களை வரவேற்கும். அது உங்களை வெற்றிமாலையோடு வரவேற்கும் - அந்த நாள் வந்தே தீரும். எப்போது வெற்றியின் வாத்தியத்தை முழங்குகிறீர்களோ அப்போது பிரத்தியட்சத்தின் வாத்தியம் முழங்கும். முழங்கித்தான் ஆகவேண்டும்.

11. பாரதம் பாபாவின் அவதார பூமி அதோடு பிரத்தியட்சத்தின் சப்தத்தை பேரொலியாக எழுப்புவதற்கும் பாரத பூமியே காரணமாக இருக்கிறது. வெளிநாட்டினரின் உதவி பாரதத்தில் பிரத்தியட்சம் செய்யும் மேலும் பாரதத்தின் பிரத்தியட்சத்தின் சப்தம் வெளிநாடுகள் வரை சென்று சேறும். வார்த்தை மூலமாக பிரபாவத்தை ஏற்படுத்துபவர்கள் உலகில் அனேகர் இருக்கிறார்கள். ஆனால் உங்கள் வார்த்தையின் சிறப்பு என்னவென்றால் உங்கள் பேச்சு பாபாவை நினைவூட்டுகிறது. பாபாவை பிரத்தியட்சம் செய்யும் உங்கள் வெற்றி ஆத்மாக்களுக்கு சத்கதி யின் வழி காட்டுகிறது இதுவே உங்கள் தனித்துவமாகும்.

12. ஒருகால் நீங்கள் வெகு விரைவாக பாபாவை பிரத்தியட்சம் செய்ய வேண்டும் என்று விரும்பினால் அதற்கான தீவிர முயற்சி யாதெனில் எல்லோரும் தனது எண்ணங்களை தனக்கா கவும், மற்றவருக்காகவும் நல்லதாகவே உருவாக்க வேண்டும். ஞானம் நிறைந்தவர்களாக ஆகுங்கள், ஆனால் தனது மனதில் நெகட்டிவ்வை கொண்டுவராதீர்கள். நெகட்டிவ் என்றாலே குப்பை. எனவே தனது எண்ணங்களை பவர்புல் ஆக்குங்கள், வைப்ரேசனை பவர்புல் ஆக்குங்கள், வாயுமண்டலத்தை பவர்புல் ஆக்குங்கள். எப்போது வாயுமண்டலம் எல்லா பக்கமும் முற்றிலும் தடையற்றதாக இருக்கிறதோ, கருணையுடையதாக இருக்கிறதோ, நல்லெண்ணங்களும் நல்லாசைகளும் கொண்டதாக இருக்கிறதோ அப்போது உங்களுடைய இந்த லைட்-மைட் நிலையானது பிரத்தியட்சத்திற்கு காரணமாக அமைந்து விடும்.

# 33. சத்தியத்தின் அத்தாரிட்டி மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்யுங்கள்

1. பரமாத்மாவின் பிரத்தியட்சத்திற்கு ஆதாரம் சத்தியம். சத்தியத்தின் மூலமாகவே பிரத்தியட்சம் ஏற்படும் - ஒன்று சுய நிலையில் சத்தியம் மற்றது சேவையில் சத்தியம். சத்தியத்திற்கு ஆதாரமாக இருப்பது சுத்தமும் பயமின்மையும். இந்த இரண்டின் ஆதாரத்தைக் கொண்டு சத்தியத்தின் மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்வதற்கு ஆதாரமாகுங்கள். எந்தவிதமான அசுத்தமும் அதாவது தூய்மை மற்றும் சுத்தத்தில் கொஞ்சங் குறைவு இருந்தாலும் உங்களுடைய செயலுக்கு வெற்றியோ, பிரத்தியட்சமோ ஏற்பட முடியாது.

2. உங்கள் பேச்சில் அன்பு இருக்கட்டும், இனிமையும் மேன்மையும் இருக்கட்டும், சத்தியமும் இருக்கட்டும் ஆனால் அதேசமயம் சொரூபத்தில் பணிவும் இருக்கட்டும். பயமின்றி அத்தாரிட்டியோடு பேசுங்கள் ஆனால் பேச்சு மரியாதையின் கோட்டுக்குள் இருக்க வேண்டும் - இரண்டின் சமநிலை காக்க வேண்டும் - எங்கே சமநிலை இருக்கிறதோ அங்கே அதிசயங்கள் தென்படும் மேலும் அந்த வார்த்தைகள் கடுமையாகத் தோன்றாது இனிமையாக இருக்கும். எனவே அத்தாரிட்டி மற்றும் பணிவின் சமநிலை மூலமாக அதிசயங்கள் செய்து காட்டுங்கள். இதுவே பாபாவை பிரத்தியட்சம் செய்வதற்கான சாதனமாகும்.

3. அத்தாரிட்டியோடும் சத்தியத்தோடும் பேசுங்கள், கூச்சப்படாதீர்கள். பிரத்தியட்சம் செய்வதற்காக முதலில் தன்னை பிரத்தியட்சம் செய்யுங்கள், பயமற்றவர் ஆகுங்கள். சொற்பொழிவில் வார்த்தைகள் குறைவாக இருக்கட்டும் ஆனால் அப்படி வலிமைமிக்கதாக இருக்க வேண்டும் அதில் பாபாவின் அறிமுகமும், அன்பும் கலந்திருக்க வேண்டும், அந்த அன்பு வடிவ காந்தம் ஆத்மாக்களை பரமாத்மாவை நோக்கி இழுக்க வேண்டும்.

4. எப்போது பாபா என்று சொல்கிறீர்களோ அப்போது பாபாவிடமிருந்து என்ன பலன் அடைந்தீர்களோ அதன் பிரகாசம் முகத்தில் தெரிய வேண்டும், எது அவசியமோ அது இங்கிருந்து மட்டுமே கிடைக்கும், எல்லாவிதமான சுகங்களின் சுரங்கச் சாவி இங்கேதான் கிடைக்கும் என எல்லோரும் அனுபவம் செய்ய வேண்டும். அந்த அனுபவமே பிரத்தியட்சம் செய்ய காரணமாகிவிடும்.

5. இப்போது உளத்தூய்மை மற்றும் பயமற்ற நிலையின் ஆதாரத்தில் சத்தியத்தின் மூலமாக பிரத்தியட்சம் செய்யுங்கள். வாயிலிருந்து வரும் சத்தியத்தின் அத்தாரிட்டி தானாகவே பாபாவை பிரத்தியட்சம் செய்ய வைக்கும். இப்போது பரமாத்மா பாம் (குண்டு) மூலமாக புவியை மாற்றமடையச் செய்யுங்கள். சதா வாயிலிருந்து அல்லது எண்ணத்தில் பாப்தாதா பாப்தாதா என்பதே நிரந்தரமாக மாலைக்குச் சமமாக நினைவில் இருக்க வேண்டும். எல்லோரிடமும் பாப்தாதா என்பதே பேச்சாக இருக்க வேண்டும். எண்ணம், செயல் மற்றும் சொல்லில் இதுவே நிரந்தர ஓசையாக இருக்க வேண்டும், இதுவே இடைவிடாத ஜெபமாக இருக்கவேண்டும். எப்போது இந்த இடைவிட ஜெபம் நடந்துகொண்டே இருக்கிறதோ அப்போது மற்ற எல்லா விசயங்களும் தானே முடிவடைந்து விடும்.

6. பரமாத்மா ஒருவரே என்பதை இந்த பல்வேறுபட்ட தர்மத்தைச் சேர்ந்தவர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். அதேபோல சரியான சத்திய ஞானம் ஒரேயொரு பாபாவுடையதுதான் அதாவது ஒரே வழிதான் இருக்கிறது. எப்போது இந்த சப்தம் வலிமையாக ஒலிக்கிறதோ அப்போது அனேக அற்ப ஆதாரங்களை நோக்கி அலைவது முடிந்து போகும். இப்போது இதுவும் ஒரு வழி, நல்ல வழி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் முடிவாக ஒரு தந்தைக்கு ஒரே அறிமுகம்தான், ஒரே வழிதான் இருக்கிறது. இந்த சத்தியத்தின் அறிமுகம் அல்லது சத்திய ஞான சக்தியின் அலைகளை பரப்புங்கள் அப்போது பிரத்தியட்சத்தின் கொடியின் கீழ் எல்லா ஆத்மாக்களும் உதவி பெற முடியும்.

7. இப்போதெல்லாம் எந்த விசயம் நடந்தாலும் அது 100 வருடங்களுக்கு முன்பே நடந்திருந்ததாகச் சொல்கிறார்கள். எல்லாம் விசித்திர விசயங்களாக நடந்து கொண்டிருக்கிறது எனினும் இந்த விசித்திர விசயங்களே பாபாவை பிரத்தியட்சம் செய்யும். இப்போது என்னவாகப்போகிறதோ? என்ற வார்த்தை எல்லோரது வாயிலிருந்தும் வெளிவருகிறது. இந்த கேள்விக்குறி எல்லோருடைய புத்தியிலும் தெளிவாகி விட்டது. பின்னர் என்ன நடக்க வேண்டுமோ அது நடந்தது, பாபா வந்துவிட்டார் என்ற வார்த்தை வெளிவரும். கேள்விக்குறி முடிந்துபோய் முற்றுப்புள்ளி வந்து விடும். கேள்விக்குறி வடிவ பிரச்சனைகளுக்குப்பிறகு பிரத்தியட்சம் என்ற வெண்ணெய் வெளிப்படும். நாலா புறமும் இப்போது பிரச்சனைகள் தீவிரமாக ஆரம்பித்து விட்டது, இப்போது பிரத்தியட்சம் என்ற வெண்ணெய் உலகின் முன்னால் தெரியும்.

8. இப்போது கிராமம் கிராமமாக அல்லது நகரத்தின் பகுதிகள் வரை சென்று சேர்ந்து விட்டீர்கள், ஆனால் இப்போது ஒவ்வொரு சந்திலும் ஞானம் வழங்கும் இடம் இருக்க வேண்டும். பக்தியில் தெய்வங்கள் இருக்கும் கோயிலை உருவாக்குகிறார்கள் ஆனால் இங்கு வீட்டுக்கு வீடு பிராமண ஆத்மாக்கள் இருக்க வேண்டும். எப்படி ஒவ்வொரு வீட்டிலும் மற்ற எதுவும் இல்லா விட்டாலும் தேவதைகளின் சித்திரம் கட்டாயம் இருக்கிறதோ, அதேபோல ஒவ்வொரு வீட்டிலும் சைத்தன்ய பிராமண ஆத்மாக்கள் இருக்க வேண்டும். ஒவ்வொரு சந்திலும் ஞானம் வழங்கும் இடமிருக்க வேண்டும், அப்போதே ஒவ்வொரு தெருவிலும் பிரத்தியட்சத்தின் கொடி பறக்கும்.

9. எவ்வளவு பிரத்தியட்சம் ஏற்படுகிறதோ அவ்வளவு சோதனை செய்து பார்ப்போர் பலரும் வருவார்கள். இந்த யோகத்திற்கும் அந்த யோகத்திற்கும், இந்த ஞானத்திற்கும் அந்த ஞானத்திற்கும் என்ன வித்தியாசம் என வாழ்வின் நடைமுறைகளை சோதித்துப் பார்ப்பார்கள். அதற்காக முன்கூட்டியே அவ்வளவு தயார் செய்ய வேண்டும். அனைத்து வெற்றியிலும் விசேச வெற்றியின் அடையாளம் யாதெனில் உங்கள் அனைவரிடமும் பாப்தாதா தெரிய வேண்டும். உங்களிடம் பாபா தெரிய வேண்டும் - இதுவே பிரத்தியட்சத்தின் சாதனமாகும்.

10. “ஏதோ ஒன்று இருக்கிறது”, என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள் ஆனால் இதுதான், இது ஒன்றுதான், என்ற பிரச்சினைகளுக்கான தீர்வை இப்போது செயலாக்குங்கள். இப்போது மற்றதும் இருக்கிறது, இதுவும் இருக்கிறது என்பது வரை வந்திருக்கிறீர்கள் ஆனால் இது ஒன்று மட்டுமே உள்ளது எனும்படி இப்போது அப்படி அம்பை எய்ய வேண்டும். இந்த டச்சிங்கோடு கூட அப்படிப்பட்ட ஆத்மாக்கள் உங்கள் முன்னால் வரவேண்டும், எப்போது அப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுகிறதோ அப்போதே பிரத்தியட்சம் ஏற்படும்.

11. பூமியோ தயாராகி விட்டது இன்னும் தயாராகிக் கொண்டே போகும். ஆனால் எது அஸ்திவாரமோ, புதுமையோ, விதையோ அதுதான் புதிய ஞானம். தன்னலமற்ற அன்பு, ஆன்மீக அன்பு இருப்பதை அனுபவம் செய்கிறார்கள், எனினும் இப்போது அன்போடு கூடவே ஞானத்தின் அத்தாரிட்டி உடைய ஆத்மாக்கள், சத்திய ஞானத்தின் அத்தாரிட்டியானவர்கள் என்பதை பிரத்தியட்சம் செய்யுங்கள் அப்போது பிரத்தியட்சம் ஏற்படும்.

12. ஞானத்தின் ஆழமான விசயங்கள் எதுவாக இருந்தாலும் அதனை தெளிவாக்குவதற்கான விதி உங்களிடத்தில் மிக நன்றாக இருக்கிறது மேலும் வெளிப்படையாக இருக்கிறது. ஒவ்வொரு கருத்தையும் லாஜிக்கலாக தெளிவாக்க முடியும். நீங்கள் அதன் அத்தாரிட்டி உடையவராக இருக்கிறீர்கள். அது ஒன்றும் சொந்த கருத்துகளோ அல்லது கற்பனைகளோ அல்ல. நடைமுறை உண்மை. அனுபவங்கள். அனுபவத்தின் அத்தாரிட்டி, ஞானத்தின் அத்தாரிட்டி, சத்தியத்தின் அத்தாரிட்டி . . . எத்தனை அத்தாரிட்டிகள் இருக்கின்றன! எனவே அத்தாரிட்டி மற்றும் அன்பு - இந்த இரண்டையும் ஒன்றாக காரியத்தில் ஈடுபடுத்துங்கள்.

# 34. தனது வெற்றி சொரூபம் மற்றும் வாரிசு குவாலிடிகளின் உதவி மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்ய நிமித்தமாகுங்கள்

1. பிரத்தியட்ச வருடத்தைக் கொண்டாடுவது என்பதன் அர்த்தமே தன்னை பாபாவுக்கு சமமாக்குவதாகும். இந்த பொருட் சாதனங்கள் எல்லாம் பெயருக்கு சாதனங்களாக இருக்கிறது. சதாகாலத்திற்கான சாதனமாக இருப்பது உங்கள் வெற்றி சொரூபமே. இப்படி உயர்ந்தவராக ஆக்கக்கூடியவர் மிகவுயர்ந்த பகவான் என்பதை வெற்றி சொரூபம் தானே நிரூபிக்கும். எனவே சாதனங்களோடு கூடவே வெற்றி சொரூபத்தையும் தனதாக்குங்கள். எண்ணம், சொல் மற்றும் சொரூபம் இந்த மூன்றுமே மிகப் புனிதமாகவும் மிக உயர்ந்ததாகவும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையால் மட்டுமே பாபாவை பிரத்தியட்சம் செய்ய முடியும்.

2. இப்போது உங்கள் எல்லோருடைய வெற்றியின் பிரத்தியட்ச ரூபம் தென்பட வேண்டும். ஏதாவது கெட்டுப்போன காரியம்கூட உங்கள் திருஷ்டியின் மூலமாக, உங்களது உதவியின் மூலமாக எளிதில் சரியாகி விடும், அதன் காரணத்தாலேயே பக்தியில் தன்ய தன்ய என சொல்லி புகார் செய்கிறார்கள். இந்த எல்லா பேறுகளும் உங்கள் முன்னால் பிரத்தியட்ச ரூபத்தில் வந்துவிடும்.

3. ‘ஆமாம், இது நடந்துவிடும்’ என நீங்கள் வெற்றியை எதிர்பார்த்து சொல்ல மாட்டீர்கள், ஆனால் உங்கள் ஆலோசனைகள் தானே வெற்றியை தந்து கொண்டிருக்கும். பின்னர் எல்லாப் பக்கங்களில் இருந்தும் விலகி உங்கள் பக்கம் வருவார்கள். இந்த வெற்றியின் பாகம் இப்போது நடக்கும். ஆனால் முதலில் அவ்வளவு சக்திசாலி ஆகுங்கள் அதாவது எந்த வெற்றியையும் ஏற்றுக்கொள்ளாதவர் ஆகுங்கள், அப்போது பிரத்தியட்சம் ஏற்படும். பின்னர் இஷ்ட தெய்வங்களான உங்களுடைய மாலை, பக்த மாலை இரண்டும் பிரத்தியட்சமாகிவிடும்.

4. இப்போது வாரிசு குவாலிடிகள் தயாராகி மேடைமீது வரவேண்டும் என்று பாப்தாதா விரும்புகிறார். எப்போது இங்கு வாரிசுகள் தயாராகிறதோ அப்போது அட்வான்ஸ் பார்ட்டியும் பிரத்தியட்சமாகும் மேலும் பாபாவின் பெயருக்கான, பிரத்தியட்சத்திற்கான முரசு நாலாபுறமும் முழங்கும். போதும் இப்போது நேரம் வந்துவிட்டது, பாபா வந்துவிட்டார் என்பது இப்போது எல்லோருடைய வாயிலிருந்தும் வரவேண்டும், அப்போது அழிவும் வந்துவிடும்.

5. பாபாவுடைய பிரத்தியட்சத்தின் சப்தத்தை உரக்க சொல்வதற்காக பெரிய பெரிய மைக்குகளை தயார் செய்யுங்கள். பாபா மட்டும் தனியாக பிரத்தியட்சமாக மாட்டார், சிவ சக்தி இருவரும் பிரத்தியட்சமாவார்கள். எனவே மைக் மூலமாக வார்த்தையை உரக்க சொல்வதற்கான திட்டம் தீட்டுங்கள். உலகத்தில் வார்த்தைகளை சப்தமாக சொன்ன பிறகு பிரத்தியட்சத்தின் திரை விலகிவிடும். ஆனால் திரைக்குள் பிரத்தியட்சமாகக் கூடிய மூர்த்திகள் முழுமையாக இருக்க வேண்டும். ஒரு சக்தி கேடயத்தை பிடித்துக் கொண்டிருக்க மற்றவர் வாளேந்தி இருக்க . . என இருக்கக்கூடாது, இதற்கும் திட்டம் தீட்டுங்கள். எந்தவிதமான பந்தனங்களோ அல்லது பலவீனங்களோ இருக்கக்கூடாது.

6. இப்போது பிரஜைகள் மீது பிரஜைகளின் இராஜ்ஜியம் நடக்கிறது. தலைவர்களின் பலவீனங்களை பிரஜைகள் அறிவார்கள், அதனால் தலைவர்களுடைய பேச்சின் பிரபாவம் அவ்வளவாக இல்லை. ஆனால் குருமார்களின் சங்கிலியில் எல்லோரும் சிக்கி இருக்கிறார்கள். உள்ளே எது வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் மூட நம்பிக்கையின் காரணத்தினால் கேட்பதையெல்லாம் சத்தியம் சத்தியம் என்று சொல்லக்கூடிய பழக்கத்தில் அவர்களது சிஷ்யர்கள் இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்காக சேவையின் திட்டங்கள் செயல்பட வேண்டும், உற்சாகம் வரவேண்டும். இதுவரை செய்து வந்த சேவையில் பிரஜைகள் என்னவோ உருவாகி இருக்கிறார்கள் ஆனால் எப்போது விடுவிப்பவர்கள் முன்னால் வருகிறார்களோ அப்போது பிரபாவம் ஏற்படும், அவர்களே சப்தத்தை பரப்பக்கூடிய சாதனமாக இருப்பார்கள், அதன்மூலமாக பிரத்தியட்சம் ஏற்படும்.

7. ஒவ்வொரு மாநிலத்திலும் பெரிய மைக்குகளைத் தயார் செய்வதற்கு முன்பாக சிறிய/பெரிய பேச்சாளர்களைத் தயார் செய்யுங்கள். பாரதத்திலும் ஒவ்வொரு மாநிலத்திலும் அப்படிப்பட்ட பேச்சாளர்களின் குரூப் அல்லது ஓரிருவரைத் தயார் செய்யுங்கள். எப்போது அடுத்தவர்கள் நிரூபிக்கிறார்களோ அப்போதே பாபாவின் பிரத்தியட்சம் ஏற்படும். எப்படி இதுவரை எந்த சேவை செய்தீர்களோ அதில் பிறரது அனுபவத்தின் மூலமாக உங்களைப் பற்றி கேள்விப்பட்டு வளர்ச்சி

ஏற்பட்டு வந்தது, அப்படி அனுபவத்தின் அத்தாரிட்டியோடு பேசவேண்டும் அப்போது சப்தம் அதிகமாகும்.

8. எப்போது பிரத்தியட்சத்தின் கொடி பறக்குமோ, அப்போது எல்லோருடைய பார்வையும் ஒரு பாபாவின் பக்கம் திரும்பும். உங்கள் உள்ளத்தில் பாபாவின் கொடி நிச்சயமாக இருக்கிறது, ஆனால் இப்போது பிறரது உள்ளத்தில் இந்த பிரத்தியட்சத்தின் கொடியை பறக்க வைக்க வேண்டும். இப்போது துணி கொடியை பறக்க விடுகிறீர்கள் ஆனால் பிரத்தியட்சத்தின் கொடியை எல்லோரும் ஒன்று சேர்ந்து பறக்க விடவேண்டும் மேலும் பறந்தே தீரும்.

9. அனுபவமே பிரத்தியட்சத்திற்கான ஆதாரமாகும். அனுபவமுடைய ஆத்மாக்கள் ஒருபோதும் வாயுமண்டலத்தினுடைய அல்லது சகவாசத்தினுடைய பாதிப்பிற்கு ஆளாகமாட்டார்கள். வெறும் பேச்சினுடைய பிரபாவமுடையவர்கள் சிலநேரம் ஆடுவார்கள், சிலநேரம் யோசனையில் இருப்பார்கள், அனுபவம் என்றால் உறுதியான அஸ்திவாரம்.

10. இப்போது மீதமிருக்கும் கொஞ்ச நேரத்தில் நிரந்தர யோகி, நிரந்தர சேவாதாரி, நிரந்தர காட்சிதரும் சொரூபம், நிரந்தரமாக அப்படியே பாபாவைப் போல் இருப்பது என்ற விதியின் மூலமாக வெற்றியடையுங்கள். உங்கள் காரியங்கள் எல்லாம் வெற்றிகரமாக இருக்க வேண்டும், எண்ணங்களும் வெற்றியடைய வேண்டும் மேலும் சொரூபமும் சதா வெற்றி சொரூபமாக இருக்க வேண்டும் அப்போதே பிரத்தியட்சம் மற்றும் வெற்றி முழக்கத்தின் முரசு கொட்டும்.

11. வெளிநாட்டினரின் சப்தம் கேட்டு பாரதவாசிகள் விழிப்படைவார்கள், பிரத்தியட்சத்தின் சப்தத்தை வெளிப்படுத்தும் இடமாக வெளிநாடுகள் விளங்கும். முதலில் நாலாபுறமும் நிமித்தமாகியுள்ள, சப்தத்தை அதிகமாக பரப்பக்கூடிய பெரிய மைக் அல்லது சேவைக்கு நிமித்தமாக உள்ள ஆத்மாக்கள் அங்கிருந்து இங்கு வரவேண்டும் பின்னர் தூதுவராகி இங்கிருந்து செல்ல வேண்டும். ஒவ்வொரு மூலையிலுள்ள அனைவருக்கும் இந்த செய்தி கிடைக்க வேண்டும். அப்போது ஒரே நேரத்தில் நாலாபக்கங்களில் இருந்தும் இந்த சப்தம் வெளிவரும். ஒன்றேதான், ஒன்றுதான், அது இதுதான், இதுதான் என ஒரேமாதிரியாக நாலாபுறமும் முரசுகள் ஒலிக்கும். அப்போதே பிரத்தியட்சத்தின் முரசு ஒலிப்பதாகச் சொல்ல முடியும்.

12. வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கிறது. சப்தம் எல்லாப் பக்கமும் பரவிக் கொண்டிருக்கிறது. பிரத்தியட்சத்தின் திரையும் விலக ஆரம்பித்துவிட்டது. அருகில் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆசை எல்லா இடங்களிலும் உள்ள ஆத்மாக்களுக்கு இப்போது உதயமாகிக் கொண்டிருக்கிறது. காதால் கேட்ட விசயங்களை கண்ணால் பார்க்க வேண்டும் என்பதாக மாற்ற மடைந்திருக்கிறது. இவைகள் எல்லாம் மாறிக்கொண்டிருக்கிறது. ஆனால் பெரும்பாலான குழந்தைகள் எப்போது விதிப்படி வெற்றியடைந்து வெற்றிசொரூப மாகிறார்களோ அப்போதே பிரத்தியட்சம் ஏற்படும்.

13. எப்போது குவாலிடி ஆத்மாக்கள் காரியத்தையும், பாபாவையும் பிரத்தியட்சம் செய்கிறார்களோ அப்போதே பாபாவின் பிரத்தியட்சம் ஏற்படும் செய்தி தருவது அவசியம் ஆனால் செய்தி தருபவராக்குவதும் அவசியம்.

# 35. ஒற்றுமை மற்றும் குழுவின் ஒரே ரசனை நிலை மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்ய நிமித்தமாகுங்கள்

1. பாபாவை பிரத்தியட்சம் செய்வதற்காக விசேசமாக இரண்டு விசயங்களின்மீது கவனம் கொள்ள வேண்டும் – ஒன்று எப்போதும் சமஸ்காரங்களை ஒருங்கிணைக்கும் ஒற்றுமை. இதற்காக ஒவ்வொருவரும் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும், உள்ளடக்கும் சக்தியை தாரணை செய்தீர்கள் என்றால் அதன்மூலம் மற்றவர் சமஸ்காரமும் அவசியம் குளிர்ந்து விடும். இரண்டாவது திருப்தியாக இருக்க வேண்டும் மேலும் எல்லோரையும் திருப்தியாக்க வேண்டும். எப்போது இந்த இரண்டு விசயங்களும் சதா கவனத்தில் இருக்கிறதோ அப்போது பாபா யாரோ, எப்படி இருக்கிறாரோ அப்படியே தெரிவார், அதோடு பிரத்தியட்சமும் ஏற்படும்.

2. இப்போது ஒரே வழியாகிவிட வேண்டும். ஒற்றுமையின் சூத்திரத்தால் கட்டப் பட்டு, உலகில் உள்ள ஒவ்வொரு ஆத்மாவிற்கும் செய்தியை கொண்டுபோய் சேர்க்க வேண்டும். யாராவது வியாதி உடையவராக இருக்கிறார் எனக் கொள்வோம் அப்போது அவர் மற்ற வியாதியஸ்தர்களுக்கு சேவை செய்ய வேண்டும். படிக்காதவர் படிக்காதவர்களுக்கு சேவை செய்ய வேண்டும், யார் வேண்டுமானாலும் செய்ய முடியும், அதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஒருவேளை வாயால் பேச முடியவில்லை என்றாலும் மனதால் வயுமண்டலத்தின் மூலமாக சுகமான உணர்வுகளை பரப்புங்கள், சுகமயமான நிலையில் இருந்து சுகமயமான உலகை உருவாக்குங்கள். உட்காரும்போது எழுந்திருக்கும்போது பத்து பத்து நிமிடங்களாவது கட்டாயம் சேவை செய்யுங்கள். எங்கும் செல்ல முடியவில்லை என்றாலும், உடல்நிலை சரியில்லை என்றாலும் வீட்டில் அமர்ந்தபடியே செய்யுங்கள், ஆனால் அவசியம் உதவி செய்யுங்கள் அப்போது அனைவரின் உதவி மூலமாக சுகமயமான உலகம் உருவாகும்.

3. இப்போது பிரத்தியட்சத்தின் திரையை விலக்கிக்காட்ட வேண்டும் என்ற ஆசை அனைவரது மனதிலும் ஏற்பட்டுவிட்டது. இப்போது ஆரம்பமாகிவிட்டது, எல்லோரது உதவியும் ஊக்க உற்சாகத்தோடு கிடைத்துக்கொண்டிருக்கிறது. இப்போது மிக நன்றாக தாம் தூம் என எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு வழிப்படி நடந்து இந்தக் காரியத்தை அதிகமாக்குங்கள். ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் உதவியால், நல்லாசை நல் உணர்வுகளால் சேவையில் தூள் கிளப்புங்கள்.

4. சுய முன்னேற்றத்திற்கான புரோகிராம் மற்ற எல்லா புரோகிராம்களின் வெற்றிக்கான அஸ்திவாரமாக இருக்கிறது, இதன் மூலமாக பிரத்தியட்சத்திற்கான சப்தம் தானே அதிகமாகும். உலகை உதவி செய்யக்கூடியதாக மாற்றுகிறீர்கள் என்றால் அதற்கு முன்னதாக நீங்கள் நிமித்தமாக இருக்கிறீர்கள் அல்லவா. சிறியவர், பெரியவர், நோய்வாய்ப் பட்டவர், ஆரோக்கியமானவர், மகாரதி, குதிரைவீரர் என எல்லோரும் ஒருமித்த கருத்துடன் உதவி செய்யக்கூடியவர் ஆகுங்கள். பிரத்தியட்சம் ஏற்படுவதற்கு எல்லோருடைய விரல்களும் தேவை. ஒவ்வொரு செங்கலுக்கும் மகத்துவம் இருக்கிறது.

5. உலகத்தில் உள்ளவர்கள் மரியாதை தருகிறார்கள், ஆனால் இங்கு சமமான நிலையை நீங்கள் பிரத்தியட்சம் செய்ய வேண்டும். மரியாதை கொடுப்பதற்காக நீங்கள் எதைச் செய்தாலும் அது வெறும் பெயருக்குத்தான். உண்மையை உலகின் முன்னால் காட்ட வேண்டும். நாங்கள் எல்லோரும் ஒன்றுதான். ஒருவருடையவராக இருக்கிறோம், ஒன்றுபட்ட நிலை உடையவராக இருக்கிறோம், ஒருவருடைய அன்பில் மூழ்கி இருந்து அந்த ஒருவருடைய பெயரை பிரத்தியட்சம் செய்யக்கூடியவர்கள் என்ற இந்த அன்பும், பற்றின்றியும் உள்ள தங்க நிலையின் கொடியை பறக்க விடுங்கள்.

6. இதுவரை வெவ்வேறு மலர்கள் தத்தமது வண்ணங்களை காட்டிக்கொண்டு இருக்கிறது, ஆனால் எப்போது பூச்செண்டு வடிவில் தமது நறுமணத்தைப் பரப்புகிறீர்களோ, அதாவது சக்திகளின் அணி பிரத்தியட்சமாகிறதோ, அப்போது இந்த அணியின் சக்தி பரமாத்மாவின் பிரத்தியட்சத்திற்கு பொறுப்பாக அமையும். இப்போது ஒவ்வொருவரும் தனித்தனியாக இருக்கக்கூடிய காரணத்தால் அதிக முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஆனால் ஒரே அணியாக இருக்கும்போது முயற்சி குறைவாகவும் வெற்றி அதிகமாகவும் இருக்கும்.

7. ஒற்றுமையின் பலம், அன்பின் பலம், ஒருவர் மற்றவருக்கு செய்யும் உதவியின் பலம், மற்றும் பொறுமையின் பலம் எல்லாவற்றையும் சேமித்து வைத்திருந்தால் மாயாவால் ஒருபோதும் உங்களோடு சண்டையிட முடியாது. பின்னர் வெற்றி களிப்பின் முரசு கொட்டும்.

8. எப்போது இத்தனை பேரும், பலவிதமாக இருந்தபோதும் ஒன்றாகத் தெரிகிறீர்களோ மேலும் ஒருவருடைய அன்பிலேயே மூழ்கி ஒரே ரசனையில் நிலைத்திருக்கிறீர்களோ அப்போது பிரத்தியட்சம் ஏற்படுவதற்கான அடையாளம் பார்ப்பதற்குத் தெரிய வரும். பிரத்தியட்சத்தைக் கொண்டு வருவோம் என்பதே உங்கள் எல்லோருடைய வாக்குறுதியாக இருக்கிறது.

9. எப்படி எல்லா ஆத்மாக்களுக்கும் ஞானத்தின் வெளிச்சம் கொடுப்பதற்காக எப்போதும் சுப பாவனை மேலும் நன்மை செய்யும் பாவனை கொண்டு முயற்சி செய்து வருகிறீர்களோ, அதேபோல தமது இந்த தெய்வீக கூட்டத்தினரையும் ஒரே ரசனையில் நிலைக்கச் செய்து அணியின் சக்தியை அதிகமாக்குவதற்காக ஒருவர் பிறர்மீது விதவிதமான ரூபத்தில் முயற்சி செய்யுங்கள். அதன்மூலம் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இந்த தெய்வீகக் கூட்டத்தின் மூர்த்திகளில் இருந்து ஒரே ரசனை நிலையின் விசேச ரூபம் காட்சியாகக் கிடைக்கட்டும். எப்போது இந்த தெய்வீக கூட்டத்தின் ஒரே ரசனையுடைய சம்பூர்ண நிலை புகழ் பெறுகிறதோ அப்போது பாப்தாதாவின் பிரத்தியட்சம் நெருங்கி வரும்.

10. இந்த பரமாத்ம ஞானத்தின் மூலமாகவே உலகில் ஒரே தர்மம், ஒரே ராஜ்ஜியம், ஒரே வழி ஆகியவற்றின் ஸ்தாபனை ஏற்படுகிறது. உங்களுடைய இந்த பிராமண கூட்டத்தின் விசேசங்கள் எல்லாம் தேவதைகள் ரூபத்தில் வழக்கத்தில் இருந்து வருகிறது. இந்த விசேசங்களே அற்புதங்களைச் செய்யப் போகிறது, இதன் மூலமாகவே பெயர் பெரியதாகும், பிரத்தியட்சமும் ஏற்படும். அதனால் இந்த விசேசங்களில் நம்பர் ஒன் ஆகுங்கள். அதற்காக தனது மூல சமஸ்காரங்கள் எவைகளோ, அவைகளை அகற்றி பாப்தாதாவின் சமஸ்காரங்களை காப்பி அடித்து சமமாகவும், சமபூர்ணமாகவும் ஆகுங்கள். அப்போது ஒவ்வொருவரிலும் பாபா தெரிவார், பிரத்தியட்சமும் ஏற்படும்.

11. பிராமண குழந்தைகளாகிய நீங்கள் குழுவாக உங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளும்போது அதில் அவ்யக்த பாவனை இருக்க வேண்டும். பரிஸ்தாக்கள் அல்லது ஆத்மாக்கள் ஆத்மாக்களோடு பேசுவது போல இருக்க வேண்டும். இதற்காக யாரைப்பற்றி கேள்விப்பட்ட குறைகளையும் எண்ணத்தில்கூட ஏற்கக்கூடாது அல்லது ஏற்கச் செய்யக் கூடாது. எப்போது உங்கள் நிலை அப்படி ஆகிறதோ அப்போது இந்த கூட்டத்தைப் பற்றி எந்த நல்லாசையை பாபா கொண்டிருக்கிறாரோ அது நடைமுறையில் வரும் பின்னர் உங்கள் மூலமாக பாபாவின் பிரத்தியட்சம் ஏற்படும்.

12. இது எப்படிப்பட்ட காலம் மேலும் எந்த காரியம் நடந்து கொண்டிருக்கிறது, என்ற இந்த சப்தம் எப்படியாவது ஒவ்வொருவரையும் சென்று சேரவேண்டும். செய்தித்தாள் மூலமாகவும் சேவை நடைபெற வேண்டும். ஒரே கூட்டத்தின் வடிவில், ஒருவர் பிறரை புரிந்து கொண்டு, உதவியாளராகி, எல்லையற்ற சேவையில் எல்லையற்ற ரூபத்தை கொண்டுவர வேண்டும் அப்போது பிரத்தியட்சம் ஏற்படும்.

13. ஒற்றுமைக்காக ஒரு ஆன்மீக தாயத்தை எப்போதும் தன்னிடம் வைத்திருக்க வேண்டும் அது யாதெனில் ''மரியாதை தருவதே மரியாதை பெறுவதாகும்''. இந்த மரியாதை அளிக்கும் ரெக்கார்டு வெற்றிக்கான அழியாத ரெக்கார்டாக ஆகிவிடும். வாயில் எப்போதும் ''முதலில் நீங்கள்'' என்ற வெற்றி மந்திரம் இருக்கட்டும். இந்த மகா மந்திரம் மனதில் மிக உறுதியாக இருக்கட்டும். யதார்த்த ரூபத்தில் முதலில் நான் என்பதை அகற்றிவிட்டு பிறரை முன் வைப்பதே தன் முன்னேற்றம் என உணர்ந்து இந்த மகா மந்திரத்தை மேலும் பெருக்கி வெற்றி அடைந்துகொண்டே இருங்கள், இந்த மந்திரமும் தாயத்தும் எப்போதும் கூடவே இருந்தால் பிரத்தியட்சத்தின் முரசு ஒலித்துவிடும்.

14. தர்மத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னால் தூய்மையின் சக்தியையும், ஆட்சி செலுத்துவோரிடம் ஒற்றுமையின் சக்தியையும் நிரூபித்துக் காட்டுங்கள். இந்த இரண்டு சக்திகளையும் நிரூபிப்பதன் மூலம் ஈஸ்வரிய குலத்தின் கொடி மிக எளிதாக பறக்கும்.

# 36. தனது முகத்தின் மூலமாக தந்தையின் உருவத்தை காட்டுங்கள் அப்போது பரமாத்மா பிரத்தியட்சத்தின் காட்சி தெரியும்

1. எனது ஒவ்வொரு குழந்தையும் தனது உருவத்தின் மூலமாக பாபாவின் குணங்களைக் காட்ட வேண்டும் என்பதே பாப்தாதாவின் விருப்பமாக இருக்கிறது. முகம் வெவ்வேறாக இருக்கலாம் ஆனால் எல்லோருடைய முகத்தில் இருந்தும் பாபாவின் குணங்கள் தெரிய வேண்டும். யாரெல்லாம் பார்க்கிறார்களோ, யாரெல்லாம் சம்மந்தத்தில் வருகிறார்களோ அவர்கள் உங்களைப் பார்த்ததும் உங்களை மறந்துவிட வேண்டும் ஆனால் உங்களிடம் பாபா தெரிய வேண்டும் அப்போதே நேரம் முடிவடையும்.

2. இப்போது நேரத்திற்குத் தக்கபடி எல்லோருடைய உள்ளத்தில் இருந்தும் எங்களுடைய தந்தை வந்து விட்டார் என்ற சப்தம் வெளிவரவேண்டும். என்னுடைய தந்தை, பிரம்மா குமாரிகளுடைய தந்தையல்ல, என்னுடைய தந்தை. எப்போது எல்லோருடைய உள்ளத்தில் இருந்தும் என்னுடைய பாபா என்ற இந்த சப்தம் வெளிவருகிறதோ, அப்போதே இந்த சப்தம் நாலாபுறமும் டமாரத்தைப் போல பரவும்.

3. அறிவியலின் சாதனங்கள் எதெல்லாம் இருக்கிறதோ, அந்த சாதனங்களைக் கொண்டும் என்னுடைய தந்தை வந்துவிட்டார் என்ற இந்த முரசு ஒலித்துக் கொண்டே இருக்கட்டும். இப்போது எதெல்லாம் செய்துகொண்டிருக்கிறீர்களோ, மிக நன்றாக செய்திருக்கிறீர்கள் மேலும் செய்துகொண்டிருக்கிறீர்கள். ஆனால் இப்போது எல்லோரும் ஒன்று சேர்ந்து முரசை ஒலிக்கச் செய்ய வேண்டும். யார் எங்கிருந்து கேட்டாலும் வரவேண்டியவர் வந்து விட்டார் என்ற ஒரே சப்தத்தையே கேட்க வேண்டும் - இதையே பாபாவுடைய தெளிவான பிரத்தியட்சம் என்று சொல்லப்படுகிறது.

4. தற்காலத்தின் கணக்குப்படி, பிரத்தியட்சத்தின் கணக்குப்படி, இப்போது சேவை உங்களிடம் வரும், ஆரம்பத்தில் ஸ்தாபனையின் விசயம் வேறாக இருந்தது ஆனால் இப்போது நீங்கள் சேவையின் பின்னால் போகமாட்டீர்கள். உங்களிடம் சேவை தானே வந்து சேரும். யார் உண்மையான சேவாதாரிகளோ அவர்களுக்கு மற்ற எந்த சேவை கிடைக்காமல் இருந்தாலும் அவர்கள் தங்கள் முகத்தின் மூலமாக, நடத்தையின் மூலமாக சேவை செய்துகொண்டே இருப்பார்கள். அவர்களுடைய முகம் பாபாவை காணச் செய்யும், நடத்தை பாபாவின் நினைவை தரும், இதுவே நம்பர் ஒன் சேவை.

5. எப்படி ஆரம்பத்தில் பிரம்மாவோடு கூடவே விசேசமாக பிராமணர்களும் ஸ்தாபனைக்கு நிமித்தமானார்களோ, அதேபோல முடிவு நேரத்திலும் பாபாவோடு கூடவே ஒப்பற்ற குழந்தைகளும் அப்படியே தேவ ரூபமாக அனுபவம் தருவார்கள். அதற்காக இப்போதிருந்தே பலனடைந்த சொரூபத்தில் நிலைத்திருங்கள். இப்போது சின்னஞ்சிறு விசயங்களை எல்லாம் கடந்து உயர்ந்த நிலைக்கு செல்லுங்கள். விசேசமாக பலன் பெற்ற சொரூபத்தின் காட்சியை தானும் காட்டுங்கள் பிறரையும் காட்டச் செய்யுங்கள்.

6. இளைஞர் பிரிவினரும் இது எங்களுக்கு கடினமில்லை, எளிதாக இருக்கிறது, நாங்கள் சகஜ யோகிகளாக, சகஜ பிரம்மாச்சாரிகளாக இருக்கிறோம் என்று தங்கள் அனுபவத்தை சொல்ல வேண்டும். எனவே அப்படிப்பட்ட உறுதியான பிரம்மச்சாரி யோகி ஆத்மாக்களுடைய பிரபாவம் மற்றவர்கள்மீதும் ஏற்படும். இதுவும் பிரத்தியட்சத்திற்கான ஒரு நிமித்த காட்சியாகிவிடும்.

7. இப்போது உங்கள் சம்மந்தத்தில் வரக்கூடியவர்கள் உங்கள் சார்பாக பேசட்டும், நீங்கள் ஆசீர்வாதம் மற்றும் திருஷ்டி மட்டும் கொடுங்கள். எப்படி இப்போது சங்கராச்சாரியாரை நாற்காலியில் அமர வைக்கிறார்களோ, அதேபோல உங்களை பூஜிக்கதக்கவர் என்ற நாற்காலியில் அமர வைக்க வேண்டும். இப்போது அந்த மாதிரி பூமியை தயார் செய்பவர்கள் நிமித்தமாவார்கள், நீங்கள் வெறும் திருஷ்டி மூலமாக விதைபோட வேண்டும், ஆசீர்வாதத்தின் வார்த்தைகள் இரண்டைச் சொல்ல வேண்டும். அப்போது உங்களிடம் பாபா தெரிவார், மேலும் பாபாவின் திருஷ்டி பாபாவின் அன்பை அனுபவித்துக் கொண்டே பிரத்தியட்சத்தின் டமாரத்தை முழங்க ஆரம்பிப்பார்கள்.

8. இப்போது உங்கள் ஆன்மீக உருவம் மூலமாக ஆன்மீக தந்தையை பிரத்தியட்சம் செய்ய வேண்டும். பகவான் தானே இவர்களை இவ்வளவு பாக்கியசாலிகளாக ஆக்கியிருக்கிறார் என ஒவ்வொருவர் வாயிலிருந்தும் ஒரே வார்த்தை வெளிவரவேண்டும். ஒவ்வொருவருடைய பாக்கியமும் பாப்தாதாவின் அறிவுரைகளை நிரூபிக்கட்டும். ஒவ்வொருவரும் தனனை அப்படி தெய்வீக, தூய கண்ணாடியாக்குங்கள் அதாவது ஒவ்வொரு கண்ணாடி மூலமாகவும் பலருக்கு

பாப்தாதாவின் காட்சி கிடைக்க வேண்டும், அப்போது வெற்றி முழக்கத்தின் முரசு பலமாக ஒலிக்கும்.

9. இப்போது தபஸ்யா மூலமாக பிராப்திகளை சுயம் தனது வாழ்விலும் மற்றுமுள்ள அனைத்து சம்மந்தம் தொடர்பில் உள்ளோரிடமும் பிரத்தியட்சம் செய்யுங்கள். நீங்கள் உங்களிடம் அனுபவம் செய்கிறீர்கள் ஆனால் வெறும் மனம் புத்தியால் அனுபவம் செய்தீர்கள் என்பதோடு நிறுத்தி விடாதீர்கள். அதனை முகம் மற்றும் நடத்தையிலும் கொண்டுவாருங்கள், சம்மந்தம் - தொடர்பிலும் கொண்டு வாருங்கள், அப்போது முதலில் தன்னிடம் பிரத்தியட்சம் ஏற்படும், பின்னர் சம்மந்தத்தில் பிரத்தியட்சம் ஏற்படும், பின்னர் உலக மேடையில் பிரத்தியட்சம் ஏற்படும், அப்போது பிரத்தியட்சத்தின் முரசு ஒலிக்கும்.

10. பாப்தாதா குழந்தைகளின் மகத்துவத்தை காணும்போது, ஒவ்வொரு குழந்தையும் எவ்வளவு மகத்துவம் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்று பெருமைப் படுகிறார். யாரும் சாதாரணமாக இல்லை கொஞ்சம் பிரத்தியட்சம் ஏற்படட்டும் பின்னர் நீங்கள் யார் என்று நீங்களே உணர்வீர்கள். பாபா உங்களை அந்த பெருமையோடு பார்க்கிறார். உங்களுடைய ஒவ்வொரு செயலிலும் பாபா மட்டுமே தெரிய வேண்டும்.

11. எப்போது யார் பேசினாலும் உங்களுடைய ஒவ்வொரு பேச்சிலும் பாபா தெரிய வேண்டும். உலகில் கூட யாராவது மிக நன்றாக பேசக்கூடியவராக இருந்தால், இவருக்கு கற்றுத் தருபவர் யார்? என எல்லோரும் கேட்பார்கள், அவர் மீது பார்வை போகும். அதுமாதிரி உங்களுடைய ஒவ்வொரு கர்மத்தின் மூலமாக பாபாவின் பிரத்தியட்சம் ஏற்பட வேண்டும். அந்த மாதிரி தாரணா மூர்த்தி, தெய்வீக மூர்த்தி ஆகுங்கள் அப்போது பிரத்தியட்சம் ஏற்படும்.

12. ஞானத்தின் கணக்குப்படி நீங்கள் ஞானம் நிறைந்தவர்கள் ஆகிவிட்டீர்கள். ஆனால் ஞானத்தை வாழக்கையில் கொண்டு வருவதன் மூலம் ஞானம் நிறைந்தவராக இருப்பதோடுகூடவே சக்தி நிறைந்த, ஆனந்தம் நிறைந்த நிலையை அனுபவம் செய்யுங்கள். இதற்காக ஏதாவது ஒரு ஆன்மீக போதை தரும் விசயங்களை விதவிதமான ரூபத்தில் பயன்படுத்துங்கள். இந்த போதையை எவ்வளவு வாழ்வில் அனுபவம் செய்கிறீர்களோ அவ்வளவு சதா எல்லா கவலையில் இருந்தும் விலகி கவலையில்லா மகாராஜா ஆகிவிடுவீர்கள். எல்லோரும் உங்களை கவலையற்ற மகாராஜா வடிவில் பார்ப்பார்கள். அந்த மாதிரி தன்னை பிரத்தியட்சம் செய்யுங்கள். அப்போது பாபாவின் பிரத்தியட்சம் ஏற்படும்.

13. எல்லோரும் பேச்சாளராகிவிட்டீர்கள். ஆனால் தனது ஒவ்வொரு செயலின் மூலமாக சொற்பொழிவாற்றக்கூடியவர்கள் கோடியில் சிலர்தான், எனவே அப்படிப்பட்ட விசேசங்களைக் காட்டுங்கள். உள்ளத்திற்கு ஓய்வு தரக்கூடியவர்கள், மனதின் அமைதிக்கு ஆதாரமானவர்கள் இந்த சிறந்த ஆத்மாக்கள் என எல்லோரும் அனுபவம் பெற வேண்டும். அமைதியற்ற நேரத்தில் அமைதிக்கு மகத்துவம் உண்டாகிறது எனவே அப்படிப்பட்ட நேரத்தில் இந்த அனுபவத்தை ஏற்படுத்துங்கள், அப்போது இதுவே பிரத்தியட்சத்திற்கு ஒரு நிமித்த ஆதாரமாகிவிடும்.

14. இப்போது ஒவ்வொரு ஆத்மாவின் உள்ளத்திலும் பாபாவின் பிரத்தியட்சக் கொடி பறக்க வேண்டும், அந்த நாளை அருகில் கொண்டு வாருங்கள். என்னுடைய அப்பா என ஒவ்வொரு உள்ளமும் சொல்ல வேண்டும். எதை அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டேன் என்ற பாடலின் மீது எல்லோரும் ஆட வேண்டும். அந்த நாள்கூட தொலைவில் இல்லை. ஆஹா! அப்பா ஆஹா! ஆஹா!! பாபாவால் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளே ஆஹா! என்ற இந்த முரசு எங்கும் பிரமாதமாக முழங்கும்.

# 37. எண்ணத்தின் உறுதி, மனதின் ஒருமுகம், பேச்சின் இனிமை மூலமாக பரமாத்மாவை பிரத்தியட்சம் செய்ய நிமித்தமாகுங்கள்

1. முதலில் உறுதியான எண்ணங்களின் கொடியை தனது உள்ளத்தில் பறக்க விடுங்கள் அதோடுகூடவே சேவைக்காக நாலாபுறமும் எல்லா ஆத்மாக்கள் முன்னிலையிலும் பாபாவை பிரத்தியட்சம் செய்வதற்கான கொடியை பறக்க விடுங்கள். இப்போது அந்த நாளும் வந்தே வந்துவிட்டது, எனவே எல்லோரும் பாபாவின் புகழ்பாடி, பிரத்தியட்சக் கொடியின் கீழே வருவார்கள். உதவி பெறுவார்கள், மேலும் உதவும் வள்ளல் பாபாவின் குழந்தைகள் நீங்கள் மாஸ்டர் உதவும் வள்ளலாக இருப்பீர்கள்.

2. சேவையில் வாய் மூலமாக செய்தி தருவதில் நேரத்தையும் செலவிடுகிறீர்கள், செல்வத்தையும் ஈடுபடுத்துகிறீர்கள், அலையவும் செய்கிறீர்கள், களைத்தும் போய்விடுகிறீர்கள் . . . . ஆனால் சிறந்த எண்ணங்களைக் கொண்டு செய்யும் சேவையில் இவை அனைத்தும் மிச்சமாகின்றன. எனவே இந்த எண்ணங்களின் சக்தியை அதிகமாக்குங்கள். உறுதி நிறைந்த எண்ணங்களை எழுப்புங்கள் அப்போது பிரத்தியட்சமும் விரைவில் ஏற்படும்.

3. உலகத்தில் பிரத்தியட்சக் கொடியை பறக்க விடுவதற்கு முன்னால் ஒவ்வொரு பிராமணனும் தனது மனதில் சதா இதய சிம்மாசனத்தில் பாபாவின் கொடியை பறக்க விடவேண்டும். இந்த கொடியை பறக்க விடுவதற்காக, இரண்டு வார்த்தைகளை மட்டும் ஒவ்வொரு செயலிலும், உள்ளத்திலும், சம்மந்தம் தொடர்பிலும் கொண்டுவரவேண்டும். **அனைத்து சம்மந்தங்களிலும் தொடர்பிலும் தங்களுக்குள் ஒற்றுமை. வெவ்வேறு சமஸ்காரங்கள் இருந்தாலும் வேற்றுமையில் ஒற்றுமை. இரண்டாவது – ஒவ்வொரு எண்ணத்திலும் ஒருமுகம், இந்த ஒருமுகம் மற்றும் உறுதியே வெற்றிக்கான சாதனமாகும்.**

4. உங்களுடைய ஒருமுகப்படுத்தும் சக்தியானது நிறைய விசித்திரமான வண்ணங்களை காட்ட வல்லது. ஒருமுகத்தின் மூலமாக அனேக பலன்களை பெற முடியும். ஒருமுக சக்தியின் மூலமாக தன்னை சுகப்படுத்திக் கொள்கிறார்கள். அனேக நோயுற்றவர்களுக்கு ஆரோக்கியம் தருகிறார்கள், அதேபோல நீங்களும் இதைவிட அதிகமாக விசித்திர அனுபவங்களை ஏற்படுத்த முடியும். இந்த சக்தியை அதிகரிப்பதற்காக எண்ணங்களை நிறுத்தும் பயிற்சி செய்யுங்கள். நில் என்று சொன்னால் நின்று விட வேண்டும் அப்போது வரதானி ரூபத்தில் வெற்றி முழக்கத்தின் முரசு கொட்டுவீர்கள்.

5. இப்போது ஆஹா ஆஹா என முரசு கொட்டுகிறார்கள் - மிக நன்றாக சொற்பொழிவாற்றுகிறீர்கள், நன்றாக முயற்சி செய்திருக்கிறீர்கள், மிகச் சிறந்த வாழ்க்கை வாழ்கிறீர்கள் பிறகு வெற்றி முழக்கத்தின் முரசு கொட்டுவார்கள். அதனால் எவ்வளவு நேரம் கிடைத்தாலும் சரி இரண்டு நிமிடங்கள், ஐந்து நிமிடங்கள் அந்த ஒருமுகப் படுத்தும் சக்தியை அதிகமாக்குவதில் ஈடுபடுங்கள். அப்போது கொஞ்சம் கொஞ்சமாக செய்தாலும் அது சேர்ந்து விடும். பிறகு சக்திகளின் மூலமாக சர்வ சக்திவானுடைய பிரத்தியட்சம் ஏற்படும். சக்திகளின் சம்பூர்ண நிலை, குருடருக்கு முன்னால் கண்ணாடி போல வேலை செய்யும்.

6. இப்போது கடைசியில் இந்த பிரத்தியட்சத்தின் சீசன் மட்டும் பாக்கி இருக்கிறது, அதில் வெற்றி முழக்கத்தின் முரசு கொட்டும். சப்தம் பலமாக ஒலிக்கும், அமைதி ஏற்படும். ஆனால் அமைதி மூலமாகவே முரசு ஒலிக்கும். எதுவரை வாய்முரசு அதிகமாக ஒலிக்கிறதோ அதுவரை பிரத்தியட்சம் ஏற்படாது. எப்போது பிரத்தியட்சத்தின் முரசு ஒலிக்கிறதோ அப்போது வாய்முரசு நின்று விடும். “அறிவியல் மீது அமைதியின் வெற்றி” என்று பாடப்பட்டிருக்கிறது, வார்த்தையின் வெற்றி என்றில்லை.

7. “கிடைத்து விட்டது, வந்து விட்டார்” என இப்போது பிரத்தியட்சத்தின் முரசு எங்கும் ஒரே மாதிரியாக முழங்க வேண்டும். இது வரை வாத்தைகள் மூலமாக மாற்றும் காரியங்கள் நடந்து கொண்டு இருக்கிறது. இப்போது உணர்வுகள் மூலமாக உணர்வுகளை மாற்ற வேண்டும். எண்ணங்கள் மூலமாக எண்ணங்களை மாற்ற வேண்டும். எப்படி சேவையின் ஆரம்பத்தில் தனித்திருக்கக்கூடிய, தேவநிலையின் விசேசம் இருந்ததோ, இப்போது கடைசியிலும் அதே ஜொலி ஜொலிப்பை பிரத்தியட்ச ரூபத்தில் அனுபவம் செய்ய வேண்டும், அப்போது பிரத்தியட்சத்தின் முரசு ஒலிக்கும்.

8. எப்படி அறிவியல் சக்திக்கு பிரபாவம் இருக்கிறதோ அதேபோல அமைதி சக்தி அதாவது எண்ணங்களை ஒருமுகப்படுத்தும் சக்தியின் பிரபாவத்தை அனுபவம் செய்ய வேண்டும், அப்போது பிரத்தியட்சத்தின் கொடி பறக்கும்.

9. உங்களுடைய பேச்சு பாபாவின் புகழை அனுபவம் செய்ய வைக்க வேண்டும். இந்த விசேசமே பிரத்தியட்சத் திரையை விலக்குவதற்கான சாதனமாகும். வாய் மூலமான உள்ளத்தின் ஓசை இதயத்திற்கு இதமளிப்பவரை தானே வெளிப்படுத்தும். எனவே எனது ஒவ்வொரு அடியிலும், பேச்சிலும், என் மூலமாக பாபாவின் பிரத்தியட்சம் ஏற்படுகிறதா? என்னுடைய பேச்சு பாபாவோடு சேர்த்து வைக்கும் பேச்சாக இருக்கிறதா? எனது ஒவ்வொரு செயலும் கர்மத்தின் விளைவுகளை எடுத்துச் சொல்லும் பாபாவை பிரத்தியட்சம் செய்யக்கூடியதா? என்பதை செக் பண்ணுங்கள். யாருடைய உள்ளத்தில் எப்போதும் பாபா இருக்கிறாரோ, அவர்கள் தானாகவே 'மகன் தந்தையை பறைசாற்றும்' நெருக்கமான அதாவது மகான் குழந்தையாக இருப்பார்கள்.

10. இதுவரை ஒருவேளை உங்கள் வார்த்தையின் சக்தி வீணாகிக் கொண்டிருக்கிறது என்றால் வார்த்தையில் எது பாபாவை பிரத்தியட்சம் செய்யும் திறமையோ அல்லது அனுபவத்தை தரக்கூடிய சக்தியோ அது குறைவாக இருக்கிறது. வார்த்தையின் சக்தி விரயமாவதால் சக்தி சேகரமாவதில்லை, அதனால் பாபாவை பிரத்தியட்சம் செய்ய வைப்பதற்கான சப்தம் பலமாவதில் தாமதம் ஏற்படுகிறது. சாதாரண பேச்சு அதிகமாக இருக்கிறது. பேச்சு அலௌகீகமாக இருக்க வேண்டும், பரிஸ்தாவின் பேச்சாக இருக்க வேண்டும், ஒவ்வொரு சொல்லும் இனிமையாக இருக்க வேண்டும். இப்போது இந்த விசயத்தின் மீது அன்டர்லைன் செய்யுங்கள் அப்போது பிரத்தியட்சம் ஏற்படும்.

11. நமது சகோதர சகோதரிகள் எல்லோரும் பாபாவுடைய பிரத்தியட்சத்தின் சப்தத்தை கேட்க வேண்டும், அருகில் வர வேண்டும், சம்மந்தத்தில் வர வேண்டும், அதிகாரிகளாக வேண்டும், பூஜைக்குரிய தேவதைகளாக வேண்டும் அல்லது 33 கோடி என்ற பாடலைப் பாடக்கூடியவர்கள் ஆகவேண்டும் ஆனால் கட்டாயம் சப்தத்தை கேட்க வேண்டும். இந்த இலட்சியத்தை கையில் கொண்டு ஊக்க உற்சாகம் நிறைந்த சேவை செய்யுங்கள் ஆனால் மனதின் எண்ண சக்தி மற்றும் வார்த்தையின் சக்தி இரண்டும் இணைந்து இருக்க வேண்டும் அப்போதே வெற்றி கிடைக்கும்.

12. சாதாரண காரியங்கள் செய்து கொண்டிருந்தாலும் நிலையும், செயலும் பரிஸ்தாவைப்போல இருக்க வேண்டும், இதுவே பாபாவை பிரத்தியட்சம் செய்வதற்கு ஆதாரமாகும். விசயம் அப்படி இருந்தது, காரியம் அப்படி இருந்தது, சூழ்நிலை அப்படி இருந்தது, பிரச்சனை அப்படி இருந்தது அதனால் சாதாரண நிலை வந்து விட்டது என்பதை பாப்தாதா பார்க்க விரும்பவில்லை. பரிஸ்தா சொரூபத்தின் நினைவு உங்கள் உருவத்தில் இருக்க வேண்டும். எந்த நேரத்திலும், எந்த நிலையிலும் அலௌகீக சொரூபத்தின் அனுபவம் உண்டாக வேண்டும். எப்படி விசயமோ அப்படி தன் சொரூபத்தை உண்டாக்கக் கூடாது. விசயம் ஏன் உங்களை மாற்ற வேண்டும், நீங்கள் விசயத்தை மாற்றுங்கள். யார் சாதாரண நிலை மற்றும் நடத்தையில் இருந்து விலகி உயர்ந்த நிலையில் இருக்கிறார்களோ அவர்களே பரிஸ்தாக்கள்.

# 38. தன் முன்னே பிரத்தியட்சக் காட்சிகளை தோற்றுவியுங்கள்

1. இப்போது அப்படிப்பட்ட நேரம் வரப்போகிறது அப்போது எல்லோரும் உங்களை அழைப்பார்கள். நீங்கள் எந்த முயற்சியும் செய்ய மாட்டீர்கள், நீங்கள் எங்களிடத்திற்கு வாருங்கள் என்று அவர்களே அழைப்பு விடுப்பார்கள் அப்போது பிரத்தியட்சத்தின் சப்தம் பலமாக ஒலிக்கும் அதோடு எல்லோருடைய கவனமும் குழந்தைகள் உங்கள் மூலமாக பாபாவின் பக்கம் செல்லும். எல்லோருடைய பார்வையும் பாபாவின் பக்கம் செல்வது என்றால் பிரத்தியட்சம் ஆவதாகும் பின்னர் எங்கு பார்த்தாலும் வெற்றி முழக்கத்தின் மணி அடிக்கும். இப்படியாக நாடகத்தின் சூட்சும ரகசியம் உருவாக்கப் பட்டிருக்கிறது.

2. இதுவரை பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் உங்களுடைய உடல்-மனதின் முயற்சியால் நிகழ்சிகளை செய்து வருகிறீர்கள், மேடையை தயார் செய்கிறீர்கள், அழைப்பிதழ் அச்சடிக்கிறீர்கள், ஏதாவது வி.ஐ.பிக்களை கூப்பிடுகிறீர்கள், ரேடியோ டி.வி காரர்களை உதவியாளர் ஆக்குகிறீர்கள், செல்வத்தையும் ஈடுபடுத்துகிறீர்கள். ஆனால் இனி போகப்போக நீங்களே வி.ஐ.பி ஆகி விடுவீர்கள். உங்களை விட பெரியவராக யாரும் தெரிய மாட்டார்கள். ஏற்கனவே தயாராக உள்ள மேடைக்கு மற்றவர்கள் உங்களை அழைப்பார்கள். அவர்கள் தங்களுடைய உடல் மனம் செல்வத்தின் சேவையை தானே முன்வந்து வழங்குவார்கள்.

3. பிரத்தியட்சத்திற்குப் பிறகு நிறைய ஆத்மாக்கள் பட்சாதாபப்படுவார்கள், குழந்தைகளின் பட்சாதாபத்தை தந்தையால் காண சகிக்காது, அதனால் மாற்றம் ஏற்பட்டுவிடும். இப்போது பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய உயர்ந்த நிலை சதா காலத்திற்காக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. உங்களுடைய உயர்ந்த நிலை சேவையின் மேடைக்கு அழைப்பு விடுக்கும் மேலும் எல்லையற்ற உலக மேடையில் வெற்றி முழக்கத்தின் பாகத்தை நடிப்பீர்கள்.

4. இப்போது சேவையின் வெற்றி பிரத்தியட்சம் அடைந்து கொண்டிருக்கிறது. உங்களுக்கு ஏதாவது மேடை கிடைக்க வேண்டும் என்பதோ அல்லது டிகிரி கிடைக்க வேண்டும் என்பதோ அவசியமில்லை, ஆனால் இது சேவையின் பிரத்தியட்சமாகும். பகவானுடைய டிகிரிக்கு முன்னால் அந்த உலகீய டிகிரிகள் என்ன? சாதனங்கள் மூலமாக சேவையின் பிரத்தியட்சம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே தயாராக உள்ள மேடை கிடைத்தேயாக வேண்டும். அந்த நாளும் வரப்போகிறது அப்போது இந்த தர்மத்தின் தலைவர்கள்கூட உங்களுக்கு அழைப்பு விடுத்து உங்களையே சீப் கெஸ்ட் ஆக்குவார்கள்.

5. கல்ப கல்பங்களின் நினைவுச் சின்னங்கள் உங்களின் வெற்றி நிச்சயிக்கப் பட்டுவிட்டதை நிருபித்துக் கொண்டிருக்கின்றன. குழந்தைகள் தந்தையை பிரத்தியட்சம் செய்கிறீர்கள், தந்தை சக்தி சேனையை பிரத்தியட்சம் செய்கிறார். இப்போது சேவையில் புதிய ரூபரேகைகளை கையாள வேண்டும். எல்லோருடைய வாயில் இருந்தும் பாபா பாபா என்ற வார்த்தை வெளிவர வேண்டும் ஏனெனில் அவர் உலகிற்கே தந்தையாக இருக்கிறார். பிராமண ஆத்மாக்களின் உள்ளத்திலிருந்தும், வாயிலிருந்தும் பாபா என்ற வார்த்தை வந்து கொண்டுதான் இருக்கிறது, ஆனால் எல்லா ஆத்மாக்களுடைய உள்ளத்திலிருந்தும், வாயிலிருந்தும் பாபா என்பது வரவேண்டும் அப்போது முடிவு வரும். அது ‘‘ஓ பிரபுவே’’ என்ற ரூபத்தில் இருக்கலாம் அல்லது ‘‘ஆஹா பாபா’’ என்ற ரூபத்தில் இருக்கலாம். ஆனால் பாபா என்ற சொல்லின் அறிமுகம் கிடைத்தே தீரவேண்டும்.

6. உலகம் முழுவதும் உள்ள ஆத்மாக்களுக்கு கனவிலோ, கணப்பொழுது ஜொலிப்பிலோ, எல்லா பக்கங்களிலும் ஒலிக்கும் பிரத்தியட்ச சப்தம் மூலமாகவோ, இந்த நாடகத்தின் ஹீரோ நடிகர் மேடை மீது பிரத்தியட்சம் ஆகிவிட்டார், பூமியின் நட்சத்திரங்கள் பூமியில் பிரத்தியட்சமாகி விட்டார்கள் என்ற காட்சி கட்டாயம் கிடைக்க வேண்டும். அப்போது எல்லோரும் தத்தமது இஷ்ட தெய்வங்களை கண்டடைந்து மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள், உதவி பெறுவார்கள்.

7. எப்போது மதுவனத்தில் கூட்டம் அலை மோதுகிறதோ, அப்போதே பக்தியில் நினைவுச் சின்னங்கள் உருவாகும். அபுரோட்டில் இருந்து அபுமலைவரை அமர்ந்திருக்க வேண்டும் அப்போது பிரத்தியட்சம் ஏற்படும். இங்கே என்ன நடக்கிறது என யோசிப்பார்கள். இந்த பிரம்மா குமாரிகள் இவ்வளவு தூரம் வந்துவிட்டார்களா என கவனம் உங்கள் பக்கம் திரும்பும். இப்போதோ குழந்தைகளுடைய மேளா நடக்கிறது, ஆனால் எப்போது குழந்தைகளும் பக்தர்களும் கலந்து விடுகிறார்களோ அப்போது கூட்டம் அலை மோதும் அதோடு பிரத்தியட்சமும் ஏற்படும்.

8. எப்படி சூரியனையோ அல்லது சந்திரனையோ வெவ்வேறு நேரத்தில் பாத்தாலும் ஒன்றுதான் தெரிகிறது அல்லவா. அதேபோல இந்த ஞானசூரியனின் குழந்தைகள் மூலை முடுக்கெல்லாம்

தெரிவார்கள். ஞான நட்சத்திரங்களின் ஜொலிப்பு நாலா பக்கங்களிலும் தெரியவரும். ஞான நட்சத்திரங்கள் ஞான சூரியனோடு உதயமாகிவிட்டார்கள் என்ற விசயமே எல்லோருடைய எண்ணங்களிலும், வாயிலும் இருக்கும், அனைத்து தரப்பினரும் சேர்ந்து எழுப்பும் இந்த ஒலி நாலா புறமும் சென்று சேரும் அப்போது பிரத்தியட்சமாகும் நேரம் வந்து சேரும். இப்போது மறைமுக பாகம் நடந்து கொண்டிருக்கிறது. இப்போது அதை வெளியில் கொண்டுவாருங்கள்.

9. பிரத்தியட்சம் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது, வாயுமண்டலமும் உணர்வுகளும் மாற்றமடைந்து வருகிறது, கடின விசயங்கள் எல்லாம் எளிதாகிக் கொண்டிருக்கிறது. எண்ணங்களும் வெற்றி அடைந்து கொண்டு வருகிறது - இந்த எல்லா விசயங்களில் இருந்தும் பிரத்தியட்சத்தின் நேரம் எப்படி விரைவாக முன்னால் வந்துகொண்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

10. நம் எல்லோருக்கும் தந்தை ஒருவரே மேலும் அவரே இப்போது காரியம் செய்து கொண்டிருக்கிறார் என்ற ஒரு விசயத்தை மட்டும் இப்போது பல வழிகளில் செல்பவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், குறைந்த பட்சம் நாம் எல்லோரும் ஒருவருடைய குழந்தைகளாக ஒன்றாக இருக்கிறோம், மேலும் இந்த ஒரே குலம் என்பதே யதார்த்தமானது, என்ற சப்தத்தை எல்லாபக்கமும் சென்று சேர்க்க வேண்டும். அவர்கள் அதை தாரணை செய்யட்டும் அல்லது செய்யாமல் போகட்டும் ஆனால் ஏற்றுக்கொள்ள வேண்டும், அப்போது வெற்றியின் கொடி பறக்கும். இந்த எண்ணத்தோடு முக்திதாமத்திற்குச் சென்றாலும் சரியே.

11. சக்திகள் பாபாவின் பிரத்தியட்சக் கொடியைப் பறக்க விட்டார்கள் அதனால் தானே பூஜை நடக்கிறது. கொடியை பறக்க விடுவது என்றால் சப்தத்தை பலமாக ஒலிப்பது. அதை எல்லா பக்கங்களில் இருப்பவர்களையும் கேட்கும்படி செய்வது. பிரத்தியட்சம் என்றால் புகழின் சப்தம் எங்கும் எதிரொலிப்பதாகும் அதாவது வெற்றிக் கொடியை பறக்க விடுவதாகும். அதற்காக எப்போதும் தானும் மகிழ்சியாக இருங்கள், மற்றவர்களையும் சந்தோசப் படுத்துங்கள்.

12. எப்படி பிரத்தியட்சத்திற்கான நேரம் தெளிவாகவும் நெருங்கியும் வந்துகொண்டிருக்கிறதோ அதற்குத் தக்கபடி உங்கள் அனைவருடைய தேவவம்சம் அதாவது ராஜவம்சம் மற்றும் இஷ்டவம்சத்தின் பிரத்தியட்சமும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். ஆன்மீக சுகம் அல்லது ஆன்மீக அமைதியின் அனுபவம் என விதவிதமாக ஆன்மீக அனுபவத்தின் ஆயுதங்களை வரிசைக்கிரமமாக நேரத்திற்குத் தக்கபடி காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்கள். ஆனால் கடைசி பாம். அதாவது, பரமாத்ம பாம்தான் பாபாவை பிரத்தியட்சம் செய்யக்கூடியது. யார் பார்க்கிறார்களோ, யார் அருகில் வந்து கேட்கிறார்களோ், அவர்கள் மூலமாக பாபா வந்துவிட்டார், நேரடியாக சர்வசக்திமான் தன் காரியத்தை செய்து கொண்டிருக்கிறார் என்ற சப்தம் வெளிவர வேண்டும். இதுவே கடைசி பாம், இதன்மூலமாக எல்லா பக்கங்களிலும் சப்தம் பரவும்.

13. பிரத்தியட்சத்தின் திரைவிலகும் இந்த நேரத்தில் எல்லாம் நிறைந்த இஷ்ட தேவதைகளான உங்களை அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். கடைசியில் ஐயோ ஐயோ என்ற அலறல்களுக்கிடையே ஆஹா ஆஹா என்ற வெற்றி முழக்கம் கேட்க வேண்டும். எல்லாம் அதன் உச்சத்தை எட்டிய பிறகு முடிவும் பின்னர் புது யுகத்திற்கான ஆரம்பமும் ஏற்படும். அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள் விரும்பாமலேயே எல்லோருடைய மனதிலும் இந்த பிரத்தியட்சத்தின் முரசு ஒலிக்கும். காட்சி சிக்கலானதாக இருக்கும் ஆனால் அதுவே பிரத்தியட்சத்தின் முரசை முழங்க வைக்கும்.